

# மகளிரின் பன்முக நோக்கு

(தொகுதி–6)

பஜ 7177

பதிப்பாசிரியர்கள்

ச.பரிமளா மா.பார்வதி

ச.நீலாயதாட்சி இரா.மாதவி

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு

# மகளிரின் பன்முக நோக்கு

(தொகுதி - 6)

# மகளிரின் பன்முக நோக்கு

**(தொகுதி - 6)**

**பதிப்பாசிரியர்கள்**

**முனைவர் ச. பரிமளா** — **முனைவர் மா. பார்வதி**

**முனைவர் ச. நீலாயதாட்சி** — **முனைவர் இரா. மாதவி**

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர் - 613 010.**

ISBN : 87-7090-399-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 338

திருவள்ளுவராண்டு 2040 - மாசி - மார்ச்சு 2009

| | | |
|---|---|---|
| நூல் | : | மகளிரின் பன்முக நோக்கு - தொகுதி - 6 |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | ஆய்வுக் கட்டுரைகள் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2009 |
| பக்கம் | : | 270 + 20 |
| தாள் | : | டிஎன்பிஎல் மேப்லித்தோ 60 ஜிஎஸ்எம் |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரு. 100-00 |
| படிகள் | : | 1,200 |
| ஒளியச்சு | : | முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் தெற்கு வீதி, தஞ்சாவூர். |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம், தஞ்சாவூர். |

# பண்பெனப்படுவது...

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்'
என்றார்கள்.
மக்கள் தொகையில் பாதிக்கு மேல் மகளிர்;
பாதிப்பிற்கு உள்ளாவோர் தொகையிலும்
பாதிக்கு மேல் அவர்களே!
பாதிப்பை உணரவும் உணர்த்தவும்
தடுக்கவும் கேட்கவும் மகளிர் முன்வந்திருக்கிறார்கள்.
இது இந்த நூற்றாண்டின் சாதனைகளில் குறிப்பிடத்தக்கது.

மகளிர் நாள் விழாக் கொண்டாட்டத்திற்கும் நூறு வயது.
''ஒரு மகன் அல்லது இல்லோள்
குடுமியில் எண்ணெய் நீவி, வேல்கை கொடுத்து
வெளிது விரித்து உடுத்தி, போர்க்களம் நோக்கிப்
புறப்படு மகனே''

''போர்க்களம் சென்ற குதிரைகள் எல்லாம்
திரும்பிக் கொண்டிருக்கின்றன. ஆனால்
புல்லுளைக் குடுமி, புதல்வன் பயந்த செல்வன்
ஏறிச் சென்ற குதிரை மட்டும் வரவில்லையே''

''இம்மை மாறி மறுமையாயினும்
யானே உனது மனைவி, நீயே எனது கணவன்''
என்று மகளிர், கற்பிற்காக, வீரத்திற்காக,
அழகிற்காகப் பாராட்டப்பட்டனர்.

மரபுகளை மாற்றியது மணிமேகலை.
மக்கள் பணி, பசிப்பிணி என்று
உலக இலக்கிய வரலாற்றிற்கு
எடுத்துக்காட்டத்தக்க மணிமேகலையைத்
தமிழிலக்கியம் தந்திருக்கிறது.

அறம் செய விரும்பு என்று
குழந்தைகள் படிக்கிறபோதெல்லாம்
ஒவ்வொருவர் வீட்டிற்கும்
ஔவையார் சென்று வருகிறார்.
குழந்தைகளுக்கும் நீதி காட்டுகிறார் ஔவையார்.

மகளிர், அறிவுக்காகப் போற்றப்பட்டதற்கும்
வணங்கப்பட்டதற்கும் நமக்கு வரலாறு இருக்கிறது.
வரலாற்றின் தொடர்ச்சியாக,
இன்றைய நிலையில்
தேவைப்படுகிற அறிவுநோக்குகளைக் கொண்டு
மானுடம் பண்பட, பயன்பெற,
செம்புலப் பெயல்நீராய்,
மகளிர் பணிகள் தொடரும்
காலம் வாய்த்திருக்கிறது.

பாரதி, பாரதிதாசன், பெரியார், காந்தி
ஆகியோரின் கனவுகள்
பெண்களின் சாதனைகளாக உருவாகி வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகம்
இந்நோக்கிலும் தன் பங்கிற்கு
ஆற்றிவரும் பணிகளில் ஒன்றாக
இந்நூல் உருவாகியிருக்கிறது.

கட்டுரையாளர்களுக்கும் பதிப்பாசிரியர்களுக்கும்
வாழ்த்துக்கள்!

துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 010.

**(ம. இராசேந்திரன்)**

## உள்ளே...


1. மலர்க ஓரினம்
முனைவர் சா. உதயசூரியன் 1

2. கலை மூதாட்டி பி.ஆர். திலகம் அம்மையார்
முனைவர் இ. அங்கயற்கண்ணி 3

3. பாரதிதாசன் பார்வையில் பெண்ணுரிமை
முனைவர் இரா. பூங்கோதை 8

4. மருத்துவ மங்கை முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார்
முனைவர் செ. கற்பகம் 15

5. சந்தியா நாவலில் பெண்ணியச் சிந்தனைகள்
முனைவர் சீ. வைஜெயந்திமாலா 26

6. தன்னலமற்ற தாய்மையின் சிறப்பு
முனைவர் த. கலா ஸ்ரீதர் 34

7. பெண் பருவநிலைகளும்
உடல் உள மாற்றங்களும்
ஸ்ரீரஞ்ஜனி சிவபாலன் 41

8. படைப்புலகில் பொன்மணி வைரமுத்து
கு. சித்ரா 55

9. இறைப் பணிப்பெண்டிர் (தேவதாஸி)
முனைவர் தனசுந்தரி 61

10. அழகாக இருக்கச் சில ஆலோசனைகள்
மரு. முனைவர் சே. பிரேமா 70

11. புதுக்கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்
ஏ.ஏ.எக்ஸ். செல்வி 80

12. மகளிர் நோய்களும் மூலிகை மருத்துவமும்
மரு. பெ. பாரதஜோதி 89

13. உடல் பருமன் ஒரு நோயா?
மரு. நா. பாரதி சுரேஷ்கண்ணன் 97

14. மௌன வன்முறைகளும்
மட்டுப்படுத்தும் தீர்வுகளும்
முனைவர் ச. நீலாயதாட்சி 106

15. சரித்திரநாயகி - ரோமிளா தபார்
மா. புவானி 114

16. தமிழ் இலக்கியங்களில்
பெண்கள் அணிகலன்கள் (தலையணிகள்)
- க. மீனேஸ்வரி 120

17. பேசாப் பொருளைப்
பேசத் துணிந்த ஆண்டாள்
ஆன்யாழினி சதீஸ்வரன் 130

18. ஔவையாரின் பார்வையில்...
முனைவர் ச. சிவசுப்பிரமணியன் 137

19. சோழர்கால - ஆடல் மகளிர்
முனைவர் இரா. மாதவி 143

20. பெண்ணிய வகைகளும்
துறைவழக்குச் சொற்களும்
முனைவர் இரா.சு. முருகன் 147

21. பெண்மையின் மாண்புகள்
பொறி. சு. குழந்தைவேல் 156

22. சங்ககாலப் பெண்ணியம்
முனைவர். வீ. சிவசாமி 168

23. பெண்மையைப் போற்றுவோம்!
திருமதி சிவ. மல்லிகா 173

24. ஆற்றுப்படையில் மகளிர்
முனைவர் ரா. அபிராமசுந்தரி 176

25. பெண்ணுரிமையைப் பேணும் சட்டங்கள்
முனைவர் இரா. திராவிடராணி 183

26. உமாசகிதமூர்த்தி சிற்பம் காட்டும்
பெண்ணிய தத்துவம்
முனைவர் வி. லதா 190

27. மறுக்கப்பட்ட மகளிர் உரிமைகள்
- வரலாற்றுப் பார்வை
க.ம. பெருமாள் 198

28. பெண்ணியப் பார்வையில் பார்வதி பி.ஏ.,
முனைவர் மா.பார்வதி 209

29. தமிழச்சியின் கவிதைகளில்
பெண்ணியப் பதிவுகள்
பூ.மு. அன்புசிவா 216

30. பெண்ணியப் பார்வையில்
- தஸ்லீமா நஸ்ரீன்
முனைவர் அ. ரவிச்சந்திரன் 227

31. பெண்ணியச் சிந்தனையில்
களவும் உடன்போக்கும்
செ. வள்ளிநாயகம் 231

32. மனிதம் எங்கே?
முனைவர் ஜி. வசந்தா 240

33. Dr. Rukmani Ramani's Contribution to Music
Dr. M.A. Bhageerathi, 242

34. Women Novelist - Anita Desai and her
Psychological Analysis
With Special Reference to
"FIRE ON THE MOUNTAIN"
Dr. K.B. Jasmine Suthanthira Devi, 249

35. Role of Women in Trade Unions
Dr. K. Thilagavathi 255

36. RAJESWARI PADMANABHAN -
The Celestial Woman Artiste
Dr. Shanti Mahesh, 258

# பதிப்புரை

பொங்கிப் புரண்டோடும் நதிகள்; அவற்றை அரவணைத்து ஆர்ப்பரிக்கும் கடல்; பூத்துக் குலுங்கி மணம் வீசும் மலர்கள். தண்ணொளியைப் பொழிந்து நிற்கும் நிலவு. தாய்மையுடன் நம்மைத் தாங்கி நிற்கும் நிலம் என்று பன்முக நோக்கில் அனைத்தையும் பெண்ணாய் உருவகித்துப் பார்க்கும் இவ்வுலகம் பெண்களை முழுமையாக உணர முடியாமல் ஊமையாக நிற்கிறது. தன் அயராத உழைப்பால், திறமையால், சாதனையால் பெண் போற்றுதற்குரியவள் ஆகிறாள். தன் கையே தனக்குதவி என்பதைப் பெண் சமுதாயம் இன்று உணர ஆரம்பித்துவிட்டது. வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிலையில் ஏக்கமுறும் பெண்களும் நம் சமுதாயத்தில் உண்டு. பெண்கள் தம் நிலையுணர்ந்து பல்வேறு வகையில் தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆண்டுதோறும் உழைக்கும் மகளிரைச் சிறப்பிக்கும் வகையில் உலகம் எங்கும் மார்ச்சு 8ஆம் நாள் உலக மகளிர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இதனை ஒட்டி இந்த ஆண்டு, 'மகளிரின் பன்முக நோக்கு' எனும் தலைப் பில் (தொகுதி - 6) வெளியிடப்படும் இந்நூலில் இலக்கியம் இசை, அறிவியல், மருத்துவம், சட்டம் மற்றும் பல்துறை சார் முப்பத்தாறு ஆய்வுக்கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

உலக மகளிர் நாள் கருத்தரங்கம் சிறப்புற நடைபெற பல்லாற்றானும் உதவி, பல்கலைக்கழக வெளியீடாக இந்நூல் வெளிவருவதற்கு இசைவளித்து, அணிந்துரை நல்கிய எங்கள் மாண்பமை துணைவேந்தர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு பதிப்பாசிரியர்கள் சார்பாகவும், பல்கலைக் கழக மகளிர் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்கருத்தரங்கக் கட்டுரைகளைக் கணிப்பொறியில் கவினுற அச்சேற்றி, குறுந்தகடு செய்தளித்த தஞ்சாவூர், முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் நிறுவனத்தாருக்கும், இந்நூலை அழகுற வடிவமைத்து உரிய நேரத்தில் நூலாக்கம் செய்தளித்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநர், பேரா. பழனி. அரங்கசாமி மற்றும் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றிய அச்சகப் பணியாளர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் பல்லாற்றானும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் உளங்கனிந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

- பதிப்பாசிரியர்கள்

# மலர்க ஓரினம்

முனைவர் சா. உதயசூரியன்

விரிவுரையாளர்,
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 10.

தேடித்தேடி
ஒரு
புதையலைப்போல
சேகரித்து
இன்று
சேதாரப் படுத்துகிறாய்...

டார்வின் கொள்கையை
மீண்டும்
மீண்டும்
மெய்ப்பித்துத் தொலைக்கிறாய்...

உண்மைகளின்
கண்விழிப்பை
எதிர்கொள்ள முடியாமல்
நெற்றிக்கண் திறக்கிறாய்...

நீர் விலக்கிப்
பால் பருகும்
அன்னமாயிருக்க
சம்மதம்தான்
ஆனால்
உன்னிடம்
பாலுக்குப் பதில்
பால்வேறுபாடு மட்டுமே!

போன நூற்றாண்டில்
‘அடக்கம்’
செய்யப்பட்டுவிட்ட
‘ஆண்திமிர்’
மீண்டும்
உயிர்த்தெழ முடியாது!

இரகசியமாய்க்
கழற்றியெறிய
நான்
பாம்பு சட்டையல்ல...

நிறங்களை
மாற்றிக்கொள்ள
நான்
பச்சோந்தியுமல்ல...

ஆலகாலங்களை
விழுங்கிப் பிழைக்க
சக்திகளுக்கும்
இன்று
சாத்தியமாகியிருக்கிறது...

ஆதிக்கம் கலவாத
ஆக்சிஜனை
இனியாவது
சுவாசித்துப் பழகு...

பாலினம்
மறுக்கும்
ஓரினம் காண்போம்!

# கலை மூதாட்டி பி.ஆர். திலகம் அம்மையார்

முனைவர் இ. அங்கையற்கண்ணி
*பேராசிரியர், இசைத்துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர் - 10.*

உலக மகளிர் நாளில் நம் அருகாமையில் உள்ள நம்மை கவர்ந்த மகளிர் - நாம் வியந்த மகளிரை அனைவரும் அறியச் செய்வது மகளிர் விழாவினைச் சிறப்பிக்கும் செயலாக அமையும். அவ்வகையில் கலையுலகத் தமிழ் மூதாட்டி பி.ஆர். திலகம் அம்மையார் எம்மைக் கவர்ந்தவர். அவரது வாழ்க்கையையும் கலைச் சாதனைகளையும் வெளி யுலகம் அறியச் செய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இசைக்கலைக்கும், திருவாரூருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பதினெட்டாம் நூற்றாண்டில், சங்கீத மும்மூர்த்திகளாக விளங்கிய, தியாகராஜ சுவாமிகள், முத்து சுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் பிறந்த மண் திருவாரூர் ஆகும்.

''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று பாடிய தேவார மூவருள் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கையோடு இணைந்த பரவை நாச்சியார் திருவாரூரைச் சேர்ந்தவர். இவ்வகையான இசைச் சிறப்பு மிகுந்திருந்த திருவாரூர் திலகம் அம்மையாருக்கும் சொந்த ஊராகத் திகழ்கிறது. முத்துசுவாமி தீட்சிதரின் சீடர்களுள் ஒருவரான திருவாரூர் கமலம், இவரின் மூதாதையர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் சிம்மநர்தனம் ஆடி கனகாபிஷேகம் பெற்றவர்.

## பிறப்பும் இளமைக் கல்வியும்

பி.ஆர். திலகம் அவர்கள் 2.12.1926 ஆம் ஆண்டு பர்வத வர்த்தினி - பரமசிவம் இணையருக்கு மகளாக சென்னையில் பிறந்தார். இரண்டாண்டுகளுக்குள் இவரது தாய் பர்வத வர்த்தினி இறந்து விடவே பாட்டி கமலத்தின் அரவணைப்பில் வளர்ந்தார். தொடக்கக் கல்வியை திருவாரூரில் பயின்றார். தொடக்கக் கல்வியோடு சேர்த்து, குடும்ப வழக்கப்படி நாட்டியமும் இவருக்குக் கற்பிக்கப்பட்டது. மதுரை ரங்கம் ஐயங்காரிடம் 11ஆண்டுகள் இசைப்பயிற்சி பெற்றார். தம்முடைய 16 ஆவது வயதில் சுவாமிமலையில் எம்.கே. தியாகராஜ பாகவதர் தலைமையில் தம்முடைய இசை அரங்கேற்றத்தை நிகழ்த்தினார். அது முதற் கொண்டு பல கச்சேரிகள் செய்து புகழடைந்தார்.

ஜஸ்டிஸ் மாவூர் சர்.ஆர்.எஸ். சர்மா என்ற பிரபல மான கலா ரசிகர், தமது ஊரில் கல்கத்தா காளி கோயிலை நிர்மாணம் செய்தபோது, அதன் நவராத்திரி உற்சவங்களில் திலகம் அம்மையாரைப் பாட அழைத்தார். அக்கச்சேரியில் இவர் பாடிய கரகரப்ரியா இராகத்தால் பெரிதும் கவரப்பட்ட நாகசுவர சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி.என். ராஜரத்னம் பிள்ளை அவர்கள், இவருக்கு, ''சங்கீத திலகம்''என்ற பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினார். திலகம்மா பெற்ற முதல் பட்டமும் இதுவேயாகும்.

## தியாகேசர் குறவஞ்சி மீட்டுருவாக்கம்

தியாகேசர் குறவஞ்சி என்பது நடனமும் இசையும் சேர்ந்த திருவாரூர் தல புராண நாட்டிய நாடகமாகும். இக்கலை வடிவம் திலகத்தின் முன்னோர்களான, 'கொண்டி' பிரிவினருக்கு உரிய ஒன்று. இக்குறிஞ்சி திருவாரூர் கோயிலில் மரபு வழியாக ஆடப்பட்டு வந்துள்ளது. 1930ஆம் ஆண்டில் கடைசியாகத் திருவாரூர் கோயிலில் ஆடப்பட் டது. தமது குடும்ப இசை நாட்டியச் சொத்தாக விளங்கும்

தியாகேசர் குறவஞ்சியைப் புதுப்பித்து கலை உலகிற்குள் திரும்பக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணினார். இதற்காக பல முயற்சிகள் மேற்கொண்டார். இம்முயற்சியின் விளைவாக, ஏறக்குறைய மறைந்திடும் நிலையை எட்டிய இக்கலை வடிவத்தை சென்னை தபஸ்யா நாட்டியக் குழு வினருக்குக் கற்பித்தார். 2004 முதல் தியாகேசர் குறவஞ்சியை அதன் பாரம்பரியம் கெடாமல் செயல்படுத்தி வருகிறது இந்த தபஸ்யா நாட்டிய நிறுவனம்.

தொடக்க காலத்தில் தியாகேசர் குறவஞ்சியானது, அறுபத்தைந்து பாடல்களைக் கொண்டு மூன்று நாட்கள் நடைபெறும் மூன்று மணிநேர நடன நிகழ்ச்சியாக இருந்தது. இதனை 25பாடல்கள் கொண்ட நிகழ்ச்சியாக, நடப்பியலுக்கு ஏற்ற வகையில் சுருக்கித் தந்த பெருமை திலகம்மாவையே சாரும். மரபு நிலை வழுவாமல், தமது குடும்பக் கலை மரபான தியாகேசர் குறவஞ்சியின் கலை வடிவத்தைப் பாது காத்து நிலைப்படுத்தி பல தரப்பினரையும் ஈர்த்துள்ளார். இவ் வகையில் திலகம்மாவின் இசைப் பங்களிப்பு போற்றுதற் குரியது. ரிஷிகேசத்தில் நடந்த ஐந்தாவது சர்வதேச கலை குறித்த விழா மற்றும் கருத்தரங்கில் திலகம்மா கலந்து கொண் டார். இதனைப் பசிபிக் நாடுகளின் கலைஞர்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறை யில், மரபு நிலை மாறாமல் திலகம்மா பாடியுள்ள தியாகேசர் குறவஞ்சியின் 65பாடல்களும் ஒலி நாடாவிலும் குறுந்தகடு களிலும் பதிவு செய்து வைக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட் டுள்ளது. நாட்டிய நாடகமாகவும் குறுந்தகடு வடிவில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது.

## இசைப்பாடகி இசைப் பேராசிரியரானது

திலகம்மாவின் பாட்டி கமலம்மாவின் மறைவு, திலகம்மாவை பெரும் துயரத்தில் ஆழ்த்தியது. தம்முடைய

துயரத்தை மறக்க, 1967இல் புட்டபர்த்தி சென்று, சத்திய சாயி பாபாவை தரிசித்து ஆன்ம நிம்மதி பெற்றார். 1970ல் திருவையாறு அரசர் கல்லூரியில் இசைப் பேராசிரியர் பணி மேற்கொண்டார். இவ்வாறு இசைப் பாடகியாக இருந்தவர் இசைப் பேராசிரியராகி பல்வேறு மாணவ/மாணவியரை உருவாக்கும் பணியில் ஈடுபட்டார். இளம் ஆய்வாளர்களை ஊக்குவித்து தம்மிடமுள்ள இசை தொடர்பான அரிய தகவல்களைத் தெரிவித்து வருகிறார்.

## பல்வேறு பட்டங்களும் விருதுகளும்

1980ஆம் ஆண்டு தமிழக அரசு 'கலைமாமணி' விருது கொடுத்து சிறப்பித்தது. 'இசைச் செல்வம்' என்ற பட்டம் முத்தமிழ்ப் பேரவையினரால் வழங்கப் பட்டது. 1997ஆம் ஆண்டு மத்திய அரசின் சங்கீத நாடக அகடமி விருதும் பத்மஸ்ரீ விருதும் திலகம்மாவிற்கு வழங்கப்பட்டன. குரு சிஷ்ய பரம்பரை முறையின் சிறந்த குருவாக திலகம் அம்மையார் மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேலும் இளம் கலைஞர்களை அடையாளம் காணும் குழுவிலும் இவர் இடம் பெற்றுள்ளார்.

## பிற இசைச் சேவைகள்

இசைப் பாடல்களின் சுவைகளுக்கு ஏற்ற இராகங் களைத் தேர்ந்தெடுத்து இசையமைப்பதில் திறம் பெற்று விளங்கியவர் பி.ஆர். திலகம் அம்மையார் அவர்கள் வைத் தீசுவரன் கோயில் சுப்பராமையரின் தமிழ்ப் பதங்களை இசைப்படுத்திச்சுரதாளக் குறியீடுகளோடு நூலாக வெளியிட் டுள்ளார். மேலும் மதுரகவி, ராமகவி ஆகியோர் எழுதிய சாகித்யங்களுக்கு இசை அமைத்து அவற்றையும் சுரதாளக் குறியீடுகளுடன் எழுதியுள்ளார். தற்போது தஞ்சையில் ஷாஜி மன்னர் காலத்தில் உருவாக்கப்பட்ட, 'பல்லகி சேவா பிர பந்தம்' என்ற மரபு வழிப்பட்ட நடன வடிவத்தை மீட்டுரு வாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். சென்னை தபஸ்யா

குழுவினரின் உதவியோடு இப்பணியை செய்து வருகிறார்.

## முடிவுரை

இன்றைக்கு 83 வயதைக் கடந்த நிலையிலும் 23 வயது பெண்மணியைப் போன்ற மன இளமையும், சுறுசுறுப்பும் கொண்ட திலகம்மா மகளிருள் மாணிக்கமாகத் திகழ்கிறார். ஓர் ஆய்வாளருக்குரிய துடிப்புடன் மேடையேறி சாதனைகள் நிகழ்த்துகிறார். பழகுவதற்கு இனிமையானவர். குழந்தை உள்ளம் கொண்டவர். நட்புணர்வுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவர். தம்மிடம் வரும் மாணவர்களை அன்போடும் பாசத்தோடும் நடத்தித் தம்மிடமுள்ள அரிய கலைச் செல்வங் களைப் பகிர்ந்து கொள்வார். தமிழ்ப் பல்கலைக்கழக இசைத் துறையுடன் தொடக்க காலம் முதல் தொடர்பு கொண்டு துறையின் பல ஆக்க பூர்வமான பணிகளுக்கு உறுதுணையாக இருந்துள்ளார். இசையுலகில் நீண்ட நெடிய அனுபவம் கொண்ட பத்ம பி.ஆர் திலகம் அம்மையார், தஞ்சைக்கும் சென்னைக்கும் பாலமாகத் திகழ்பவர்.

இவரின் கலைச் சேவை ஒவ்வொரு இந்தியரும், தமிழரும், தமிழ்ப் பெண்மணிகளும் போற்றிப் பெருமை பட வேண்டிய சேவையாகும். இத்தகு சிறப்புமிக்க மகளிர் வாழுமிடத்தில் அவர்கள் அருகாமையில், அவர்களின் அன்புக்குப் பாத்திரமாகி நாமும் வாழ்கிறோம் என்ற எண்ணமே நம்மைப் பெருமிதம் அடையச் செய்கிறது. திலகம்மா அவர்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று நீண்ட ஆயுளோடு பல்லாண்டு காலம் வாழ இறைவனை பிராத்திக்கின்றோம்.

***துணைநின்ற நூல்கள் :***

1. *சரிகமபதநி*- இசை நாட்டிய மாத இதழ், திசம்பர் 2008, பக். 52-56.
2. பத்மஸ்ரீ பி.ஆர். திலகம் அம்மையாரின் நேர்காணல் நாள்: 17-2-2009. இடம்: தஞ்சாவூர்.

# பாரதிதாசன் பார்வையில் பெண்ணுரிமை

முனைவர் இரா. பூங்கோதை
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி,
தஞ்சாவூர்.

## முன்னுரை

படைப்பாளியின் சிந்தனையும், அனுபவ அறிவும் படைப்பு உருவாக வழி வகுக்கின்றது. கவிஞர் என்பவர் கண்டதை மட்டும் எழுதாமல் காண விரும்பியதையும் தன் கவிதையில் படைக்கின்றான். பெண்ணைச் சக்தி வடிவமாக வழிபட்ட பாரதிக்குத் தாசனாகி, பெரியாரின் பாதையில் வீரநடை போட்டவர் பாவேந்தர் பாரதிதாசன். அந்நியர் ஆட்சியில் வீழ்ந்து கிடந்த, தமிழ் இனத்தை எழுச்சியுற செய்ய எண்ணியது அவன் உள்ளம். தமிழ் இனத்திற்குப் புத்துயிர் ஊட்டும் எண்ணத்துடன், தமிழ்க் கவிதைகளை வலிமைமிக்க ஆயுதங்களாக மாற்றிய பெருமை புரட்சிக் கவிக்குண்டு.

## பாவேந்தரின் படைப்புகள்

காவியங்கள், நாடகம், தனிப்பாடல்கள், உரைநடை வகை, கவிதைத் தொகுதிகள் என புரட்சிக்கவியின் படைப் பாற்றல் எல்லா இலக்கிய வகைகளிலும் உருவெடுக்கின்றது.

## பெண்ணின் சிறப்புகள்

நாட்டின், வீட்டின் கண்களாகத் திகழும் பெண்கள் ஆமையாய், ஊமையாய் அடிமையுண்டிருப்பதைக் கண்டு கவிஉள்ளம் சினந்து சீறியது. மானிட இனமாகப் பெண்டிரும்

எல்லா நிலைகளிலும் சமநிலை பெறுவதன் இன்றியமை யாமையை அனைவரும் உணர விழைந்தார். மகாகவியின் உள்ளத்தில் முகிழ்ந்த மனிதநேயம், சமநிலை உரிமை, பெண்கல்வி, சாதி ஒழிப்பு போன்றவை பாவேந்தர் படைப்புகளில் வீறுநடை போட்டு வலம் வருவது தெளி வாகிறது. கல்வி நலம், கலைநலம், அறிவு நலம், ஆளுமை நலம், அரசியல் நலம் போன்ற அனைத்துத் துறைகளிலும் பால் ஒப்புமை கோரி படைப்புக்கள் பலவற்றில் வலி யுறுத்துவதை அறிய விழைவதே கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## தமிழ் இலக்கியங்களில்-மகளிர் நிலை

நாட்டுப்புறக் கதை வாயிலாக தொன்மையில் மகளிர் ஆட்சிமுறை இருந்தமையை அறிய முடிகிறது. ஆரவல்லி, சூரவல்லி, பவளக்கொடி வரலாறுகள் இவற்றிற்கு சான்றாக அமைகின்றன.

தொல்காப்பியர் அச்சமும் நாணமும் மடனும் பெண் களுக்கு உரியவை எனக்காட்டுவதன் மூலம், கல்வி, கற்பு, வெளியுலகப் பழக்கங்கள் அனைத்தும் ஆண்களுக்கு மட்டுமே உரிமை என்று சுட்டுவதன் மூலம் பெண்களுக்கு அவை மறுக்கப்படுகின்றன. ஆண் பெண் சமத்துவத்தை ஏற்காத நிலையைப் பரத்தையர் பிரிவு தெளிவாக்குகிறது.

கற்பு நிலை பெண்களுக்கு மட்டுமே, ஆடவர்க் கில்லை. துணைவரைத் தேடும் உரிமை உண்டு என்பதை உடன் போக்குத்துறை உறுதிப்படுத்துகின்றது. கல்வியில் சிறந்திருந்தனர் பெண்டிர் என்பதற்கு ஔவையார், ஆதிமந்தி யார், வெள்ளி வீதியார் போன்ற பெண்பாற் புலவர்கள் சான்றாக அமைகின்றனர். உடன்கட்டை ஏறுதல், கைம்மை நோன்பு, வலியுறுத்தப்பட்டன.

## வள்ளுவம் காட்டும் மகளிர் நிலை

வள்ளுவம் சங்க காலத்தில் நிலவிய பன் மகளிர் மனத்தை வெறுத்தது. பரத்தையர் உறவை கண்டித்து பிறனில் விழையாமையை வலியுறுத்தியது பெண்களின் கற்பு வலிமையே மழை பெய்விக்கும் என்ற சங்க காலக் கருத்தை ஏற்கும் வகையில் 'தெய்வந்தொழாஅள்' என்ற குறட்பாவின் வழி உரைக்கின்றது.

## காப்பியம் காட்டும் மகளிர் நிலை:

காப்பியங்களிலும் பெண்ணடிமைக் கோட்பாட்டை வலியுறுத்தலே காணப்படுகிறது. மாதவியிடமிருந்து மீண்ட கோவலனைக் கடிந்துரையாது 'சிலம்புள கொண்ம்' என்ற கண்ணகியின் கூற்று இதனை மெய்ப்பிக்கின்றது. 'மாலை வாங்குநர் சாலும் நம்கொடிக்கு' என்ற சிலம்பின்வரியும் மேற்படி கருத்தை அரண் செய்கிறது.

தசரதனுக்கு மூன்று மனைவியர், அறுபதாயிரம் காமக்கிழத்தியர் உண்டு என்று காட்டும் இராமகாதை, சீதையின் அக்னி பிரவேசத்தின் மூலமும், அகலிகை சாபத்தின் மூலமும் கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே என்பதைத் தெளிவாக்குகின்றது.

## தமிழகச் சான்றோர் வழி மகளிர் நிலை:

மாயூரம் வேதநாயகம்பிள்ளை, திரு.வி.க., பாரதி, பெரியார் போன்றோர் படைப்புக்களில் பெண்ணுரிமைக் கருத்துக்கள் எதிரொலிப்பதைக் காணமுடிகிறது.

ஷேக்ஸ்பியர் நாடகங்களிலும், பெர்னார்ட்ஷா படைப்புகளிலும் பெண் பாத்திரங்கள் உயர்நிலை பெறுவது குறிப்பிடத்தக்கது. பெண்ணே ஆணைப் படைத்து வளர்ப் பவள் என்ற ஷாவின் கூற்றைப் புரட்சிக் கவிஞர்,

*'புவிப்பெரியோன் ஜார்ஜ் பெர்னார்ஷா உரைத்த*
*பொன் மொழியைக் கேளுங்கள் நாட்டில் உள்ளீர்*
*உவந்தொருவன் வாழ்கைச் சரியாய் நடத்த*
*உதவுபவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்*
*அவளாலே மணவாளன் சுத்தி பெற்றான்'*

கவிதைத் தொகுதிIII-தாசன்

என்று பெண்ணின் ஆற்றலை உள்ளபடி உரைத்துள்ளார்.

## பெண்ணின் மாண்பு பாவேந்தர் வழி

*'பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசம்*
*என்பதற்கு மறுப்பாக*
*வன்மை, உயர்வு மனிதர் நலமெல்லாம்*
*பெண்மையினால்*
*உண்டென்று பேச வந்த பெண்ணழகே'*

(கவிதைத் தொகுதி 1)

என்று போற்றிப் புகழ்கின்றார்.

## பாவேந்தரின் பெண்ணுரிமை சமத்துவம்

பெண் உரிமை வேண்டி குரல் எழுப்பிய பெரியோர்களுள், வேதநாயகம்பிள்ளை, பாரதியார், திரு.வி.க., பெரியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர், உடன் பிறந்தவன் ஆண்டான் என்றும், உடன்பிறந்தவள் அடிமை என்றும் உரைப்பதை மகாகவிபாரதி கண்டித்தார். புரட்சிக்கவி சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் இடம் பெறும் வஞ்சி என்ற பெண் பாத்திரத்தின் மூலம் பெண்ணுரிமைச் சமத்துவத்தைப்

*'பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாமென்றீரோ*
*மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண் இனத்தை'*

என்ற வரிகளில் பறைச் சாற்றுகின்றார். சமைப்பதும், வீட்டு வேலைகளைச் சலிப்பின்றிச் செய்வதும் பெண்கள் தமக்கேயாம் என்ற கூற்று சரியல்ல என்று குடும்ப விளக்கில்

வலியுறுத்துகின்றார். பெண் குழந்தை முதற் குழந்தை யானால் சிறப்பு என்ற கருத்தை

*'மண்ணில் பட்டால் மாசுபடுமென்றுஎன்*
*கண்ணில் வைத்தே காப்பேன்'*

என்று இயம்புகின்றார்.

## கற்பு நிலையில் சமத்துவம்

தொடக்க காலத்தில் பெண்களுக்கே கற்பு வலியுறுத்தப்பட்டது. 'கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை அல்லாமல் அறியா குலமகள்' என்ற குலசேகராழ்வார் கூற்றும், கற்புடைய பெண்டிர் பிறர் நெஞ்சு புகார் என்ற சாத்தனார் கூற்றும் மேற்கருத்தை வலி யுறுத்துகின்றன. பாவேந்தர் இரு கட்சிக்கும், பொதுவில் கற்புநிலைதிகழவேண்டும் என்றபாரதியின் கருத்தையே படைப்புக்களில் காட்டுகின்றார்.

## கல்வியில் சமத்துவமும்

சங்க இலக்கியம் பெண் கல்வி சிறந்தமையைக் காட்டுகிறது. இடைக்கால இலக்கியங்களில் பெண்கல்வி மறுக்கப்பட்டதைப் பெண்ணறிவு என்பது பெரும் பேத மைத்து என்ற தொடர் உணர்த்துகின்றது, ஆனால் பாவேந்தர்,

*'கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்அந்நிலத்தில்*
*புல்விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள்*
*விளைவதில்லை'*

என்று குடும்பவிளக்கு நான்காம் பாகத்தில் பெண்கல்வியை வலியுறுத்தும் முகமாக அறிவு நிரம்பப் பெற்ற மக்கள் சமுதாயம் நிலவும் எனச் சுட்டுகின்றார்.

## பலநிலைகளில் பெண்கள்

தன்னிறைவு பெற்ற பொற்காலச் சமூகம் உருவாக வேண்டும் என விழைந்த பாவேந்தர் காதலில் சமத்துவம் வேண்டும் என்கிறார். காதல் அடைதல் உயிரியற்கை என்கிறார் பாவேந்தர். பெற்றோரிடம் காதலைத் துணிந்து கூறத் தக்கவர்களாக காட்டுகின்றார்.

*'கண்ணின் கடைப் பார்வை காதலியர் காட்டிவிட்டால்*
*மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர் கடுகாம்'*

என்ற வரிகளில் காதலியின் கடைக்கண்பார்வை ஆக்கப்பூர்வ பணிக்கு அடிக்கல்லாவதுடன் காதலர்களைச் செயல் வீரர் களாக்கும் சக்தியாக அமைவதை நயமாக உணர்த்துகின்றார்.

## இல்லம் போற்றும் இனியவர்

தாயைப்போல் புரத்தல், பரத்தைபோல தழுவல் மனைவியின் கடன் என்று தொல்காப்பியர் கருதுகிறார். பாவேந்தரின் பெண்படைப்புக்கள் இனியவர்களாக்த் தலை வனால் போற்றப்படுகின்றார். சான்றாக குடும்ப விளக்கில் தலைவன் மணவழகன் கூற்று மூலம் நான் அடைந்த மனைவி இனியவள், கண் போன்றவள், குடும்பத்திற்காக உயிரும் நல்கக் கூடியவள்' என்று உணர்த்துகின்றார். கல்லாத பெண் இருக்கும் குடும்பம் எப்படி பட்டது என்பதை இருண்ட வீடு படைப்பின் மூலம் அங்கதச் சுவையுடன் உணரத்துகின்றார்.

## கலை நலத்தில் சமத்துவம்

*'கலையினிர் பெண்ணே இலகு பல்*
*கலையினிற் பெண்ணே இலகு*
*நிலையின் உயரவேண்டும்.'*

என்ற வரிகள் பெண்கள் கலை நலத்தில் சிறக்க வேண்டு மென்ற புரட்சிக்கவியின் வேணவா வெளிப்படுத்துகிறது.

குடும்ப விளக்கு நாயகி தங்கம் யாழ் பயிற்சியிலும், புரட்சிகவி நாயகி அமுதவல்லி கவிபுனையாற்றலிலும் குறிஞ்சித் திட்டு நாயகி அல்லி ஆடற்கலை பயிற்சியிலும் சிறப்புற்றவர்களாகக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

உலகம் பெண், ஆண் எனும் இருபாலராலும் ஆக்கப் பட்டிருக்கிறது. இரண்டும் சேர்ந்த ஒன்றே உலகம் என்பது ஒன்று இயங்கினாலன்றி உலகம் நல்வழியில் நடைபெறாது. அப்படி நடைபெற பால் சமத்துவம் அவசியம் என்பதைப் பாவேந்தர் உணர்த்துவது வெள்ளிடை மலையன்றோ!

## மருத்துவ மங்கை
# முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார்

முனைவர் செ. கற்பகம்
*விரிவுரையாளர்,*
*இசைத்துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற வரிகளுக்கு ஏற்ப வாழ்ந்து பெண்களுக்கும், சமூகத்திற்கும் அரிய பல பணிகளைச் செய்தவர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் ஆவார். தன் வாழ்நாளின் பெரும் பகுதியினைச் சமூக நலத்தில் ஈடுபடுத்தி மக்களின் வாழ்வை வளமாக்கினார். பெண் நலச் சீர்திருத்தம், அரசியல் சீர்திருத்தம், மருத்துவ சீர்திருத்தம் போன்ற பல அரிய செயல்களைச் செய்த அம்மையாரின் வாழ்க்கை வரலாற்றினை ஈண்டு காண்போம்.

### பிறப்பும் வளர்ப்பும்

புதுக்கோட்டையில் தலைசிறந்த கல்வியாளராக விளங்கிய நாராயணசாமி மற்றும் சந்திராம்மாளுக்கு மகளாக 1886ஆம் ஆண்டு ஜூலை 30ஆம் நாள் முத்துலெட்சுமி பிறந்தார். இவருக்கு நல்லமுத்து, சுந்தராம்பாள் என்ற இரு சகோதரிகளும் இராமையா என்ற ஒரு சகோதரனும் உண்டு. அம்மையார் இளவயதில் தாய்ப்பால் இல்லாமல் வளர்ந்தார். இதனால் இவர் சிறு வயதிலே வயிற்றுப்போக்கு, மலேரியா, இருமல் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டார்.

அக்காலத்தில் பெண் குழந்தைகளின் நலனில் அதிகம் அக்கறை காட்டமாட்டார்கள். ஆண் குழந்தை நலனில்

மட்டும் அக்கறை செலுத்தி, அவர்களுக்கு உயர்கல்வி அளிப்பர். இத்தகைய சூழ்நிலையில் அம்மையாரும் அவருடன் உடன் பிறப்புகளும் நன்கு கல்வி கற்று உயர் பதவியை வகித்தனர்.

இவரின் சகோதரி நல்லமுத்து சென்னை அரசி மேரி மகளிர் கல்லூரியின் முதல் பெண் முதல்வரானார். மற்றொரு சகோதரி சுந்தராம்பாள் இசைக்கலையிலும், தமிழ் இலக்கியத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றார். முத்துலெட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவராகவும் மாநிலங்களின் அவை உறுப்பினராகவும் பணியாற்றினார்.

**கல்வி**

ஒரு பெண் கல்வி கற்றால் அந்தக் குடும்பமே கல்வியின் பயனை அடையும் என்று கூறுவர். அதைப்போல் முத்துலெட்சுமி அம்மையார் இளவயதில் உடல் நலம் இல்லாத நிலையிலும் மெட்ரிக்குலேசன் தேர்வில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றார். அவருடைய தந்தையாருக்குப் போதிய வருவாய் இல்லாததால், மேற்கல்வியைக் கற்க இயலாமல் போனது. ஆனால், இவரின் ஆசிரியரான பாலையா அவர்களின் தூண்டுதலினால், மேற்கல்வி பயிலத் தொடங்கினார். புதுக்கோட்டை மகளிர் கல்லூரியில் இடம் கிடைத்தது. அக்காலத்தில் பெண்கள் அக்கல்லூரியில் படிக்க வேண்டுமெனில் புதுக்கோட்டை மாமன்னரின் சிறப்பு அனுமதி பெற வேண்டும். அம்மையாருக்கு மன்னரின் அனுமதி கிடைத்தது. மேலும், இவரின் தந்தையின் துயர நிலையை அறிந்த மன்னர் அம்மையாருக்கு நிதி உதவியும் அளித்தார். கல்லூரியில் பயிலும்போது உடல்நிலையிலும், கண் பார்வையிலும் குறைவு ஏற்பட்டது. அதனை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் இடைவிடாது கல்வி பயின்று கல்லூரி இண்டர்மீடியேட் தேர்வில் தனது வகுப்பில் முதல் மாணவியாக வெற்றி பெற்றார்.

## மருத்துவப் படிப்பு

புதுக்கோட்டை கல்லூரிப் படிப்பை முடித்தவுடன், 1907ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் இவருக்கு M.B.,&C.M., படிக்க வாய்ப்புக் கிடைத்தது. இவர் தான் முதலில் மருத்துவப் படிப்பு மேற்கொண்ட பெண் என்ற சிறப்புப் பெற்றார்.

இதனால் புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்குத் தன் சகோதர, சகோதரிகளுடன் சென்றார். இவர் தன் மருத்துவப் படிப்பு மேற்கொண்டபொழுது இவரின் குடும்பம் மிகுந்த வறுமையில் இருந்தது. இவரின் மருத்துவப் படிப்பிற்காக இவரின் தந்தையார் நாராயணசாமி புதுக்கோட்டை மன்னரின் உதவியை நாடினார். ஆனால், மன்னர் அம்மையாரின் கல்வித்திறன் மூன்று மாதங்கள் நன்றாக இருந்தால் தான் நிதி உதவி தருவதாகக் கூறினார். அம்மையாரும் சிறந்த கல்வி கற்று மன்னரின் நிதி உதவியினையும் பெற்றார்.

இவர் மருத்துவப் படிப்பு மேற்கொள்ளும்போது, கல்லூரியில் தனி மேசை கிடையாது. சில மருத்துவப் பாடங்கள் நடத்தும்போது இவர் கலந்துகொள்ளக்கூடாது என்பன போன்ற பல இடர்ப்பாடுகளுக்கு இடையில் மருத்துவப் படிப்பில் தேர்ச்சி பெற்றார். இவர் அறுவை சிகிச்சைத் தேர்வில் நூறு மதிப்பெண்கள் பெற்றார். அந்தக் காலத்தில் ஆங்கிலேயர்கள் மட்டும் படித்துப் பெற்ற மருத்துவப் படிப்பை 1912ஆம் ஆண்டு முடித்து, மருத்துவப் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற சாதனையை நிகழ்த்தினார்.

## மகாகவி பாரதியாருடன் சந்திப்பு

அம்மையார் டாக்டர் நஞ்சுண்டராவ் இல்லத்திற்குச் சென்றபொழுது, மகாகவி பாரதியுடன் சந்திப்பு நிகழ்ந்தது. டாக்டர் நஞ்சுண்டராவ் முத்துலெட்சுமி அம்மையாரின்

சுதந்திர மனப்பான்மையும், கல்வியறிவையும், துணிவை யும் பாரதியிடம் வெகுவாக எடுத்துச் சொல்லி, பாரதியிடம் அறிமுகம் செய்து வைத்தார். அப்பொழுது பாரதியார் அம்மையாரிடம் இந்தியா என்ற தனது பத்திரிக்கைக்கு ஒரு கட்டுரை எழுதித் தருமாறு கேட்டார். அம்மையார் ஒரு மருத்துவராக இல்லாமல் பல சமூக இலக்கியப் பார்வை கொண்டவராக இருந்ததால், மகாகவியே கட்டுரை கேட்கும் அளவிற்கு உயர்ந்திருந்தார்.

## மருத்துவப்பணி

அம்மையாருக்கு இந்தியாவின் பல இடங்களில் இருந்து மருத்துவப் பணியேற்க வேண்டி அழைப்புகள் வந்தன. தான் பெற்ற மருத்துவப் பட்ட அறிவு சமுதாயத் திற்குப் பயன்பட வேண்டும் என்று எண்ணினார். டாக்டர் ஜிப்மர் தலைமையின்கீழ் இயங்கிய மகப்பேறு மருத்துவ மனையில் சேர்ந்து பணியாற்றினார். அங்கு ஆங்கிலேயப் பணிப்பெண்கள் பணிபுரிந்தனர். அவர்கள் அம்மையார் இந்தியப் பெண்மணி என்பதால் காழ்ப்புணர்ச்சியோடு வெறுப்பைக் காட்டினர். அதன் பிறகு, சொந்த ஊரான புதுக் கோட்டைக்குச் சென்று ஏழைகளுக்கு இலவச மருத்துவம் செய்து வந்தார். பிறகு, சென்னை சென்று சொந்தமாகவே மருத்துவமனை நிறுவி, தாய் சேய் நலனைப் பாதுகாக்கும் அரணாக விளங்கினார்.

## திருமணம் - இல்லற வாழ்வு

இலட்சியப் பெண்மணியாக வலம் வந்து கொண்டி ருந்த டாக்டர் முத்துலெட்சுமி அம்மையாரின் அரிய சாதனை களைக் கேள்வியுற்ற டாக்டர் டி. சுந்தரரெட்டி இவரைத் திருமணம் செய்ய எண்ணினார்.

டாக்டர் டி. சுந்தரரெட்டி, எப்.ஆர்.சி.எஸ். பட்டம் பெற்று விசாகப்பட்டினத்தில் கிங் ஜார்ஜ் மருத்துவமனையில்

சிறந்த மருத்துவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவர்களது திருமணம் 1914ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இனிதே நடைபெற்றது. இவர்களுக்கு இராம்மோகன், கிருட்டிணமூர்த்தி என்ற இரு மகன்கள் பிறந்தனர். மூத்த மகன் இராம்மோகன் டில்லியில் திட்டக் குழுவில் இயக்குந ராகப் பணியாற்றினார். இளைய மகன் டாக்டர் கிருட்டிண மூர்த்தி பல்லாயிரக்கணக்கான புற்றுநோயாளிகளைக் காப்பாற்றி வருகின்ற அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்தின் காப்பாளராக இருந்து பணியாற்றி வருகிறார்.

## பிரிட்டன் பயணம்

அம்மையார் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்படும் பல நோய்கள் பற்றி பயிற்சி பெற 1925ஆம் ஆண்டு இந்திய அரசின் சார்பாக இங்கிலாந்திற்குச் சென்றார். அதில், தமிழ்நாட்டு முதல் பெண்மணியாகத் தேர்வு செய்யப்பட்டு அனுப்பப்பட்டார். இங்கிலாந்தில் அம்மையார் இருக்கும் காலத்தில் அவரின் சகோதரி நல்லமுத்து அவர்களும் இலண் டனிலுள்ள பொருளாதாரம் கற்பிக்கும் பல்கலைக்கழகத்தில் படித்து வந்தார்.

இந்நேரத்தில் அவரின் சகோதரர் வழக்குரைஞர் இராமையா மறைந்தார். அம்மையார் இங்கிலாந்தில் மருத் துவப் பயிற்சி பெற்று வந்ததால், தம்பியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள இயலாமல் போயிற்று.

## ஸ்த்ரீ தர்மா இதழ்ப் பணி

டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார் ஸ்த்ரீ தர்மா என்ற இதழின் ஆசிரியராக இருந்து சிறப்பாக நடத்தினார். அதில் சமூக அவலங்களையும், அரசின் நல்ல செயல் திட் டங்களையும், அரசின் குறைகளையும் தயங்காது எழுதினார். இவர் இதன் மூலம் சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்தார்.

## இந்திய மாதர் சங்கம்

இந்திய மாதர் சங்கம் என்ற அமைப்பு 1917ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அன்னிபெசண்ட் அம்மையார், மார்கரெட் கசின்ஸ் அம்மையார் தொடங்கிய இச்சங்கத்தில் அம்மையார் பக்கத்துணையாக இருந்து பெண்களின் அறி யாமையை அகற்ற முற்பட்டார்.

## உலக மகளிர் மாநாடு

முதன் முதலாக நாற்பத்தி மூன்று நாடுகள் கலந்து கொண்ட அகில உலக பெண்கள் மாநாடு பாரிசில் 1926ஆம் ஆண்டு நடைபெற்றது. அதில் அம்மையார் இந்திய மாதர் சங்கத்தின் உறுப்பினராகக் கலந்துகொண்டு இந்திய திரு நாட்டில் நிலவி வரும் மூடப்பழக்க வழக்கங்கள் நீக்கப் பாடு படுவேன் என்றும், இங்குள்ளதுபோல் கணவரைப் பெண் களே தேர்ந்தெடுக்கும் முறை, இளம் விதவைகள் மறுமணம் செய்யும் முறைகளை இந்தியத் திருநாட்டில் உருவாக்க முயல்வேன் என்றும் முழக்கமிட்டார். அம்மையாரின் இவ்வுரை அனைவரையும் கவர்ந்தது.

இந்திய மாதர் சங்கத்தின் ஆதரவில் Vigilance Association என்ற நிறுவனத்தை நிறுவி இளம் விதவைகள் படிக்க உதவினார்.

1920ஆம் ஆண்டு சென்னை கீழ்ப்பாக்கத்தில் குழந்தைகள் உதவிச் சங்கம் என்ற அமைப்பினை நிறுவி, குற்றம் செய்த இளம் வயது குழந்தைகளைச் சிறந்ததொரு மனிதனாக வாழ வழிவகை செய்தார். அத்துடன் மனநலம் குன்றிய பெண்களையும் இதில் இணைத்துப் பாதுகாத்தார்.

1917ஆம் ஆண்டு முதல் 1926ஆம் ஆண்டு வரை இந்திய மாதர் சங்கத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். மேலும், சாரதா பெண்கள் மன்றம், இந்திய

பெண்கள் சமாஜம் ஆகியவற்றை நிறுவி பள்ளிக் குழந்தைகளுக்குச் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

## காந்தி கிராமம் - நிறுவனம்

தமிழ்நாட்டின் தலைசிறந்த நிறுவனமான டி.வி.எஸ். நிறுவனத்தின் தலைவர் டி.வி. சுந்தரம் ஐயங்காரின் மகள் டாக்டர் சவுந்தரம் இராமச்சந்திரன் அவர்கள் காந்தி கிராமம் என்ற ஓர் அமைப்பினை உருவாக்கி, அதில் அண்ணல் காந்தியடிகளின் அறநெறியினைச் செயல்படுத்த நினைத்தார். இதற்கு டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார் காந்தியடிகளின் முழு வாழ்த்தையும், வழிகாட்டுதலையும் பெற்றுத் தந்தார். அம்மையாரின் முயற்சியால் இன்று காந்தி கிராமம் தலைசிறந்த அமைப்பாக வளர்ந்துள்ளது.

## பெண் மறுமலர்ச்சி

இந்திய மாதர் சங்கம் மூலமாக பெண் குழந்தைத் திருமணம் நடைபெற அனுமதிக்கக்கூடாது என்றும், அதற்குத் தடைச்சட்டமும், பதினான்கு வயதிற்கு மேல் திருமணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் வாதாடினார்.

நகராட்சி மற்றும் சட்டமன்றங்களில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டும் என்று நாடு முழுவதிலும் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

சென்னை மாநகரில் பெண்கள் மற்றும் ஆண் குழந்தைகளுக்கான கட்டாயத் தொடக்கப்பள்ளிகளைத் தோற்றுவிக்க இயக்கங்களை நடத்தினார்.

## சட்டமன்ற துணைத்தலைவர் பொறுப்பு

1926ஆம் ஆண்டு பெண்களுக்கும் வாக்குரிமை உண்டு என்று அறிவிக்கப்பட்டதும், பெண்கள் அமைப்புகளும், மேலும் பல அமைப்புகளும் அம்மையாரை மேல்

சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டினர். அவர்களின் கோரிக்கையை இந்திய மாதர் சங்கமும் ஆதரித்தது. இவர் போட்டியின்றி ஒருமனதாக மேல் சபை உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகிலேயே முதன் முதலில் சட்டமன்றத்தில் ஒரு பெண் மணி துணைத் தலைவராகப் பதவி வகித்த பெருமையைப் பெற்றுத் தந்தவர். டாக்டர் முத்து லெட்சுமி அம்மையார் தான். இவர் பதவியில் இருக்கும்போது தேவதாசி ஒழிப்புச் சட்டம், விபச்சார ஒழிப்புச் சட்டம், பெண்களின் திருமண வயது உயர்த்தும் சட்டத்தை அமுல்படுத்தினார்.

மேலும், 1928ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசால் அமைக்கப்பட்ட ஹர்டாக் கமிட்டி அம்மையாரைத் தேர்ந்தெடுத்து இந்தியா, பர்மா ஆகிய நாடுகளில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் கல்வி நிலையை ஆய்வதற்கு வாய்ப் பளித்தது. இந்த ஆய்வில் அம்மையார் பெண் கல்விக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். எட்டாம் வகுப்பு வரை ஏழைப் பெண்களுக்கு இலவசக் கல்வி வழங்க வேண்டும் என்று பரிந்துரை செய்து வெற்றியும் கண்டார்.

## தேவதாசி ஒழிப்புச் சட்டம்

சட்டமன்றத்தில் தேவதாசி ஒழிப்புச்சட்டத்தை நிறை வேற்ற வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். இதற்கு தந்தை பெரியாரும் ஆதரவளித்தார். இச்சட்டம் 1929ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் இரண்டாம் நாள் அமுலுக்கு வந்தது.

## அம்மையார் வகித்த பதவிகள்

முத்துலெட்சுமி அம்மையார் 1937ஆம் ஆண்டு ஆல்டர் வுமன் (சென்னை மாநகரத் தலைமையாளர்) பதவியையும், 1933ஆம் ஆண்டு முதல் 1945ஆம் ஆண்டு வரை இந்திய மாதர் சங்கத்தின் தலைவி பதவி ஆகிய பல பதவி களை வகித்தார்.

மேலும், 1933ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த வட்டமேசை மாநாடுகளில் கலந்துகொண்டார். இலங்கையில் தேயிலைத் தோட்டத்தில் வாழும் கங்காணிகளின் உரிமை நலனுக்காகப் போராடி வெற்றி பெற்றார்.

அண்ணல் காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரகத்தில் கைது செய்யப்பட்டதற்காகத் தன்னுடைய சட்டமன்ற துணைத் தலைவர் பதவியைத் துறந்தார்.

## புற்றுநோய் ஆராய்ச்சி மருத்துவமனை

அம்மையாரின் சகோதரி சுந்தராம்பாள் கொடிய நோயான புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இளவயதில் இறந்தார். தனக்கு ஏற்பட்ட இத்துன்பம் மற்றவர் யாவருக்கும் வரக்கூடாது என்ற எண்ணத்தில் தன் மகன் டாக்டர் கிருஷ்ண மூர்த்தியை இத்துறையில் ஈடுபடுத்தி பலரின் நிதி உதவியுடன் 1952ஆம் ஆண்டு சென்னை அடையாறில் புற்றுநோய் ஆராய்ச்சி மருத்துவமனையைத் தொடங்கினார்.

## பத்மபூஷன் விருது

அம்மையாரின் சிறந்த தொண்டினைப் பாராட்டி இந்திய அரசு 1956ஆம் ஆண்டு பத்மபூஷன் விருது வழங்கி கௌரவித்தது.

## அம்மையார் எழுதிய நூல்கள்

அம்மையார் பெண்கள் நலனுக்காகவும், சமூக நலனுக்காகவும் பதினொரு நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள்,

1. கைக்குழந்தைகளின் உணவு முறை (Infant Feeding)
2. சூல்கொண்ட பெண்களுடைய கவனம் பற்றிய நூல் (Care of Pregnant Women)

3. என்னுடைய சட்டசபை அனுபவங்கள் (My Experience as a Legislator)
4. புற்றுநோயும் அதைத் தடுக்கும் முறையும் (Cancer and its prevention)

ஆகியவை குறிப்பிடத்தகுந்தவையாகும்.

## அம்மையார் பெயரால் வழங்கிய திட்டங்கள்

மருத்துவராக இருந்து பெண்கள் நலனில் அக்கறை கொண்ட அம்மையாரைப் பெருமைப்படுத்தும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், அரசின் சார்பில் 1989ஆம் ஆண்டு முதல் டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு திட்டத்தினை அறிமுகப்படுத்தி கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ஏழாம் மாதத்தில் ரூ. 3,000/-மும், குழந்தை பிறந்த பின்பு, அதாவது பத்தாம் மாதத்தில் ரூ. 3,000/-மும் வழங்கிட ஆணையிட்டு இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்தொகையை மேலும் உயர்த்தி வழங்கி வருகின்றனர்.

முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அம்மையாரின் அவ்வை இல்ல விரிவாக்கத்திற்கு ரூ. 30,000 நன்கொடை அளித்ததோடு, நான்கு அநாதைக் குழந்தைகளின் இரண்டாண்டு பராமரிப்புச் செலவினை ஏற்றார்.

தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் அவ்வை இல்லத்திற்குத் தொடர்ந்து நன்கொடை வழங்கி வருகிறார்.

## இறப்பு

தனது உழைப்பால் உயர்ந்து, எண்ணத்தால் புதுமைப் பெண்ணாக வாழ்ந்த அம்மையார் தனது 82ஆம் வயதில் 1968 ஜூலை 22 அன்று அடையாறு புற்றுநோய் இல்லத்தில் அமைதியாக இயற்கை எய்தினார்.

பெண்ணினத்திற்காக வாழ்ந்து, பெண்களுக்காகப் பல அரிய திட்டங்கள் வகுத்து, அவர்களின் வாழ்வுக்கும், வளர்ச் சிக்கும் துணையாக நின்ற முன்னை சட்டமன்ற மேலவை உறுப்பினர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையாரின் புகழ் இப்பூவுலகம் உள்ளவரை நின்று நிலைத்துக் கொண்டி ருக்கும்.

மங்கையராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும் என்ற வாக்கிற்கு ஏற்ப முத்துலெட்சுமி ரெட்டி பிறந்து வளர்ந்து, பல்வேறு நிலைகளில் முதன்மையாளராக விளங்கி, பெண்ணின முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றி னார். இவரால் புதுக்கோட்டை நகரமும், தமிழகமும், இந்தியத் திருநாடும், உலகப் பெண்ணினமும் பெயரும் புகழும் பெற்றது. தன்னலம் பாராது சமுதாய நலம் நாடிய இவரின் வாழ்வு, சமுதாயத் தொண்டைப் போற்றுவோம். அவர் காட்டிய நல்வழிகளைப் பின்பற்றுவோம்.

*துணைநின்ற நூல்*

1. பத்மபூஷன் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் மாதர் குல மாணிக்கம், திலகவதியார் திருவருள் ஆதீனம், புதுக்கோட்டை, 2007.

2. வசுமதி ராமசாமி, மாநிலம் போற்றும் மங்கையர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, ஸ்டார் பிரசுரம், சென்னை.

# சந்தியா நாவலில் பெண்ணியச் சிந்தனைகள்

முனைவர் சீ. வைஜெயந்திமாலா

*தமிழ் விரிவுரையாளர்,*

*குந்தவை நாச்சியார் அரசினர்*

*மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி),*

*தஞ்சாவூர் - 613 007.*

இக்கால இலக்கிய வளர்ச்சியில் பிரபஞ்சனுக்கென்று தனி இடம் உண்டு. அவர் நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள் போன்றவற்றின் வாயிலாக இலக்கியக் கலை வளர்ச்சிக்குச் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார். அவரது 'சந்தியா நாவலில் காணப்படும் பெண்ணிய சிந்தனைகள்' பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்களால் பிறந்தோம், பெண்களோடு வாழ்கிறோம். எனினும் பெண்களுக்காக நியாயத்தை வழங்கினோமா? என்றால் இல்லை. ஏன்? இது ஆண்களின் உலகம். சட்டங்கள், சமூக மரபுகள், விதிகள் அனைத்தும் ஆண்களால் உரிவாக்கப்பட்டவை அல்லவா? ஆகவேதான் பெண்களுக்கு இன்னமும் நீதி மறுக்கப்படுகிறது என்று, பெண்களுக்காக வருத்தப்பட்டுத் தன்னைச் சார்ந்த சமூகத்தைச் சாடத் துணிகிறார், பிரபஞ்சன். சமூகத்தில் பெண்கள் படுகின்ற அவலங்களுக்குத் தீர்வு காணும் முறையில் தம் கலைப் படைப்புகளை ஒரு பிரச்சாரக் கருவியாக கையாளுகிறார். பெண் ஆணைச் சார்ந்தவள், தியாகத்தின் திருவுருவம், பொறுமையின் இருப்பிடம், அடக்கம், அன்பு, பணிவு என்ற பண்புகளை அணிகலன்களாகப் பூண்டவள், போகப் பொருள், உடல் கூறு அடிப்படையில் பெண் பலவீனமானவள். எனவே இரண்டாந்தர மதிப்பு உடையவள், 'பேதை' என்றெல்லாம் காலங்காலமாக இந்தப் பெண் என்ற கருத்துப்

படுவத்தை ஆணாதிக்கச் சமூகமும், ஆண் எழுத்தாளனது படைப்புகளும் உருவாக்கி வந்துள்ளன. இந்த கருத்துப் படிவத்தை உடைத்துப் பெண்களாலும், எச்செயலையும் ஆற்ற முடியும் என்பதையும், ஆண்களுக்குச் சமமானவர்கள் பெண்கள் என்ற கருத்தையும் வலியுறுத்தி நிற்கிறது 'சந்தியா'.

## பேச்சளவில் உரிமை

ஆணும், பெண்ணும் சமம் என்பதைக் கருத்தளவில் ஒப்புக் கொள்ளும் சமூகம், செயலளவில் ஏற்றத்தாழ்வுகளை அனுமதிக்கிறது.

நாவலில் சரோஜா என்ற வேலைக்குச் செல்லும் பெண், வேலை விட்டதும் வீடு, வீடு விட்டால் வேலை. நடுவில் தன் தோழி வீட்டிற்கோ, சினிமாவிற்கோ, வேறு எங்கேயும் செல்ல முடியாது. கொஞ்சம் சுதந்திரமாக இருக்க நினைத்தால் அம்மா ஆயிரம் கேள்வி கேட்பாள். அண்ணன் காலை ஒடிப்பான். அப்பா பேச மாட்டார் என்கிறாள். இப்படிப்பட்ட சட்டத்திட்டங்களும் கட்டுப்பாடுகளுக்கும் அடங்கித்தான் பெண்கள் வெளியில் வரமுடிகிறது என்ற நிலையினையும், பெண் என்பதால் அடக்கப்படுவதையும் காட்டுகிறது சந்தியா, இதனைக் கருத்தில் கொண்டே

> ''இந்திய பழைய மரபு, பெண்ணைக் குடும்பத்தின் ஓர் உறுப்பினராக, மகளாக, மனைவியாக-தாயாக கருதியதேயன்றி தன்னளவில் உரிமைகளும், தனித்துவமும் கொண்ட உயிரியாகக் கருத வில்லை.''[1]

என்று மா. இராமலிங்கம் தருகிறார். மேலும்,

> ''தானாகச் சிந்தித்து முடிவெடுக்கும் அறிவுடைய வளாக தனக்கென்று ஒரு தனி நிலை உடையவளாக, தமிழ் சமுதாயம் நீண்ட நெடுங்காலம் பெண்ணை மதிப்பிடவில்லை.''[2]

- என்ற சாலினி இளந்திரையன் கருத்தும் ஒப்பு நோக்கத் தக்கது.

நடைமுறையில் ஆணைச்சார்ந்தே பெண் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனைச் சந்தியாவிலும் காண முடிகிறது.

> ''இந்த கணவன் உனக்கெதற்கு என்று'' கனகாவை கேட்டாள் சந்தியா, ஒரு நாள்,
>
> ''பெண்ணுக்கு கணவன் எதற்கு, இது ஒரு கேள்வியா சந்தியா, கணவன் இல்லாமல் வாழ முதலில் என் அப்பா அம்மா சம்மதிப்பார்களா? அண்ணன்கள் இருக்கிறார்கள். எனக்கு அடுத்து தங்கைகள் இருக்கிறார்கள். ஊர்ப் பெண்கள் மதிப் போடு என்னிடம் பேசவேண்டும். எல்லாவற் றிற்கும் மேலே கழுத்தில் தாலி இருந்தால் புஷ்பராஜ் மாதிரி ஆட்கள் சட்டென்று என்னிடம் வர பயப்படுவார்கள்.''[3]

என்கிறாள் கனகா.

பெண்கள் தாலியைத் தனக்கு ஒரு வேலியாகவே பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதில் அன்பு. பாசம் என்ற உணர்வுகள் அற்றுப்போய் கட்டுப்பாடுகள் மட்டுமே நிற்கின்றன என்று விளக்குகிறார் ஆசிரியர்.

## வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்கள்

> ''நடுத்தரக் குடும்பங்களில் பொருளாதார நிலை என்றைக்கும் ஒன்று போல் இருப்பது இல்லை. சில வேலைகளில் ஆண்கள் பொறுப்பற்றவர்களாகி விடும்போது, பொருளாதார நிலை சரிந்து விடு

கிறது. இந்த வீழ்ச்சியை ஈடுகட்ட வேண்டிய பொறுப்பு புதிதாக பெண்களிடம் வந்து சேர்கிறது.''[4]

பொருளதார நிலை காரணமாக வேலைக்குச் செல்லும் பெண்களாக ராஜீ, கனகா, சரோஜா ஆகியோரைத் தம் நாவலில் காட்டுகிறார். வேலைக்குச் செல்வதால் சில சுகங்களை அனுபவிக்க முடியாமல் போய்விடுகிறது. இதனை நாவலில்,

''எவ்வளவு சுகங்களை விற்று காகிதக் கரன்சிகளை வாங்க வேண்டியிருக்கிறது.''[5]

என்ற சந்தியாவின் கூற்றிலிருந்து அதில் இழைந்தோடும் சோகத்தினைக் காண முடிகிறது.

''பெண்கள் சம்பாதிக்கப் படி இறங்கினாலே பிரச்சினைகளும் தோன்றித்தானே விடுகின்றன''[6]

என்ற இராஜீவின் கேள்விக்கு

''சம்பாதிக்க மட்டும் தானா? கோயிலுக்கு போவதானாலும் கூட பெண்ணைப் பையன்கள் மட்டுமா துரத்துகிறார்கள், பிரச்சினைகளும், துரத்துகின்றன''[7]

என்று சந்தியா கூறும் பொழுது அதில் ஆற்றாமை தொனிக்கக் காணலாம்.

## பெண்ணே பெண்ணைத் தூற்றும் நிலை

இன்று பெண்களுக்குப் பெண்களேதான் முதல் எதிரி என்ற நிலை உருவாகி விடுகிறது. இதற்குச் சான்றுகளாக வரதட்சணைக் கொடுமை, மாமியார் ஆதிக்கம் போன்ற வற்றைக் கூறலாம். பெண்ணுக்கு பெண்ணே எதிரியாக இருப்பதை,

''அவன் 'பி' செக்ஷன் வத்சலாவோட சுத்தறான்.''
''அவ ஒரு அசடு இந்தப்பய ஏற்கனவே கல்யாணம் ஆனவன். பார்த்துக்கிட்டே இரு அவன் அவளை ஒரு வழி பண்ணத்தான் போறான்.''[8]

என்று வத்சலாவையும், நடராசனையும் இணைத்துப் பேசுகிறாள், சாந்தகுமாரி.

ஆணும், பெண்ணும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்க்கும்போதோ, கல்லூரியிலோ, பொது இடங்களிலோ சந்தித்துப் பேசிக் கொண்டால் தவறாகத்தான் இருக்க முடியும் என்ற தவறான கண்ணோட்டத்தைப் பெண்களும் கொண்டு இருப்பதை சாந்தகுமாரி வாயிலாகச் சுட்டிக் காட்டுகிறார் பிரபஞ்சன்.

## ஆதிக்கம் செலுத்தும் ஆண்மை

ஒரு பெண் மனைவி என்ற நிலைக்கு வந்துவிட்டால், அவளுக்கென்று ஒரு உணர்வு, ஒரு ரசனை இருக்கும் என்பதே ஆண்களுக்கு மறந்து விடுகிறது. தன் ரசனைக்கு ஏற்ப தன் தேவைக்கு ஏற்ப தன் மனைவியும் மாற வேண்டும் என்று நினைக்கின்றனர். மாற்றியும் விடுகின்றனர். சந்தியா விற்கு கோபி என்ற நண்பன் உண்டு. அவன் வாயிலாக ஆண்கள், பெண்களை அடிமைப் படுத்த முயல்கிறார்கள் என்பதை காட்ட வருகிறார் ஆசிரியர்.

கோபி, பெண்கள் தலையில் பூ வைத்துக் கொள்வது பிற்போக்குத்தனம் என்கிறான். மேலும் சந்தியாவைப் பார்த்து,

''இது என்ன மஞ்சள் நிறத்தில் இப்படி ஒரு சேலை''[9]

என்று கடிந்து கொள்கிறான் கோபி.

''இது எனக்கு பிடிக்கிறது உனக்குப் பிடிக்க
வேண்டும் என்கிற கட்டாயம் என்ன''

என்று ஆணாதிக்கத்திற்கு ஒரு சாட்டையடி கொடுக்கிறாள் சந்தியா.

பேருந்துகளில் கூட ஆண் தனக்குப் பாதிப்பு ஏற்படப் போவதில்லை என்று எண்ணிக்கொண்டு பெண்களை வேண்டுமென்றே உரசிக்கொண்டு, நிற்கிறான். அவர்கள் வீட்டில் வயது வந்த மகள்களும், சகோதரிகளும் இருப்பார்கள். ஆனால் அவர்களை உரச முடியாது. இப்படி வெளியிலும், தெருவிலும், பேருந்துகளிலும் நெருக்கமான கூட்டங்களிலும் உரசிக் கொள்வதில் இவர்களுக்கு ஓர் அற்ப சந்தோசம். இங்கு பெண்மையானது ஒரு போகப்பொருளாகக் காட்டப்படுகிறது.

## ஆணுக்கோர் கற்பு, பெண்ணிற்கோர் கற்பு

கணவன், மனைவிக்குத் துரோகம் செய்யலாம், ஆனால் மனைவி துரோகம் செய்யக்கூடாது என்பது சமூகத்தின் எதிர்பார்ப்பு, கணவன் தன் மனைவியைப் பிரிந்திருந்து வேலை செய்வதால் சந்தர்ப்பமும், சூழ்நிலையும், அவனை இரண்டாம் திருமணம் செய்து கொள்ளத்தூண்டுகிறது. இது துரோகம் செய்யும் ஆண்கள் கூறும் சமாதானம். ஆனால்.

''கற்பு நிலையென்று சொல்லவந்தார்க்கு
இரு கட்சிக்கும் இஃது பொதுவில் வைப்போம்.''

என்றார் பாரதி. இது இன்று ஏட்டளவில் நின்றுவிட்ட பாட்டு. இது நடைமுறையில் இல்லாத நிலையினைக் காட்டுகிறது, ''சந்தியா'' கணேசனும், கனகாவும் அலுவல் காரணமாக பிரிந்திருக்கிறார்கள். இதனால் கணேசன், லதா என்ற பெண்ணிடம் உறவு வைத்துக் கொள்கிறான். ஆனால் கனகாவிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கிறான்.

> ''அவள் வேண்டாம், அவள் பணம் வேண்டும் துய்த்து உறவாட ஒருத்தி இருக்கையில் இன்னொருத்தியுடன் உறவு கொள்ளும் இந்த கீழ்மைப் புத்தி இந்த ஆண்களுக்கு எப்படி ஏற்படுகிறது. எச்சிலை சுவைத்து இன்புற அவர்களைத் தூண்டுவது எது? காமம்தான்''[11]

என்று சந்தியா சிந்தனையைத் தூண்டும் வண்ணம் வினா எழுப்புகிறாள்.

**மறு மணம்**

தன் நாவலில் மறு மணத்தினை வரவேற்கிறார் பிரபஞ்சன். மனைவியை இழந்த சிவாவும், கணவனிடம் விவாகரத்துப் பெற்ற கனகாவும், மறுமணம் செய்து கொள்வதாகக் காட்டுகிறார்.

இந்நாவலில் மதிப்பிழந்து போன மரபுகளை உதறவும் முடியாமல், புதிய சமூக மதிப்புகளுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொள்ளவும் இயலாமல் பண்பாட்டுக் கவலையில் சிக்கித் தவிக்கும் பெண்ணியச் சிந்தனைகளைச் சுட்டியுள்ளார்.

***குறிப்புகள்***

*01.* *முனைவர் சா. வளவன், பெண் படைப்பாளர் தம் படைப்புகள், ப. 4.*

*02.* *முனைவர் சா. வளவன், பெண் படைப்பாளர் தம் படைப்புகள், ப. 4*

*03.* *சந்தியா, ப. 93.*

*04.* *டாக்டர் செயராணி ராசதுரை, பெண்கள் படைப்பில் சமூகம், ப. 150.*

*05.* சந்தியா, ப. 37.
*06.* சந்தியா, ப. 37.
*07.* சந்தியா, ப. 32.
*08.* சந்தியா, ப. 59.
*09.* சந்தியா, ப. 60.
*10.* பாரதியார் கவிதைகள், ப. 578.
*11.* சந்தியா, ப. 87.

# தன்னலமற்ற தாய்மையின் சிறப்பு

முனைவர் தி. கலா ஸ்ரீதர்
*விரிவுரையாளர்,*
*ஓலைச்சுவடித்துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர் - 10.*

பெண்கள், தெய்வத்துடன் ஒப்பிட்டுக் கூறும் அளவிற்குச் சிறப்பு வாய்ந்தவர்கள். அவ்வாறு கூறுவதற்குக் காரணம் பெண்கள் சிறந்த குலமகளாகவும், குலவிளக்காக வும் திகழ்வதே ஆகும். மனிதராகப் பிறப்பது பெரும்பேறு, அதில் பெண்ணாகப் பிறப்பது சிறந்த பேறு, அதிலும் தாய் என்ற தகுதியை அடையும்போது தெய்வத்தைவிட ஒருபடி உயர்ந்த நிலையைப் பெண் அடைகிறாள். ஒரு இல்லம் மகிழ்ச்சியாக இருந்தால் அவ்வில்லக் குடிமகள் மகிழ்ச்சி யாக வாழ்கிறாள் என்பதை நாம் உணரலாம். பெண்களின் சிறப்பு பெண்ணியத்திற்கே உரியது. பெண்கள் மென்மை யானவர்கள், இனிமையானவர்கள், குடும்பச் சுமையைப் பகிர்ந்து சுமக்கும் நல்லுள்ளம் கொண்டவர்கள். இப்படித் தான் வாழவேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஏற்று நடப்ப வர்கள் என்பதை அனைவரும் நினைத்துப் பார்க்க வேண் டும். இதனடிப்படையில் பெண்ணியத்தில் தாயின் சிறப்பு பற்றி விளக்கிக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்களின் சிறப்பு

பெண்கள் சுதந்திரமில்லாதவர்கள் என்று சொன் னாலும் அவர்களுடைய பெருமை பெரியது. தாய் என்ற சொல் அவர்களுக்கே அமைந்துள்ளது. தாய் என்கிற பதவியைக் காட்டிலும் பெரியதொன்றில்லை. ''அம்மையே யப்பா வொப்பிலா மணியே'' என்று பெரியோர் இறை

வனைத் தாயாகக் கூறியிருப்பது இதனைப் புலப்படுத்து கின்றது. உலகப்பற்று நீங்கிய துறவிகளைத் தந்தைபோன்ற பெரியவர்கள் பணியவேண்டும். ஆனால் தாயைக் கண்டால் துறவி பணியவேண்டும் என்பது விதி. பட்டினத்துப் பிள்ளை யார் உலகைத் துறந்தவராயிருந்தும் தம் தாயின் ஈமக்கடனைக் கழித்துவிட்டு அப்பால் வேறிடஞ் செல்லவேண்டுமென்ப தைக் கருதி குடியிருந்த வீட்டிற்குக் கொள்ளி வைக்க வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்தாகச் சொல்வார்கள். பிரபோதசந்திரோதயம் என்ற நூலில் சந்நியாசிகளும் வந்தத் தாயரை வணங்குவாரே என்று கூறப்பட்டுள்ளது. பெண் பாலர் அவ்வளவு பெருமை வாய்ந்தவர்கள். மேன்மை அறிவு முதலிய குணங்கள் இயற்கையிலேயே அமையப் பெற்றவர்கள் ஆவர். இப்போதும் பெரியவர்கள் தம்மைவிட வயதில் குறைந்தவர்களையும், சின்னக் குழந்தைகளையும், தாயி, தாயே என்றே அன்பாக அழைப்பார்கள். இதிலிருந்து பெண்களைப் பெற்ற தாயாக நினைக்கும் உயர்ந்த குணத் திலிருந்து பெண்ணினத்தின் மதிப்பு தெரிகிறது.

## தாயின் சிறப்பு

தாய் என்பவள் அன்பின் உறைவிடம். அவளை விட அன்பு, பாசம், பற்று இவற்றை எல்லாம் மிஞ்சியவர்களாக யாரையும் கூறிவிடமுடியாது. தாயிற் சிறந்த கோயிலும் இல்லை என்பார்கள். இது எத்தனை மெய்யான வார்த்தை என்பதை, ஒரு பெண் அவள் தாயாகும்போது நன்கு உணர் வாள். தாயைப் பற்றிக் கூறவேண்டுமானால் அவள் ஒரு பற்று அற்றத் தெய்வம், தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ள மாட்டாள். தன் குழந்தை, தன் கணவர், தன் சுற்றம் அடிப்படையில் எல்லாவற்றையும் தியாகம் செய்யும் உயர்ந்த குணம் தாய்க்கு மட்டுமே உண்டு. தனக்கென்று வாழாத தன்னலமற்றவள் தாய். தாய் மடிக்கு இணையான மடி வேறு எதுவும் இல்லை. தாயைப் பற்றிக் கூறவேண்டு மானால் சொல்லிக்கொண்டே போகலாம். கணவருக்கு மனைவி தாயாகவும், தாதியாகவும் இருக்கிறாள். ஆனால்

குழந்தைக்குத் தாய் அன்னையாகவும், அனைத்துமாகவும் இருக்கிறாள்.

தூய்மையான அன்பையும், தியாகத்தையும் கொண்ட அன்னை தன் குழந்தைக்காகப் பல தியாகங்களைச் செய் கிறாள். உயிரையும் கொடுக்கும் உத்தம அன்னையின் உள்ளப் பாங்கைக் காணும் வகையில் கூறப்படும் செய்தி யாவது: சுபதேவர் என்ற சோழ மன்னரும், அவர் மனைவி கமலவதியும் நெடுங்காலம் குழந்தைப்பேறு இல்லாமல் இருந்தனர். இறைவன் திருவருளால் கமலவதியார் கருவுற்றார். கரு முதிர்ந்து பிரசவ நேரமும் வந்து சேர்ந்தது. அப்போது இன்னும் ஒரு நாழிகை கழித்துக் குழந்தை பிறக்குமானால் அது மூவுலகையும் அரசாளும் என்று சோதிடர்கள் கூறினார்கள். அதைக் கேட்ட கமலவதியார் இப்போது குழந்தை பிறக்காமல் ஒரு நாழிகை கழித்துப் பிள்ளை பிறக்கும்படி என் காலைச் சேர்த்துத் தலைகீழாக மேலே தூக்கிக் கட்டுங்கள் என்று கூறினார். ஒரு நாழிகை கழித்து கட்டு அவிழ்த்து விடப்பட்டது. கமலவதியார் அரிய மணி போன்ற ஆண் குழந்கையைப் பெற்றெடுத்தார். கால நீட்டிப்பால் கண்கள் சிவந்திருந்த குழந்தையைக் கண்ட அத்தாயார்''என் கோச்செங்கணானோ'' என்று அழைத்தார். உடனே உயிர் துறந்தார் என்று 63 நாயன்மார்கள் வரலாறு என்ற நூல் வழியாக அறியமுடிகிறது. இதைவிடத் தாயின் தியாகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு கூற முடியாது. தன் உயிரையே குழந்தைக்காக விடும் மனப்பாங்கு தாய்க்கு மட்டுமே உண்டு. தன் உயிரைவிட தன் குழந்தையின் வாழ்வைப் பெரிதாகக் கொள்ளும் தாயை நாம் மதிக்க வேண்டும், போற்ற வேண்டும், வணங்க வேண்டும். கிராமங் களில் வாழும் எத்தனையோ குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றனர். தாயானவள் கால் வயிற்றுக் கஞ்சியானாலும் தன் குழந்தைகளுக்கு இடுகிறாள். உழைக்கும் தன் கண வனுக்குக் கொடுக்கிறாள். அவளோ வெறும் தண்ணீரைக்

குடித்துவிட்டு உறங்குகிறாள். இன்றும் கிராமம் மற்றும் நகரங்களின் பல குடும்பங்களில் இந்நிகழ்ச்சி நடக்கிறது. குழந்தை இழப்பாலோ குழந்தைகளின் செயல்களாலோ மனநிலை பாதிக்கப்படும் தாயைக் கண்டால் உருகாதார் நெஞ்சமும் உருகும். அத்தகு பாச உணர்வை வெளிப்படுத் தும் சிறப்பு தாய்மைக்கே உரியதாகும்.

## பெண்ணினத்தை மதித்த பெரியவர்கள்

ஆண்டவன் முதல் அரசன்வரை பெண்களைச் சிறந்த முறையில் மதித்துள்ளார்கள். இல்லங்களில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளில் குலமகளான பெண்களை வைத்தே விளக் கேற்றுகிறார்கள். நாம் ஆழமாகச் சிந்தித்தோமேயானால் பெண்களை அனைவரும் உயர்வாக மதிக்கிறார் என்பதற்கு இது ஒரு சான்றாகும். தாயில்லாத சிவபெருமான் காரைக் காலம்மையாரை அம்மா என்று அழைத்தார் என்றால் காரைக்காலம்மையின் பெருமையை என்ன என்று சொல்லு வது. அவரின் பக்தியையும், பாசத்தையும் உணர்ந்த சிவபெரு மான் தனக்குத் தாயொருத்தி இருந்தால் இத்தனை அன்பாக இருந்திருப்பாளோ என்று இறைவன் உணர்ந்ததாக நம்மை நினைக்கத் தூண்டுகிறது.

அடுத்ததாக, பெண்களின் மீது அடியார்கள் கொண்ட அன்பைப் பார்ப்போமேயானால் சிவகாமி ஆண்டார் என்ற சிவனடியார் இறைவனுக்குச் சாத்த பூக்களை கோயிலுக்குக் கொண்டு சென்றார். செல்லும் வழியில் பட்டத்து யானை பூக்கூடையைத் தட்டிவிட்டது. பூவெல்லாம் கீழே கொட்டி யது. இறைவனுக்குச் சாத்த முடியவில்லையே என்று சிவகாமி ஆண்டார் அழுதார். இதைக்கண்ட எரிபத்த நாய னார் அவரின் அழுகைய்யை ஒரு குழந்தை அழுவதுபோல் உணர்ந்தார். உடனே அந்த யானையைத் தேடிச்சென்று கொன்றார். அதைத் தடுக்கவந்த அந்த யானையுடன் வந்த ஐந்துபேரையும் கொன்றார். அடியார்கள் பெண்களைக்

குழந்தையாகவும் பார்த்துள்ளார்கள் என்பதை எரிபத்த நாயனாரின் வாழ்கைக் குறிப்பின் வாயிலாக அறிய முடிகிறது.

மேலே கூறப்பட்டது போல, தாய்க்கும் பிள்ளைக் கும் உள்ள பாச உணர்வை வெளிக்காட்டும் விதமாக அதிய மான் ஔவையின் உறவுநிலையைப் பார்த்தோம் என்றால் அதியமான் நீண்டநாள் வாழக்கூடிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் ஔவைக்குக் கொடுத்தான். காரணம் அவரைத் தன் தாயினும் மேலாக நினைத்தான். தனக்குப் பிறகு நாட்டை ஆள்வதற்கு மகன் இருப்பதால் தான் நீண்ட காலம் இருப்பதாகவும், ஔவையார் நெடுங்காலம் வாழ்ந்திருந் தால் உலகுய்யும்படி அவர் செய்விப்பார் என்று அவன் நினைத்தான். ஔவை என்ற சொல்லுக்குத் தாய் என்பது பொருள். இத்தாய் உலக மக்களுக்கு அறிவைப் புகட்டும் தாயாகப் பலநாள் வாழவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் தான் அதியமான் ஔவைக்கு நீண்ட நாள் வாழக்கூடிய நெல்லிக்கனியைத் தந்திருக்கிறார் என்பது புலனாகிறது. பழத்தின் அருமையை முதலில் அறியாத ஔவையார் அதை உண்டுவிட்டார். பிறகு அதன் விசேடத்தை அறிந்து அதிகனைப் பாராட்டி பரமசிவனை அவனுக்கு ஒப்பிட்டு ''நீலமணிமிடற்றொருவன் போல மன்னுக பெரும நீயே'' என்று பாடியுள்ளார். இவ்வாறு பெண்களை ஆண்டவன் முதல் அடியார்கள் மற்றும் அரசன் வரை சிறப்பித்துள்ளார்கள் என்பதை நாம் உணரமுடிகிறது.

## தாய் நற்றாயாய் விளங்கவேண்டும்

குழந்தைகள் பெற்றோரை எதிர்த்துப் பேசுவதைச் சிறு வயதிலேயே கட்டுப்படுத்த வேண்டும். சின்னக் குழந்தையாக இருக்கும்போதே தாய் தந்தையருக்கு மரி யாதை கொடுக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று முதல் வகுப்பிலே படிக்க ஆரம்பித்து விடுகிறார்கள் குழந்தைகள். அந்த வார்த்தைக்

கான பொருளை இளமையிலேயே நாம் குழந்தைகளுக்குக் கற்றுத்தரவேண்டும். பாச உணர்வை குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே புகட்ட வேண்டும். உறவுமுறைகளைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் நம் தாத்தா, நம் ஆயா என்று கூறுவதற்குப் பழக்கப்படுத்துவதால் உறவின் ஆழமும் பொருளும் அவர்களுக்குத் தெளிவுபடும். சிறுவயதில் ஏற்படும் பிளவுபட்ட வார்த்தைகள்தான் பெரியவர்கள் ஆனவுடன் தம் பெற்றோருடன் ஒட்ட மறுக்கிறார்கள். திருமணம் ஆனவுடன் பெற்றோரை மதிக்காமல் போவதற்குக் காரணம் உண்மையான உறவின் பொருளை அவர்கள் சரிவர புரிந்துகொள்ளாமல் இருப்பதே ஆகும்.

மேலும் பகிர்ந்து உண்ணும் பழக்கத்தைக் குழந்தைகளுக்கு கற்றுத்தரவேண்டும். சுயநலம், பொறாமை இவைகள் குழந்தைகளுக்கு வராமல் இளமையிலேயே களைய வேண்டும். குழந்தைகள் நல்லவர் ஆவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற வரியை உற்றுநோக்கிப் பார்த்தால் குழந்தைகள் நற்சிந்தனை, நன்நடத்தையுடன் வாழ்வில் வளர்ச்சியுற்று வெற்றியடைந்தால் அந்தப் புகழ் தாயையே சேரும்.

## பெற்றோரைக் காக்கும் கடன் பிள்ளைக்கே

குழந்தையைச் சுமந்து பெற்றெடுக்க ஒரு தாய் மறு பிறப்பு எடுக்கிறாள். தாய்மார் சிலர் குழந்தையைப் பெற்றெடுத்து உயிரையும் விடுகிறார்கள், அந்த அன்பு உள்ளங்களை இளைய தலைமுறையினர் மதிக்க வேண்டும். தன் பிள்ளை எவ்வளவு பெரியவராக இருந்தாலும் துன்பத்தால் துவளும்போது தாயும் துவளுகிறாள். கண்ணீர் வடிக்கிறாள். ஆனால் தாய் துன்பப்படும்போது பெரும்பாலும் பிள்ளைகள் உணர்வதில்லை. தனக்கென்று ஒரு மனைவி வந்தவுடன் ஆண் பிள்ளைகளின் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுகிறது வரும் மருமகளில் பாதிப்பேர் மாற்றத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள். மாற்றம் ஏற்படாமல் இருந்தால் அந்த இல்லம்

மகிழ்ச்சியாகவே இருக்கறது. மருமகளைத் தன் மகள் போல் மாமியார்களும் நினைக்கவேண்டும். அளவு கடந்த பாசத்தை மருமகளிடன் காட்டும்போது அவளும் பண்படுவாள். இதை ஒவ்வொரு குடும்பமும் பின்பற்றினால் வீடு நலமாக இருக்கும்.

சில பிள்ளைகள் பெற்றோரைப் பாரமாக எண்ணு கிறார்கள். தாய் தன் வயிற்றில் குழந்தையைச் சுமக்கும்போது பாரமாக ஒருபோதும் எண்ணுவதில்லை. அதைப் பேரின்ப மாக நினைக்கிறாள். அதைப்போல தாய் தந்தையரைச் சுமையாக எண்ணுதல் கூடாது என்பதை ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டும். நாம் வளர்ந்துவிட்டோம். மனைவி, மக்கள் கிடைத்துவிட்டார்கள். நாம் உண்டு நம் குடும்பம் உண்டு என்று பலர் நினைக்கிறார்கள். அதனால் பெற்றோர் கள் அடையும் வேதனை நெஞ்சை உருக்கும் வகையில் உள்ளது. வசதி படைத்தவர்கள் சிலர் பெற்றோரை முதியோர் இல்லங்களில் விடுகிறார்கள். அதனால் அவர்கள் உண்மை பாசத்தை நினைத்து ஏங்குகிறார்கள். இந்த நிலையைப் பிள்ளைகள் மாற்ற வேண்டும். ஒரு மகன் தன் மனைவிக்கும் தன் பெற்றோருக்கும் நடுநிலையில் நின்று இருவரையும் காக்கும் கரமாகவும் அவர்களின் மனதை மகிழ்ச்சிபடுத்துப வராகவும், அவர்கள் இருவருக்கும் அன்பை ஏற்படுத்தும் பாலமாகவும் திகழவேண்டும். பாசம் பற்று நிறைந்திருக்கும் நல்லதொரு குடும்பம் என்றும் பல்கலைக்கழகமாக திகழும் என்பதில் நாம் நம்பிக்கைக் கொண்டு பெற்றோரைத் தெய்வ மாக நினைப்போம், அவர்களின் ஆசியுடன் வாழ்வோம்.

# பெண் பருவநிலைகளும் உடல் உள மாற்றங்களும்

ஸ்ரீரஞ்ஜனி சிவபாலன்
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*சித்த மருத்துவத்துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

## முகவுரை

மகளிர் பொதுவாக அன்றாட வாழ்வில் குடும்பத்திலும் சமூகத்திலுமாக பல சவால்களை எதிர் கொள்கிறார்கள். இவை தவிர இயற்கை பெண்ணில் ஏற்படுத்தும் பருவமாற்றங்களால் அவளுக்கு மேலும் சில சிக்கல்கள் வருகின்றன. அப்பருவமாற்ற நிகழ்வு பற்றியும் அக்காலத் தேவைகள் பற்றியும் ஒரு பார்வை.

## பெண்ணின் பருவங்கள்

சமுதாயத்தில் ஆண், பெண் என இரு கூறுகள் உள்ளன. பெண்ணானவள் தனது வாழ்நாளில் ஒன்றிலிருந்து மற்றொன்றாக தனிச்சிறப்பான பல பருவங்களை அடைகின்றாள்.

1. பிறப்பில் இருந்து பூப்பெய்தும் வரை அவளது பேதைப் பருவம் அல்லது குழந்தைப்பருவம் (Period of Childhood) 13வயது வரை.
2. மங்கைப்பருவம் அதாவது பெண்மைப்பருவம் (Period of sexual maturation) 13முதல் 18 வயதுகள் வரை,
3. மடந்தைப்பருவம் அதாவது பெண்மை முதிர் பருவம் (Period of maturity) 18முதல் 20 வயதில் ஆரம்பம்,

4. பேரிளம் பெண்மைப்பருவம் (Period of Climacteric) 42 முதல் 48 ஆண்டுகளுக்கிடையில், மாதவிடாய்களும் (Menstruation) அதனோடு தொடர்புடைய மாதவிடாய்ச் சுழற்சி (Menstrual Cycle) சம்பந்தப்பட்ட எல்லா நிகழ்ச்சிகளும் படிப்படியாகக் குறைந்துவிடும் காலம்.
5. மாதவிடாய் முற்றிலும் நின்ற பிற்கால பருவம் (Menopause).

## தமிழ் மொழி மரபுப்படி பெண்பாற்குரிய பருவங்கள்

| | |
|---|---|
| பேதை | 5 முதல் 7 வயது |
| பெதும்மை | 8 முதல் 11 வயது |
| மங்கை | 12 முதல் 13 வயது |
| மடந்தை | 14 முதல் 19 வயது |
| அரிவை | 20 முதல் 25 வயது |
| தெரிவை | 26 முதல் 31 வயது |
| பேரிளம்பெண் | 32 முதல் 40 வயது |

இவ்வாறு, தமிழிலக்கியங்கள் பெண்ணின் பருவ நிலைகளைக் குறிக்கின்றன.

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு பருவத்திலும், பெண்களுக்குத் தகுந்த பராமரிப்புத் தேவை! இல்லாவிடில், அவர்கள் வாழ்வில் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பிறந்த நாள் முதல் சிறந்த முறையில் உடல், உள வளர்ச்சி ஏற்பட வாய்ப்பினை அளிக்கக்கூடிய சூழ்நிலையில் பெண் வளர்க்கப்படவேண்டும். எதிர்காலத்தில் நல்ல ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்கப்போகிறாள் பெண் என்பதனால் அவளுக்கு, சிறுவயதில் தக்கமுறையில் தாய்ப்பால் ஊட்டவேண்டியது முக்கியமானது. குழந்தையின் நல்வாழ்க்கைக்கு சத்துள்ள உணவும், உடற்பயிற்சியும் அவசியம். 7ல் இருந்து 13 ஆண்டுகளில் சிறுமி படிப்படியாக பால் இயல் பின் வளர்ச்சியை அடைகிறாள். அவளது இடுப்பு அகன்று வளர்கிறது. இந்தக் காலத்தில் நல்ல

ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உணவையும், போதுமான அளவிற்கு வைட்டமின் ஏ,பி,சி,டி,இ ஆகிய உயிர் ஊட்டப் பொருள்களை உள்ளடக்கிய உணவையும் கொடுக்க வேண்டும். கால்சியம், இரும்புச் சத்து நிறைந்த உணவுகள் கொடுக்கப்படவேண்டும். பொருத்தமான உணவு, ஊட்டச் சத்து இன்மையால் முதுகுத் தண்டெலும்பில் வளைவும், இடுப்புக்கூட்டு எலும்பின் நேரில்லா வளர்ச்சியும் ஏற்பட லாம். இந்நிலை ஆரம்பத்தில் வெளித்தோன்றாது. ஆனால் பேறுகாலத்தில் பல இடர்பாடு களை உண்டாக்கும்.

நம் நாட்டில் நடுத்தர, மற்றும் வசதி குறைந்த நிலையிலுள்ள சில பெற்றோர்கள் உணவு விசயத்தில் ஆண் குழந்தைகளைக் கவனிப்பது போல் பெண் குழந்தைகளைக் கவனிப்பதில்லை. பெண்களுக்குப் பொதுவாக அதிக உணவு கொடுக்கவேண்டும் என்று எண்ணுவதில்லை. பெண் களுக்கு குறைந்த அளவு உணவு போதும்; அவர்கள் பசியைத் தாங்கும் சக்தி கொண்டவர்கள் என நினைக்கிறார்கள். ஆனால், பெண்ணுக்குத்தான் ஊட்டச்சத்தும், உளவியல் சார்ந்த அனுசரணையும் அதிகம் தேவைப்படுகிறது. பள்ளிப் பருவத்திலேயே, சிறுமி பேதைப்பருவத்திலிருந்து பெதும் பைப்பருவத்தையும் கடந்து விரைவாக மங்கைப் பருவத் தினை அடைகிறாள். அவள் 13 வயதளவில் பூப்பெய்து கிறாள். இது ஒரு திடீர் நிகழ்ச்சி அல்ல. ஓர் அவஸ்தைப் படிநிலையின் வளர்ச்சியின் மலர்ச்சியாகும். இப் பக்குவ மடையும்காலத்தில் இனப்பெருக்க உறுப்புக்கள் கட்டமை விலும், தொழிற்பாட்டிலும் முதிர்ச்சியடையும். இவை எல்லாம் ஹார்மோன்களின் செயற்பாடாகும்.

பூப்புப் பக்குவத் தொடக்க காலம் பல காரணிகளால் பாதிக்கப்படும். ஒன்று பிறப்புறுப்பு இயல்புகள், மற்றையது முக்கியமான ஊட்டவளம் ஆகும். இன்னும் பல புறச் சூழற் காரணங்கள் பூப்புப் பருவத்தின் தொடக்கத்தைப் பாதிக்கும். முதற்தரம் ஏற்பட்ட மாதவிடாய், பூப்பு அடைதல்

எனப்படும். அவள் பருவமடைந்து இளம் பெண்நிலை வளர்ச்சியை அடைந்துள்ளாள் என்பதைக் குறிக்கும். இது ஒரு இயற்கையான நிகழ்ச்சியே[1]. ஆனால் அவள் முழுவது மான உடல் வளர்ச்சியும், மனவளர்ச்சியும் இந்நேரத்தில் அடைவதில்லை. பூப்பெய்தி முதலாவது மாதவிடாய் ஏற் பட்ட காலகட்டத்தில் பெண் உடல், உள ரீதியாக மாற்ற மடைவதால், ஒருவித கூச்சமான, வெட்க உணர்வுடன் காணப்படுவாள். இப் பருவத்தில் பெண்கள் பொதுவாகத் தமது சக தோழியருடன் இரகசியமாகப் பேசி இப் பருவ மாற்றம் குறித்த தகவல்களைப் பரிமாறிக்கொள்வர். மாத விடாய்க் காலத்தில் மிகுந்த அன்போடும் ஆதரவோடும் அவளை வழிநடத்த வேண்டியது பெற்றோர், ஆசிரியர், சமூகத்தின ரின் தலையாய கடமையாகும். இக்காலத்தில் இளம் பெண்களின் வளர்ச்சியையும் அதனால் ஏற்படும் மாற்றங் களையும் பெற்றோர் விளக்கி வளர்க்க வேண்டும். அவள் மேல் வைத்திருக்கும் அன்பையும், நம்பிக்கையையும் தளர விடக்கூடாது. இம் மாற்றங்கள் நிகழும் போது, உணவு, நற் சூழல் இவற்றில் மிகுதியான தேவைப்பாடு இன்றியமை யாதது.

உடற் கட்டு முதிர்ச்சியும், மன முதிர்ச்சியும் அடையப் பல ஆண்டுகள் செல்லும். அவள் 18-20வயது வரையில், நிறை முதிர்ச்சி அடைந்து உளவளர்ச்சியும் (புத்தியறி தலையும்), பாலின வினையல்களுக்கும், பாலினக் கிளர்ச்சி களுக்கும், இசைவுபடு மனமாற்றங்களை அடைகிறாள். இப்பருவத்தில் அவள் எதிர்பாலினரில் நாட்டம் கொள்ள முற்படுவாள்.

### ஊடகங்கள் தரும் சிக்கல்கள்

இவ்வளர்ச்சிப் பருவத்தில் பாலுணர்ச்சியில் உந்தப் படுகின்ற இவள், இளம் பருவத்தில் பாலியல் பற்றி போது மான அறிவும் தெளிவும் இன்றித் தவிக்கிறாள். ஊடகங்கள் இப்பருவத்தினரை ஆட்டிப்படைக்கின்றன. இயல்பாக

எழும் பால் வேட்கையை எவ்வாறு தணித்துக் கொள்வ தென்று தத்தளிக்கும் இப் பருவத்தினர் ஊடகங்கள் வாயி லாகப் பெற்ற தவுகளினால் கட்டுப்பாட்டினை இழந்து செய்வதறியாது விழிக்கும் போது பல சிக்கல்கள் உண் டாகின்றன. சிக்கல் நிறைந்த இப்பருவத்தில் உள நலத்தைச் சிதைக்கும் பொருத்தப்பாட்டுச் சிக்கல்களால் உள்ளத்தின் நடுநிலை அமைதி குறைகின்றது. உள்ளத்தின் நடுநிலை அமைதி குறையும்போது ஆளுமைத்தன்மை அற்றுப் போகிறது. இதனால் பொருத்தப்பாட்டுச் சிக்கல்கள் (Problems of adjustments) ஏற்படுகின்றன. உள்ள முறிபு (Frustrations), உள்ளப் போராட்டம் (Conflicts), உள்ள இறுக்கம் (Pressure) ஏற்படுகின்றன. இவ்வளர் இளம் பெண் பருவத்தினரை உணர்ந்து நெறிகாட்ட வேண்டியது பெற் றோர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்ல சமூகத்திலுள்ள அனை வரின் கடமையாகும். நேரம் பொன்னானது, இளம் பருவத் தினரின் ஒய்வு நேரங்களை நடனம், சங்கீதம், யோகா போன்ற நல்ல விடயங்களில் ஈடுபடச்செய்யலாம். இவை உடல், உள அமைதியையும், ஆரோக்கியத்தையும் கொடுக் கும்.

### மாதவிடாய் சிக்கல்

பெண்ணுக்கு மாதவிடாய்ச் சுழற்சி கால அளவு 21-35 நாட்கள் இருக்கக் கூடும். சிலருக்கு கால ஒழுங்கற்று மாத விடாய் வருவதும் உண்டு. கல்லூரிப் படிப்புக்காலத்தில் மாத விடாய் பல மாதங்களாக வராத மாணவிகளைக் காணலாம். சிலர் பலநாட்களுக்கு குருதி போவதாகவும் கூறுவார்கள். பெரும்பாலும் மாதவிடாய்க் குருதி இழப்பின் கால அளவு 3-5 நாட்கள் . ஆனால் 2-7 வரையுள்ள நாட்கள் சாதாரண மாத விடாய் எனக்கூறுவர். ஒரு முறை குருதி இழப்பின் அளவு 25-30மி.லி. அளவாகும். ஆனால் சிலருக்கு 5-100மி.லி. அள விலும் இருக்கக்கூடும் மாதவிடாய்க் காலத்தில் 50% பெண் கள் உடல்நலக் குறைவடைதல் பொதுமையாகும். கன்னிப் பெண்கள் மாதவிடாய்முன்நிகழ் (Pre Menstrual Syndrome)

சிக்கல்களால் வருந்துவர். தொடக்க மாதங்களில் சூல் (Ovum) உதிராத காரணத்தால் மாதவிடாய்க்கு முன் அடிவயிற்றில் குத்து, வலி போன்றவை தோன்றாது. சிக்கல்கள் பொதுவாக பெண் இருக்கும் மன நிலையைப் பொறுத்திருக்கும். இது ஒரு இயற்கை நிகழ்ச்சி எனக்கருதி நாளந்த வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் ஒழுக முயல்பவளுக்கு இந்தச் சிக்கல்கள் தொந்தரவைத் தராது. பள்ளி மாணவிகளுக்கும், மூளையைப் பயன்படுத்தி வேலை யில் ஈடுபவர்களுக்கும் சிறிய வலியும் பெரிய சிக்கலாகத் தோன்றும், சிலர் மாதவிடாய் வேளையில் அல்லது அதர்கு முன்பாக வயிறு, கூபகம், நார் ஆகிய இடங்களில் கடும் வலியும், வயிற்றுக் குத்தும், வயிற்று வலியும் உடையவராவர். பொதுவாக நோய்த் தோன்றல் களாவன: சோம்பல், க்ளைப்பு. உடல்நலக்குறைவு, மன அமிழ்வு, மனம் அருட்டலுறும் தகமை, சீற்றமுறும் தகமை, தலையிடி, மார் பகங்களில் வலி போன்றவையாகும். உடல் தொழிலில் ஈடுபடும்போது செயல்திறன் குறையும் காணப் படும். சிலருக்கு வாந்தி, சோம்பல், களைப்பு ஏற்படுவதால் படுக்கையில் ஆறுதல் எடுக்க விரும்புவர்.

மாதவிடாயின் போது கூடிய குருதி இழப்பு ஏற்படு மாயின் அவர்களில் இரும்புச் சத்து குறைப்பாட்டினால் ஞாபக மறதி, ஊக்கமின்மை, இலகுவில் களைப்படைதல் போன்ற நிலைமைகள் ஏற்படும் மாதவிடாய் நாட்களில் ஏற்படும் கவனிப்பு முறைகளை மாதவிடாய் உடலில் ஒரு தொலிழியற் தோற்றப்பாடு என உணர்ந்து செயற்பட வேண்டும். உடற் சுத்தம் மிகவும் அவசியம். கடும் விளை யாட்டுக்களில் ஈடுபடுதல் குருதி வடிவதைக் கூட்டும். மட் டான விளையாட்டுக்களில் ஈடுபடலாம். சில பெண்களில் மாதவிடாய்காலச் சிக்கல்கள் கூசுதலாக ஏற்படுவதால் தமது அன்றாட வாழ்க்கைக் கடமைகளை செய்ய முடியாது இருப்பர். உலக சுகாதார நிறுவனம் (WHO) தனது ஆய்வில், உலகில் 50% பெண்கள் மாதவிடாய்ச் சிக்கல்களை உணரு கிறார்கள் என்றும், அதனால் அவர்களது கல்விவளம்,

தொழில்வளம் பாதிப்படைவதாகவும் குறிப்பிடுகிறது.

மாதவிடாய்ச் சிக்கல்கள் இனப்பெருக்க உறுப்புகளின் நோயற்ற நிலைமைகளிலும், நோயுற்ற நிலைமைகளிலும் ஏற்படலாம். ஆகவே இச்சிக்கல்கள் எல்லோருக்கும் உண்டு என்றெண்ணாமல் அசாதாரண சிக்கல்களை அனுபவிப்பவர்கள் உடனடியாக பெண்நோயியல் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறவேண்டும். தவறினால் பின் அவர்கள் கருவளம் அற்ற நிலை, அல்லது பேறுகாலச் சிக்கல்களை அனுபவிக்க வேண்டி வரும். தற்காலத்தில் வேதனையோ, அறுவைமுறையோ இல்லாமல் நோயை நிர்ணயிக்கக் கூடிய வசதிகள் உள்ளன, Ultra Sound Scannerரைப் பயன்படுத்தி பெரும்பாலான நோய்களை நிர்ணயிக்க முடியும்.

## பெண்களுக்கு ருபெல்லா தடுப்பு ஊசி (Rubella)

நோய் தடுப்பிற்குரிய ஆலோசனைச் சபை (Advisory Committee on Immunization Practices) எல்லாப் பெண்களும் இனப்பெருக்க பருவத்தில் (19-45வயது வரை) றுபெல்லா (Rubella / German measles) தடுப்பு ஊசி கட்டாயமாகப் போட்டுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. றுபெல்லா ஒரு சுவாசாசய வைரஸ். இது சிறுவர்களையும், பெரியோர்களையும் ஒரேமாதிரித் தாக்கும். இந்நோய்த் தாக்குதலின் முடிவில் விழிப்புலன் அற்றுப்போதல், பிறப்புக் குறைபாடுகள், கண்ணில் சவ்வு வளருதல், இருதய நோய்கள் போன்றநிலைகள் ஏற்படலாம். இத் தடுப்பு ஊசியினால் சிலருக்கு சில பக்கவிளைவுகளும் ஏற்படுவதுண்டு. தடுப்பு ஊசி போட்டவர்கள் 3 மாதத்திற்குள் கருத்தரிக்காதிருப்பது நல்லது.

## கர்ப்பகாலச் சிக்கல்

கர்ப்பம் சகஜமாக 280 நாட்கள் நீடிக்கின்றது. இதனைக் கடைசி மாதவிடாயின் முதல் நாளிலிருந்து கணக்

கெடுக்க வேண்டும். கர்ப்பம் அடைவதால் புதிய சுமையைப் பெண்ணின் உடல் ஏற்கவேண்டியுள்ளது. இதனால் தாயின் உடலில் பல்வேறு சிக்கலான மாற்றங்கள் உண்டாகுகின்றன. சிசுவின் சகஜமான வளர்ச்சியை ஊட்டுவிக்க, உடலியக்கத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு மத்திய நரம்பு மண்டலத்தினால் (Central Nervous System) கட்டுபடுத்தப்படுகின்றன.

கர்ப்பகாலத்தின் ஆரம்பத்திலிருந்து உடல் அமைப்பு முழுவதும் பல மாற்றங்களைத்தரும் புதுமையான ஓர் அத்தியாயம் பெண்ணின் வாழ்க்கையில் ஆரம்பிக்கின்றது. அக்காலத்தில் உடலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப சிக்கல்களை அவள் உணருகின்றாள். இவை சாதாரணமாக உடல் தொழிலியல் செயற்பாடுகளே. உதாரணமாக கர்ப்ப கால ஆரம்பத்தில் ஏற்படும் வாந்தி, தலைச்சுற்றல், மயக்கம் போன்றவற்றைக் கூறலாம். இவை சிலசமயங்களில் தீவிர நிலைமையாகி சிக்கல்களை ஏற்படுத்தலாம். வளர்ச்சி அடைந்துவரும் சிசுவிற்கு அதிகளவில் ஆக்ஸிஜன் மற்றும் புரதங்கள், கொழுப்புகள், மாப்பொருட்கள், உப்புக்கள், வைட்டமின்கள் போன்றவை தேவைப்படுகின்றன. இவை அனைத்தும் தாயிடமிருந்தே பெறப்படுகின்றன. வளரும் சிசுவின் கழிவுப் பொருட்களும் தாயின் இரத்தத்தினுட் சென்று தாயின் கழிவு மண்டல உறுப்புக்களால் வெளியேற்றப்படுகின்றன. ஆகவே தாயின் பணிகள் இரண்டு மடங்காகின்றன.

தவறான போஷாக்கு, மருத்துவ ஆலோசனைகள் சார் செயற்பாடுகளைப் புறக்கணித்தல், மிகையாகக் குனிதல்/வளைதல், பாதகமான சூழ்நிலைகள் தோன்றுகின்றன. கடினமான பொருட்களைத் தூக்குதல், அதிகமாகக் குதித்தல், மிகையான உடல்உழைப்பு ஆகியவற்றை கர்ப்பிணிபெண் தவிர்த்தல் வேண்டும். கர்ப்பிணிப்பெண் சிறிது நேரம் உலாவச் செல்லலாம். நடந்து செல்லுதல் கர்ப்பிணிப் பெண்ணின் உடல், மனோ செயற்பாடுகளுக்கு இதம் அளிக்

கின்றது. கர்ப்பிணிப் பெண் தினமும் 8 மணி நேரம் தூங்க வேண்டும், குறிப்பாக அணியும் உடைகள் சுத்தமானதாக வும், வசதியானதாகவும், மார்பு, வயிற்றுப்பாகங்களில் தளர்ச்சியானதாகவும் இருக்கவேண்டும். கர்ப்ப காலத் .தில் வைட்டமின் பற்றாக் குறையிருத்தல், சிசுவின் வளர்ச்சி, கருச்சிதைவு, முதிராப்பிரசவம் ஆகியவற்றைத் தோற்றுவிக் கும். கர்ப்பிணி தின உணவை நான்கு தடவைகளாக உட் கொள்ள வேண்டும். கர்ப்பிணிகளுக்கு மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே, அவர்கள் புதிய காய்கறிகள், பழங் கள், மோர், தயிர் போன்றவற்றை தினமும் உட்கொள்ள வேண்டும். சிறப்பு உடற் பயிற்சிகள் பயன்தரக்கூடியன. உடற் பயிற்சிகளால் கர்ப்பிணியின் உடல் நலம் பாதுகாக்கப் படுவதுடன் கர்ப்பம், மற்றும் பிரசவம், பிரசவப் பிற்காலம் ஆகியவற்றிற்கும் துணை செய்கிறது. நோய்கள் அல்லது சிக்கல்கள் இருப்பதாக உணர்ந்தால் உடனடியாக சிறப்பு மருத்துவரினால் பரிசோதிக்கப்படவேண்டும்.

### பிரசவகாலச் சிக்கல்

"பெண் செத்துப் பிழைத்தாளா, பெற்றுப் பிழைத் தாளா," என்பார்கள் பிரசவவேதனை மிகத் தீவிரமானது. தலைப்பிரசவம் 15-24மணி நேரம் நீடிக்கிறது. பல மகவை ஈன்றவர்களுக்கு 10-12மணி நேரம் நீடிக்கிறது. தற்காலத்தில் சாதாரணமாக இளம் பெண்ணின் பிரசவம் 20-25 வயதிற் குட்பட்வர்களுக்கு குறுகிய காலமே நீடிக்கிறது. அவர்களின் உடல்நலத்தில் முன்னேற்றம், திறமையான மருத்துவ உதவி போன்ற பல அம்சங்கள் பெண்களுக்குச் சாதகமாயுள்ளன.

பிரசவ வலி தவிர்க்க முடியாத ஒன்று என்ற நம்பிக்கை, வலிமை எதிர்பார்த்து அச்சம், பிரசவத்தின் முடிவு பற்றியும் வருங் கால குழந் தை பற்றியதுமான பீதி ஆகியவையும் பிரசவ வலிக்கான காரணிகளாகின்றன. குழந்தையின் முகம் கண்டதும் வேதனை பறந்துவிடுகின் றது. பிரசவ வேதனை மற்றைய வேதனையைப்போல்

மூளையில் பதியப்படுவதில்லை. பதிந்துவிட்டால் அடுத்த குழந்தைப் பேற்றை எந்தத் தாயும் வரவேற்கமாட்டாள் என்பதற்காகவே இறைவன் பிரசவ வலியை மூளையில் பதிவு செய்யவில்லை போலும். பிரசவத்தின் பின் உள்ள காலத்தில் சரியான பராமரிப்பு இல்லாது போனால் பல தொற்று நோய்கள் ஏற்பட்டுவிடுகின்றன; சிலரின் மனநிலை பாதிப்படைகிறது.

பிரசவம் நிகழ்ந்த பின் உறவினர் பிறந்தது ஆணா பெண்ணா? என விசாரிப்பார்கள். பிறந்தது பெண் குழந்தை என்றால்''பெண்ணா என்று விசனப்படுவார்கள், ஆண் குழந்தையா பெண்குழந்தையா என்பதைத் தீர்மானிக்கும் காரணி தந்தையின் விந்துவில் தான் தங்கியிருக்கிறது என்பது அனேகருக்குத் தெரியாத விடயம்.

நீண்டகாலமாக பிள்ளைபேறு அற்ற தம்பதியினர் பெரும் பணம் விரயம் செயற்கை முறையில் கருத்தரித்து, பின் இருபெண் சிசுக்கள் என்றறிந்ததும் கருச்சிதைவு செய்து கொண்டது போன்ற சம்பவங்களும் உண்டு. செயற்கைக் கருத்தரிப்பு முறையில் பெண்தான் பல சிக்கலான பரி சோதனைகளுக்கும், மருத்துவத்திற்கும் உட்படுத்தப்படு கின்றாள். அப்பொழுதும் பெண் உள, உடல் ரீதியாகப் பாதிப் படைக்கிறாள்.

## குழந்தை வளர்ப்பில் பெண்ணின் சிக்கல்

மகனோ, மகளோ தவறு செய்துவிட்டால் சமுதாயம் தாயையே சாடுகின்றது. *''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, பின் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே''* என்கிறார் கவிஞர்.

தாயின் மடிதான் ஆரம்பப் பாடசாலை. தாய்க்கு நல்ல அறநெறிக் கல்வியும், அதாவது மனித மேம்பாடுகளைப்

பிரதிபலிக்கக் கூடிய கல்வியும், அறிவியல் கல்வியும் ஒருங்கே இருந்தால்தான் முறையாகக் குழந்தையை வளர்த்து நல்ல பிரஜையாக்க முடியும். ஆகவேதான் பாரதிதாசன் *''பெண்கட்கு கல்வி வேண்டும், உலகினைப் பேணுதற்கே, பெண்கட்கு கல்வி வேண்டும், கல்வியைப் பேணுதற்கே''* என்று கூறுகின்றார்.

எனவே பெண்களுக்குரிய நல்ல பண்புகளை வளர்க்கும் பொருட்டு பெண் கல்விமுறை அமைவது அவசியம். ஏனெனில் ஒரு பெண்ணிற்கு அளிக்கப்படும் கல்வி அவளுடைய குடும்பத்தையும், அதைச் சார்ந்தவர் களையும் சீர்படுத்தும்.

## கருவுறா பெண்ணுறும் சிக்கல்

பெண் கருவுறா நிலைக்கு ஆண், பெண் இருபாலா ருள் ஒருவர் காரணமாக இருக்கலாம் அல்லது இருவருமே காரணமாகவும் இருக்கலாம். புள்ளி விப்ரப்படி கருவள மின்மை நிலைக்கு 60% ஆண்கள் தான் காரணம் என குறிப் பிடுகின்றார்கள். ஆனால் நம் நாட்டில், தமது சமூக வழக்கப் படி பெண்ணைத்தான் குறை கூறுவார்கள். பெண்ணை வைத்திய நிபுணரிடமும் அழைத்துச் செல்பவர்கள். வேறு பெண்ணைத் திருமணம் செய்யும்படி ஆணுக்கு ஆலோ சனையும் கூறுவார்கள். உண்மையில் இருவருமே வைத் தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள் தான். பெண்ணைப் பொறுத்தமட்டில் அவளின் கர்ப்பமுறு தகமை 17-18ல் இருந்து 25-26 வயது வரை உச்ச நிலையி லிருக்கும். அதன் பின் படிப்படியாக குறைந்து, 35-36 வயதள வில் நன்றாகக் குறைந்துவிடும். பல பெண்கள் உகந்த வய தில் திருமணம் செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள். சிலர் படிப்பு, தொழில், வரதட்சணைச் சிக்கல்கள், ஆகிய காரணங்களால் திருமணத்தைத் தள்ளிபோடுவர். காலங் கடந்த திருமணத்தால் கருவுறா நிலை ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. பொருளாதார நிலை மிகக் குறைவாகக் காணப்படும்

குடும்பங்களில், அவர்கள் ஊட்டச்சத்துக் குறைவால் நலிந்து அவர்களது கருவளமும் குறைந்து போகின்றது. சிலர் மிகச் சிறிய வயதில் திருமணம் செய்து கொள்வதால், நலிந்த குழந்தைகளைப் பெற்றெடுக்கும் நிலை ஏற்படுகின்றது. சிலர் திருமணம் செய்தபின் கர்ப்பமுறுதலை தடுப்பதற்காக பல உபாயங்களைக் கையாளுகின்றார்கள். பின் கருவுற எத்தனிக்கும் போது கருவளம் குறைந்து விடுகின்றது.

## பேரிளம் பெண்மைப்பருவம் (Period of climacteric) மாத விடாய் முற்றாக நின்ற பருவத்திலான (Menopause) சிக்கல்

இப் பருவத்தில் பெண்ணின் உடலில் காணப்படும் ஈஸ்ட்ரோஜின் (Estrogen) என்னும் ஹார்மோன் குறை வடைவதால் பல உடல், உள மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஏற்படும் இயற்கை யான பருவமாற்றமாகும். ஆரம்ப மாதவிடாய் , மாதவிடாய் முற்றிலுமாக நின்றநிலை (Menopause). இவை இரண்டும் பெண்ணில் ஏற்படும் வாழ்க்கைப்படியின் நேர்எதிர் மாற்றங் களாகும். இந்நிலையில், அவள் உடல் ரீதியாகவும், உள ரீதி யாகவும் பல சிக்கல்களை எதிர் கொள்ளுகின்றாள். ஆரம் பத்தில் , உடல் உஷ்ணம்போல் உணர்தல், திடீர் என வியர்த்துக் கொட்டுதல், இரவில் வியர்வை, உடல் திடீரென குளிர்ந்து சிலிர்த்தலை உணருதல், ஒழுங்கற்ற மாதவிடாய், சீரற்ற இதயத் துடிப்பு, மனஅரிட்டல் அடைதல், மனம் அலைபாய்தல், திடீர் என அழுதல், இரவில் நித்திரை யின்மை, ஏக் க ம், சோர்வு, கிரகிக்கும் தன்மைக் குறைவு, மனக் குழப்பம், ஞாபகமறதி, மார்பக வலி, தலைவலி, சமபாடின்மை, வயிற்றுப் பொருமல், தோல்மிருதுவாதல், மன அழுத்தம், உடல் நிறை கூடுதல், மூட்டுகள் வேதனை, நாரிவலி, எலும்புகள் வலுவிழந்து இலகுவில் ஒடியக்கூடிய தன்மை அடைதல் (Osteoporosis) இருதய நோய் போன்ற உடல், உள சிக்கல்களுக்கு ஆளாகுகிறாள். இந் நிலையில்,

அளவில் குறைந்த, போஷாக்கு நிறைந்த நல்ல உணவு, மற்றும் அதிமுக்கியமான அன்பான குடும்பச் சூழல், மனதிற்கு உற்சாகம் ஊட்டக் கூடிய பொழுது போக்குகள், ஆகியன கிடைக்கும் பெண்களுக்கு இப் பருவமாற்றத் தாக்கங்கள் அதிக பாதிப்பை ஏற்படுத்தா. ஆனால் இக்குறி குணங்கள் தீவிரமடையின் வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

## கருத்தடை (Contraception) முறையில் சிக்கல்

கருத்தடை முறைகள் தற்காலமானவை, நிரந்தரமானவை என இருவகைப்படுகின்றன. தற்காலிக கருத்தடை முறையில், ஆண்உறை தவிர்த்து மற்ற எல்லா முறைகளும் பெண்சார்ந்தவை. இதில் பெரும்பாலோர் பாவிக்கும் ஹார்மோன் ஊசிகள், ஹார்மோன் மாத்திரைகள், ஹார்மோன் தோலின் கீழ் பதிப்புகள் போன்றவை பெண் களுக்கு பொதுவாகப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியவை.

நிரந்தரக் கருத்தடை முறை, அதாவது அறுவை மருத்துவ முறை இருபாலருக்கும் உண்டு. ஆணுக்குச் செய் யும் அறுவை மருத்துவ முறையானது, பெண்ணுகுச் செய் வதைவிடச் சுலபமானதும், பக்கவிளைவுகள் அற்றதுமாகும். ஆனால் புள்ளி விபரப்படி பெண்களே கூடுதலாக நிரந்தரக் கருத்தடை செய்து கொள்ளுகிறார்கள். ஆண்கள் மிகச்சிலரே நிரந்தரக் கருத்தடை செய்ய முன்வருகிறார்கள். இங்கும் பெண் தான் சிக்கலை எதிர்கொள்ளுகிறாள்.

## முடிவுரை

ஒவ்வொரு பருவகாலத்திலும் தேவைப்படும் ஊட் டச்சத்து உணவுகளை அவ்வப்பருவங்களில் உண்பதாலும், உளவளமாற்றங்கள் ஏற்படும் ஒவ்வொரு காலத்திலும் பெற் றோராலும், திருமணத்தின் பின் கணவராலும் மக்களினாலும் அவ்வப்போது தேவைப்படும் அன்பான அனுசரணைகள்

கிடைக்கப் பெறுவதனாலும் பெண் வாழ்க்கையில் சாதனை படைப்பாள் என்பதில் ஐயம் இல்லை. நம் நாட்டுப் பெண்கள் எல்லோருக்கும் கட்டாயக் கல்வி அத்தியா வசியம். அவர்களுக்கு ஊட்டப்படும் மனித மேம்பாடு களுடன்கூடிய அறிவியல் கல்வி ஊடாக, குடும்பமும் நாடும் மேன்மையடையும்.

*துணை நூல்கள்*


1. பொத்யாசினா வி.ஐ, *1989*. பேறுகால மருத்துவம் - ஒரு பாடப் புத்தகம், நியுசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை
2. கப்ளான். ஏ. *1966*. மகப்பேறு மாதர்நோயும், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு - அரசாங்கம்
3. Robert, H., Nathan, G., 1999, *Clinical Gyneacologic Endocrinology and Infertility,* 6th Edition, Lippincott Williams & Wilkins.
4. Rishell, R., Murphy, T. 2003, *Management of Common Problems in Obstetric & Gynaecology,* 4th Edition, Black Well Publication.
5. Sabarathnam, et. al. 2005, *Essentials of Gynaecology,* 1st Edition, Jaypee Brothers Medical Publishers (P) Ltd., New Delhi.

# படைப்புலகில் பொன்மணி வைரமுத்து

கு. சித்ரா
*தமிழ் விரிவுரையாளர்,*
*பொன்னையா ராமஜெயம் ஆசிரியர்*
*பயிற்சி நிறுவனம், தஞ்சாவூர்.*

## முன்னுரை

இலக்கியம் காலந்தோறும் மாற்றம் பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. சமுதாய வளர்ச்சியை அடையாளப் படுத்தும் பல காரணிகளில், இலக்கியமும் ஒன்று. சில வேளைகளில் இலக்கிய வளர்ச்சியே முதன்மையாகப் பேசப்படுவதுண்டு. தமிழ்மொழி, சமூகம் முதலிய தளங்கள் சிறப்புற, அடிப்படையாய்த் தமிழ் இலக்கியங்கள் திகழ்கின்றன. கடந்த நூற்றாண்டுகளின் நவீன இலக்கியங்களான நாவல். சிறுகதை முதலியன குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்துள்ளன. இந்த நவீன போக்கைப் புரிந்து கொண்டு படைப்பாளர்கள், தங்கள் படைப்புகளில், சமூகத்தில் நடைபெறுகின்ற அவலங்களையும், ஆட்சி அமைப்பு, அரசியல் பொருளாதாரம், சமுதாய ஏற்றத் தாழ்வுக்குக் காரணமான சூழ்நிலைகள், ஆகியவற்றை அமைத்து வெளிப்படுத்துகின்றனர் அந்த வகையில் கவிஞராகவும், நல்ல பேராசிரியராகவும் விளங்கி வருகின்ற பொன்மணி வைரமுத்துவும் குறிப்பிடத்தக்கவராக விளங்கி வருகின்றார்.

வாழ்வு என்பது பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் இருப்பது. சிலர் பிறக்கின்றனர், பின்னர் வாழ்ந்து இறக்கின்றனர். ஆனால் அவர்கள் வாழ்ந்த காலத்தில் இந்தச் சமுதாயத்திற்கு, என்ன செய்து விட்டுப் போனார்கள் என்றெண்ணி நின்ற பொழுது தங்களது அனுபவக் குறிப்புகளை

யும் அவற்றின் விளைவாக கிடைத்த படைப்புக்களையும் தான் விட்டுச் செல்கின்றனர்.

## பிறப்பு, வளர்ப்பு, கல்வி

பொன்மணி வைரமுத்து 19.06.1954ல் சென்னையில் பிறந்தார். தந்தையார் த.முருகேசன், தாய் சாமூண்டீஸ்வரி இவர் தந்தையார் பச்சையப்பன் கல்லூரியின் முன்னாள் பேராசிரியராய் விளங்கியவர். தொடக்கக் கல்வியை செங்கற் பட்டு மாவட்டத்தில் தண்டுறை என்னும் சிற்றூரில் தொடங் கினார். பொன்மணி என்பது இவரது பெற்றோரிட்ட பெய ராகும். தந்தையார் முருகேசன், தங்கள் பிள்ளை, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டும், என்ற உயர்ந்த நோக்கில் ஆர்வத்தோடு பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தார்.

## உயர்கல்வி

சென்னையில் பாரம்பரியமிக்க மிகச் சிறந்த கல்லூரி களில் ஒன்றாக விளங்கும் இராணிமேரி கல்லூரியில் பி.ஏ தமிழிலக்கியம் பயின்றார். கல்லூரியில் படிக்கின்ற பொழுதே பேச்சுப் போட்டி, கட்டுரை, கவிதைப் போட்டி களில் கலந்து கொண்டு பரிசும் பாராட்டுக்களும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பச்சையப்பன் கல்லூரிப் படிக் கட்டும், பைந்தமிழ்க் கவிபாடும் என்ற அடைமொழியைத் திருமொழியாகப் பெற்றுத் திகழ்ந்து வரும் வரலாற்று புகழ்மிக்க சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில் முதுகலை பயின்றார்.

## பேராசிரியர் பணியும் பெருமையும்

வாழ்கின்ற மக்கள் எல்லோரும் வரலாறு படைப்ப தில்லை. ஒரு சிலர் வரலாற்றை உருவாக்குகின்றனர். ஒரு சிலர் வரலாறாகவே ஆகிவிடுகின்றனர். இத்தகைய சிறப்பு நிலை எய்தியவர்களுள் ஒருவராக விளங்கி வருபவர் பொன் மணி வைரமுத்து. தான் வாழ்கின்ற இந்தச் சமுதாயத்திற்குத்

தன்னாலான பங்களிப்பைத் தமது பேராசிரியர் பணி மூல மாக நிறைவேற்றியிருக்கின்றார்.

எளிமை, அடக்கம், மற்றவரை மதிக்கும் பண்பு, சோர்வறியா உழைப்பு, .வீண் பேச்சிலா வெற்றியாளர், நாட்டை மதிக்கும் நல்லோர், காலத்தை வீணே கழிக்காத உயர்ந்த பொன்மணி என்று மற்றவர்கள் பாராட்டும் வகையில் நாட்டின் கண்மணியாகவும் திகழ்ந்து வந்து கொண்டிருக்கிறார்.

## இல்லறமும் நல்லறமும்

பொன்மணி முதுகலைத் தமிழ் இலக்கியம் படிக்கின்ற பொழுது தன்னுடன் படித்து வந்த பிற்காலத்தில் கவிஞராக, திரைப்பாடலாசிரியராக, பல்வேறு படைப்புகளைப் படைத்தளித்து வரும் கவிஞர் வைரமுத்துவை காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு மதன்கார்க்கி, கபிலன் என்ற இரண்டு மகன்கள் இருக்கின்றனர்.

## படைப்புருவாக்கம்

ஒரு படைப்பாளன் சொல்ல வந்த கருத்தையும், மானிட உலகில் தான் கண்ட செய்திகளையும் கேட்ட தகவல்களையும் தான் படைக்கும் இலக்கியத்தில் வரும் மனிதர்கள், வாழ்க்கைச் சித்தரிப்பில் கலந்து வெளிப்படுத்துகிறான் என்றால் அது மிகையாகா இதைப்போன்றே பொன்மணி வைரமுத்துவும் கவிஞராக, கதையாசிரியராக, கட்டுரையாசிரியராக தன் பரிணாம வளர்ச்சியை இந்தச் சமுதாயத்திற்குப் படைப்புகளாக்கிச் செல்கிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

1. பொன்மணி வைரமுத்து கவிதைகள் (கவிதை)
2. அவளுக்கு மேலே ஒரு வானம் (நாவல்)

3. மலைவாசல் (குறுநாவல்)
4. மீண்டும் சரஸ்வதி (கவிதை)
5. சங்க இலக்கியத்தில் புதுக்கவிதைக் கூறுகள் (ஆய்வு நூல்)

## கவிதை

இவர் பாடிய கவிதைகள் ஓராயிரத்திற்கு மேற்பட்டவை. இருநூறு கவியரங்கத்தில் கலந்து கொண்டு கவிதை பாடியுள்ளார். கவிதை என்பது படிப்பவரைச் சுண்டி இழுக்கும் ஆற்றல் பெற்றதாக இருக்க வேண்டும். அத்தகைய சிறப்பையும் சிந்தனைச் செறிவையும் பொன்மணி வைரமுத்துவின் கவிதைகளில் காண முடிகின்றது. பெண்ணியச் சிந்தனைவாதியாகவும், சமுதாயத்தை அறிவுக்கண் கொண்டு அலசுகின்ற ஒரு பொதுப்பார்வை உடையவராகவும் பொன்மணி வைரமுத்து திகழ்ந்து வருகிறார். மீண்டும் சரஸ்வதி என்னும் கவிதைத் தொகுப்பு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகச் சொல்லப்படுகிறது. பெண்ணின் பெருமையை உணர்த்துவதாகவும் அது அமைந்துள்ளது, இவருக்குக் ''கவியரசி'' என்ற பட்டம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## நாவல்கள்

இலக்கிய வரலாற்றில் புதியதாக வடிவம் பெற்று வந்துள்ள காலங்களில் ஒன்றாக நவீனத்துவம் பெற்று விளங்குவது நாவல் என்றழைக்கப்படும் புதினம். இவர் ''அவளுக்கு மேலே ஒரு வானம்'', மலைவாசம், வழிகாட்டிய நந்தி ஆகிய நாவல்களைப் படைத்துள்ளார். இதில் மலைவாசம், வழிகாட்டிய நந்தி ஆகிய இரண்டும் குறுநாவல்கள்.

வாழ்க்கை விரிந்த வானம் போன்றது. இவ்வாழ்வில் மனிதனின் சமூகப்பார்வை பரந்துபட்டதாகவும், பல்துறை சார்ந்ததாகவும் விளங்க வேண்டும் என்பது சிலரது கருத்தாக

உள்ளது. இக்கருத்துக்கு ஏற்றாற்போலவே பொன்மணி வைரமுத்துவும், கவிதை, புதினம், கட்டுரை போன்றவற்றைத் தொடர்ந்தளித்து வருகிறார். கதை எழுதும் ஆர்வம் பற்றி அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்

''கதை சொல்லும் ஆர்வம் பத்து வயதிலிருந்தே எனக்குள் வளர்ந்து வந்திருக்கிறது. கோடை விடுமுறையில் என் பாட்டி வீட்டில் ஏதேனும் ஒரு மரத்தின் கீழ் கல்போட்டு உட்கார்ந்து கொண்டு, எதிரே ஐந்து வயது, ஆறு வயது பொடிசுகளான என் சகோதரிகளையும் அத்தைப் பெண்களையும் உட்கார வைத்து கதை சொல்லுவதுண்டு. ஒரு துண்டுக் கதையை ஜொலிக்கும் படியாய்க் கற்பனை முலாம் பூசிப் பூசி, பிரமாண்டமாக்கிச் சொல்லும்போது விழிகள் விரியக் கேட்டுக் கொண்டிருக்கும் அந்தப் பொடிகும்பலின் முன் கிரீடம் சூட்டிக் கொண்டிருக்கும் மகிழ்ச்சி வரும். இரவில் என் தாத்தா பாட்டி அக்கம் பக்கத்து முதியவர் என்று பலத்த கூட்டத்தை உட்கார வைத்துகொண்டு அவர்கள் ஆவலாய் உச் கொட்டியபடி தலையசைத்துக் கேட்க, பட்டி விக்கிரமாதித்தன் கதை, மதன காமராஜன் கதை, ராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்ற கதைகளை ஏற்ற இறக்கத்தோடு உணர்ச்சி பொங்க வாசித்துக் காட்டும் போது எனக்குள் ஒரு நினைவு வரும்''.

என்று தமக்கு கதை சொல்லும் ஆர்வமும் அதனைத் தொடர்ந்து எழுதும் ஆர்வமும் ஏற்பட்டிருப்பதை நூலாசிரியரின் கருத்திலிருந்து அறியமுடிகிறது.

## முடிவுரை

''நான் கேட்ட கதைகளும், படித்துக் காட்டிய கதைகளும், சொன்ன கதைகளும் எனக்குள் நிறைந்து வழிந்து நீயும் ஒரு கதை எழுதேன் என்று என்னைத் தொல்லை செய்வதுண்டு. அப்படி ஓர் அன்புத் தொல்லைக்கு ஆளான நேரத்தில் தான் என் கணவர் கவிஞர் வைரமுத்து கட்டாயம்

நீ எழுது கிறாய் என்று உற்சாகம் தந்தார். அந்த கவிதை மோகம் தந்த உற்சாகத்தில் நான் எழுதியதுதான் அந்த ''அவளுக்கு மேலே ஒரு வானம்'' அவருக்கு நான் நன்றி சொல்லிக் கொள்வது எனக்கு நான் நன்றி சொல்லிக் கொள் வதைப்போல ஒரு நம்பிக்கை என்னை எழுத வைத்திருக் கிறது'' என்று தாம் படைப்பாளர் ஆனதற்குக் காரணமான நிகழ்வுகளை இங்கே பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. தொடர்ந்து அவர் கூறுகையில்

''உளி பிடிக்கத் தெரிந்தாலே போதும் ஒரு சிற்பத்தைச் செதுக்கி விடலாம் என்ற நம்பிக்கையோடு இந்தச் சிற்பத்தைச் செதுக்கியிருக்கிறது.''

நாவல் என்பதும் ஒரு கலைதான். அந்தக் கலையை சிற்பக் கலைபோல செதுக்கியதாக ஆசிரியர் சுட்டுவது முற்றிலும் உண்மையே!

# இறைப் பணிப்பெண்டிர் (தேவதாஸி)

தனசுந்தரி
*விரிவுரையாளர், நாட்டியத்துறை,*
*தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி,*
*அடையாறு, சென்னை.*

'தேவதாஸி' எனுஞ் சொல்லுக்கு 'இறைவனின் பணிப்பெண்' என்பது பொருள். இவ்வகுப்பினர் தமிழகத்திலோ அல்லது பாரதப்பூமியிலோ மட்டும் இருந்தவர்கள் அல்ல. எண்ணிறந்த நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, இவ்வுலகின் எல்லாப் பகுதியிலும் பரவியிருந்தவர்கள். நாட்டுக்கும், மொழிக்குமேற்ப இவர்களுடைய பெயர்களும் மாறுபட்டிருந்தன. வேதகால இலக்கியங்கள் தேவதாஸிகளை, ஸாதாரணீ, ஹஸ்ரா, வ்ரா, யூதீபும்ஸ்சலீ, யவ்யா என்றெல்லாம் அழைத்தன. ஆந்திரத்தில் 'ஸானீ', 'மாதங்கீ', கர்நாடகத்தில் சூலெ', மராத்தியக் கொங்கணப் பகுதிகளில் 'பஸவீ', உத்திரப்பிரதேசத்தில் 'பாவினீ', ஓரியா மாநிலத்தில் 'மஹரீ'- இவ்வாறு தேவதாஸிகளுக்குப் பல்வேறு பெயர்கள். கிரேக்க நாட்டில் இவர்கள் 'ஹீரோதுலோ'எனும் பெயர் பெற்றிருந்தனர். இப்படி பல் வேறு பெயர்களைப் பெற்றிருந்த சிற்றிடைக் கன்னியர்கள் பற்றிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஊர்வசியின் வழித்தோன்றல்கள்

இந்திரலோகத்தில் இந்திரன் முன்னிலையில் நடனம் நடைபெறுகிறது. எதிர்பாராத விருந்தினராய் அகத்திய மாமுனிவரும் அங்கு வருகிறார். இந்திரன் வரவேற்று உபசரிக்கிறான்; நடனம் தொடர்கிறது.

தெய்வ மங்கையர், அரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை ஆகியவர்கள் சுழன்று சுழன்று நடனமாடு கின்றனர். இந்திரனும் மற்றைய தேவர்களும் நடனத்தை ரசித்துக் கொண்டிருக்க, இந்திரனின் மகனான சயந்தன். 'ஊர்வசியின்' நடனத்தையே இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவளின் அழகு அவனை அப்படி ஆக்கிர மித்திருக்கிறது.

நடனம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சயந்தனின் கண் வலையில் சிக்கினாள் ஊர்வசி. ஆசை கண்களில் கொப் பளிக்க தான் இருப்பது இந்திர சபை என்பதையும் மறந்து சிருங்கார பாவனை காட்டினாள் ஊர்வசி; ஒரு கண் அசை விற்கும் மறு அசைவிற்கும் ஏகப்பட்ட நேரம் செலவானதால் நடனத்தில் தாளம் தப்பியது.

இந்திரன் சபையில் நடனம் நடைபெறாமல் நாடகம் நடைபெற்றதைக் கண்டு தன்னை அவமதித்து விட்டதாகக் கருதுகின்றார் அகத்திய மாமுனி. அதனால் கோபம் கொண்டு சபிக்கவும் முற்படுகின்றார். சயந்தனை மூங்கிலாகவும் ஊர் வசியைக் கூத்தாடும் நங்கையாகவும் பூவுலகில் பிறந்து உழலும்படி சாபமிடுகிறார்.

முனிவரின் சாபம் தப்பாமல் இந்திரன் மகன் மூங்கி லாகி அம்மூங்கிலுள் தலைக்கோலாகும் பெருமை பெற் றான். ஊர்வசி நடனமாதாகத் தோன்றினாள். இந்த ஊர்வசி யும் இவள் வழி தோன்றியவர்களும் கணிகை குலத்தவர் என்று கூறப்படுவர். சிலப்பதிகாரத்துள் கூறப்பெறும் மாதவியும் ஊர்வசியின் வழித்தோன்றலே என 'சுத்தானந்தப் பிரகாசம்' என்னும் பரத நடனக்கலை நூல் கூறுகின்றது.

''கலைகளைக் கையாளுவதிலும், எப்போதும் குரு வுக்குப் பணிவிடை செய்வதிலும் சிறந்தவளாக, உணர்வு களை ஊற்றெடுக்கச் செய்யும் பாவம் அமையப்பெற்றவ

ளாக, நற்குணம், வினயம் நிறைந்தவளாக, நடப்பில் இனிமையும், 64 கலைகளில் புலமையும் பெற்றவளாக, அரசரை உபசரிப் பதில் (மூலத்தில் 'நிருத்யோபசாரம்' என்றொரு பாடமும் உள்ளது) திறமை மிக்கவளாகப் பெண் களுக்கே உரித்தான சில குறைபாடுகள் அற்றவளாகப் பேச்சில் இனிமையும், தெளிவும் உள்ளவளாக, அறிவு நிறைந்தவுளாகச் சோர்வை வென்றவளாக இருப்பவள் 'கணிகை' எனப்படுவாள்''. (தமிழாக்கம்)

ஆடல், பாடல் இசையமைத்தல் போன்ற கலைகளிற் சிறந்தவர்களான தேவதாஸிகள், இறைவனின் திருமுன்பாக வும் இறைவனின் மானுடப் பிரதிநிதியாகக் கருதப்பட்ட அரச னின் அவையிலும், தம் கலையை வழங்கி வந்தனர். நியாயப்படி, இறைச்சேவைக்குத் தன்னையும், தன் கலையையும் அர்ப்பணிப்பவளை மட்டுமே 'தேவதாஸி' எனக் கூறுதல் பொருந்தும். அரசவையைச் சார்ந்தவர்கள். 'ராஜதாஸிகள்' ஆயினும், எல்லோரையுமே 'தேவதாஸிகள்' என்ற பொதுப் பெயரால் குறிப்பது, பன்னூறு ஆண்டுகளாக வழக்கில் வந்துவிட்டது. ஒரே குடும்பத்தில், தாய் தேவதாஸி யாகவும், மகள் ராஜதாஸியாகவும் இருக்ககூடும். அரசவை யில் பணிபுரிபவள், ஆலயத்தில் கைங்கர்யம் செய்யும் உரிமையற்றவள் என்றொரு நியதியும் இருந்துள்ளது.

இறைக்கும்; கலைக்கும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒரே காரணத்தால் அவர்கள் 'தேவதாஸி' யென்ற வகுப்பினர் ஆனார்களே தவிர 'தேவதாஸி' என்பதொரு ஜாதியல்ல. கடலொடு ஒப்பிடத்தக்கது இந்தக் குடிவகை. காரணம், பல ஜாதிகளைச் சேர்ந்தவர்களும், சில சமயங் களில் பெற்றோரில்லாத அல்லது அவர்களை அறியாத பெண் களுங்கூடத் தேவதாஸிகளாக ஆனதுண்டு.

இந்த தேவதாசி வகையினரை ஏழு பிரிவுகளுள் அடக்குவர். 1. தத்தை, 2. விக்கிரீதை, 3. பிருஹீத்ய, 4. பக்தை,

5. ஹரிதா, 6. அலங்காரை, 7. ருத்ரகணிகை ஆகிய தேவதாசிப் பிரிவினர் ஆலயங்களில் இறைப்பணி புரிந்தனர்.

1. தத்தை - தன்னைத்தானே இறைவனுக்கு அர்ப்பணம் செய்த தாசி 'தத்தை' என்று அழைக்கப்பட்டாள்.

2. விக்கிரீதை - தேவலாய ஊழியத்துக்கு விற்கப்பட்டு தேவதாசியாக்கப்பட்டவள் 'விக்கிரீதை' என்று அழைக்கப்பட்டாள்.

3. ப்ருஹீத்ய - தன் குல விருத்திக்காகத் தன்னைக் கோயில் ஊழியத்திற்குத் தந்தவள் 'ப்ருஹீத்ய' என்று அழைக்கப்பட்டாள்.

4. பக்தை - இறைவன் மீது கொண்ட பக்தியால் தன்னைத் தேவனுக்கு ஒப்புவித்தவள்.

5. ஹரிதா - கடவுளால் வசப்படுத்தப்பட்டவள் 'ஹரிதா' என்று அழைக்கப்பட்டாள்.

6. அலங்காரை - தன் கலைத் தொழிலில் வல்லவராய் இறைவனுக்குத் தொண்டு செய்ய அரசனால் கோயிலுக்கு அனுப்பப்பட்டவள் 'அலங்காரை'.

7. ருத்ரகணிகை - உயர்குலத்துப் பெண், தேவதாசி. உருத்திரக் கணிகையர் என்பார் வேசியர்க்கு வேறாய் மணமின்றி உயர்ந்த சாதியர்களில் ஒருவனைக் கொண்டு பூஜா காலத்தில் சுத்த நிருத்தஞ் செய்யும் மகளிர்கள் என்பது ருத்தரகணிகை

என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி தரும் விளக்கம்.

பிச்சை கேட்டு வந்த சிவனைத் தழுவிய தாருகா வனத்து ரிஷிபத்தினிகள் கரு வுற்று, குழந்தைகளைப் பெற்று அவர் களைக் கைவிட்டனர். இவ்வாறு கைவிடப்பட்ட பெண் குழந்தை களுக்கு 'ருத்ர கணிகையர்' என்று பெயரிட்டு நந்திதேவர் நாட்டியக் கலையைப் பயிற்றுவித்தார். அவர் களும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி, உடல் தூய்மை, உள்ளத் தூய்மை யுடன் இறைவனுக்கு சேவை செய்து 'நித்திய சுமங்கலி'களாயினர்''

## பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள்

பல்வேறு கலைகளில் தேர்ச்சி பெற்றோராக விளங் கிய தேவதாஸிகள் மிகப்பலர். கி.பி. 200-ஆம் ஆண்டில் எழுதப் பெற்ற 'பிருஹத் கல்ப பாஷ்யம்', ஒரு தேவதாஸியின் அபூர்வத் திறமையை வர்ணிக்கிறது. அவள், பலவித வண்ண ஓவியங்களைத் தன் சித்திரச்சாலையில் வரிசைப்படுத்தி யிருந்தாள். அவுளைத் துணைவியாக அடைய விரும்பி வருபவனை, முதலில் அந்தச் சித்திரச்சாலைக்கு அவள் அழைத்துப்போய் ஓவியங்களைக் காட்டுவாள். பின்னர், எந்தச்சித்திரம் அவனை மிகவும் கவர்ந்ததென்பதைக் கேட்டு, மறுகணமே, அவனுடைய குலம், குணம், தொழில் போன்ற எல்லா விஷயங்களையும் அவள் அறிந்து கொண்டு விடுவாளாம்.

## உதவிக்கரம் நீட்டியவர்கள்

ஒருவரைக் கண்டவுடன், அவரது தகுதியை நிறை யிடுவர். மேலான தகுதி பெற்றவராயின், தாரமாகத் தன்

உதவிக் கரங்களை நீட்டவும் தேவதாஸிகள் தயங்கியவர் அல்லர். இதற்கு எடுத்துக்காட்டாக, உ.வே. சாமிநாதய்யர் அவர்கள், தன் 'நினைவு மஞ்சரி'யில் ஒரு சுவையான நிகழ்ச்சியைக் குறித்துள்ளார்.

நெற்குன்றவாணர் என்றவொரு பெரும் புலவர், பஞ்சத்தின் கோரத்தால் அரசனுக்கு வரி செலுத்த முடியாமல், ஊரை விட்டுக் கிளம்பி நெடுந்தூரம் நடந்து, திருப்புகலூரை அடைந்தார். அவரைத் தொடர்ந்த அரசனின் வேலையாட்களிடம், கோயிலுக்குச் சென்று, இறைவனைத் தொழுதபின், தன்னை அவர்கள் சிறைப்படுத்தலாமென்று சொல்லி விநாயகப் பெருமானின் சந்நிதி முன்பாக வந்த அவருக்குத் தன் நிலைமை குறித்துச் சோகம் மிகுந்திருந்தும், கவிதை யூற்று பொங்கியது. ''உரைசெய் மறைக்கும் தலை தெரியாதவொரு கொம்பை'', எனத் தொடங்கியது அவர் வாயினின்றும் வெளிப்பட்ட பாடல். அவ்வழியே வந்த செல்வம் மிக்க தேவதாஸியொருத்தியின் காதுகளில் அப்பாடல் வரி விழவே, அவள் ''இதையொரு அந்தாதிக்குக் காப்பாக்கலாமே'' என்றாள். திரும்பிப் பார்த்த புலவர், விரக்தி தோய்ந்த குரலில், ''அந்தாதிக்குக் காப்பாக்கினால், அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணமாகி வி[illegible]மோ?'' என்றார். அவருடைய நிலைமையை அறிந்த அந்தத் [illegible]ஸி அரசனின் ஆட்களிடம், தன் பணத்தைக் கொ[illegible]ுப்பி விட்டாள். இதைக் கேள்வியுற்று மகிழ்ந்த அவர், உண்மைதான்! அந்தாதிக்குக் காப்பு ஆக்கலாமென்ற இப்பாடல், என் மானத்துக்கும், வாழ்வுக்குமல்லவா காப்பாக அமைந்தது?'' என்று உடனே பாடத் தொடங்கிவிட்டார். அதுவே 'திருப் புகலூர் அந்தாதி' எனும் பெயர் பெற்றது. திறமையை அறிந் துணர்ந்து உதவினாள், அந்தப் பாவலர் மானம் காத்த பாவை.

சோழர் காலத்தில் கோயிலில் பணிபுரிந்த தேவதாசியர் அனைவரும் போர்க் கைதிகளாகவோ அல்லது பரத்தையராயிருந்து வந்தவராகவோ மட்டும் இருந்ததில்லை. குல

மகளிரில் சிலரும் தாமே விருப்பமுடனும், நேர்த்தி காரண மாகவும் கோயில்களுக்குத் தம்மைத் தாமே அர்ப்பணித்துக் கொண்டனர்.

இதற்கு பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான குலசேக ராழ்வார் தம் மகள் நீலாதேவியை திருவரங்கக் கடவுளுக்கு தேவதாஸியாக அர்ப்பணித்ததையும், உறையூர் மன்னர் நந்த சோழன் மகள் சோழவல்லி இறைவனுக்குத் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டதையும் எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

சுந்தரமூர்த்தி நாயனார், திருவாரூர் கோயிலில் பணி புரிந்து கொண்டிருந்த தேவதாசியான ''பரவையாரை'' எல்லோர் முன்னிலையிலும் மணம் செய்து கொண்டது பெரிய புராணம் தரும் செய்தியாகும்.

இவ்வாறு தேவதாஸிகளின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது. இதன் பின்பு பரதக் கலையின் பிறப்பிட மான தமிழகத்திலேயே 1917ஆம் ஆண்டு அக்கலை மிகவும் நலிவுறும் நிலையை அடைந்தது. தேவதாசிகளுக்கே உரியது என இக்கலை முத்திரை குத்தப்பட்டிருந்ததால் சமுதாய அந்தஸ்தைப் பெறவில்லை. குறிப்பாக டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி அம்மையார் சட்டசபையில் கோயில்களில் தேவதாசிகளைப் பணிக்கு அமர்த்துவதை தடை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்த பிறகு இக்கலை மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

இக்காலகட்டத்தில்தான் வழக்கறிஞரும், சுதந்திரப் போராட்ட வீரருமான ஈ. கிருஷ்ணய்யர் என்பவர் நாட்டிய உலகில் அடியெடுத்து வைத்தார். மிகவும் வைதீகமான அந் தணர் குலத்தில் பிறந்த இவர், வக்கீல் பணியைத் தொழி லாகச் செய்து வந்தார்.

நடன எதிர்ப்பு இயக்கம் மக்களின் பேராதரவைப் பெற்று 1931இல் நடன எதிர்ப்பு உச்சநிலையை அடைந்தது. இச்சமயத்தில் ஐயர் அவர்கள் இசை அகாடமி அரங்கில் திருவில்லிபுத்தூர் கல்யாணி குமாரத்திகளின் பரதநாட்டிய நிகழ்ச்சி அரங்கேற பரிந்துரை செய்தார்.

1933இல் கிருஷ்ணய்யர் கல்யாணி குமாரத்திகளாகிய ராஜலக்ஷ்மி, ஜீவரத்தினம் ஆகியோரின் பரத நிகழ்ச்சியினை மீண்டும் ஒருமுறை சங்கீத வித்வ சபையில் அரங்கேற்றினார். பெரும் சர்ச்சைக்குரிய இவ்விஷயம் இதுவரை சந்தித்திராத அளவு வெற்றியையும், வரவேற்பையும் பெற்றது. சங்கீத வித்வ சபை இந்தக் கலையை ஏற்றுக்கொண்டு அளித்த அங்கீகாரம் இக்கலைக்கு மரியாதைக்குரிய அந்தஸ்தைப் பெற்றுத் தந்தது. இன்று இந்த அகாடமியில் ஆண்டுதோறும் கலைவிழா வைபவத்தில் முன்னிலையில் நிற்கும் நடன மணிகள் தாம் பங்கேற்று நடனமாடுவதை ஒரு கௌரவ மாகக் கருதி போட்டியிடும் அளவு இந்நடனத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது. சமுதாயத்தின் உயர்ந்த அந்தஸ்துள்ள பல குடும்பங்களிலிருந்தும், நடனம் கற்க வரத் துவங்கிய நடன மாணவிகளும், இக்கலையின் நிலை உயரக் காரணமாயினர். நடனக் கலைஞர் திருமதி ருக்மணி தேவியின் நடனப் பிரவேசம் பரதநாட்டிய வரலாற்றில் ஒரு புது அத்தியாயத் தைத் திறந்தது.

கிருஷ்ணய்யர் தனது வாழ்க்கையில் பல பட்டங் களையும், கௌரவங்களையும் பெற்றிருந்தாலும், அவற்றிற் கெல்லாம் மேலான விருது, நடன எதிர்ப்பு இயக்கத்தின் தலைவரும், அவரது முன்னாள் எதிராளியுமான டாக்டர் முத்துலெக்ஷ்மி ரெட்டியிடமிருந்து பெற்ற பாராட்டுத்தான். அவரது 61வது பிறந்த தினத்தன்று அனுப்பிய வாழ்த்துரை யில் திருமதி ரெட்டி, ''திரு கிருஷ்ணய்யர் மிக உயர்ந்த ஒரு நோக்கத்திற்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டு தென்னிந்திய பாரம்பரியக் கலையான பரதத்திற்குப் புத்துயிர்

கொடுத்து அதன் உண்மையான புனிதத்தையும், கௌரவத்தையும் கட்டிக் காத்துள்ளார். இக்கலையை ஒவ்வொரு வீடுகளில் மட்டுமல்ல, எல்லாக் கல்வி நிறுவனங் களிலும் பிரபலமாக்க வேண்டும்'' என்று பாராட்டியுள்ளார். இவர்கள் தேவதாஸிகளும், அவர்களுடைய நாட்டியமும் அடிமைத்தன்மையாக இருந்ததைக் கண்டித்து ஒரு நாட்டிய மானது தனித்தன்மை அடைய வேண்டும் என்றும், தேவதாஸிகள் வாழ்வும் சீரும் சிறப்பும் அடைய வேண்டும் என்றும் எண்ணித்தான் கோயில்களில் தேவதாஸிகளை பணிக்கு அமர்த்துவதைத் தடை செய்தார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தேவதாஸி முறை இன்று மறைந்துவிட்டாலும் அவர்கள் விட்டுப்போன அருங்கலை, அவர்களுடைய பெருமையையும், சிறப்பையும் உலகெங்கும் பறைசாற்றிக் கொண்டு வாழ்கின்றது.

# அழகாக இருக்கச் சில ஆலோசனைகள்

மரு. முனைவர் சே. பிரேமா

*பேராசிரியர், சித்த மருத்துவத்துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

ஒருவரின் புற அழகை எடுத்துக்காட்டுவது தோல், கண்கள், உதடுகள், முடி மற்றும் நகங்கள். இவை இயல்பான நிலையில் இருத்தல் அழகு. அதன் அழகை மெருகூட்டுவது மேலும் அழகு. அந்த அழகிற்கு சில ஆலோசனைகள் இங்கே!

தோல் மிருதுவாக இருக்கக் கடலைமாவு, பயற்றம் மாவு தேய்த்துக் குளிக்கலாம். சூரிய ஒளியில் அதிக நேரம் நின்று தோல் கன்றிப் போனவர்கள் வெள்ளரிக்காயைத் துருவி அதனைப் பிழிந்து சாறெடுத்து அதனுடன் 1 தேக்கரண்டி கிளிசரின் அரை தேக்கரண்டி பன்னீர் சேர்த்துக் குழம்பு போல் மேலே பூசிச் சூரிய ஒளியால் வந்த எரிச்சல் நீங்கும்.

ஆண்கள் குளித்ததும் உடலில் சந்தனம் பூச மணத்துடன் இருக்கும்.

பெண்கள் மஞ்சள் பூசி குளிப்பதை வழக்கமாகக் கொள்ள வேண்டும்.

கால் பாதம் வெடித்திருந்தால் மெழுகுடன் சிறிது கடுகெண்ணெய் கலந்து குழைத்துப் பூச கால் வெடிப்பு குணமாகும்.

குளிப்பதற்கு முன் ஏதேனும் மருந்தெண்ணெய் தடவி தேய்த்துப் பின் குளிக்கலாம்.

முட்டை வெள்ளைக் கருவும் தேனும் கலந்து முகத்தில் பூசிச் சிறிது நேரம் வைத்திருந்து பின் குளிக்கலாம். பாலுடன் வெள்ளரிக்காய் சாறு கலந்து முகத்தில் பூசலாம்.

ஓட்ஸ், தயிர், பாதாம் பருப்பு இவற்றை அரைத்து முகத்தில் பூசி வைத்து 5 நிமிடம் கழித்து இள வெந்நீரில் கழுவலாம்.

முட்டை வெள்ளைக் கரு, திராட்சைச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் பூசி வைத்திருந்து 20 நிமிடங்கள் கழிந்தபின் இள வெந்நீரில் கழுவித் துடைக்க முகம் மிருதுவாகப் பளபளப்புடன் இருக்கும்.

எலுமிச்சம் பழத்தை நறுக்கி விதை நீக்கி முகத்தில் தேய்த்து வைத்திருந்து குளிர்ந்த நீரில் கழுவ முகம் புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

எண்ணெய், தேன், எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் தடவ முகம் பசையுடன் இருக்கும். தேனையும், பாலாடையையும் கலந்து முகத்தில் பூசி வைத்திருந்து கழுவ முகம் பொலிவுடன் இருக்கும்.

பூசணிக்காய்ச் சாறு, முட்டை வெள்ளைக்கரு, பால் கலந்து பூச முகம் பளபளப்பாக இருக்கும். கர்ப்பூரவல்லி இலை சாற்றைப் பாதாம் எண்ணெயில் கலந்து உடலில் பூசி வைத்திருந்து உலர்ந்ததும் குளிக்கத் தோல் மிருதுவாகும்.

காரட் சாறு பூச முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நீங்கும். கழுத்தின் பின்புறம், அக்குள் ஆகியன கறுப்பாக இருந்தால் எலுமிச்சைச்சாறு, வெள்ளரிக்காய்ச் சாறு, சிறிது

மஞ்சள் தூள் கலந்து குழப்பித் தேய்த்து 20 நிமிடம் வைத்திருந்து குளிக்க நாளடைவில் கறுப்பு மறையும்.

பெண்களுக்கு முகத்தில் முடி இருந்தால் முட்டை வெள்ளைக்கரு, சோள மாவு, சீனி கலந்து வாரத்திற்கு மூன்று முறை பூசி வைத்துக் குளிக்க முகத்தில் உள்ள முடி நீங்கிவிடும்.

உடலின் எண்ணெய்ப் பசையைக் குறைக்க ஆப்பிளை நறுக்கி உடலில் தேய்க்கலாம்.

காலிபிளவரை நறுக்கி மருவின்மீது தேய்த்து வர மரு உதிர்ந்துவிடும்.

முகச் சுருக்கத்தை நீக்கக் காய வைத்துத் தூளாக்கப்பட்ட ஆரஞ்சுப் பழத்தோல், பால் இரண்டும் கலந்து பூசலாம்.

எண்ணெய் சருமத்திற்கு மூல்தாளி, மட்டி, கறிவேப்பிலைச்சாறு கலந்து பூசலாம்.

தக்காளிச் சாறு, தேன் கலந்து பூசி வைத்துக் குளிக்க எண்ணெய் சருமம் மாறும்.

உள்ளங்கை கடினமாக இருந்தால் கிளிசரின் எலுமிச்சைச் சாறு கலந்து பூசிவர மிருதுவாகும்.

பாத வெடிப்பிற்குச் செம்பருத்திப் பூ, மருதாணி இலை, எலுமிச்சைச் சாறு கலந்து அரைத்துப் பூசலாம்.

இளநீருடன் அன்னாசிப் பழச் சாறு கலந்து பூச முகம் மிருதுவாகும்.

வெந்தயத்தை ஊறவைத்துப் பால் விட்டு அரைத்து முகத்தில் பூசி வைத்துக் காய்ந்த பின் கழுவ முகம் பளபளப்பாக இருக்கும்.

செஞ்சந்தனத்தை இளநீர் விட்டு இழைத்து முகத்தில் பூச முகம் மிருதுவாகும்.

வெற்றிலைச் சாறுடன் தேங்காய் எண்ணெய் கலந்து பூசினால் கரும்புள்ளி மறையும்.

குங்குமப்பூவைத் தேனில் குழைத்துப் பூசக் கரும்புள்ளி மறையும்.

வேப்பிலைச் சாறுடன் மஞ்சள் தூள் கலந்து பூசப் பரு மறையும்.

சந்தனத்தூள் மஞ்சள் தூள் இரண்டும் கலந்து பூசப் பரு நீங்கும்.

## கண் பாதுகாப்பு

வெள்ளரிக்காய் சாறு, உருளைக்கிழங்கு சாறு ஆகிய வற்றைக் கலந்து அதில் பஞ்சை நனைத்துப் பிழிந்து விட்டு கண்களை மூடிக்கொண்டு இமையின் மேல் 10 முதல் 20 நிமிடங்கள் வைத்திருந்து பின் கழுவலாம். கழுவிய பின் துடைத்துவிட்டுச் சிறிது விளக்கெண்ணெய் தடவலாம். கண் பளீரென்ற தோற்றம் பெறும்.

கண் இமை முடிகள் கருப்பாக, அழகாக நீண்டிருக்கத் தினமும் இரவில் விளக்கெண்ணெய் தடவலாம்.

கண்ணைச் சுற்றிக் கருவளையம் இருந்தால் தேங்காய் எண்ணெய் தடவித் தேய்த்து விடலாம். இமை வீங்கி இருந்

தால் உருளைக்கிழங்கைத் துருவி ஒரு துணியில் வைத்து இமைகளின் மேல் வைக்கலாம்.

கண்கள் ஒளியுடன் திகழ உப்புத் தண்ணீரில் கண் களைக் கழுவலாம்.

சந்தனத்தை இழைத்து அதனுடன் எட்டிக் கொட்டை யையும் இழைத்துக் கலந்து கண்களைச் சுற்றிப் புறவளைய மிடக் கருவளையம் நீங்கும்.

## உதடு வெடிப்பு

உதடுகளில் வெடிப்பு தோன்றும். இதனால் வறட்சி, வலி, இரத்தக் கசிவு ஏற்படும். இது உடலில் நீர்ச் சத்துக் குறைவு, சீதோஷ்ண நிலை மாறுபாடு, அதிகக் காற்று, அதிக வெப்பம், புகை பிடித்தல், உதட்டுப் பூச்சுகளின் ஒவ்வாமை, சரியாகப் பொருத்தப்படாத செயற்கைப் பற்கள், ஒவ் வாமையை உண்டாக்கும். சில மருந்துகள், ஹெச்ஐவி போன்ற நிலைகளில் உதடுகள் வெடித்துக் காணப்படும்.

உதடு வெடிப்பில் தோல் பிரிந்திருந்தால் அதனைப் பிய்த்தெடுத்தால் அந்த இடம் புண்ணாகி வலிக்கும். இரத்தக் கசிவு உண்டாகும். உதடுகளை நாக்கால் தடவ வலி குறையும். ஆனால், உமிழ்நீர் காய்ந்த உடன் மீண்டும் வலி உண்டாகும்.

உதட்டு வெடிப்பில் கற்றாழைச் சோற்றைத் தடவ லாம். பாலாடை, நெய், வெண்ணெய் போன்றவற்றையும் தடவலாம். வெள்ளரிக்காயைத் துண்டாக்கி உதட்டில் தேய்க்கலாம். தேங்காயெண்ணெய், தேன்மெழுகு தடவலாம்.

உதடுகளில் அதிகம் வெயில், காற்று படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர், இளநீர், வெள்ளரிப்

பிஞ்சு போன்றவற்றை வறட்சி ஏற்படாமல் இருக்க உண்ண வேண்டும்.

வாய் என்பது உதடு, பல், நாக்கு சேர்ந்தவையாகும். ஆனால், பலர் உதடுகளையே வாய் என்ற பொருளில் கூறுவர். எடுத்துக்காட்டாக வாயைத் திறந்து பேசு. ''இவருக்கு வாய் காது மட்டும்'' என்பார்கள்.

பெரிய வாயை உடையவர்கள் பெற்றோரிடம் சண்டை பிடிப்பார்கள். குடும்பத்தில் ஒட்டாமல் தனித்து நிற்பார்கள்.

சிறிய வாயைச் சொப்பு வாய் என்பார்கள். குழந்தைகள் விளையாடும் சொப்பு போல உள்ளது என்பதால் இவர் மரியாதைக்குரியவராக இருப்பார்.

வாய் மேல்புறம் வளைந்திருந்தால் புன்சிரிப்புடன் காணப்படுவார்கள். இதனை, நிலவு போன்ற வாய் என்பார்கள். இவர்கள் அதிர்ஷ்டசாலியாகவும் நண்பர்கள் நிறைந்தவர்களாகவும் இருப்பார்கள்.

வாய், கீழ்புறம் வளைந்திருந்தால் எதையும் மிகைப்படுத்திப் பேசுவார்கள்.

பெரிய உதடுகள் உள்ளவர்கள் வாய்ச்சொல்லில் வீரராக இருப்பார்கள்.

வாய் மூடி இருந்தாலும் பற்கள் வெளியில் துருத்திக் கொண்டிருக்கும். இவர்கள் நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்றாக இருக்கும்.

உதட்டில் மச்சம் உள்ளவர்கள் எதையும் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டுவார்கள். கேள்வி கேட்பவராகவும்

அரட்டை அடிப்பவராகவும் இருப்பார்.

உதடுகள் ஒலிகளைப் பிரித்தறிய மட்டுமல்லாது உள்ளுறுப்புகளின் தன்மையும் ஒருவரின் உடல், உள நிலைகளையும் கண்டறிய உதவும் ஒரு கருவி எனலாம்.

உதட்டுக் கருப்பு நீங்க எலுமிச்சம் பழத்தோலை உதட்டில் தடவி வரலாம். மிருதுவான இளஞ்சிவப்பு நிற முடைய கொத்துமல்லி இலைச் சாற்றையும் தடவலாம்.

## உதடுகள்

மேல் உதடு கருஞ்செம்மை நிறம் அல்லது வறண்டு எரிச்சலுடன் காணப்பட்டால் தோள் பட்டைகள் இறுகி, வாய் நாற்றம், தொண்டைப் பிடிப்பு, காதடைத்து இவற் றுடன் குடல் நோயின் குறிகுணத்துடன் இருக்கும்.

மேல் உதடு வெளிர் நீல நிறமாக இருந்தால் வயிறு உப்புசம், வயிற்று வலி, வயிறு நிறைந்திருத்தல், பேதி, உடல் நடுக்கம் போன்ற குறிகுணங்களைக் காட்டும்.

கீழ் உதடு சிவந்து நீல நிறத்தில் காணப்பட்டால் வயிற்று வலி, உடல் பாரம், வயிறு நிறைந்து காணல், இவற் றுடன் வயிறு சூடாக இருக்கும்.

கடினமான வேலை செய்தாலோ அதிக தூரம் நடந் தாலோ சிலர் உதடுகளை மடக்கி அழுத்திக் கொள்வார்கள்.

உதட்டின் உள்புறம் மிகவும் சிவந்து காணப்பட்டால் ஈரல் சூட்டுடன் வலி, பசி குறைவு உள்ளதென அறியலாம்.

உதட்டின் உள்புறம் மஞ்சளித்திருந்தால் மஞ்சள் காமாலை நோய் உள்ளதென அறியமுடியும்.

உதடுகள் கருமை நிறத்துடன் இருந்தால் சீரண உறுப்புகள் சீராக வேலை செய்யவில்லை என்பதையும் மலக்கட்டு அல்லது பேதி, தலைவலி, தூக்கமின்மை, மலச் சிக்கல் உள்ளதென அறியமுடியும்; அதிக புகைப் பழக்கமும் இதற்குக் காரணமாகும்.

உதடுகள் வெளுத்திருந்தால் இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்கள் குறைந்துள்ளது எனவும் இரத்தம் ஓட்டம் குறைந்துள்ளது எனவும் அறியலாம். குளிர் காலத்தில் குளிர் காரணமாக உதடு வெளுத்துக் காணப்படும். மஞ்சளித்து வறண்ட உதடுகள் மண்ணீரல் சுரப்பிகளின் மாறுபாட்டை யும் உடலில் எதிர்ப்புச் சக்தி குறைந்துள்ளதையும் காட்டும்.

கருநீல உதடுகள் பிராண வாயு குறைந்துள்ளதைக் காட்டும். மேலும், மருந்துகளினால் உண்டான ஒவ்வாமை யையும் காண்பிக்கும்.

இத்துடன் உதடுகள் பிராண வாயு குறைந்துள்ளதைக் காட்டும். மேலும், மருந்துகளினால் உண்டான ஒவ்வாமை யையும் காண்பிக்கும்.

இத்துடன் உடலும் கருத்துக் காணப்படும். நெஞ்சு வலி, குறுகிய மூச்சு, உதட்டில் புள்ளிகள், நெஞ்சில் விவரிக்க முடியாத துன்பம் உள்ளதென அறியக்கூடும்.

வெடித்து வறண்ட உதடுகள் மண்ணீரல் சூடடைந் துள்ளதையும், பித்தம் குறைந்துள்ளதையும் காட்டும். உதடுகள் மேல்புறம் நிமிர்ந்து காணப்பட்டால் மண்ணீரல் அழற்சி என அறியலாம்.

மிகவும் வறண்ட உதடுகள் செரிமானப் பாதைக் கோளாறு உள்ளதென அறியலாம்.

பெண்களுக்கு மேல் உதடுகளுக்கு மேல் முடி வளர்ந்தால் சூதகத்தில் தொந்தரவு உள்ளதென அறியலாம்.

கீழ் உதடு கனத்திருந்தால் ஈரல் வன்மை குறைந் துள்ளது என்றறியலாம். சிறுநீர்ப்பையில் தொந்தரவு என்றும் அறியலாம். அதிகக் குடிப்பழக்கத்தையும் அது தெரிவிக்கும். மேல் உதடு தடித்திருந்தால் ஒவ்வாமை என அறிய முடியும்.

உதடுகள் சிவந்து நீல வரிகள் இருந்தால் மாரடைப்பு நோய் என அறியலாம். உதட்டில் வெண் புள்ளிகள் அல்லது உதடு முழுவதும் வெளுத்திருந்தால் வெண்புள்ளி நோய் என அறியலாம்.

உதட்டின் ஓரத்தில் அடிக்கடி புண் உண்டாகும். இதனைத் துத்தி என்பார்கள்.

சாதாரணமாகவோ, கோபத்தின் காரணமாகவோ உதட்டைக் கடிப்பது சிலர் வழக்கம். இது குழந்தைகளுக்கு இருந்தால் பல் நீண்டு துருத்திக் கொள்ளும்.

மூக்கிலிருந்து மேல் உதட்டின் நடுவரை இரு கோடு கள் காணப்படும்; இது சரியான அளவில் இருந்தால் 50 வயது வரை இயல்பு வாழ்க்கை அமையும்.

மூக்கில் ஆரம்பிக்கும் இடத்தில் குறுகி உதட்டில் முடியும் இடத்தில் அகண்டு இருந்தால் அவர்கள் குழந்தை களிடம் மிகுந்த பாசம் கொண்டிருப்பார்கள்.

ஆரம்பத்தில் அகண்டு கீழ்ப் பகுதியில் குறுகலாக இருந்தால் குழந்தை உண்டாவதில் பிரச்சினை இருக்கும். கோடுகள் ஆழமாகவும் நீளமாகவும் இருந்தால் நீண்ட நாள் வாழ்வார்கள்.

கோடுகள் மெலிதாயும் சிறிய அளவிலும் இருந்தால் அவர் உடல் நலம் குறைந்து காணப்படுவார்கள்.

மூக்கின் அருகில் கோடுகளுக்கு இடையில் மச்சம் இருந்தால் ஆண் குழந்தைகள் அதிகம் இருக்கும். உதட்டை ஒட்டி உள்ள கோடுகளுக்கு இடையில் மச்சம் இருந்தால் பெண் குழந்தைகள் அதிகம் இருக்கும். கோடுகளில் இருபுறம் மட்டும் மீசை வளருமானால் அவர்கள் பிறருக்கு எவ்வளவு உதவி செய்தாலும் பிறர் அதனைக் கருத்தில் கொள்ள மாட்டார்கள்.

# புதுக்கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

ஏ.எக்ஸ். செல்வி

*ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி,*

*பெரியகுளம்.*

## முன்னுரை

சமுதாய அவலங்களைக் கண்டு கொதித்தெழும் போது மரபுகளைப் பற்றிக் கவலைப்படாமல் சொல்லவந்த கருத்துக்களுக்கு முதன்மை தந்து எழுதப்பெறும் கலை வடிவங்களாகவே புதுக்கவிதைகள் அமைகின்றன எனலாம். புதுக்கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## பெண் பிறவியும் அடிமைத்தனமும்

பெண் குழந்தை பிறப்பிலேயே பெற்றோர், உற்றார், உறவினர்களால் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளப்படுவ தில்லை என்பதனை பொன்மணி வைரமுத்து

*''குழந்தை பிறந்து விட்டது*
*குதூகல வெள்ளம்*
*கோலாகலங்கள்-----*
*குழந்தையைச் சுற்றம்*
*மகனா? மகளா?''*
*ஓகோ மகிழ்ச்சி*

ஆண் குழந்தை பிறந்ததை மகிழ்ச்சி என்ற சொல் குறிக்கிறது. பெண் குழந்தை என்றால் மகிழ்ச்சிக் குறைவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதை மறைமுகமாகச் சுட்டி காட்டுகிறார்.

## பெண் கருச்சிதைவு

பெண்கரு என்றால் கருவறையே கல்லறையாகும் என்பதனை

*''வயிற்றுக்குள் குழந்தை*
*இருப்பதனால் தான்*
*எந்திரத்தில் குழந்தையைப் பார்த்து*
*பெண் என்றால் அழிக்கும்*
*தந்திரத்தைச் செய்கின்றார்''*

என்கிறார் பொன்மணி வைரமுத்து.

## வரதட்சணை

இந்த நூற்றாண்டின் மிகக் கொடிய நோய் வரதட்சணை. வரதட்சணை என்ற சமூகப் பிரச்சனை காரணமாகப் பெண்கள் முதிர்கன்னிகளாக வாழ நேரிடுகிறது. மு. மேத்தாவின் 'காதல்' என்ற தலைப்பில் அமைந்த கவிதை முதிர்கன்னிகளின் நிலையைச் சித்தரிக்கிறது.

*''பெரியவர்கள் மட்டும்*
*விலைதரச் சொல்லி*
*விசாரித்து கொண்டிருக்கிறார்கள்*
*வேருடன் பிடுங்கிப் போக''*

இதில் தலைமுறை தலைமுறையாக வளர வேண்டிய செடியினை வேருடன் பிடுங்குவது போல வாழ வேண்டிய பெண்களை வரதட்சணை என்ற பெயரில் விலைக்குப் போவதை உணர்த்துகிறார்.

## குடும்பம்

ஒரு பெண் வேலைக்குச் சென்று வருபவளாய் இருந்தாலும் வீட்டில் ஓய்வில்லாதபடி குடும்பம் என்ற கௌரவப் போர்வையில் ஒளிந்து கொண்டு தான் இருக்கிறாள்.

*''ஆறு மணிக்குள் நான்*
*அவசரமாய் முடிக்க வேண்டும்*
*பெண் விடுதலை பற்றிய பேச்சை*
*அஞ்சுநிமிடம் தாமதமாய்ப் போனாலும்*
*அடிவிழும்*
*அவரிடம்''*

திலகவதியின் 'விடுதலை' என்ற இக்கவிதையில் பெண்கள் விடுதலைக்கு வேர் கூட இல்லாதவர்களாய் உள்ள நிலையை அறிய முடிகிறது.

## பெற்றோரின் பொறுப்பின்மை

தாய் தந்தையரின் பொறுப்பின்மையால் காலமெல்லாம் உழைத்து உழைத்துப் பொருள் ஈட்டும் இயந்திரமாக்கப் பட்ட பெண்களின் துன்ப நிலையைக் கவிஞர் வைரமுத்து

*''ஒண்ணாந்தேதி அமுத சுரபிகள்*
*வைத்திருப்பதால்*
*சில பெற்றோர்கள்*
*அவர்களை மாற்றி விட்டனர்''*

என எடுத்துரைக்கிறார்.

## இல்லறம்

திருமணம் என்ற நிகழ்ச்சி பெண்ணைத் தன் தாய் வீட்டிலிருந்து பெயர்த்து இன்னொரு புதிய சூழலில் அவளைப் பிணிப்பதாகவே ஆயிற்று. திருமணமாகி கணவன் வீட்டிற்கு வந்துவிட்ட பெண்ணிற்கு ஏற்படும் துன்ப நிலையைக் கவிஞர் வைரமுத்து

*''பாவம் மனைவி*
*இந்த*
*இல்லறக் கிரிக்கெட்டில்*

*கட்டிலறைக்கும்*
*சமையலறைக்கும்*
*ரன்கள் எடுத்தே*
*ரணமாய்ப் போனாள்''*

என்று சித்தரிக்கிறார்.

## கைம்மை

சங்க காலம் தொட்டு இந்த நூற்றாண்டு வரையில் சமுதாயத்தில் விதவைகளுக்கு இழைக்கப்படும் இன்னல்களில் எவ்வித மாற்றமுமில்லை. தன் கணவர் இறந்த நிலையில் அவனது அன்பு மனைவி துடிதுடித்து அழும் அவலக் காட்சியினைக் கவிஞர் வைரமுத்து

*''நேத்துவரை நெத்தியிலே*
*தொட்டு வைக்கப் பொட்டில்ல*
*பொழுது விடிஞ்சதையா*
*பொட்டு வைக்க நெத்தியிலே''*

என்று சித்திரிக்கிறார்.

## பெண்ணிற்கான விலங்குகள்

பாலியல் உறவுகளால் செழுமைப்படுத்தப்பட்ட குடும்ப அமைப்பில் பெண் மீதான மேலாண்மையை ஆண் தொடங்கி வைத்தான். ஆனால் பெண்ணிற்கு அளிக்கப்பட்ட எந்த அணியுமே விலங்காகத்தான் அமைந்து விட்டிருக்கிறது. என்பதனை கந்தர்வன்

*''தலையில் பூ விலங்கு*
*கையில் பொன் விலங்கு*
*காலில் வெள்ளி விலங்கு*
*சுவாசத் தடைக்கு மூக்கில் கல்விலங்கு*
*ஒவ்வொரு மூச்சிலும் அவள்*
*விலங்குகளை நுகர்கிறாள்''*

எனப் பதிவு செய்கிறார்.

## பெண்ணுக்குப் பெண் எதிரி

இன்றைக்கு பெண்களுக்கு எதிரி வெளியில் முளைப்பதில்லை. ஒவ்வொரு வீட்டிலும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் உருவாவதற்குக் காரணமாகப் பெண்களே இருக்கிறார்கள் என்பதனை,

*''நெருப்பு போன்றவள் பெண்*
*அம்மாவுக்கு அடிவயிற்றில்*
*மாமியாருக்கு அடுப்படியில்''*

என்று கவிஞர் அறிவுமதி தெரிய வைக்கிறார்.

## காலம் கடந்த அடிமை

காலங்காலமான அடிமைப்பட்ட பெண் சமூகம் இன்னும் அடிமையாகவே இருக்கின்றது, என்பதனைப் பின் வரும் கவிதை சுட்டிக்காட்டுகிறது.

*''என் ஆதித்தாயின்*
*முதுகில்பட்ட திருக்கைச் சவுக்கடி*
*நான் காணும் ஒவ்வொரு*
*முகத்திலும்*
*தழும்பாய் தேமலாய்*
*படர்ந்து கிடக்கிறது''*

## இளம் வயது திருமணம்

இளம் வயதில் திருமணமான பெண்கள் பொறுப்பு என்றால் என்ன என்பதை புரியும் முன்பே பொறுப்புகளை யும் புதல்வர்களையும் சுமந்தனர். தன் ஆசைகளை அடக்கி அடக்கி ஒடுங்கி வாழ்ந்தனர் இதனைக் கண்டு,

*''தரும தேவதை*
*தினக்கூலி வாங்கிக்கொண்டு*
*திசைகளுக்கு*
*அறுப்பு அடிக்கப் போய்விட்டாள்''*

என்கிறார் தமிழன்பன்.

## கல்விமுறை

கரும்பலகையில் எழுதப்பழகிய கைகள் இன்று கம்ப்யூட்டர்களில், கணினியில் விளையாடுகின்றன. ஒரு பக்கம் மகிழ்ச்சியான முன்னேற்றமாக இருந்தாலும் இளம் வயதில் வயதுக்கு மீறிய பாடச்சுமை திணிக்கப்படுகிறது ஒரு பெரும் குறையாகவே காணப்படுகிறது.

*''பல இளம் பெண்கள்*
*புத்தகச் சுமை பொறுக்காமலேயே*
*பூப்பெய்தி விட்டார்கள்*
*பாலகர்கள்*
*சிலேட்டின் ஒரு பக்கத்தை*
*எச்சிலாலும்*
*மறுபக்கத்தைக் கண்ணீராலும்*
*துடைத்தழிக்கிறார்கள்''*

என்ற கவிஞர் வைரமுத்துவின் வரிகள் இளம்பிஞ்சுகளின் விசும்பல் குரலாகவே ஒலிக்கன்றது.

## பெண்கள் நுகர் பொருள்

பெண் பிறவியின் சிக்கல்களில் பெண்கள் போகப் பொருள் ஆகின்றாள்.

*''நான்கு சுவர்களுக்குள்*
*மோக இசை எழுப்புவதற்கே*

*நடைபயின்று கொண்டிருந்த*
*தோற்கருவியாகத் தான்*
*தோகையர்கள் இருந்தார்கள்''*

என்கிறார் பொன்மணி வைரமுத்து.

## விதவை மணம்

விதவை மணத்தைப் பற்றி கூறும்போது இதனால் பெண்கள் பெரும் துயர நிலைக்கு ஆளாகிறார்கள். விதவை மணத்தைப் பற்றி 'ஆகாயகங்கை' என்னும் கவிதைத் தொகுப்பில் முத்துராமலிங்கம்,

*''மொட்டாகக் கருதாது*
*முகிழ்க்க அனுமதிக்க*
*சிட்டாகப் பறக்க அவள்*
*சிறகசைக்க வழி விடுக''*

என்று விதவைத் திருமணத்தை வலியுறுத்துகிறார்.

## திருமணம்

இருமனங்களும் இணைந்து ஒருமித்து வாழ்வதே திருமணம் இதில் ஆண் பெண் இருவருக்கும் சம உரிமை உண்டு. என்பதை கவிஞன் தமிழ்மறவன்,

*''எங்கெங்கோ பறந்த பறவைகள்*
*இரண்டை ஒற்றாக்கி*
*சமூகத் தோட்டத்தில்*
*ஒரு குடும்பமாய்க் கூட்டில் அமர்த்துவது''*

என்று விளக்குகிறார்.

## விடுதலைப்போர்

பெண் விடுதலை என்பது இன்று உலக அளவில் பரவலாகவும் தீவிரமாகவும் விவாதிக்கப்படும் ஒன்றாக

உள்ளது. இந்நிலையில் பெண் தன்னையுணர்ந்து கொண்டு சமூகத்தில் தன் பங்கை நிறைவு செய்யப் போராடவும் தயங்கக் கூடாது என்பதனைக் கந்தர்வன்,

*''உங்கள் கண்கள்*
*காந்தக் கண்கள் மட்டுமல்ல*
*கோடி வருட நெருப்பைக்*
*குவித்து வைத்த குடங்கள்....*
*அழுவதை நிறுத்துங்கள்*
*யாரையும் தொழுவதை நிறுத்துங்கள்*
*தெருக்களை நிரப்புங்கள் ''*

என்கிறார்.

## சமுதாய நோக்கில் பெண்

இன்றைய பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதை உ.ஔவை எழுதிய ''விடைகொடு அம்மா '' என்ற கவிதைகளில்,

*''புத்தம் பதியதாய் உலகைக் காணவும்*
*நாட்டிற்காகவும் மக்களுக்காகவும்*
*கரங்களை இணைக்க விழைகிறேன்*
*அம்மா*
*நான் போக வேண்டும்*
*விடைகொடு எனக்கு''*

என்று பெண்களின் மறுமலர்ச்சி உலகத்தைக் காண விழை கின்ற ஆர்வத்தினை எடுத்தியம்புகிறார்.

## பெண் சுதந்திரம்

கவிஞர் வைரமுத்து தம்முடைய ''திருத்தி எழுதிய தீர்ப்புகள்'' என்ற நூலில்,

*''சுய சிந்தனை உள்ள*
*தோழியரே*
*உங்கள்*
*அறிவுக்குப் போட்டிருக்கும்*
*பர்தாவை அகற்றுங்கள்''*

என்று கூறுகின்றார். பெண்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டுமானால் அவர்கள் சுயசிந்தனை உணர்வுடன் செயல்பட வேண்டும் என்கிறார்.

## முடிவு

பெண்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். பெண்கள் சுதந்திரம் அடைய வேண்டும். ஒட்டுமொத்த பெண் சமுதாயம் விழித்தெழ வேண்டும். அடிமை மரபைத் தகர்த்தெறிய வேண்டும். அத்துடன் மெய்யான விடுதலையையும் புத்துணர்ச்சியினையும் பெற வேண்டும். அப்போது தான் புதியதொரு சமுதாயம் உதயமாகும்.

# மகளிர் நோய்களும் மூலிகை மருத்துவமும்

மரு. பெ. பாரதஜோதி

*விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

பெண்கள் பருவம் அடைந்த பின் பல்வேறு நோய்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. பெண்கள், பொதுவாக 13முதல் 18 வயதிற்குள் பூப்பு நிலையை அடைதல் சிறப்பாகும். ஆனால் தற்காலத்தில், உணவு முறை, பழக்க வழக்கங்கள், பல்வேறு ஊடகங்களின் தாக்கம் போன்ற காரணங்களால், 9முதல்15 வயதிற்குள் பூப்பு நிலையை அடைந்து விடுகிறார்கள், இதனால் இளம் வயதிலேயே பல்வேறு நோய்த் தாக்குதலுக்கு ஆளாக நேரிடுகிறது. பெரும்பாடு, வெள்ளைப்படுதல், மாதவிடாய்க் கோளாறுகள், சினைப்பை மற்றும் கருப்பைக் கட்டிகள், மார்பகப் புற்று, கருப்பைப் புற்று, குழந்தைப்பேறின்மை போன்ற நோய்கள் மகளிரை பெருமளவில் பாதிக்கின்றன. மகளிர்க்கு ஏற்படும் நோய்களைத் தீர்க்க, சித்த மருத்துவத்தில் பல்வேறு மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

*''வேர்வை தழை பாரு*
*மெல்ல மெல்ல பற்ப*
*செந்தூரம் பாரே''*

எந்த ஒரு நோயையும் முதலில் தாவரங்களிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் மூலம் குணப்படுத்த வேண்டும். அவ்வாறு மூலிகைகள் மூலம் குணப்படுத்த முடியாவிட்டால் மட்டுமே, தாதுக்கள் மற்றும் பிற உலோகத்தால்

தயாரிக்கப்பட்ட பற்பங்கள், செந்தூரங்கள் போன்ற மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதே சித்தர்களின் கூற்றாகும். மேலும் மூலிகைகள் எளிதில் கிடைக்கக் கூடியவை அவற்றைச் சேகரித்து நிழலில் உலர்த்திப் பதப்படுத்தி வைத்தால் எல்லாக் காலங்களிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இம்மூலிகைகளால் எவ்வித பக்க விளைவுகளும் உண்டாவதில்லை இம் மருந்துகள் நோய்களை தீர்ப்பது மட்டும் அல்லாமல் அவற்றை வராமலும் காக்கின்றன.

மகளிர்க்கு ஏற்படும் நோய்களில் பெரும்பாடு, குழந்தைப்பேறின்மை ஆகிய நோய்களின் தன்மைகளையும், அவற்றைத் தீர்க்கும் மூலிகைகள் பற்றியும் இக்கட்டுரையில் காணலாம்.

## பெரும்பாடு

பெண்களுக்கு மாதம் ஒருமுறை ஏற்படும் பூப்புச் சுழற்சியில், அதிக அளவு குருதி வெளிப்படுதல் பெரும்பாடு என அழைக்கப்படுகிறது. கருப்பையிலிருந்து வெளிப்படும் குருதியை அளவிட்டுக் கூற முடியாது. இதன் அளவு சுமார் 4-6 அவுன்ஸ் வரை இருக்கும். பரம்பரைக் காரணங்கள், உடலின் தன்மை, உணவுப் பழக்கவழக்கம் ஆகியவற்றைப் பொறுத்து இந்நிலை வேறுபடும். அதனால் ஒருவருக்கு இயற்கையாக காணப்படும் அளவை விட அதிக அளவில் குருதி வெளிப்பட்டு உடல் வன்மையைக் கெடுக்கக் கூடிய சூதகப்பெருக்கு 'பெரும்பாடு' என அழைக்கப்படுகிறது. இது நீர் வடிவமாகவோ அல்லது இரத்தம் உறைந்து உண்டான சிறு மற்றும் பெரும் இரத்தக் கட்டிகள் கலந்தோ காணப்படும்.

## நோயின் காரணங்கள்

1. கருப்பை மற்றும் சினைப்பை வீக்கம்
2. நாளமில் சுரப்பிகளின் குறைபாடுகள்
3. அடிக்கடி கருச் சிதைவு

4. அதிக உடற்பயிற்சி
5. அதிக கோபம் மற்றும் துக்கம்
6. கருப்பை நோய்த் தொற்று
7. கருப்பைக் கட்டிகள்
8. மாதவிடாய் நிற்றல்

மேற்கூறிய காரணங்களால், உடலில் உள்ள, வாத, பித்த, கப நாடிகள் கேடடைந்து குருதியை வெளியேற்றும் நாளங்கள் விரிந்து, தளர்ந்து குருதிப் பெருக்கைத் தடுக்கும் தன்மையை இழந்து விடுகிறது. இதனால் குருதிப் பெருக்கு அதிக அளவில் ஏற்படுகிறது.

## மருத்துவம்

இந்நோய்க்குக் கொடுக்கக் கூடிய மருந்துகள் துவர்ப்புச் சுவையுடன் கூடியதாக இருக்க வேண்டும். துவர்ப்புச்சுவை உடைய தாவரங்களுக்கு குருதிப் பெருக்கை அடக்கும் குணம் உண்டு. மேலும், சூதக இரத்த நாளங் களைச் சுருங்கச் செய்யும் தன்மை உடையதாகவும், அதிக உதிரப் பெருக்கால் உடல் சோர்வுற்று காணப்படும் என்ப தால், உடலுக்கு வன்மையை தரக் கூடிய மருந்துகளாகவும் இருக்க வேண்டும்.

சித்த மருத்துவத்தில் பின் வரும் குறிப்புகள் கூறப்பட்டுள்ளன.

1. அரச மரத்தின் இளந்தளிர்களை மோரில் அரைத்துக் கொடுத்தால் பெரும்பாடு தீரும்.

2. நாவல் மரப்பட்டையை ஊற வைத்து குடிநீர் அல்லது நாவற்கொட்டைச் சூரணம் கொடுத்து வர பெரும்பாடு தீரும்.

3. இம்பூரல் சூரணத்தை ஒரு கிராம் வீதம் மூன்று வேளை தேனில் கலந்து சாப்பிட பெரும்பாடு தீரும்.

4. பருத்தி இலைச் சாற்றை பசும்பாலில் கலந்து தரலாம்.

5. செம்பருத்திப் பூவை நெய் சேர்த்து வதக்கிச் சாப்பிடலாம்.

6. மாம்பருப்பைப் பொடித்து பாலுடன் கலந்து உண்ணலாம்.

7. மாதுளம் பூவைப் பொடித்து தேன் கலந்து உண்டு வரலாம்.

8. சுண்டை வற்றல், நெல்லிவற்றல், மாதுளை பழத்தின் தோல் ஆகியவற்றை சம அளவு எடுத்து பொடித்து மோரில் கலந்து சாப்பிடலாம்.

9. வாழைப்பூ, துத்தியிலை, கரிசலாங்கண்ணி இலை ஆகிய மூன்றையும் நன்கு அரைத்து பசும்பாலில் சாப்பிட பெரும்பாடு தீரும்.

10. மலைவேம்புச் சாற்றை காலையில் நீராகாரத்துடன் சாப்பிட்டு வந்தால் பெரும்பாடு தீரும்.

11. முருங்கைப்பூவை அரைத்து தேங்காய்ப்பாலில் வெல்லம் கலந்து ஏழு நாட்கள் கொடுக்கத் தீரும்.

12. தென்னங்குரும்பையை பொடித்து செம்பருத்திக் குடிநீரில் உண்ணத் தீரும்.

13. அசோக மரப்பட்டைக் குடிநீர் அல்லது அசோக மரப்பட்டைச் சூரணம் ஒரு கிராம் காலை மாலை வேளையில் சாப்பிட தீரும்.

14. அத்திப் பழத்தைக் காலை, மாலை தொடர்ந்து சாப்பிட பெரும்பாடு தீரும்.

## மலட்டு ரோகம்: (குழந்தைப் பேறின்மை)

*குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்*
*மழலைச் சொல் கேளாதவர்*

என்பது திருவள்ளுவர் கூற்று இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான வீடுகளில் மழலைச்சொல் கேளாத நிலைதான் காணப்படுகின்றது. குழந்தைச் செல்வங்களின் மழலைச் சொற்களைக் கேட்க முடியாமல் வருந்துவதற்கு காரணம் ஆண் மற்றும் பெண்களின் மலட்டுத் தன்மையே ஆகும். இதற்கு உடல் மற்றும் மனரீதியாக பல காரணங்கள் உள்ளன. ஆனால் மலட்டுத் தன்மைக்கு பெண்கள் மட்டும் தான் காரணம் என நினைப்பது தவறு.

*''ஆரப்பா ஆண் மலடே யாகுமல்லாமல்*
*அப்பனே பெண் மலடு யாருமில்லை''*

என்ற அகத்தியர் வாக்கின்படி, பெண் மலடு என்று யாரும் கிடையாது. மலட்டுத் தன்மைக்கு ஆண்களே காரணம் என்று கூறியுள்ளார். பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளை மருத்துகள் மற்றும் அறுவைச் சிகிச்சை ஆகியவற்றின் மூலம் குணப்படுத்தி விடமுடியும். ஆனால் ஆண்களில் சில குறைபாடுகளை எவ்விதத்திலும் குணப்படுத்த இயலாது. இதைத்தான் அகத்தியர் கர்ப்பக் கோள் எனும் தமது நூலில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கலாம். இது ஆய்வுக்குரிய ஒன்றாகும் இக்கட்டுரையில் பெண்களுக்கு ஏற்படும் மலட்டுத் தன்மைக்கான காரணங்களையும், அவற்றைத் தீர்க்கும் மூலிகைகளின் பயன்களும் கூறப்பட்டுள்ளன.

## பெண் மலட்டு ரோகத்தின் வகைகள்

சித்த மருத்துவத்தில் மலட்டு ரோகம் நான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

*1. சுத்த மலடு 2. கதலி மலடு 3. காக மலடு 4. கன்ம மலடு.*

## 1. சுத்த மலடு

ஒரு முறை கூட கருத்தரிக்காத பெண் நிலை சுத்த மலடு என அழைக்கப்படுகிறது.

## 2. கதலி மலடு

கதலி மலடு என்றால் வாழை. வாழைமரம் ஒரு முறை மட்டுமே குலை தள்ளி அத்துடன் தன் வளர்ச்சியை நிறுத்திக் கொள்ளும். அது போன்று ஒரு மகவு ஈன்ற பின் கருத்தரிக்கவில்லை என்றால் அது கதலி மலடு என அழைக்கப்படுகிறது.

## 3. காக மலடு

காகம்'' நாம் இருவர் நமக்கு இருவர்'' என்பது போல இரு குஞ்சுகளை மட்டுமே இனப்பெருக்கம் செய்கிறது. காகத்தைப் போன்று இரு மகவு ஈன்ற பின் மீண்டும் கருத்தரிக்காத நிலை காக மலடு என அழைக்கப்படுகிறது.

## 4. கன்ம மலடு

கரு உண்டாகும். ஆனால் குழந்தை பிறக்காமல் கருச்சிதைவு ஏற்பட்டுவிடும். இவ்வாறு சூல் உண்டாகி, சூல் காலத்தை நீடிக்க விடாமல் கருச்சிதைவு ஏற்படுவது கன்ம மலடு என அழைக்கப்படுகிறது.

## பெண்களின் மலட்டுத் தன்மைக்கு காரணங்கள்

1. ஹார்மோன் குறைபாடுகள்
2. சினைப்பைக் கட்டி மற்றும் கருப்பைக் கட்டிகள்
3. கர்ப்பப் புழு
4. மேக நோய்கள்
5. காவுக் கருப்பை
6. பிறவியிலேயே கருப்பை இல்லாமை
7. சினைப்பைக் குழாய் அடைப்பு

8. கருமுட்டை உற்பத்தியின்மை
9. சத்துக் குறைபாடு
10. கன்ம நோய்கள்
11. ஒழுங்கற்ற மாதவிடாய்
12. கலவி பற்றி அறியாமை
13. பயம், எரிச்சல், வெறுப்பு போன்ற மனநிலை மாறுபாடுகள்
14. காலம் தாழ்த்திய திருமணங்கள்

## மருத்துவம்

சினைப்பைக் குழாய் அடைப்பு, கருப்பை, சினைப் பைக் கட்டிகள் போன்ற நிலைகளில் அறுவைச் சிகிச்சை செய்யலாம். பிற நோய் நிலைகளை மருந்துகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் மூலம் தீர்க்கலாம்.

1. சித்திர மூலவேர்ப் பட்டையை நன்கு அரைத்து அத்துடன் கொள்ளை வேக வைத்த நீரோடு அருந்தி வர ஒழுங்கற்ற மாதவிடாய் குணப்படும்.

2. குப்பைமேனிச்சாறு 250மி.லி பொரித்த பெருங்காயம் 35கிராம், வெல்லம் 10கிராம் எடுத்து ஒன்று சேர்த்து புதிய பாண்டத்திலிட்டு வெள்ளைத் துணியால் மூடி, இளம் வெயிலில் வைத்து, மாதவிடாய்க் காலத்தில் மூன்று நாளும் சாப்பிட்டு வர கருப்பையிலுள்ள மலட்டுப் புழு விழும். மூன்று முறை செய்ய வேண்டும்.

3. பொன்னாவாரை விதையைத் தண்ணீரில் அரைத்துச் சாப்பிட கர்ப்பப் புழு விழும்.

4. அரச மரத்தில் வளரும் புல்லுருவியை அரைத்து மாதவிடாய்க்கு முன் மூன்று நாட்கள் தரவேண்டும்.

5. அரசம் விதைகளை பசுவின் பால் விட்டரைத்து காலை மாலை கொடுத்து வர கர்ப்பம் உண்டாகும்.

6. மாத விலக்கான மூன்று நாட்களிலும் இரவு பட்டினி இருந்து அதிகாலையில் தாமரைப் பூவை பசும்பாலில் அரைத்து உண்ண குழந்தை உண்டாகும்.

7. இளம் ஆலம் விழுதை பசும்பாலில் அரைத்து, மாதவிலக்கின் முதல் நாளில் இருந்து ஐந்து நாட்கள் வரை சாப்பிட்டால் கரு உண்டாகும்.

8. வேங்கை வேர், நிலப்பனைக் கிழங்கு சம அளவு எடுத்து நன்கு அரைத்து சாப்பிட்டு வரலாம்.

௯. முடக்கறுத்தான் சமூலச் சாறுடன் நல்லெண்ணெய் சம அளவு கலந்து அருந்தலாம்.

10. பருத்திக் கொட்டையை இடித்துப் பாலெடுத்து அத்துடன் ஒரு கோழி முட்டை வெண்கருவைச் சேர்த்து சாப்பிடவும். ஒரு மாதம் கழித்து செப்பு நெருஞ்சில் வேரைப் பால் விட்டரைத்துச் சாப்பிடக் குழந்தை உண்டாகும்.

இவை போன்ற எண்ணற்ற மருத்துவக்குறிப்புகள் சித்த மருத்துவ நூலில் காணப்படுகின்றன. இவற்றை இன்றைய அறிவியல் பூர்வமான ஆய்வுகளுக்கு உட்படுத்தி ஆராய வேண்டியது இன்றியமையாத கடமையாகும்.

# உடல் பருமன் ஒரு நோயா?

மரு. நா. பாரதி சுரேஷ்கண்ணன், M.B.,B.S.,

*மதிப்புறு மருத்துவர்,*

*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*

*தஞ்சாவூர்.*

உடல் பருமன் ஒரு நோயா? என்றால், ஆம். நிச்சய மாக அது ஒரு நோய்தான். மேலும், அது எல்லா நோய் களுக்கும் தாய் என்றும் கூறப்படுகிறது. 1977இல் உலக சுகாதார நிறுவனம் (WHO) உடல் பருமனை ஓர் உலகளாவிய பிரச்சினையாக ஏற்றுக் கொண்டுள்ளது. நகர மயமாக்கு தலும், நவீன மயமாக்குதலும், துரித உணவுகளும் உடல் உழைப்பின்மையும் சமூக மற்றும் பொருளாதாரச் சூழ் நிலைகளும் இந்நோயை உருவாக்குவதில் பெரும் பங்கை வகிக்கின்றன.

## உடல் பருமன் என்றால் என்ன?

கொழுப்புத் திசுக்கள் உடல் எடையில் தேவைக்கு மேல் அதிகம் காணப்படுவது உடல் பருமன் எனப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வயதிற்கு, குறிப்பிட்ட உயரத்திற்கு, இவ் வளவு எடை இருக்க வேண்டும் என்று வரையறை செய்யப் பட்டுள்ளது. இந்த அளவை விட 10%க்கு மேல் எடை கூடுவதையே உடல் பருமன் என்று மருத்துவ இயலின்படி கூறுகிறோம்.

நாம் உட்கொள்ளும் உணவின் மூலம் கிடைக்கும் ஆற்றல் (சக்தி - கலோரி) அளவைவிட, உடல் செலவிடுகிற ஆற்றல் குறைவாக இருந்தால், செலவிடப்படாத அந்தக் கூடுதல் ஆற்றல் கொழுப்புச் சத்தாக மாறி உடலில் படிந்து எடையைக் கூட்டுகிறது.

## உடல் பருமனின் வகைகள்

*1.* உடல் முழுவதும் ஒரே சீராக எடை கூடுதல்.

*2.* வயிற்றுப்பகுதி மற்றும் இடுப்புப் பகுதியில் மட்டும் கூடுதல் சதை.

இதில் இரண்டாவது வகை மிகவும் அபாயகர மானது.

உடல் எடையை BMI (Body Mass Index) என்னும் உடல் எடையைக் குறிக்கும் குறியீட்டைக் கொண்டு வகைப்படுத்தலாம். BMI கணக்கிடும் வாய்ப்பாடு கொண்டு கணக்கிட்டு, உடல் எடை எந்த அளவு அதிகம் உள்ளது என்பதை அறியலாம்.

$$BMI = \frac{\text{உடல் எடை (கிலோ)}}{\text{உயரம் (மீட்டர்}^2\text{)}}$$

| | |
|---|---|
| விரும்பத்தக்கது | *20 - 25* |
| அதிக எடை | *26 - 27* |
| பருமன் | *28 - 30* |
| மிகைப் பருமன் | *30க்கு மேல்* |
| எடை குறைவு | *18.5க்குக் கீழ்* |

## தொப்பையை அளப்பது எப்படி?

இடுப்பிலும் எலும்பின் உயர் மட்ட அளவில் இடுப்பின் சுற்றளவை, டேப் மூலம் தோலை அழுத்தாமல் எடுக்க வேண்டும். ஆண்களுக்கு 90 செ.மீ.க்குள்ளும், பெண்களுக்கு 80 செ.மீ.க்குள்ளும் இருப்பது விரும்பத்தக்க அளவு.

## விரும்பத்தக்க உடல் எடை

ஒவ்வொருவருக்கும் விரும்பத்தக்க உடல் எடையைக் கணக்கிட ஒரு வாய்ப்பாடு உள்ளது. அதன்படி அதனை (Ideal Body Weight) Calculation formula - (உயரம் செ.மீ.)–100) x 0.9 என்று கணக்கிடலாம். இது இருபாலருக்கும் ஆன விரும்பத்தக்க உடல் எடை கணக்கிடும் வாய்ப்பாடு. தோராயமாக அளவிட எளிதான வழியாகக் கீழ்க்காணும் முறையைப் பயன்படுத்தலாம்.

ஆண்களுக்கு IBW - உயரம் = 105 செ.மீ. பெண்களுக்கு IBW = உயரம் - 100 செ.மீ.

இதற்கு மேல் உடல் எடை உள்ளவர்கள் உடல் எடையைக் குறைக்க அறிவுறுத்தப்பட வேண்டும். உடல் எடை குறியீடு அட்டவணை இத்துடன் பார்வைக்காக இணைக்கப்பட்டுள்ளது.

## பக்க விளைவுகள்

உடல் எடை கூடுதல் பல்வேறு பக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது என்றாலும், visceral obesity எனப்படும் வயிற்றுப் பகுதியில் சதை கூடுதல் (தொப்பை) மிக அதிகமான, அபாயகரமான பக்க விளைவுகள் ஏற்படுத்துகிறது. 30 சதவீதம் உடல் எடை அதிகரித்தல், ஒரு மனிதனின் (mortality rate) இறப்பதற்கான பக்கவிளைவுகளை 50 சதவீதம் அதிகரிக்கிறது. கீழ்க்காணும் பக்க விளைவுகள் உடல் பருமனால் வருகிறது.

1. மன அழுத்தம், சமூக மற்றும் பாலியல் கோளாறுகள்
2. இடுப்பு மற்றும் மூட்டு வலிகள், தட்டைப்பாதம், ஹெர்னியா, வேரிகோஸ் வெய்ன்ஸ்
3. நீரிழிவு நோய்கள், இன்சுலின் எதிர்ப்பு
4. ஹைபர்லிபிடீமியா

## BODY MASS INDEX

| Wt. (Kg) | Height (cm) 145 | 150 | 155 | 160 | 165 | 170 | 175 | 180 | 185 | 190 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 50 | 24 | 22 | 21 | 20 | 18 | 17 | 16 | 15 | 15 | 14 |
| 52 | 25 | 23 | 22 | 20 | 19 | 18 | 17 | 16 | 15 | 14 |
| 54 | 26 | 24 | 22 | 21 | 20 | 19 | 18 | 17 | 16 | 15 |
| 56 | 27 | 25 | 23 | 22 | 21 | 19 | 18 | 17 | 16 | 16 |
| 58 | 28 | 26 | 24 | 23 | 21 | 20 | 19 | 18 | 17 | 16 |
| 60 | 29 | 27 | 25 | 23 | 22 | 21 | 20 | 19 | 18 | 17 |
| 62 | 29 | 28 | 26 | 24 | 23 | 21 | 20 | 19 | 18 | 17 |
| 64 | 30 | 28 | 27 | 25 | 24 | 22 | 21 | 20 | 19 | 18 |
| 66 | 31 | 29 | 27 | 26 | 24 | 23 | 22 | 20 | 19 | 18 |
| 68 | 32 | 30 | 28 | 27 | 25 | 24 | 22 | 21 | 20 | 19 |
| 70 | 33 | 31 | 29 | 27 | 26 | 24 | 23 | 22 | 20 | 19 |
| 72 | 34 | 32 | 30 | 28 | 26 | 25 | 24 | 22 | 21 | 20 |
| 74 | 35 | 33 | 31 | 29 | 27 | 26 | 24 | 23 | 22 | 20 |
| 76 | 36 | 34 | 32 | 30 | 28 | 26 | 25 | 23 | 22 | 20 |
| 78 | 37 | 35 | 32 | 30 | 29 | 27 | 25 | 24 | 23 | 22 |
| 80 | 38 | 36 | 33 | 31 | 29 | 28 | 26 | 25 | 23 | 22 |
| 82 | 39 | 36 | 34 | 32 | 30 | 28 | 26 | 25 | 23 | 22 |
| 84 | 40 | 37 | 35 | 33 | 31 | 29 | 27 | 26 | 25 | 23 |
| 86 | 41 | 38 | 36 | 34 | 32 | 30 | 28 | 27 | 25 | 24 |
| 88 | 42 | 39 | 37 | 34 | 32 | 30 | 29 | 27 | 26 | 24 |
| 90 | 43 | 40 | 37 | 35 | 33 | 31 | 29 | 28 | 26 | 25 |

5. பித்தநீர்ப்பை கோளாறுகள்
6. உயர் இரத்த அழுத்தம்
7. இரத்தக் குழாய் தடித்தல், கொரனரி ஆர்ட்ரி தடித்தல், இதயத்தின் வலது பக்க அறை (வென்ட்ரிக்கிள்) தடித்தல்
8. ஸ்ட்ரோக் (Stroke)
9. தைராய்ட் மற்றும் ஹார்மோன் கோளாறுகள்

உடல் எடையை 10% குறைப்பது இந்த பின் விளைவுகளையும், நோய்களையும் 20% ஆகக் குறைக்கிறது.

## உடல் பருமனும் கருவுறுதலும்

சரியான உடல் எடையோடு இருப்பது இயல்பு வாழ்க்கையை எளிமைப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் ஓரளவு அழகும் கூடுகிறது. நோய்க்கு உரிய மருத்துவத்தையும் சுலபமாக்குகிறது. pcod என்ற சினைப்பைக் கோளாறு (ஹார்மோன்) மாறுபாடுகளால் உடல் எடையை அதிகரிப்பதோடு கருவுறுதல் பிரச்சினைகளையும் உண்டாக்குகிறது.

கர்ப்பிணிகளில் உடல் எடை மிகவும் அதிகரித்தல் அல்லது குளுகோஸ் இன்டாலரன்ஸ் இருந்தால் கர்ப்ப கால நீரிழிவை உண்டாக்குகிறது.

## உடல் எடையைக் குறைப்பது எப்படி?

பல்வேறு பக்க விளைவுகளையும், உடல், மன அழுத்தத்தையும் அதிகரிக்கும் இந்த உடல் பருமனை நான்கு முறைகளில் அணுகலாம்.

1. வருமுன் தடுத்தல்
2. உணவுக் கட்டுப்பாடு
3. உடற்பயிற்சி, யோகா
4. மருந்துகள்

## உணவுக் கட்டுப்பாடு

உணவுக்கும் மருந்துக்கும் வேற்றுமை அதிகம் இல்லை. உணவுக் கட்டுப்பாடு குறையும்போது மருந்தை நாட வேண்டி உள்ளது. உணவே மருந்தாக இருந்த நம் முன்னோர்களின் உணவு முறையே, இப்போது மருத்துவர்களால் சமச்சீர் உணவு முறையாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

உணவுக் கட்டுப்பாடு என்பது உணவின் அளவை மட்டும் கட்டுப்படுத்துவது அன்று. அதன் தரத்தையும், வகையையும் கட்டுப்படுத்துவதே ஆகும். ஒருவருடைய சமச்சீர் உணவானது அவரது எடை, வயது, உழைப்பு, உணவுப் பழக்கவழக்கம், வாழும் இடம், நோயின் தன்மை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகப் பரிந்துரைக்கப்பட வேண்டியது முக்கியம்.

## உணவுக் கட்டுப்பாட்டின் நோக்கம்

1. சமச்சீர் உணவின் மூலம் உடலை ஆரோக்கியமாகப் பேணுதல்.

2. அந்தந்த வயதிற்குரிய, BMIக்கு ஏற்ற உடல் எடையைத் தொடர்தல்; சிறுவர்கள், இளைஞர்களுக்குரிய வளர்ச்சியைத் தடை செய்யாமல் உரிய சத்துக்களை அளித்து உடல் எடையைப் பேணுதல்.

3. உணவுப் பழக்கத்தையும், வாழ்க்கை முறையையும் ஒழுங்குபடுத்தி, உடல் பருமன், டிஸ்லிபிடீமியா, இரத்தக் குழாய் பாதிப்புகள், உயர் இரத்த அழுத்தம், சிறுநீரகக் கோளாறுகளுக்கு ஏற்ற உணவு முறையைப் பின்பற்றுதல்.

## உடல் எடைக்கு உகந்த காலரி அளவு

| | |
|---|---|
| சராசரி உடல் எடை | 25 - 30 kcal/kg/day |
| அதிக எடை | 20 kcal/kg/day |
| குறைந்த எடை | 40 kcal/kg/day |

50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒவ்வொரு 10 வயதிற்கும் 10 சதவீதம் காலரியில் குறைத்துக் கொள்ள வேண்டும்.

## சரிவிகித உணவின் அளவு முறை

| | |
|---|---|
| கார்போஹைட்ரேட் | 60 - 65% |
| புரதம் | 15 - 20% |
| கொழுப்பு | 15 - 25% |

ஒரு நாளுக்குரிய புரதச்சத்து தேவை - 0.5 - 0.8kg/body wt.
எண்ணெய் தேவை 1 மாதத்திற்குரியது - 0.5 kg ஒருவருக்கு
பழங்கள் 400 கிராம் / நாள்
(பழரசம் கூடாது)
உப்பு 6g - 8g / நாள்
(இரத்தக் கொதிப்பு, சிறுநீரக, இதயக்கோளாறு உள்ளவர்களுக்கு 3 - 4g / நாள்

## உடற்பயிற்சி மற்றும் யோகா

உடல் பருமனால் அவதிப்படுபவர்களுக்கு நடைப் பயிற்சி ஒரு வரப்பிரசாதம் ஆகும். நடக்கும்போது நம் உடல் சக்தி கீழ்க்காணுமாறு செலவிடப்படுகிறது.

மெதுவாக நடந்தால் 1 மணி நேரத்திற்கு - 250 - 300 காலரி செலவாகிறது.

வேகமாக நடந்தால் 1 மணி நேரத்திற்கு 350 - 400 காலரி செலவாகிறது.

உடல் சக்தி செலவிடப்படுவதோடு கொழுப்புச் சத்து அதிகமாக உபயோகிக்கப்படுகிறது. சில மாதங்கள் நடந்த பிறகு விகாரமாக அங்கங்கு தொங்கும் சதையும், தொப்பையும் குறைந்து உடல் சீராவதைக் கண்கூடாக உணரலாம். நடப்பதால் மூளையில் (ஹைபோதலாமஸ்) பசியைச் சீர்படுத்தும் மையம் சிறப்பாக இயங்குவதால் அதிகப்பசி குறைந்து சீராகப் பசியெடுக்கும். கால்வலி, எலும்பின் பலவீனம் குறையும். வேகமாகத்தான் நடக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மெதுவாக வேகத்தைக் கூட்ட வேண்டும். நடக்கும் நேரத்தையும் கூட்ட வேண்டும். நடக்கும்போது பேசுவதற்குச் சிரமமாக இருந்தால் வேகம் அதிகம் என்பதை உணரலாம்; கொஞ்சம் வேகத்தைக் குறைத்துக் கொள்ளலாம். நடக்கும் வேகத்தை விட நடக்கும் நேரமே முக்கியம். புதிதாக நடைப்பயிற்சி செல்பவர்கள் ஆரம்பத்திலேயே அதிக நேரம், அதிக வேகம் செல்லக் கூடாது. அவரவர் வேலை, வசதிப்படி எப்போது (காலை, மாலை, இரவு) வேண்டுமானாலும் நடைப்பயிற்சி செல்ல முயலலாம்.

நடைப்பயிற்சி தவிர சிறிய உடற்பயிற்சிகள், யோகாசனங்களை முறையாகக் கற்று, காலை, மாலை, இரவு வீட்டிலேயே தினம் 15 நிமிடம் முதல் 30 நிமிடம் செய்யலாம். இதனால், மூட்டுவலி, இடுப்பு வலி மற்றும் எலும்பு பலவீனமும் குறையும். சைக்கிள் ஓட்டுதல், விளையாடுதல், ஓட்டப்பயிற்சி முதலியன செய்தும் உடல் பருமன் வராமல் தடுக்கலாம்.

## மருந்துகள்

உணவுக் கட்டுப்பாடும், உடற்பயிற்சியும் இல்லாமல் வெறும் மருந்துகளால் மட்டும் உடல் எடை குறைவதற்கு வாய்ப்பே இல்லை. தகுந்த மருத்துவ ஆலோசனையோடு மருந்துகள், அறுவை சிகிச்சையை உபயோகப்படுத்தலாம்.

இறுதியாக உடல் பருமன் நோய் நம் வாழ்க்கைக்கும், உயிருக்கும் பல்வேறு இன்னல்களை உண்டாக்கக்கூடிய ஒரு வளர்சிதை குறைபாடு. இதனை ஆரம்பத்திலேயே கண்டறியாவிட்டால் பல்வேறு தொடர் நோய்களை உண்டாக்கி நம்மை இறுதியில் கொல்லும்.

*''மாறுபாடு இல்லாத உண்டி மருந்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு''*

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, அளவோடு உண்டு உடற்பயிற்சி செய்து உடல்நலத்தோடும் இளமையோடும் வாழ்வோம்!

# மௌன வன்முறைகளும் மட்டுப்படுத்தும் தீர்வுகளும்

முனைவர் ச. நீலாயதாட்சி

*விரிவுரையாளர், தத்துவ மையம்,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

உயிரிகளிடம் உள்ள இயற்கையான உணர்வுகள் எப்போதும் வலிமை வாய்ந்தவை. அந்த உணர்வுகளுள் காம உணர்வும் ஒன்று. பாலினக் கவர்ச்சியால் ஏற்படும் விருப்பம், கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வரையில் ஒழுக்க முறைமையுடன் இருக்கும். அவ்வாறு இல்லாமல் கட்டுமீறும்போது அறிவும் பண்புகளும் அகன்று காமவேகம் ஒன்றே நிலை பெறுவதாகிறது.

இந்த வகையில் பெண்கள் இயல்பாகவே அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு எனும் நாற்குணங்களோடு இருப்பதால் தமது காம உணர்வுகளை வெளிகாட்டுவதற்கு அச்சமும் நாணமும் உடையவர்களாக இருப்பார்கள். இந்த நாற்குணங்களும் மரபுநிலையில் அவர்களை அறியாமலே அவர்களுள் ஊடுருவியிருப்பதால் ஆண்களைப் போன்று அவர்களால் நடந்து கொள்ள இயலாது. எத்தனை நாகரிகம் வாய்ந்தவர்கள் என்றாலும் எல்லை மீறுதல் என்பது பொதுவாக நடைபெறாது.

## ஆண்களின் பொதுவான தன்மை

ஆண்களைப் பொறுத்தவரை காம உணர்வுகளை வெளிப்படையாகக் காட்டுவதும் சில சூழல்களில் அந்த

உணர்வினைச் செயலாக்கி மகிழ நினைப்பதும் ஆண்களின் தன்மையாக இருக்கின்றது. இதனால் தன் விருப்பத்தைச் செயல்படுத்துவதிலேயே கருத்தாக இருக்கின்றனர்.

பெண்களை மனித இனத்தின் அதிசயம் என்றே எண்ணிப் போற்றாது காமப்பசிக்கு இறைவனால் படைக்கப்பட்ட அல்லது இயற்கை தந்த இன்ப விருந்து என்ற எண்ணும் நிலைமையும் இருக்கத்தான் செய்கிறது.

## பெண்களின் பொதுவான தன்மை

பெண்கள் தன் கணவரைத் தவிர மற்ற ஆடவர்கள் தன்னைத் தொட்டுப் பேசுவதையோ அல்லது கேலி செய்வதையோ விரும்புவதில்லை. தன்னை மறைமுகமாகப் பார்த்து இன்புறுவதாகத் தெரிந்தாலும் அதனை வெறுக்கத்தான் செய்வார்கள். நாகரிகத்தின் மேல் காலம்நடைபோட்டு நின்றாலும் நாகரிகப் பழக்கத்தில் இருந்தாலும் இயல்பான மரபுநிலைகளை மீறுவதில்லை என்றுதான் கூறுதல் வேண்டும். ஆயினும் பெரும்பாலான பெண்கள் மாறிவரும் காலச் சுனாமியில் பயிர்ப்பு (கணவரைத் தவிர மற்ற ஆடவரின் தொடு உணர்வை அறுவறுத்தல்) என்ற குணம் காணாமல் போய்க்கொண்டுதான் இருக்கிறது என்றும் அறிய முடிகின்றது.

## குறும்புகளின் வகை

ஆண்கள் பெண்ணினத்தை நோக்கிச் செய்யும் குறும்புகளை இரண்டு வகையாகக் கூறலாம். 1. காம நோக்கின்றிச் செய்யும் குறும்பு, 2. காம நோக்கோடு செய்யும் குறும்பு. அதாவது மௌனமான வன்முறை.

## காம நோக்கின்றிச் செய்யும் குறும்பு

இளைய தலைமுறையினரோ மற்ற நிலையில் உள்ளவரோ ஒரு தன்னிலை மகிழ்ச்சிக்காக, விளையாட்டாகக்

குறும்புகள் செய்யக் கூடும். இவ்வாறான குறும்புகளை இனங்கண்டு கொள்ளும் திறமை பெண்களுக்கு நிச்சயம் வேண்டும். அழகினைப் பற்றிக் கேலி செய்தல் அழகாக, விலையுயர்ந்த உடையில் வரும்போது வேண்டுமென்றே மற்றொருவரைக் கூறி அவர்களுக்குத்தான் இது நன்றாக இருக்கும் என்றே சீண்டிப்பார்த்துச் சுணங்குவதைப் பார்த்து ரசிப்பது போன்ற சில செயல்பாடுகள் சிலரிடம் காணப் படும்! இதனைப் பெரிதாக்காது விளையாட்டாகவே எதா வது எதிர்ச்சொல் கூறிவிட்டு நகர்ந்து விடலாம். அல்லது அவ் வாறு கூறியது தனக்குப் பிடிக்கவில்லை என்பதனை மறை முகமாகக் காட்டிவிட்டு வேறு பேச்சுக்குச் சென்று விடலாம்.

இதனைப் பெரிதாக்கி ஆர்ப்பாட்டம் செய்தல் என்பது தனக்குத்தானே அவலத்தைத் தேடிக்கொள்வதோடு விளையாட்டாக இருந்தவர்களையும் வினையாக்கிவிடும். இதுபோன்ற விபரீதமற்ற குறும்புகளிடத்தில் கவனம் செலுத் தாது மௌனமாக அகன்றுவிடுவதே அழகான நடைமுறை யாகும். இந்த இடத்தில் மடம்என்ற இயல்பினைக் காட்டுதல் வேண்டும். (அறிந்தும் அறியாததுபோல இருக்கும் நிலை மடம் என்று கூறலாம்). செய்யப்படும் குறும்பினை அறிந் தாலும் அதனால் என்ன? என்பது போலவோ அவ்வாறு ஒன் றும் நடக்கவே இல்லை என்பதுபோலவோ பட்டும் படாமல் இருத்தல் வேண்டும்.

ஆனால் விபரீதமற்ற குறும்புகள் என்பது சொல்லள வில் மட்டுமே ஏற்புடையது. அதுவே செயன்மையாக விரிந்தால் அதனை இடத்திற்கும் சூழலிற்கும் ஏற்றவாறு சமாளிக்கத் தெரிந்தவர்களாகப் பெண்கள் இருத்தல் அவசியம்.

## காமநோக்கோடு செய்யும் குறும்புகள்

காமநோக்கோடு செய்யப்படும் பார்வை உள்ளிட்ட எந்தக் குறும்புகளும் ஏற்றுக் கொள்ளத்தக்கன அல்ல.

வெளியில் தெரியாத வகையில் தன் விருப்பத்தினைச் செயல்படுத்துவதாக ஆண்களின் குறும்புகள் அமையும். தனது காமவேட்கை வெளியே தெரிந்து அதனால் தன் மதிப்பு குறைவதை ஆண் சமுதாயம் விரும்புவதில்லை. அதனால் இத்தகு செயல்களை மௌன வன்முறைகள் என்று கூறலாம்.

## மௌன வன்முறைகள்...

போக்குவரத்து வாகனங்கள், திரைப்பட அரங்குகள், திருவிழா நடைபெறும் இடங்கள் ஏன்? கோயில்களில் கூட இதுபோன்ற மௌன வன்முறைகள் நிகழ்வதுண்டு.

பேருந்துகளில் பயணம்செய்யும்போது நின்றாலும் சரி, இருக்கையில் அமர்ந்து வந்தாலும் சரி காமக் குறும்புகள் கட்டவிழ்ந்து விடப்படுகின்றன.

ஆணும் பெண்ணும் ஒரே மாதிரியான பயணம் செய்கிறார்கள். ஆனால், பெண்கள் நிம்மதியாகப் பயணத்தை மேற்கொள்ள முடிவதில்லை.

நின்றுகொண்டிருந்தால் பின்னால் உரசுவது, தொங்கிக் கொண்டிருக்கும் நிலையைச் சாதகமாக்கித் தொட்டு விளையாடுவது போன்ற அருவருப்பான செயல்களைப் பெண்கள் எதிர்கொள்ளும்போது அவற்றை எப்படிச் சமாளிப்பது என்பது சவாலாகவே இருக்கின்றது. பேருந்துகளில் இருக்கையில் அமர்ந்திருக்கும்போதும் பின்னால் அமர்ந்திருக்கும் போதும் ஆண்களால் நிகழ்த்தப் பெறும் வன்முறைகள் வெறுக்கத்தக்கவாக உள்ளன.

## தீர்வு

இதுபோன்ற செயல்களைத் தடுப்பதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

1. எல்லோருக்கும் தெரிவது போல் அந்த நபரைத் தன் இருக்கையில் இருந்து எழுந்து நின்று அவரின் கீழான பண்பு களை யாவரும் அறியும் வண்ணம் அவமானப்படுத்துவது. இதில் பெண்களுக்கும் சற்று வெட்கக் கேடாகத்தான் இருக் கும்.

2. இரண்டாவது முறையில் ஒரு மௌனமான தீர்வு இருக்கிறது. பெண்கள் தன் கைப்பையில் எப்போதும் ஒரு சேப்டி பின் ஒன்றை (சற்று பெரியதாக) வைத்திருத்தல் என்பது நலம். பின்னால் இருந்து இருக்கையின் ஓரமாகவோ அல்லது இருக்கையின் அடியிலோ ஆண்கள் தன் கை அல்லது கால்களால் செய்யும் சேட்டைகளுக்கு சேப்டி பின்னே கதி. முதலில் மேல்படும் கையையோ அல்லது காலையோ உணர்ந்து கொண்டு சேப்டி பின்னை எடுத்து நீக்கி வைத்துக் கொன்டு ஒரு கையால் மேலே படும் கையை காலை மெல்லப் பிடித்து உடன் சேப்டி பின்னால் 'நறுக் நறுக்' என்று குத்தி எடுத்தீர்கள் என்றால் சட்டென்று ஆடவரின் கை, கால்கள் பின் இழுக்கப்பட்டு முடிவுபெறும். அதன்பின் அந்த வலிக்கு அவர்கள் தயாராவதில்லை.

அதேபோல்தான் சில நேரங்களில் தனியாக ஊர் பேர் தெரியாத ஊரில் செல்ல நேரிடுகையில் ஏதோ ஆள் அரவ மற்ற திசைநோக்கி ஆட்டோ செல்வதாக உணர்ந்தால் நிறுத் தச் சொல்லிப் பாருங்கள். தவறான எண்ணம் கொண்டவராக இருந்தால் நிறுத்தாமல் வேகமாக ஓட்டியபடி இருப்பான். முற்றிலும் ஆள் அரவம் இல்லாத இடத்தை அடைவதற்கு முன் ஆங்காங்கே ஒரு வீடோ அல்லது குடிசையோ தெரிந் தால் அந்த இடத்திற்கு அருகில் வரும்போது சேப்டிப் பின்னை எடுத்து ஆட்டோ ஓட்டிக் கொண்டிருக்கும் ஆணின் பின்னால் பிடரியில் 'நறுக் நறுக்' என்று குத்தியெடுங்கள். வலியில் ஆட்டோவின் விரைவு தானாகக் குறையும். அந்த நேரத்தில் ஆட்டோவிலிருந்து குதித்து கண்ணில் தென்பட்ட குடிசையோ அல்லது வீடோ அதற்குள் சென்றுவிடுங்கள்.

வந்தவன் ஆட்டோவை எடுத்துச் சென்றுவிடுவான் (ஆனால் இப்போது ஆட்டோ ஓட்டுநர்கள் எல்லாம் இதுபோன்ற செய்கையில் ஈடுபடாமல் பாதுகாவலாக இருப்பாதாகத் தெரியவருகிறது. அது ஒரு மகிழ்ச்சியைத் தருகிறது).

திரை அரங்குகளிலும் இதே முறையைப் பின்பற்றலாம்.

இந்த மௌனத் தீர்வினால் நம்முடைய மானமும் வெளிச்சம் போட்டு பறிபோகாமல் காக்கப்படுகிறது. தாறுமாறாக எல்லோருக்கும் தெரிவதுபோல் செய்யப் போக அது பழிவாங்குவதில் முடிவாக அமைந்தால் பின் அதற்கான வழிமுறைகளை நாடவேண்டிய நிலை தொடர்ததையாக மாறிவிடும்.

திருவிழாக்கள், மற்ற கூட்டங்களில் சேப்டி பின் எடுபடாது. அதுபோன்ற இடங்களில் வீட்டில் உள்ளவர்களுடன் கூட்டமாகச் செல்வதே பாதுகாப்பனாதாகும். சில இடங்களை தவிர்த்தலும் நன்று.

இரவில் பயணத்தில் தூங்கும் வசதியினைப் பதிவு செய்து நீண்ட பயணம் மேற்கொள்ளும்போது, நடுவில் உள்ள தூங்கும் இருக்கையில் பெண்கள் இருக்க நேர்ந்தால் மேல் அல்லது கீழ் இருக்கையில் உள்ளவர்கள் கீழே உள்ள இருக்கையில் இருக்கும் ஆண் அடிக்கடி சோம்பல் முறிப்பது போல் மேலே தட்டுவது, இருக்கையின் நடுப்பகுதியைப் பிடித்துக் கொண்டு எழுவது போல் உறங்கிக் கொண்டிருக்கும் பெண்ணைத் தொல்லை செய்வது என்றிருக்க, மேல் இருக்கையில் ஆண் இருந்தால் அடிக்கடி குனிந்து நோட்டம் விடுவது என்று பல சேட்டைகள் சகிக்க முடியாது. அதே போல் எதிர்த்த நடு இருக்கையில் ஆண் இருந்தாலும் தொல்லைதான். அந்தப் பக்கம் திரும்பாமல் ஒரே பக்கம் உறங்குவதைத் தவிர வேறு வழியே இல்லாமல் இருக்கும்.

வீட்டில் அற்ப ஜீவிகள் (கரப்பான், கொசு, மூட்டைப்பூச்சி போல்வன) தொல்லைக்கு மருந்துகள் பல உண்டு. இதுபோன்ற மனித அற்ப ஜீவிகளின் தொல்லைகளுக்கு எப்படித் தீர்வு காண்பது?

*சிலவற்றைத் தவிர்த்தல்*

1. வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் நிலை பற்றி வெளியில் சொல்லுதல் என்பது கூடாது.

2. கவர்ச்சியான நடை உடை பாவனைகளைத் தவிர்த்தல் வேண்டும்.

3. மற்றவர்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் அங்கும் இங்கும் போய் வருதல் கூடாது. உற்சாகமான உரத்தக் குரலில் பேசி சிரித்து அரட்டை அடித்தல் போன்ற வற்றைத் தவிர்க்க வேண்டும்.

4. மகிழ்ச்சியாக இருக்கலாம். அது மரபு மீறுதலாக இருத்தல் கூடாது.

5. தாரளமாகப் பழகுவதைத் தவிர்த்தல்.

அப்படிப்பட்ட பெண்களை ஆண்கள் இரசிப்பது எப்படி உண்மையோ அதுபோல அவர்களைப் பற்றி மதிப் பினைக் குறைத்து எடைபோட்டு வைத்திருப்பதும் உண்மை என்று அறிக.

காரியம் ஆகவேண்டும் என்றால் சிரித்துச் சிரித்துப் பேசி தன்மதிப்பினைச் சில்லறையாக செலவழிப்பதைத் தவிர்த்து நடத்தல் வேண்டும்.

அழகாக இருத்தல் வேண்டும் என்று எண்ணுவதால் தவறில்லை கவர்ச்சியாக இருக்க முயற்ச்சித்தல் என்பதுதான் கூடாது.

பெண்கள் கட்டுப்பெட்டியாக இருக்க வேண்டும் என்பதில்லை மரபின்மீது ஏறிநின்று வெற்றிக்கொடி நாட்டும் புதுமைப்பெண்ணாக இருக்க வேண்டும்.

# சரித்திரநாயகி - ரோமிளா தாபர்

மா. பவானி
*விரிவுரையாளர்,*
*கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

இன்றையச் சூழலில் வரலாற்றுப் பாடத்தை படிப்பது பயனற்றதாகவும் எளிதானதாகவும் கருதப்பட்டு வரலாற்று மாணவர்களும் அறிஞர்களும் அருகியே வருகிறார்கள். வரலாறு என்பது கடந்த காலத்தைக் காட்டும் கண்ணாடி மட்டுமன்று எதிர்காலத்தில் ஆபத்தில் சிக்கிக் கொள்ளாமல் வழிகாட்டும் ஒளிவிளக்கும் கூட. உண்மையில் இவ்வுலகில் தோன்றிய எந்த ஒரு பொருளுக்கும் வரலாறு என்பது இன்றி யமையாத ஒன்றாகும். ஆதாரபூர்வமாக ஒரு பொருளை ஆய்வு செய்யும் அறிவியல் பாடம் போன்றே ஆதாரங்கள் இல்லாதனவற்றிற்கும் இருக்கும் குறைந்த அளவிலான ஆதாரங்களைக் கொண்டு உண்மையான வரலாற்றை அறியும் இயலான வரலாறும் முக்கியத்துவம் வாய்ந்ததே! வரலாற்றை எழுதுவது எளிமையான செயலன்று! எல்லோராலும் வரலாற்றை எழுத இயலாது. அப்படி எல்லோரும் எழுதுவது வரலாறாக இருக்காது என்பது குறித்து இந்திய பெண் வரலாற்றறிஞரான ரோமிளா தாபர் அவர்கள் குறிப்பிடுவது இங்குச் சுட்டத்தக்கது.[1]

"Historical writing is not a free for all in which anyone can claims to be writing history."

உண்மையில் வரலாற்றை ஆழ்ந்துணர்ந்து படித்து அதை எழுதுவோர்க்கே அதன் அருமையும் அதை எழுவதில்

உள்ளச் சிக்கலும் தெரியவரும். அவ்வகையில் வரலாற்று ஆதாரங்களை நேரில் சென்று பார்த்து உண்மை வழுவாது நடுநிலையில் நின்று எழுதும் வரலாற்றிஞர்களுக்கு இன்னல் களும் இடித்துரைகளும் வரும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே! இவ்வாறு இருக்கும் இத்துறையில் ஒளிவீசித் திகழ்ந்த பல ஆண் வரலாற்றிஞர்களுக்கு மத்தியில் அனைத்து வரலாற்றிஞர்களுக்கும் வரலாற்று மாணவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக, தூண்டுதலாகத் திகழும் பெண் வரலாற்ற றிஞரான ரோமிளா தாபர் அவர்களைப் பற்றி இக்கட்டுரை பேசுகிறது.

## தாபரின் கல்விநிலை

ரோமிளா தாபர், 1931ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத் தில் பிறந்தவர். பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்புகளை முடித்த பின்பு 1958 இல் இலண்டன் பல் கலைக்கழகத்தில் கீழை மற்றும் ஆப்பிரிக்க ஆய்வுகள் பள்ளி யில் ஏ.எல். பாஷம் அவர்களின் நெறிகாட்டலின் கீழ் முனை வர் பட்டம் பெற்றுள்ளார். பின்பு புது தில்லியிலுள்ள ஜவ ஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியாக பணி யாற்றினார். 78 வயதாகும் இவர் தற்பொழுது அப்பல் கலைக்கழகத்தின் தகைமைப் பேராசிரியராக (Professor of Emeritus) இருந்து பல அறிவுரைகளையும் ஆய்வுகளையும் நிகழ்த்தி வருகிறார்.

## இவரது முக்கியமான வெளியீடுகள்

- A History of India: Volume I, 1966
- Asoka and the Decline of the Mauryas, 1961 (Revision 1988), Oxford University Press.
- Ancient Indian Social History: Some Interpretations, 1978.
- Cultural Pasts: Essays in Early Indian History, 2003; Oxford University Press.

- Cultural Transaction and Early India: Tradition and Patronage 1994, Art Patronage.
- Dissent in the Early Indian Tradition, 1979, Indian Renaissance Institute.
- Early India: From Origins to AD 1300, 2002; Penguin
- Exile and the Kingdom: Some Thoughts on the Ramayana, 1978, Original from the University of California.
- From Lineage to State: Social Formations of the Mid - First Millennium B.C. in the Ganges Valley, 1985; Oxford University Press.
- History and Beyond 2000
- Interpreting Early India, 1993 (2nd Edition 1999); Oxford University Press, 1999.
- India: Another Millennium? 2000, Viking
- India : Historical Beginnings and the Concept of the Aryan 2006, National Book Trust
- Sakuntala: Texts, Readings, Histories, 2002; Anthem
- Somanatha: The Many Voices of History, 2005; Verso
- The Past and Prejudice (Patel Memorial Lectures), 1971
- The Mauryas Revisited 1987, K.P. Bagchi & Co.,

இவர் எழுதியுள்ள பல நூல்களுள் ஒரு சில மிகவும் குறிப்பிடத்தக்கவை. அவர் தமது வரலாற்று நூல்களில் மேல்குடி மக்களைச் சாடுகிறார். சமூக தாக்கங்களின் விளை வாக பரிணமித்த இந்துத்துவத்தைப் பற்றி விளக்குகிறார் அண்மையில் இவர் எழுதிய சோம்நாத் என்ற நூலில் குஜராத் கோயிலைப் பற்றிய கட்டுக்கதைகள் எவ்விதம் வளர்ந்துள் ளன என்பது குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

இவர் முதன்முதலில் 1963 ஆல் எழுதிய *Asoka and the Decline of the Maurya* (அசோகரும் மௌரிப் பேரரசின் வீழ்ச்சியும்) என்ற நூலில் அசோகரது தர்மக் கொள்கையை தனது சமூக அரசியல் நோக்கில் காண்கிறார். பல்வேறுபட்ட இனப்பிரிவுகள் அடங்கிய 'இந்த இந்தியப் பகுதியை இன, மத வேறுபாடில்லாத நன்னெறி சார்ந்த அரசாக மாற்ற அசோகர் முயன்றதைக் குறிப்பிடு கின்றார். இவரது இந்த நல்லக் கொள்கையானது அவருக்குப் பின் திறமையும் தகுதியும் வாய்ந்த ஒருங்கிணைக்கப் பெற்ற நடுவண் அரசு மத்தியில் இல்லாததாலேயே அழிவுற்றது என்றும் கூறுகின் றார். தாபர் முதலில் எழுதிய இந்திய வரலாறு இந்தியாவின் துவக்க வரலாறு முதற்கொண்டு 16ஆம் நூற்றாண்டு ஐரோப் பியர் வருகை வரை உள்ளடங்கியது. தொன்மை இந்தியா வின் சமூக வரலாறு என்ற நூல் துவக்ககால இந்திய வரலாறு முதல் கி.பி 1000 ஆம் ஆண்டு வரையிலானக் காலத்தைச் சேர்ந்தது. இந்நூலில் இவர் இந்துக்களுக்கும் பௌத்தர் களுக்கும் சமூக, சமய முறைகளுக்கிடையிலான ஒப்பீட் டைச் செய்துள்ளார். சாதியை நோக்கி நகர்ந்த சமூக அமைப் பானது புத்த மதத்தை எதிர்த்து செயல்பட்டதை ஆய்வு செய்துள்ளார். இரும்பு கண்டுபிடிப்பின் வாயிலாக மரபுவழி மேய்ச்சல் சமூகமானது படிப்படியாக எவ்வாறு மாறி பின்பு நகரமயமானதைக் குறிப்பிடுகிறார்.

## பாராட்டுகளும் விருதுகளும்

இலண்டன் பல்கலைக்கழகத்தின் ஆப்பிரிக்க பள்ளி (School of Oriental and African Studies (SOAS)), ஆக்ஸ் ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் மார்க்ரெட் ஹாலிலும், ஆய்வறிஞராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரது சிறந்த கல்வியறிவைப் பாராட்டி, சிகாக்கோ பல்கலைக்கழகம், பாரிஸிலுள்ள Institut National des Langues et Civilisations Orientales என்ற நிறுவனம், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் (University of Oxford), கல்கத்தாப் பல்கலைக்கழகம்

(University of Calcutta) போன்ற கல்வி நிறுவனங்கள் இவருக்கு மதிப்புறு முனைவர் பட்டத்ததை வழங்கியுள்ளது. 2009ஆம் ஆண்டு அண்மையில் ஹைதரா பாத் பல்கலைக் கழகம் இதே பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

## பத்மபூஷன் விருதை நிராகரித்தல்

1992லும், 2005 சனவரியிலும் இவருக்கு இந்திய அரசு பத்மபூஷன் விருதை வழங்கியது. அன்றைய ஜனாதிபதி ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் அவர்களுக்கு தாம் கல்விப் பணிகளுக்காக தரப்படும் விருதுகளை மட்டுமே ஏற்பதாக எழுதிய கடிதத்தின் மூலம் இவரது அப்பழுக்கற்ற உண்மை யான கல்விச்சேவையினை உணரலாம்.

"Astonished to see her name in the list of awardees because three months ago when I was contacted by the HRD ministry and asked if I would accept an award, I made my position very clear and explained my reason for declining it". Thapar had declined the Padma Bhushan on an earlier occasion, in 1992. To the President, she explained the reason for turning down the award thus: "I only accept awards from academic institutions or those associated with my professional work, and not state awards."[3]

இவ்வாறாக எந்தவித எதிர்ப்பார்ப்புமின்றி அரசிய லுக்கு அடிமையாகும் கல்வியாளர்களுக்கு நடுவில், கல்விப் பணியையே பெரிதும் மதித்து நடுவுநிலை நின்று வரலாற்றை எழுதும் 78 வயதாகும் இப்பெண் வரலாற்ற றிஞரை சரித்திர நாயகி என்று உரைப்பது மிகையன்று.

***References :***

1. The Hindu, 19.12.2004
2. "Romila Thapar Named as First Holder of the Kluge Chair in Countries and Cultures of the South at Library of Congress". Library of Congress, April 17, 2003. http://www.loc.gov/today/pr/2003/03-068.html. Retrieved on 2007-04-04.
3. "Romila rejects Padma Award", Times of India, article dated January, 27, 2005.

# தமிழ் இலக்கியங்களில் பெண்கள் அணிகலன்கள் (தலையணிகள்)

க. மீனேஸ்வரி

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*அகராதியியல் துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

## முன்னுரை

மிக முற்பட்ட காலத்தில் நாகரிகம் என்பதை ஒரு சிறிதும் அறியாத நேரத்தில் மாந்தன் இலை, தழைகளை உண்டு வாழ்ந்து வந்தான். பின்பு நாகரிகம் அடைந்த பின்பு காய், கனி, கிழங்கு வகைகளைத் தேடி எடுத்து உண்டான். உடலைப் பற்றிக் கவலையின்றிப் பிறந்த மேனியோடு திரிந்தவன் வெப்பம், குளிர் முதலிய இயற்கை ஆற்றல் உடலைத் தாக்குவதை உணர்ந்து தன்னைக் காத்துக் கொள்ள விரும்பி இயற்கைப் பொருள்களை அதாவது அழகிய இலை, தழைகளைத் தன் உடம்பில் அணியத் தொடங்கினான். மலர்களைக் கண்டதும் அதைக் கொய்து அவற்றைச் சூடி அணிந்து வந்தான். பின் மலர்களைச் சேர்த்துக் கட்டி மலர் மாலையாக அணிந்தான். காலம் செல்லச் செல்ல இந்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. நிலம் எனும் நல்லாள் நல்கும் செல்வங்களைத் தேடியெடுத்து இரும்பு, செம்பு, பொன், வெள்ளி ஆகிய உலோகங்களிலும் கடலில் புகுந்து முத்து, பவளம் முதலியவற்றிலும் அணிகலன்கள் செய்து அணிந்து மகிழ்ந்தான். கடற்சங்கை அறுத்து வளை செய்ததைப் பின்வரும் சங்க இலக்கியப் பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

*''கோடீ ரிலங்கு வளை ஞெகிழ்த்த''* (குறுந். 31)
*''கடற் கோடறுத்த வரம் போழவ் வளை''*
(ஐங்,194:1)

அழகுக்காக மட்டும் அணியப்பட்ட அணிகள் பின்பு பல்நோக்குப் பயன் கருதித் தினமும் அணியப்படும் அணியாக மாறியுள்ளது. சமுதாய ஏற்றத்தாழ்வுகளை வரைறுப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் ஓர் அளவுகோலாகவும் அணிகள் விளங்குகின்றன.

## அணிகலன்களின் பெயர்த்தோற்றம்

அணிகலன் என்பதற்கு ஆபரணம், நகை, தடையம், பணி, அலங்காரம் என்று பல பொருள்கள் கூறப்படுகின்றன. அணியப் படுவதால் அதற்கு அணிகலன் என்ற பெயர் எழுந்தது. சிந்து சமவெளி மக்களின் வாழ்க்கை குறித்த செய்திகள் நமக்குச் சான்று பகர்கின்றன. தமிழர்களுக்கு அணிகலன்கள் மீது இருந்த ஆர்வமும், ஈடுபாடும், ஐம்பெரும் காப்பியங்களுக்கு அணிகலன்களின் பெயர்களைச் சூட்டியதிலிருந்து அறிய இயலுகின்றது. அணிகலன்கள் மனித சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. காதணி, திருமணம், வளைகாப்பு, ஆன்மீகப் பண்டிகைகள் போன்றவற்றில் அணியப்பெறும் அணிகலன்கள் தமிழர் பண்பாட்டினை உலகிற்கு எடுத்தியம்புகின்றன. இலக்கியங்களில் வருணனைச் சிறப்பிற்கு அணிகலன்கள் பெருமளவு துணை நிற்கின்றன. ஒரு கதை மாந்தரை அறிமுகப்படுத்தும் ஆசிரியர் அம்மாந்தரின் புறத்தோற்றத்தை அணிகலன்களோடு இணைத்துச்சுட்டுகின்றபொழுது அவ்வுருவம் படிப்பவரின் கண் முன்னே காட்சி தருகின்றது.

## ஆதிகால அணிகலன்கள்

ஆதி காலத்தில் முதன் முதலாக அணிகலன்களைக் கண்டவர்கள் குறிஞ்சி நில மக்களேயாவர். குறிஞ்சி நில

மககள் மலர் அணிகளையும் அரும்பு அணிகளையும் கண்ட னர். முல்லைநில வாழ்க்கையில் மக்கள் இலை, தழை, ஓலை, கொடி முதலியவற்றை அணியாக அணிந்து வந்தனர். மருத நில வாழ்க்கையிலே மக்கள் மலர், அரும்பு, இலை, ஓலை, கொடி, பிஞ்சு, காய், பழம், கொட்டை போன்ற வற்றை அணிகளாக அணிந்து வந்தனர். மருதநில மக்களே நெல் மாலை, மிளகு மாலை, கொத்தமல்லி மாலை, குன்றி மணி மாலை, மருதங்காய் மாலை, நெல்லிக்காய் மாலை, மாம்பிஞ்சுக் கொலுசு, பிஞ்சு அரும்பு மாலை, கன்னப்பூ, சுண்டைக்காய் மாலை, உருத்திராக்க மாலை, தாமரை விதை மாலை போன்ற வற்றை அணிந்து வந்தனர்.

## உலோக கால அணிகலன்கள்

தமிழகத்தில் உலோக காலத்திலேதான் உயர்ந்த நாகரிகம் உந்தியது. அரிய கலைகள் அரும்பின. ஓலை, இலை, குழை, கொம்பு, கொடி, அரும்பு, பூ, காய், கொட்டை, சங்கு, சிப்பி வடிவாகவே உலோகங்களில் அணிகலன்கள் செய்து அணிந்து வந்தனர். அவற்றின் வண் ணங்கள் தங்களின் பொன் அணிகளில் திகழுமாறு மரகதம் - பச்சை, நீலம் - நீலம், வைரம்-வெள்ளை, மாணிக்கம்-வெளிரிய சிவப்பு, புட் பராகம்- மஞ்சள், பவளம்- கருஞ் சிவப்பு முதலியமணிகளைப் பதித்து இலை, மலர், காய், பழம், கொட்டை முதலியவற்றின் வண்ணம் ஒளிரும்படி அணிகலன்கள் செய்து அணிந்தனர். எல்லாவற்றையும் விடச் சிறப்பு அந்த அணிகளுக்கு இலை, பூ, காய் என்ற அந்த ஆதிப்பெயரையே சூட்டினர். இது தமிழர்களின் கலை வளர்ச்சியையும், கலைப்பண்பையும் காட்டுவதாகும்.

## தமிழர்கள் அணிந்து வந்த ஆதிகால அணிகலன்கள்

தமிழர்கள் அணிந்து வந்த ஆதிகாலத் தலையணிகள் பின்வருமாறு.

தாழம் பூ, தாமரைப் பூ, சொருகுப்பூ, சாமந்திப்பூ, அடுக்கு மல்லிகைப் பூ, இலை, அரசிலை, பதுமம், சரம், பூரப்பாளை, கோதை, வலம்பு என்பனவாகும்.

நாகரிகம் வளர, வளர ஒவ்வொரு உறுப்பிலும் பல்வேறு அணிகள் பல்வேறு முறையில் மாற்றமும் வளர்ச்சியும் பெற்று வந்துள்ளன.

## அணிகலன்களின் வகைப்பாடு

பெண்கள் அணியும் அணிகலன்கள் அவை அணியப் படும் உடல் உறுப்பிற்கு ஏற்றவாறு பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. தலையில் அணியும் அணி தலை யணி என்றும் காதில் அணிபவை காதணி என்றும் பொது வாக உறுப்பின் பெயரால் குறிக்கப்படுகின்றன. அணிகலன் களாக மேலும் அவை அணியப்பெறும் இடத்திற்கு ஏற்ற வகையில் மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை. 1. அணிபவர், 2. அணியும் இடத்திற்கேற்ற அணிகள், 3. அணி யும் உறுப்பிற்கேற்ற அணிகள்.

| அணிபவர் | அணியும் இடம் | உடலுறுப்பு |
|---|---|---|
| பெண்கள் | தலை | தலைமுடி |
| ஆண்கள் | காது | பின்னல் |
| இருபாலர் | கழுத்து | உச்சி |
| | கை | நுதல் |
| | இடை | தோள் |
| | கால் | முன்கை |
| | | கைவிரல் |
| | | முன் கால் |
| | | கால்விரல் |

## அணிபவர்

குறிப்பிட்ட அணிகலன்களைக் குறிப்பிட்ட ஒருவர்

மட்டுமே அணியமுடியும். சான்றாக மேகலை என்ற இடை யணியைப் பெண்கள் மட்டுமே அணிவார்கள். சில அணி களை ஆணும், பெண்ணும் அணிவார்கள்.

## அணியும் இடம்

அணிகலன்கள் அணியப்படும் இடத்திற்கு ஏற்பத் தலையணி, நுதல் அணி, காதணி, கழுத்தணி, தோளணி, மார்பணி, கையணி, கைவிரலணி, இடையணி, காலணி, கால் விரலணி என்று பலவாறு வகைப் படுத்தப்படுகின்றன.

## தலையணிகள்

தமிழ் இலக்கியங்களில் பெண்கள் அணியும் அணி கலன்கள் அனைத்தும் தலையணி என்றே வழங்கப் பெற்றுள் ளன. அவை அணியப்பெறும் உறுப்பின் அடிப்படையில் தலையணிகளை நான்கு பிரிவுகளில் அடக்கலாம். அவை,




இந்த நான்கு பிரிவுகளிலும் பெண்கள் மட்டும் அணிவதாக 36 வகையான தலையணிகள் தமிழ் இலக்கியங் களில் பயின்று வந்துள்ளன. தமிழ் இலக்கியங்களில் தலையணிகளைக் குறிக்க 42 வகையான தலையணிகள் காணப்படுகின்றன. அவற்றுள் பிறை, முஞ்சம், எனும் இரு அணிகலன்கள் சிறுவர் அணிவதாகவும், சூடாமணி, சூழி, பொலம் பூந்தும்பை, பொற் பூ, பொற்றாமரைப் பூ, பொன் வாகை எனும் ஆறு அணிகள் ஆடவர் மட்டும் அணிவதாக காணப்படுகின்றன.

## தலையணிகள்

*1.* அரசிலை, *2.* இராக்குடி, *3.* இலை, *4.* இலம்பகம், *5.* கடிகை, *6.* கானசரம், *7.* குச்சம், *8.* குஞ்சம், *9.* கொண்டைத் திருகு, *10.* கோதை, *11.* சடாங்கம், *12.* சடைநாகர், *13.* சடைத் திருகு, *14.* சந்திரப்பிரபை, *15.* கடிகை, *16.* சுட்டி, *17.* சுரிதம், *18.* சூடிகை, *19.* சூடாமணி (ஆண்), *20.* சூட்டு, *21.* சூடை, *22.* சூரியப்பிரபை, *23.* சூழி, *24.* சூளாமணி, *25.* சேகரம், *26.* சொருகுப் பூ, *27.* தலைப்பாளை (தொய்யகம்), *28.* தாளம் பூ, *29.* தெய்வுத்தி, *30.* பட்டம், *31.* பிறை, *32.* புல்லகம், *33.* பொலம் பூந்தும்பை (ஆண்), *34.* பொற் பூ (ஆண்), *35.* பொற்றாவரைப் பூ (ஆண்), *36.* பொன்வகை, *37.* பொன்னரி மாலை, *38.* மாராட்டம், *39.* முகரசம், *40.* முஞ்சம், *41.* வயந்தகம், *42.* வலம்புரி என்பனவாகும்

தலைமீது அணியப்படும் அணிகலன்கள் தலையணி எனப்படும். மக்கள் உடம்பில் தலைமிக முக்கிய உறுப் பாகையினால் தலைமீது அணியப்படும் அணிகலன்கள் சிறப்புடையவனாக மதிக்கப்பெற்றன. தலையில் விலை யுயர்ந்த அணிகளையே அணிவர். பொன்னும், மணியும் இடம் பெறுவதற்குரிய சிறப்பான இடம்-முதல் இடம் தலையேயாகும். தலையில் மட்டுமே அணியப்படும் அணி கலன்களைப் பற்றிப் பின்வருமாறு காணலாம்.

### புல்லகம்

புல்லகம் தலையின் இரு பக்கத்திலும் அணியப்படு வது வடமல்லி, தென்மல்லி என இருவகைப்படும். பல்லி உருவத்தில் இருக்கும் சூரியப்பிறை, சந்திரப்பிறை என்பன இப்பல்லி உருவத்தின் தொடர்ச்சியாகும்.

*''தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி''*

*(சில.6:107)*

## பிறை

கூர்மையான முறைகளோடு வளைந்த கீற்றாகத் தோற்றமளிக்கும் நிலவு போன்ற வடிவத்தில் பெண்கள் அணியும் ஆபரணம், பெண்கள் மட்டுமின்றிச் சிறுவர்களும் அணிந்திருந்தனர்.

*''பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்''*

*(மணி: 3:136)*

## வலம்புரி

வலம்புரி என்பது பொன்னால் வலம்புரிச் சங்கு வடிவில் செய்யப்பட்ட ஒரு தலையணியாகும். இது தெய்வவுத்திக்கு அடுத்துத் தலையில் அணியப்படும் ஒரு தலைக் கோலணி. இது மிகத் தொன்மையான காலத்தில் இருந்து தமிழகத்தில் அணியப்பட்டு வந்த ஒரு பொன் அணிகலனாகும்.

*''தெய்வ வுத்தியொடு செழுநீர் வலம்புரி''*

*(சிலம்.6:106)*

## பின்னல்

பின்னலில் (பெண்கள் சடை) மட்டும் அணிவதாக உள்ள அணிகலன்கள் 1. குஞ்சம், 2. கொண்டைத் திருகு, 3. சடாங்கம், 4. சடைத்திருகு, 5. சுரிதகம் என்பவை பின்னலில் மட்டுமே அணியக் கூடியவையாகும்.

## குஞ்சம்

சடையின் மீது சடாங்கம் வைத்துக் கட்டப்பெற்று சடையின் நுனியில் குஞ்சம் வைத்துக் கட்டப்படும். இது மூன்று பந்துகள் போல் செய்யப்பெற்று அடியில் குஞ்சம் தொங்கும். மேலே பொன் பூண் பொதியப் பெற்றிருக்கும்.

## சடாங்கம்

சடாங்கம் என்பது சடையின் மீது அணியப்படும் ஒரு பொன் அணிகலன், பாம்பு போன்ற ஒரு தலையணி, சடாங்கத்தின் மேலே அதாவது சடையின்மேல் பிடரிப்பக்கம் ஐந்து தலை நாகம் அல்லது பாம்பு அரசன் தலை இருக்கும். கீழே சடை மீது அதனுடைய வால் தொங்குவதுபோல் சடை மீதிருக்கும். இது பொன்னால் மிக்க கை தேர்ந்த பொற்கொல்லர்களால் செய்யப்பெறும். பெண்களின் நீண்ட தலை மயிரைச் சடையாகப் பின்னி அதன் மீது சடாங்கம் என்னும் அணிகலன்களைச் சொருகிச் சடையின் நுனியில் குஞ்சத்தை வைத்துக் கட்டுவார்கள் குஞ்சத்தின் மேலுள்ள பகுதியைச் சடாங்கத்தின் கீழே இணைத்து விடுவார்கள்.

## சுரிதகம்

சுரிதகம் என்பது பெண்கள் பின்னலில் வைத்து அணியும் அணிகலன். இக்காலத்து திருகுப் பூப்போன்ற அமைப்பைக் கொண்டது. இவ்வணி பொன்னால் செய்யப்பட்டது. வெளிவட்டம் பெரிதாகவும் அதற்கு உள்ளடங்கிய வட்டங்கள் அதனினும் சிறிது சிறிதாக வந்து ஒரு செம்மணிக் கல்லில் முடிவது போல அமைகின்ற இயல்புடையது.

*''சுரிதக உருவினவாகிப் பெயரிய''* (நற். 86:6)

## உச்சி

உச்சியில் அணிவதாக உள்ள அணிகலன் மூன்று ம்ட்டும் காணப்படுகின்றது. 1. இராக்குடி, 2. சடைநாகர், 3. தெய்வவுத்தி.

## தெய்வவுத்தி

இவ்வணி வட்டமான வடிவினை உடையது தலையின் உச்சியில் அணிவது இன்றைய நாகர், இராக்கொடி போன்ற அணிகளோடு ஒப்பிடலாம்.

*''தெய்வ உத்தியொடு வலம்புரு வயின் வைத்துத்''*
*(திரு:23)*

*நுதல்*

தலை மற்றும் நுதலில் அணிவதாக மூன்று வகை யான அணிகள் காணப்படுகின்றன. அவை 1. இலம்பகம், 2. தலைப்பாளை (தொய்யகம்), 3. வயந்தகம்.

**இலம்பகம்**

இலம்பகம் தலையில் அணியப்பெற்று நுதலில் தொங்கும் ஒரு அணி. அதனால் இது நுதலணியாகவும் எண்ணப்படும். இதனை ஆடல் மகளிர் விரும்பி அணிவர். அவர்கள் அணிந்துள்ள தலை அணிகளினின்று இலம்பகம் நெற்றிக்கு நேராகக் தொங்கும். இது பதக்கம் போன்று அழகுற விளங்குவதோடு அடியில் சிறு பொற் சதங்கைகளும் கோர்க்கப்பட்டிருக்கும்.

*''சுரும்பு சூழிலம்பகத் தோற்றமொத்ததே''*
*(சிந்: 1442:4)*

*தலைப்பாளை*

தலைப்பாளை, தொய்யகம் என்றும் கூறப்படும். இது ஒன்பது விதமான மணிகளால் செய்ய பெற்ற ஒரு பொன் அணியாகும். இந்த அணிகலன் தலை மயிர்ப் பிரிவின் நடு வில் அணியப்படுவதால் இது தலைப்பாளை எனப்படும். முற்காலத்தில் இதனைப் பூரப்பாளை என்றும் புகழ்வர். பிற்காலத்தில் வாகுசுட்டி என்று வழங்கப்படுகின்றது.

*''தொய்யகம் தாழ்ந்த கதுப்புப்போல் துவர் மணல்''*
*(கலி. 28:6)*

### வயந்தகம்

இது தலையணி. இது தலையினின்று நெற்றியில் தொங்குவதால் நுதல் அணி என்பாரும் உளர். இது ஆடும் மகளிர் விரும்பித் தலைக் கோலத்தினின்று நெற்றியில் தாழும்படிஒரு வடமாகச் செருகி வைக்கப்படும் பொன் அணிகலமாகும்.

*''வகைபெறச் செரீஇ வயந்தகம் போல் தோன்றும்''*
*(கலி.79:46)*

### முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் பெண்கள் அணியும் அணி கலன்களாக பதினொரு வகையான அணிகலன்கள் காணப் படுகின்றன. அவற்றுள் தலையணிகள் பயன்படுத்தப்படும் முறைமைகள், சிறப்புகள் போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் இக்கட்டுரை விளக்கப்பெறுகிறது. தமிழ் இலக் கியங்களில் மகளிரின் வருணைனைக்கு அணிகலன்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### *துணை நூற்பட்டியல்*


1. தமிழ் நாட்டு அணிகலன்கள், மு. இராகவன்
2. தமிழ் இலக்கியத்தில் அணிகலன்கள், இரா. வேலம்மாள், 1972
3. பயன்பாட்டு வரையறைச் சொற்கள் அணிகலன்கள், பறவை விலங்குகள், எம்ஃபில் ஆய்வேடு, க.மீனேஸ்வரி 2000.

# பேசாப் பொருளைப் பேசத் துணிந்த ஆண்டாள்

ஆன்யாழினி சதீஸ்வரன்
*அகராதியியல் துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

தமிழ் இலக்கியத்தில் காதலும் காமமும் என்றுமே ஆண்களின் நாவினாலேயே பாடப்பட்டுள்ளன. அவர்கள் காதலை நோக்கியவாறல்லாமல், வேறு பார்வைக்குரியது பெண்களின் காதல். பெண்ணின் காதல் ஆழமானது. அக்காதலை இதயத்தின் ஆழத்தில் தோன்றும் மெல்லிய உணர்வுகளுடன் குழைத்து வெளிப்படுத்த அவளாலேயே முடியும். உணர்வு மாற்றங்களுக்குள்ளாகையில், மொழியும் மாறுபடுவது இயல்பு. இந்த வகையில், ஔவை முதல் இன்றைய குட்டி ரேவதி வரை, காதலை வெளிப்படுத்தப் பெண் தேர்ந்து கொண்ட மொழி வேறு. இதனால், பெண்ணின் பார்வையில் எத்தனை முயன்று ஆண் பாடினாலும், அத்தனையும் பெண்ணின் மொழியில் அடிபட்டுப் போய் விடுகிறது. ஆணின் பார்வை தாண்டிய பெண் காதலுக்கு உதாரணமாகக் கீழ்வரும் பாடலைக் காட்டலாம்.

*''முட்டு வேன்கொல் தாக்குவேன்கொல்*
*ஏரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு*
*ஆசு ஒல்லெனக் கூவு வேன்கொல்*
*அலமரல் அசைவளி அலைப்பவென்*
*உயவுநோ யறியாது துஞ்சும் ஊர்க்கே''*

-ஔவையார்

ஆண்களாலாக்கப்பட்ட மொழியுலகிலிருந்து வெளியேறி, தங்களுக்கான மொழியைப் பெண்கள் உருவாக்கியுள்ளமையைச் சுட்டும் நிலையில், பெண் மொழியின் பண்புகளை, பிரஞ்சுப் பெண்ணியலாளர் ஹெலன் சிக்ஸியின் வார்த்தைகளில் பார்க்கலாம்.

''பெண் மொழி அராஜகம் மிக்கது; ஆண் எழுத்துக்களில் உள்ள ஒழுங்குமுறைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போடுவது; படைப்பவர் - வாசகர் என்ற எழுவாய்களைத் தகர்த்தெறிவது...''

இந்த வகையில், பெண் மொழிப் படைப்புகளுக்குரிய சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஆண்டாள் பாடல்களும் தவிர்க்க முடியாதனவாகிவிடுகின்றன. சங்க காலம் தொட்டுப் பேசப்பட்டு வந்த அகத்திணை மரபை, அது உட்கொண்டிருந்த விடயங்களைப் புரட்டிப் போட்டு ஒரு புதிய தளத்திலே காதலின் பாதங்களைப் பதித்துவிடுகிறாள், ஆண்டாள்.

ஆண்டாளது இரண்டு பிரபந்தங்களுமே அகத்திணையின்பாற்பட்டவைதான். இரண்டுமே தலைவனை அடையத் துடிக்கும் தலைவியின் தவிப்பை வெளிப்படுத்தி நிற்பவைதான். தன் காதல் கைகூடும் பொருட்டு நோன்பிருத்தல், இயற்கையால் வருந்துதல், கூடவிழைத்தல், தூதனுப்பல், காமம் மிகும்போது தன் ஏக்கத்தைத் தாய்மாரிடமும் பூக்காரியிடமும் வெளிப்படுத்துதல் என அவளது பெரும்பாலான பாடல்கள் அகத்திணையில் மரபுக்குட்பட்டனவாக அமைந்திருப்பதை மறுப்பதற்கில்லை. ஆனபோதும், காதலின் உணர்ச்சி வேகத்தை மரபுத் தலைவியரிலிருந்து மேம்பட்ட அளவிலேயே அவள் வெளிப்படுத்தியிருப்பதையும் நோக்க வேண்டும்.

பெண் மொழியை அடைவதற்குப் பெண் என்ன செய்ய வேண்டும் என்பதை ஹெலன் சிக்ஸி கீழ்க்கண்ட வாறு விளக்குவார்.

''அவளுக்கேயுரிய பொருட்களையும் உறுப்புகளையும் ஆழமாகப் புதையுண்டு அடையாளம் இழக்காமல் கிடக்கும் அவளது உடம்பு சார்ந்த மிகப்பெரிய ஆட்சிப் பரப்பினையும் மீண்டும் ஆதிவலுவோடு திரும்பப் பெற்று எந்தவிதமாகவும் தன்னைத்தானே தணிக்கை செய்வதைத் தவிர்த்து அப்படியே பொங்கி வழிய வேண்டும்.''

இந்த அம்சங்களை ஆண்டாளது பாடல்களில் தெளிவாக அடையாளம் காண முடிகிறது. அவளது 'மெய்ப் பொருட் காதல்' தலைவனுடனான உடல் சார்ந்த இன்பத்தை வெளிப்படையாக வேண்டி நிற்கிறது;

*''குற்றம் அற்ற முலதன்னைக்*
*குமரன் கோலப் பனைத்தோளோடு*
*அற்ற குற்றம் அவைதீர*
*அணைய அமுக்கிக் கட்டீரே''*

தலைவனிடத்துத் தன்னைக் கொண்டு செல்லும்படி கேட்கிறது;

*''ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில்*
*ஆயர்பாடிக்கே என்னை உய்த்திடுமின்''*

காதலைப் புறக்கணிக்கும் தலைவனை மிரட்டவும் துணிகிறது;

*''ஒரு பெண்கொடியை வதை செய்தார்*
*எனும் சொல் வையத்தார் மதியாரே''*

காதல் கைகூடாதவிடத்துத் தன்னழகைத் தீர்க்கவும் விழைகிறது; இறுதியாகத் தலைவனைக் கண்டபோதான அனுபவத்தைக் கிளர்ச்சியோடு விவரிக்கின்றது. இவ்விதம், உடல், உறுப்புகள் குறித்து உணர்வு நலனை வெளிப்படுத்துவதன் வழியிலும் ஆண்டாள் மொழியினைப் பெண் மொழியாக அடையாளப்படுத்தலாம்.

பெண் மொழி வெறுமனே உணர்வு வெளிப்படுத்த லுக்கு உதவுகின்றதேயல்லாமல், மிகச் சிறந்த இலக்கியத்துக் கான ஊடகமாக அது விளங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு என்றுமே எதிர்மொழிக் கையாளுகைக்காரரால் கூறப்பட்டு வருவதொன்று. இதை மறுதலிக்கும் வண்ணம் ஆண்டாள் பாடல்கள் இலக்கிய நயத்திலும் சிறந்தவையாக விளங்கு வதைக் காணலாம்.

*''மாமுத்த நிதிசொரியும் மாமுகில்கள் காள் வேங்கடத்துச்*
*சாமத்து நிறங்கொண்ட தாளாளன் வார்த்தையென்னே*
*காமத்தீயுள் புகுந்து கதுவப்பட்டிடைக் கங்குல்*
*ஏமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய் நான் இருப்பேனே''*

எனும் பாடலொன்றே இக்கருத்துக்குச் சான்றாகும்.

இன்னதென்று வெளியே சொல்ல முடியாததான அக உணர்வுகளை மிக நுணுக்கமாக வெளிப்படுத்துவதிலும் ஆண்டாளது பெண் மொழிச் சிறப்பு வெளிப்படுவதைக் காணலாம். உதாரணமாக, அவள் கையாண்ட இரு உவமை களை நோக்கலாம்.

1. மழைக்காலத்தில் எருக்கஞ் செடியில் பழுத்த இலைகள் உதிர்வது போல - இற்று விழுவது போல - ஒருந்து தளர்ந்து தளர்ந்து விழுப்படியான நிலையில் இருக்கிறேன்.

2. பெரிய கொசுக்கள் விளாம்பழத்தின் மீது மொய்த்து, உள்ளிருக்கும் கனிரசத்தை உறிஞ்சி விட்டபின் ஓடு மிஞ்சும். அதுபோல் என் நெஞ்சம் பறிபோய் வெற்றுடம்பாய் இருக்கிறேன்.

இங்ஙனம் இலக்கியச் சுவையிலும் வெளிப்பாட்டு முறையிலும் சிறப்புற்றிருக்கும் ஆண்டாள் பாடல்கள் பேசிய பொருள்தான், அதுவரை காலமும் பேசாப் பொருளாக அமைந்துவிடுகிறது.

பல்லவ - பாண்டியர் கால இலக்கியத்துறையில் பெரும் அடையாளமாக ஆண்டாள் அடையாளங் காணப் படுகிறாள். இக்கால ஏனைய இலக்கியங்களைப் போல ஆண்டாள்பாடல்களும் பக்திச்சாயம் பூசியே நோக்கப்படுகின்றன. பக்தியைப் பேச காதலை ஓர் உத்தியாகவே நாயன்மாரும் ஆழ்வாரும் கையாண்டனர். ஆயின், ஆண்டாள் பாடல்களை நோக்கும்போது, காதலைப் பேச பக்தியை ஓர் உத்தியாகவே அப்பெண் கையாண்டாளோ என்வே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், ஆண்டாளது உணர்வுகள் இதே வார்த்தைகளில் வேறு யாரோ ஒருவன் மேல் பாடப்பட்டிருந்தால் 'ஏற்புடைமை' என்பது அவளது பாடல்களுக்கு வழங்கப்பட்டிருக்குமா என்பதையும் நோக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் இன்னுமொரு வகையில் ஆண்டாள் பாடல்களை ஆராய வேண்டியுள்ளது. அதாவது, நாயன்மாரோ அன்றி, ஏனைய ஆழ்வாரோ பாடாத அளவிற்கு அகத்தின் உச்சியைப் பாட அன்றைய சமூக நிலை ஆண்டாளில் எத்தனை தாக்கம் செலுத்திற்று எனப் பார்க்க வேண்டியுள்ளது. எக்காலத்திலும் காமம் அல்லது உடலின்பம் என்பது கீழ், மேல் வர்க்கத்தினருக்கு அத்துணை மறைக்கப்பட்ட பொருளாய் இருந்ததில்லை. அதைக் குறித்துப் பேசுவதிலும், அதனைத் துய்ப்பதிலும் அவர்களுக்கு

நியமங்கள் பெருமளவில் தடையாயிருந்ததில்லை. ஆயினும், நடுத்தர வர்க்கத்தினரிடையே காமம் என்றும் பேசாப் பொருளாகவே இருந்து வந்திருக்கிறது. நியமங்கள் கொண்டு மூடி மறைக்கப்பட்டு, ஆண்களால் கூட வெளிப்படையாகப் பேசப்படாததாய் விளங்கியிருக்கிறது. ஆண்டாள், இந்த நடுத்தர வர்க்கத்துக்குரியவள். பெருமாளுக்குச் சேவை செய்யும் குடும்பத்தின் ஒழுக்க முறைமைக்குள் வளர்ந்தவள். ஆனால், அவளுக்குக் காமம் பற்றிப் பேசுதல் இயலுமாயிருந்திருக்கிறது. இந்த நிலையை அவளுக்கு அளித்தது எது? இதனை இரண்டு கோணங்களில் நோக்கலாம்.

*1.* அக்கால சமூகம் இன்றைய நிலையைப் போலன்றி, பெண்ணுக்கு பால் நிலை பற்றியும், அதுசார் உணர்வுகள் பற்றியும் பேசும் உரிமையை அளித்திருக்கிறது. அவ்விதம் பெண் பேசும்போது அதற்குரிய ஏற்புடைமையைத் தந்திருக்கிறது எனத் தீர்மானிக்கலாம்.

2. யாதவ குலத்தவனான கண்ணனைக் காதலித்ததால், தன்னையும் ஓர் இடைப் பெண்ணாகப் பாவனை செய்து ஆண்டாள் வாழ்ந்திருக்கிறாள் என்பதை அவள் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. உரையாசிரியர், பெரியவாச்சான் பிள்ளையின் வார்த்தையில் கூறின், ''இடை முடியும் இடைப்பேச்சும் முடைநாற்றமுமாய்'' ஆண்டாள் விளங்கினாள் எனலாம். இடைச்சியரைப் போல கூந்தலை முடிக்க, அவர்களைக் கண்டிருத்தல் போதும். முடைநாற்றம் பெற, வெண்ணெய்யை உடலில் பூசிக் கொள்ளல் போதும். ஆனால், இடைப்பேச்சும் பேச அவர்களோடு கூடிப் பழகியிருக்க வேண்டும். ஆக, ஆண்டாள் இடைப் பெண்களுடன் மிகுந்த பழக்கமுடையவளாய் இருந்திருக்கலாம். இதற்கு, கண்ணனது குலத்தினர் என்பதால் அவர்கள் மேல் உண்டான இயல்பான ஈடுபாடோ, அல்லது அக்கால சமூக அமைப்பில் கோயிலுடன் இடையர் கொண்டிருந்த நெருங்கிய தொடர்போ வழிவகுத்திருக்கலாம். எது எப்படியோ,

ஆண்டாளது இந்த இடைத் தொடர்பு, வைதீக உயர்குலப் பெண்களது மொழிப்புலத்தைத் தாண்டிக் காமம் சார்ந்து வெளிப்படையாகப் பேசும் ஆளுமையை அவளுக்குத் தந்திருக்கலாம்.

எங்ஙனமாயினும், தமிழ் இலக்கிய உலகிலே அதுவும் இடைக்காலப் பகுதியிலே பெண்களால் மட்டு மன்றி, பெண்கள் நிலைப்பட்டு நின்று பாடிய ஆண்களாலும் பேச முடியாத பொருளை ஆண்டாள் பேசத் துணிந் திருக்கிறாள் என்பதே அவள் ஆளுமையின் வீச்சுக்கு மிகப் பெரிய பரிமாணத்தை அளித்திருக்கிறது எனலாம்.

# ஔவையாரின் பார்வையில்...

முனைவர் ச. சிவசுப்பிரமணியன்

*விரிவுரையாளர், சுற்றுச்சூழல் மற்றும்*
*மூலிகை அறிவியல் துறை*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

காடு, நிலம், நீர் இவற்றை நாம் அழிப்பதன் வழியாக நம் வாழ்க்கையின் அடிப்படையான ஆதாரங்களைச் சிதைத்துக் கொண்டிருக்கின்றோம். நாட்டின் முன்னேற்றம், நகர மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரால் நாட்டின் இயற்கை வளங்களை நாம் இழந்து கொண்டிருக்கின்றோம். வாழ்க்கையைச் சிதைக்கும் இதுபோன்ற முன்னேற்றம், திட்டம் போன்ற கொள்கைகளில் அடிப்படைத் தவறு காணப்படுகிறது. இத்திட்டங்கள் இயற்கை மீதான வன் முறையாக மாறிவிடுகிறது. தற்போது நடைமுறையில் காணப்படும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்தும் வளர்ச்சிப்பாதைக்கு மாற்றாக, இன்று வன்முறை யற்ற வழியில் மனிதநேயம் மற்றும் இயற்கை மீதான நேயத் தோடு இயற்கையைப் பாதுகாக்கப் போராடும் சூழலியல் ஆர்வலர்களும், இயக்கங்களும் மக்களிடையே இன்று விழிப்புணர்வைத் தோற்றுவிக்க முயற்சி எடுக்கின்றன.

மேற்கண்ட முயற்சிகளில் ஒன்றாக இலக்கியங்களில் காணப்படும் சூழலியல் கருத்துக்களையும் நாம் கணக்கி லெடுக்கலாம். இலக்கியங்கள் இயற்கைக்கும், சமூகத் திற்கும், மனிதனுக்குமான உறவையும், முரணையும் சொல் வதே ஆகும். இயற்கை பாதிக்கப்படும்போது அதனோடு தொடர்புடைய சமூகமும், மனிதனும் பாதிக்கப்படுகின்றார் கள் என்பது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற உண்மை யாகும்.

இயற்கை வழிபாடு, இயற்கையைப் போற்றுதல் என்பனவெல்லாம் அக்காலம் முதல் இக்காலம் வரை சுற்றுப்புறச் சூழலைக் காப்பதற்கான அடிப்படைகளே! இயற்கைச் சூழலை வருணிக்காத இலக்கியங்கள் மிகக் குறைவே. கடல், ஆறு, மலை, காடு இவற்றைச்சிறப்பித்தும் இவற்றின் அழகினை வருணித்தும் எண்ணற்ற பாடல்கள் இலக்கியங்களிலே காணப்படுகின்றன. புலவர்கள் தம் கவிதைகளில் இயல்பான காட்சிகளையே பதிவு செய்தனர்.

இரத்தத்தைத் தூய்மையாக்கும் மரங்களின் காற்று, அமுதம்போல் உயிர் வளர்த்த தெள்ளிய தீஞ்சுவைத் தண்ணீர், எந்திரங்களின் புகைமூட்டமில்லாத சாலைகள், சூரிய வெம்மை வழிப்போக்கரைத் தாக்காவண்ணம் வான் மறைத்துப் பரவிய வண்ணப் பூமரங்கள், மலையுச்சியிலும் காடுகளின் இடையிலும் அமைந்து அமைதியும், பக்தியும் கலந்தூட்டிய கோயில்கள், அறிவியல் சாதனங்களின் ஆக்கிரமிப்பில்லாத பளிங்கு நீலவானம்... என்று தத்தம் இயல்புகளோடு இயற்கை மக்களுக்கு நலம்பல புரிந்தது. நல்ல சூழல் இயல்பாகவே அன்று அமைந்து பொலிந்து மக்களும் அதைப் போற்றிக் காத்தனர்.

ஒரு நாடு மேம்பட பல அடிப்படை தேவை உள்ளன. படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் எனக் கூறுகையில் அன்று பகைவரைத் தடுத்து நிறுத்தி அரண்போல இன்று அமைக்கப்படவேண்டியது நாட்டுக்கு நலம் பயக்கும் காட்டரண்தான். நாடு நிலையான மேம்பாடு அடைவதற்கு உரியதாகிய இயற்கை வளங்களுள் 'வனங்கள்' என்னும் காடுகள் முதலிடம் பெறுகின்றன.

*மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்*
*காடும் உடையது அரண். (குறள்)*

நீர் நிறைந்த அகழிகளும், வெட்டவெளி நிலமும், சுற்றிலும் மலையும் குளிர்ச்சி தரும் மரங்களும் தான் ஒரு நாட்டின் பாதுகாப்பு என்கிறார் வள்ளுவர் அன்று!

இன்று இந்திய அரசியலமைப்பின் நிலையான மேம்பாடுகள் குறித்த பட்டியலில் காடுகள் பதினாறாவது இடத்தைப் பெறுகின்றன.

உலகில் எந்த நாட்டிற்கும் காடுகள் கணக்கிட இயலாத செல்வத்தையும், மக்கள் உடல் நலனுக்கேற்ற ஊட்டப் பொருள்களையும் இன்றியமையாத ஆற்றல்களையும் தருகின்றன. அத்தகைய காடுகளின் உறுப்புக்களாகிய மரங்களை, மனிதனின் பல பண்புகளைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்தியதிலிருந்து ஔவையார் எந்த அளவிற்கு வன வளங்களைப் போற்றியிருக்கிறார் என்பது விளங்கும்!

இத்தகைய அனுபவ உண்மையை ஔவையாரின் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு காட்டும் முயற்சியே இச்சிறு கட்டுரையாகும்.

*நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி*
*என்று தருங்கொல் என வேண்டா - நின்று*
*தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்*
*தலையாலே தான் தருதலால்* (மூதுரை)

என்ற மூதுரைப் பாடலில் வேரால் பெறப்பட்ட நீரை இளநீராகத் தலையால் தென்னை மரம் தரும் பண்பினால் மனிதனின் நன்றி உணர்வினைப் புலப்படுத்தும் நிலையை இதைக் காட்டிலும் தெளிவுறுத்த இயலுமா என்று எண்ணிப் பார்க்கலாம்.

காட்டு மரங்களில் உள்ள பூ, காய், பழங்கள், விதைகள் போன்றவை பலவகையான பூச்சிகள், பறவைகள்,

விலங்குகள் போன்றவற்றிற்கு உணவாகப் பயன்படுகின்றன. பழங்கள் பழுத்தவுடன் அறிவுறுத்தாமலே தன்னைத் தேடி வரும் வெளவால்களுக்கு உண்ணக் கொடுப்பது போல மனங்களிந்த வள்ளல்கள் எவ்வாறு மற்றவர்களுக்கு உதவி செய்கின்றனர் என்பதை,

*மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி*
*இரந்தழைப்பார் யாவருமங்கில்லை - கரந்தமுகம்*
*கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்*
*உற்றால் உலகத் தவர்.* (நல்வழி 28)

என இப்பாடலின் மூலமாக அழகாக எடுத்துரைக்கின்றார்.

காட்டு மரங்கள் பழுக்கும் கனிகளைப் பசித்தோருக்குக் காட்டுவது உண்மையே. மரங்களே மக்களுக்கு உதவுமாயின் மனித மனங்கள் பழுத்தால் சமுதாயம் எந்த அளவுக்குப் பயன்பெறும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தற்போது பலராலும் பரவலாகப் பேசப்படுவது பல்லுயிரினப் பாதுகாப்பு. அப்பல்லுயிரினப் பாதுகாப்பில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல பறவைகள், விலங்குகள், பூச்சிகள், மரங்களில் உள்ள பூ, மொட்டு, காய், பழம், விதை, இலை போன்றவற்றை உணவாகப் பெறுகின்றன. மேலும், பறவைகள், விலங்குகள், கூடு கட்டவும், தங்கி இளைப்பாறவும் பல கிளைகளை உடையனவாகவும் உள்ளன.

படிப்பறிவில்லாதவனையும், குறிப்பறிய இயலாத மூடனையும் நல்ல மரங்கள் என்று பகுத்தும், வகுத்தும் ஔவையார் பினஅவரும் பாடலில் விளக்கிச் சொல்கிறார்.

*கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்*
*அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே*

*நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய*
*மாட்டாதவன்நன் மரம். (மூதுரை - 13)*

எவர் தீமை செய்தாலும் இயன்றவரை திரும்ப நன்மையே செய்ய வேண்டும் என்பதை,

*சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமனுரை*
*ஆடுதனையும் காப்பர் அறிவுரையோர் - மாந்தர்*
*குறைக்குந் தனையும் கிளர் நிழலைத் தந்து*
*மறைக்குமாம் கண்டிர் மரம். (மூதுரை - 30)*

என்ற பாடலில் மரத்தின் குளிர், நிழலோடு ஒப்பிட்டு விளக்கியுள்ளார்.

மரங்கள் தகுந்த காலம் வந்தால்தான் உரிய பலனைத் தரும். அதுபோல் மனிதன் காலமறிந்து செயல்பட வேண்டும் என்ற உண்மையைப் பின்வரும் பாடல் வழியாக ஔவையார் விளக்குகின்றார்.

*அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி*
*எடுத்து கருமங்கள் ஆகா - தொடுத்த*
*உருவத்தால் நீண்ட உயர்மரங் களெல்லாம்*
*பருவத்தால் அன்றிப் பழா.*

ஒரு மனிதனுக்கு, அவனுடைய செயல்பாடுகளினால் அவன் உடம்பில் நோய் தோன்றி முற்றி அவனை அழிக்கிறது. ஆனால், எங்கோ ஒரு மலைக்காட்டில் தோன்றும் மூலிகை அவனுக்கு மருந்தாகப் பயனாகிறது. அதுபோல் உடன் பிறந்தவர்களும், உறவினர்களும் நமக்குக் கெடுதல் செய்து அழிக்க நினைக்கும்போது எங்கோ உள்ள உண்மையான நண்பன் நமக்கு உதவி செய்வான் என்ற பண்பினைக் கீழ்வரும் பாடலின் வாயிலாகக் கூறுகின்றார்.

*உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா*
*உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா*
*மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்*
*அம்மருந்து போல்வாரும் உண்டு.*

வான் மழையையும், உயிர் வளியையும் வாரி வழங்கும் வள்ளலாக இயற்கை தந்த வரப்பிரசாதமே காடுகள் என்றால் மிகையாகாது. இந்தக் காட்டு மரங்கள் நமக்கு வாழ்க்கைப் பாடம் பகர்கின்றன. மலர்களைப் பார்த்து நாம் வளரும் கலையையும், பழங்களால் உள்ள முதிர்ச்சியையும், நிழலல் இரக்கக் குணத்தையும், உதிர்ந்து மடியும் சருகினால் வாழ்வுக்கு ஒரு முடிவு என்ற வாழ்க்கைத் தத்துவத்தையும் அறிய முடிகிறது. காடுகளும், மரங்களும் அழிந்து வரும் இன்றைய சூழலில் மனிதன் பின்பற்ற வேண்டிய உயர் பண்புகளை வன வளங்களாகிய மரங்களைக் கொண்டு வலியுறுத்திய பெண்பால் புலவர் ஔவையாரின் கருத்துக் களை மனதில் கொள்வது வன வளங்களைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

# சோழர்கால - ஆடல் மகளிர்

முனைவர் இரா. மாதவி

*விரிவுரையாளர், இசைத்துறை*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

சோழ மன்னர்களால் ஆளப்பட்டு வந்த தமிழகப் பகுதி சோழ மண்டலம் என்று வழங்கப்பெற்றது. இது இக்காலத்தில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு மாவட்டங்களில் சில பகுதிகளையும், புதுக்கோட்டை நாட்டில் ஒரு பகுதியையும் தன்னகத்தே கொண்டு நிலவும் பெருநிலப்பரப்பாகும். இப்பகுதிகளில் ஆட்சி புரிந்த சோழ மன்னர்களின் ஆட்சியில் ஆடல் மகளிரின் நிலையைப் பற்றிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்திய சமூக வாழ்வில் என்றுமே ஆடல் மகளிர் சிறப்பிடம் பெற்றிருந்தனர். வரலாறு தொடங்கிய காலத்தி லிருந்தே ஆடல் மகள் கவர்ச்சிக் கன்னியாகவே திகழ்ந்தாள். பரதத்திலும், இசையிலும் நல்ல தேர்ச்சி பெற்றுத் திருக் கோயில்களில் தொண்டு புரிந்தாள். தான் விரும்பியவரை மணம் புரிந்து கொண்டாள்; தற்காலத்தில் நகரங்களில் தோன்றியுள்ள விலைமாதர்களை மனத்தில் கொண்டு, அக்காலத்திய ஆடல் பெண்டிரை நாம் மதிப்பிடுவது பெரும் தவறாகும் என்பது அக்காலத்துக் கல்வெட்டுக்களையும், இலக்கியத்தையும் படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். அக்காலத்திய தேவரடியார்கள் கிரேக்க நாட்டு ஆடற் பெண்டிர் போன்ற பண்பு நலம் உள்ளவர்களாகவும், கலை யுணர்வுடையவர்களாகவும் இருந்தனர். கலை நுணுக்கங் களில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு நல் விருந்தளித்தனர். திருக்கோயில்களில் இறைத் தொண்டிற்காகவே பலர் தங்கள் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணித்துக் கொண்டனர்.

அவர்களது வருவாயில் பெரும் பங்கு கோயில், வழிபாடு முதலியவற்றிற்காகவே செலவிடப்பட்டது என்று பின் வந்த முகமதிய எழுத்தாளர்கள் வியப்புடன் தெரிவித்துள்ளனர்.

சோழர் ஆளுகையில், ஆடல் மகளிர்கள் மதிப்பான இடம் பெற்றிருந்தனர் என்பதைச் சோழ அரசர்கள் அவர்களுக்கு வழங்கியுள்ள ஏராளமான தானங்களைப் பற்றி கல்வெட்டுக்களைப் பார்த்தாலே விளங்கும். முதல் இராசாதி ராசசோழன் ஆட்சிக் காலத்தில் திருவொற்றியூரிலிருந்த தேவரடியாளான சதுரன் - சதுரி என்னும் ஒரு தேவரடியாள் நாகன் பெருங்காடன் என்பவரின் மனைவி (அகமுடையாள்) என்று திருவொற்றியூர்க் கல்வெட்டு கி.பி. 1049ஆம் ஆண்டில் கூறுகிறது. அவ்வாறே தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரு கோயிலில் பணிபுரிந்த தேவரடியாள் மணமானவள் என் பதை மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டு தெரிவிக்கிறது. சோழர் காலத்தில் சமூக வாழ்வில் முழுப் பங்கும் ஏற்க பெண் களுக்கு எவ்விதத் தடையும் இல்லை. ஆனால், அடக்கமே பெண்களின் தலைசிறந்த அணிகலனாகக் கருதப்பட்டது.

தளிச்சேரிப் பெண்களாகிய பதியிலார் தனித்தேனும் மணம் புரிந்து கொண்டேனும் தம் வாழ்க்கையை நடத்தி வரலாம் என்பது அக்காலத்து வழக்கம்போலும். அவர்கள் இசையிலும் நாட்டியத்திலும் வல்லவராய்த் திருக்கோயில் களிலும், அரசவைகளிலும் சிறப்பெய்தியிருந்தமையால் சமுதாய வாழ்வில் அவர்களுக்குப் புகழும் மதிப்பும் ஏற் பட்டிருந்தமை ஈண்டு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அவர்கள் செல்வமுடையவர்களாயிருந்தமையோடு சிறந்த சிவபக்தி உடையவர்களாகவும் திகழ்ந்தனர் என்பது திருக்கோயில் களில் அவர்கள் புரிந்துள்ள பலவகை அறச்செயல்களால் நன்கு புலனாகிறது.

கோயில்களில் பணிபுரியத் தம்மையே ஈடுபடுத்திக் கொள்ளும் கோயிற் பிணாப் பிள்ளைகள் ஒருபுறமிருக்க

ஆடற்கலைக்கு தம்மையே வழங்கிடும் நோக்கத்தில் கோயில்களில் கோயிற் பரத்தைகளும் (தாசியர்களும்) பணிபுரிந்துள்ளனர். அவர்கள் புலனுணர்வில் செல்லும் வேசியர்களல்லர். பலரும் போற்றத்தக்க ஆன்ம நல நாட்ட முடையவர்கள். சமுதாயத்தில் மன்னர்களால் போற்றி வளர்க் கப்பட்ட ஆடற்கலை ஆலயங்களைச் சார்ந்து வளர வேண் டிய சூழல் உருவாயிற்று. அந்நிலையில் ஆடற் சிறபங்களும் ஆடல் நுணுக்கக் கல்வெட்டுக்களும் ஆலயங்களில் சிறப் பிடம் பெற்றன.

அந்நாளில் பரதத்திலும், இசையிலும் வல்ல தளிச் சேரிப் பெண்டுகள் பலர் திருக்கோயில்களில் பணிபுரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய கலைகளில் தேர்ச்சி பெற்றுச் சிறப்பெய்தியிருந்த பலரைத் தமிழகத் திலுள்ள பல ஊர்களிலிருந்து அழைப்பித்துத் தஞ்சை இராச ராசேச்சுரத்தைச் சூழ்ந்துள்ள தெருக்களில் முதல் இராசராச சோழன் குடியேற்றிய செய்தி பெயர்களுடன் அக்கோயிலில் வரையப்பெற்றிருத்தலை இன்றும் காணலாம். அன்றியும் திருக்கோவிலூரிலுள்ள திருவீரட்டானேச்சுரர் கோயில் நாடக மகளிர் முப்பத்திரண்டு பேர் தொண்டு புரிந்து வந்த செய்தி அவ்வூரிலுள்ள முதல் இராசராச சோழன் காலத்துக் கல்வெட் டொன்றால் புலப்படுகின்றது. அவர்கள் நாள்தோறும் முக்காலங்களிலும் பணியாற்றுவதற்குத் திருக்கோயிலைச் சார்ந்த இடங்களில் வாழ்ந்து வந்தமை பற்றித் தளிச்சேரிப் பெண்டுகள் எனவும், இறைவனுக்குத் தொண்டு புரிந்து வந்தமை பற்றித் தேவரடியார் எனவும் கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம்.

## ஆடல் மகளிருக்கு வழங்கப்பட்ட பரிசுகளும் பட்டங்களும்

கடைச்சங்க நாளில் நாடகக் கணிகையர் நூல்களிற் சொல்லப்பட்டுள்ள முறை வழுவாமல் அவிநயந் தோன்ற அரசவையில் ஆடிக்காட்டி அரசன்பால் தலைக்கோற்

பட்டமும் பிற பரிசில்களும் பெற்ற வரலாறு சிலப்பதி காரத்தில் காணப்படுகிறது. அவ்வழக்கம் பிற்காலச் சோழர் ஆட்சியிலும் தொடர்ந்து நிலைபெற்றிருந்தது என்பதைப் பல கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன.

சோழ மன்னர்கள் இசையிலும், நாட்டியத்திலும் வல்ல பதியிலார்க்குத் தலைக்கோல் என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்துள்ளனர். அப்பட்டம் பெற்ற கணிகையர் தலைக்கோலி என்று அந்நாளில் வழங்கப் பெற்றனர் என்பது ''பதியிலாள் நக்கன் அரங்கமான சயங்கொண்ட சோழத் தலைக்கோலியும் நக்கன் பவழக்குன்றான மதுராந்தகத் தலைக்கோலியும்'' என்ற கல்வெட்டுப் பகுதிகளால் வெளியாதல் காணலாம்.

இராசராசன் பாடலிலும், ஆடலிலும் மிக்க ஆர்வமுடையவன். இராச வித்யாதரன் என்ற பெயரும் அவனுக்குண்டு. ஆலயப் பணிகளைக் குறைவின்றிச் செய்யவும், நடனம் புரியவும் சோழ நாட்டுப் பிற கோயில்களினின்றும் பதியிலார் நானூறு பேர்களைக் கொணர்ந்து இராசராசேச்சுவரத்தை அடுத்து வடபுறத்திலும் தென்புறத்திலும் இவர்கட்காகத், தனித்தனி மனைகள் கட்டிக் கொடுத்தும் ஒவ்வொருவருக்கும் நூறு கலம் நெல் விளையும் ஒவ்வொரு வேலி நிலம் தந்தும் அவர்களை கோயிற் பணியில் ஈடுபடுத்தி ஆதரித்தான்.

ஏனையமன்னர்களின் வரலாற்றினும் சோழர் வரலாற்றில் நாட்டியக் கலையும், ஆடல் மகளிரும் சிறப்பு நிலையில் இருந்தமையை இதனால் நன்குணரலாம்.

# பெண்ணிய வகைகளும் துறைவழக்குச் சொற்களும்

முனைவர் இரா.சு. முருகன்
*விரிவுரையாளர்,*
*மொழிபெயர்ப்புத்துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

பெண்ணியம் என்பது ஒரே கொள்கை உடைய இயக்கமன்று. இவ்வியக்கத்தில் இணைந்துள்ள பெண்களின் வாழ்க்கைச் சூழலுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப பலவித மான கருத்துக்கள் கால்கொண்டு எழுச்சி பெற்றுள்ளன. அவற்றில் தாராளப் பெண்ணியம் (Liberal Feminism), சமதர்ம பெண்ணியம் (Socialist Feminism), தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism) போன்றவற்றில் பெண்ணியத் துறை வழக்குச் சொற்கள் எவ்வாறு மொழிபெயர்த்தும், ஒலி பெயர்த்தும் காணப்படுகின்றன என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தாராளப் பெண்ணியம் (Liberal Feminism)

தாராளப் பெண்ணியத்தின் தொடக்கக் காலம் 18ஆம் நூற்றாண்டு. அக்காலகட்டத்தில் ஏற்பட்ட தத்துவப் புரட்சி மூலமே முதன் முதலாகத் தாராளப் பெண்ணியத்தின் கொள்கைகள் வேர்விட ஆரம்பித்தன. மேற்கத்திய நாடு களில் அரசியல் கலாச்சாரத்தில் பகுத்தறிவு வாதம் (Rationalism) இடம் பெறத் தொடங்கியது. இதனால் ஆட்சி ஆதிக்கக் கொள் கையை எதிர்த்தல், குடியாட்சி, பேச்சுரிமை என்ற இவை யெல்லாம் அதே பகுத்தறிவு எழுச்சியினால் விடுதலை உணர்விற்கும், பெண்களின் அடிமை நிலைக்கும்

ஒரு நல்லுறவு தோன்றித் தாராளப் பெண்ணிய இயக்கத்திற்கு வித்திட்டது.

தாராளப் பெண்ணியம் புரட்சியின்றிப் பொருளாதாரத்திலும் சட்டத்திலும் மாறுதலைக் கொண்டு வர முயன்று இஃது அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளைப் பெரிய அளவில் தழுவித் தனி ஒரு பெண்ணின் பிரச்சினை முதல் அரசியலில் பெண்களின் பங்கு, உயர்கல்வி, மக்கள் தொடர்பு ஊடகம், சம ஊதியம், பாலியலில் சமபங்கு நிலை போன்றவை வரை ஆராய்கிறது. மேலும், தற்போதைய கலாச்சாரத்தில் காணப்படும் ‘பாலியல் பங்கு’ (Sexual Role) இன்று புதிதாகத் தோன்றியதல்ல. பண்டைக் காலத்திலேயே உண்டானது. பாலியல் பங்குநிலை என்பது மனிதரால் உருவாக்கப்பட்டது. எனவே, அது மனிதராலேயே அழிக்கப்பட வேண்டும் என்பது தாராளவாதிகளின் கருத்தாகும்.

அமெரிக்காவில் 1960களில் தாராளப் பெண்ணியம் ‘ஆதாரப் பெண்ணியம்’ (Mainstream Feminism) என்றழைக்கப்பட்டது 'Now' என்று அழைக்கப்படும். (National Organisation of women) என்ற தேசிய அமைப்பு தாராளப் பெண்ணியத்தை வளர்த்தது. இவ்வமைப்பு சம உரிமை, சமநீதி, சம மதிப்பு, விடுதலைப் போக்கு இவற்றையே வலியுறுத்தி வந்தது; முதலில் பெண்கள், பிறகு தான் மனிதப் பிறவிகள் என்று கருதப்பட வேண்டும் என்ற வாதத்தை முன்வைத்துச் சட்டத்தில் மாறுதல்கள் கொண்டு வர வேண்டும் என்ற நிலையில் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பெண்கள் பற்றிய பல மசோதாக்கள் நிறைவேற்ற இவ்வமைப்பு துணைநின்றது. பொதுமக்களிடையே தங்கள் கருத்துக்கள் பரவ இவ்வமைப்பினர் நாடெங்கும் பல கூட்டங்கள் நடத்தினர்.

அமெரிக்காவைப் போன்று இங்கிலாந்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான தாராளப் பெண்ணிய இயக்கங்

கள் இல்லை. ஆனால், உழைப்பாளிகளின் இயக்கத்தையும் (Labour Party), தொழிற்சங்கங்களையும் (Trade Unions) சார்ந்த இங்கிலாந்து பெண்மணிகள் என்ற இயக்கம் கொண்டு வந்த சட்டச்சீர்திருத்தங்களைத் தங்கள் நாட்டில் கொண்டு வரத் துணை நின்றனர்.

## தாராளப் பெண்ணியத்தின் திட்டங்களும் செயல்பாடுகளும்

எல்லாப் பெண்களும் எல்லா நிலைகளிலும் 'சமத்துவம் கொடுக்கப்பட வேண்டும்' என்பதைச் சட்டத்தின் வழி கொண்டு வருவதே தாராளவாதிகளின் மையச் செயல்பாடாக அமைந்தது. பெண்களின் பிரச்சினையைத் தகுந்த மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்த வழி காணவும் இவர்கள் பாடுபட்டனர்.

தாராளப் பெண்ணியத்தில் முக்கிய செயற்பாடுகள் பின்வருமாறு :

1. தன் விருப்பக் கருக்கலைப்பு, குழந்தைப் பராமரிப்பு, தாய்மைப்பேறு மற்றும் நல வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.

2. பாலியல் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் வன்மைகளையும் கொடுமைகளையும் கடுமையாக எதிர்த்து அதற்கான தண்டனையை உரியவருக்குப் பெற்றுத் தருதல்.

3. சம ஊதியம், சம கல்வி வாய்ப்பு இவற்றைப் பெண்களுக்குப் பெற்றுத் தருதல்.

4. பெண்களை இழிவுபடுத்தக் கூடிய அல்லது வேறுபடுத்தக்கூடிய அத்தனை அரசியல் அமைப்புகளையும் ஒழித்தல்.

தாராளப் பெண்ணியத்தில் பயன்படுத்திய துறை வழக்குச் சொற்களைச் சான்றாகப் பின்வருமாறு காணலாம்.

*1.* Equal Rights - *சமவுரிமை (மொழிபெயர்ப்பு)*
*(ஈக்குவல் ரயிட்ஸ்)* Samavurimai
*(எழுத்துப் பெயர்ப்பு)*
Camavurimai *(ஒலிபெயர்ப்பு)*

*2.* Conciousness raising - *விழிப்புணர்வூட்டல் (மொ.)*
*(காண்சியஸ்நெஸ் ரேஸிங்)*
Vizhippunarvuttal *(எ.பெ.)*
Vizhlippunarvuttal *(ஒ.பெ.)*

*3.* Aggressive - *போர்க்குணமுடைய (மொ.பெ.)*
*(அக்கரஸ்ஸிவ்)* Poorkunamutaiya *(எழு.பெ.)*
Porkkunamutaiya *(ஒலி.பெ.)*

*4.* Anarcha - Feminism - *தலைமை வேண்டாப் பெண்ணியம்*
*(அனார்ச்சா பெமினிசம்)* Thalamai Ventaap Penniam
talamai vantap panniyam

*5.* Feminist Criticism - *பெம்ணியத் திறனாய்வு*
*(பெமினிஸ்ட் கிரிட்டிசிசம்)* Penniath Thiranaaivu
Panniyat tirnayviu

## சமதர்மப் பெண்ணியம் (Socialist Feminism)

பெண்களின் ஒடுக்குமுறைக்கு முதலாளித்துவமும் பொருளாதார அமைப்புமே காரணம் என்று சமதர்ம பெண்ணியவாதிகள் நம்புகின்றனர். எனவே, பொருளாதாரப் பண்பாட்டு அடிப்படையிலான முதலாளித்துவப் போக்கை இப்பெண்ணியவாதிகள் கண்டனம் செய்கின்றனர். சமதர்மப் பெண்ணியத்திற்கு ப்ரெட்ரிக் ஏங்கெல்ஸினுடைய 'குடும்பம்! தனிச்சொத்து ஆகியவற்றின் தோற்றம்' *(1884)* என்ற நூல் மூலாதாரமாக விளங்குகிறது. இந்நூல் 'ஆண்

பெண்' ஆகியோருக்கிடையே உள்ள உழைப்பின் அடிப் படையிலான வேறுபாடே பெண்களை அடிமைப்படுத்து கிறது. மரபு வழிவந்த குடும்ப அமைப்புமே காரணம் என்று விளக்கியுள்ளார். அதாவது, ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண அமைப்பு குடும்ப அளவிலும், முதலாளி - தொழிலாளி என்ற அமைப்புசமூக அளவிலும் பெண்களை அடிமைப்படுத்தியுள்ளது என்கிறார். சமதர்மப் பெண்ணியத் திற்கு அமெரிக்காவைக் காட்டிலும், இங்கிலாந்தில் அதி தீவிர வரவேற்பு இருந்தது. சமதர்மப் பெண்ணியம் பின் வரும் மூன்று கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள் ளது.

1. கூலிவேலை (Wage Labour)
2. குடும்பம் (The Family)
3. கருத்துருவம் (Ideology)

## கூலிவேலை

பெண்கள் ஒடுக்கப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் பொருளாதார அமைப்பே. நவீன மற்றும் சக்திவாய்ந்த இயக்கங்களின் வருகையும் பெண்களின் வாய்ப்பின்மைக்கு ஓரளவு காரணமாயின என்பதைச் சமதர்மவாதிகள் அறிந் திருந்தனர். பெண்கள் மிகப்பல இடங்களில் மிகவும் குறைந்த ஊதியத்திற்குத் திருப்தியில்லாத / நிலையில்லா வேலையைச் செய்ய நேரிடுகிறது. பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ப இவர்களை மிக எளிதாக வேலைக்குச் சேர்க்கவோ, தூக்கி எறியவோ முடிந்தது. பெண்களின் கூட்டமைப்பு (Unionisation of Women - 1968) என்ற இயக்கம் தோன்றிய பிறகு பெண்களின் பங்கில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

## குடும்பம்

மைக்கேல் பேரட், மேரி மிக்கின்டாஷ் (Michael

Barrett and Mary Macintosh) என்பவர்கள் தனிக்குடும்ப அமைப்பு (Nuclear Family) ஓரளவு ஆண், பெண் இருவரும் குறைந்தது ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, நல்லது கெட்டதைப் பகிர்ந்து கொண்டு அவரவர்க்குரிய தனிமனித மதிப்பு நிலை பாதிக்கப்படாமல் வாழ வழிவகுக்கும் என்ற பரவலான கருத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

## கருத்துருவம்

மார்க்கிய பெண்ணியவாதிகள் 'கருத்துருவக் கொள்கை' (Theory and Ideology) என்பதை முன்னேறச் செய்வதையே ஒரு செயற்பாடாகக் கொண்டிருந்தனர். மார்க்சியவாதிகளின் இந்த ஆராய்ச்சியும் அதனடிப்படையிலான கடும் முயற்சியும் படிப்படியாகச் சமதர்மவாதிகளையும், தீவிரவாதிகளையும் ஒன்று சேர்த்துச் செயலாற்ற வைத்தது.

## தீவிரவாதப் பெண்ணியம்

'Racial' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'வேர்' (root) என்பது பொருள். இச்சொல் லத்தீன் மொழியிலிருந்து உருவான சொல்லாகும். சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளின் காரணங்களை வேரிலிருந்து ஆராய்வது என்பதைக் கருத்தில் கொண்டே 'Radical' என்ற சொல்லைப் பெண்ணியவாதிகள் பயன்படுத்தினர்.

தீவிரவாதப் பெண்ணியக் குழுக்கள் 'எதிர்வு செயற்பாடுகள்' (Zap action) என்று சொல்லக்கூடிய நூதனப் போராட்ட முறையைக் கையாண்டு, தங்கள் கொள்கைகளைப் பரப்பி, மக்களை ஈர்த்தனர். இஃது அமெரிக்காவில் மிகப் பிரபலமடைந்த கொள்கைப் பரப்பு முறையாகும். சீர்திருத்தப் பிரச்சாரம் மேற்கொள்ளும்போது குறிப்பாகக் கருக்கலைப்பு, இழிபொருள் இலக்கிய எதிர்ப்பு, அல்லது ஒரு பால் சேர்க்கை உரிமை, கட்டுப்படா உரிமை (Gay Right)

போன்ற கொள்கைகளைப் பரப்ப இம்முறை கையாளப் பட்டது.

## சான்றாக மொழிபெயர்ப்புச் சொற்கள்

1. Second Wave Feminism - பெண்ணியத்தின் இரண்டாம் அலை
   (செக்கண்டு வேவ் பெமினிசம்)
   Penniyathin irandam alai
   Panniyattin irantam alai

2. Separation - பிரிவினையியம்
   (செப்பரேசன்)
   Pirivinaiyam
   pirivinaiyiam

3. Sex Dicrimination - பால்வேறுபாடு
   (செக்ஸ் டிக்ரிமிநேசன்)
   Paal verupadu
   pal varupatu

4. Politics - அதிகார அமைப்பு
   (பொலிட்டிக்ஸ்)
   athikara amaippu
   atikara amaippu

5. Oppression - அடக்குமுறை
   (ஆப்ரெஸ்சன்)
   atakkumurai
   atakkumurai

6. Liberal Feminism - தாராளப் பெண்ணியம்
   (லிப்பரல் பெமினிசம்)
   tharalap penniyam
   taralap panniyam

7. Revolutionary Feminism - புரட்சிப் பெண்ணியம்
   (ரிவோலுசநெரி பெமினிசம்)

Purachi Penniyam
Puratci Penniyam

8. Subjection - தன்னுரிமையற்ற நிலை
(சப்சக்சன்) thannurimaiyatra nilai
tannurimaiyarra nilai

முடிவுரை

தனிநபர் விடுதலை, அரசியல் செல்வாக்கு, துறை வழக்குச் சொற்கள், சமவாய்ப்பு போன்ற கோரிக்கைகளை மக்களாட்சிக்கு ஏற்ற முறையில் வடிவமைத்து வெற்றி பெற்றது. தீவிரவாதப் பெண்ணியவாதிகள், அடிப்படையில் ஆண் அடக்குமுறைக்கு ஆட்பட்டவர்கள். எனவே, அவர்கள் அதை எதிர்க்கும் தீவிர செயற்பாட்டினை உருவாக்கினர். அவர்களுக்கு ஆண்கள் முக்கிய எதிரிகளானார்கள். அதனால், எந்த ஒரு முன்னேற்ற இயக்கத்தையும் பின்பற்றாமல் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் தங்களுக்கென்று தனிப் பட்ட கொள்கைகளையும், துறை வழக்குச் சொற்களையும் ஒவ்வொரு பெண்ணிய வகைகளிலும் பயன்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களையும் அவை எவ்வாறு மேற்கண்ட வகைகளில் மொழிபெயர்ப்பில் வேறுபட்டுக் காணப்படு கின்றன என்பதையும் மேலே உள்ள செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன.

***துணைநூற்பட்டியல்***


1. Bakers and others; Women Today, A multi disciplinary Approach to Women's Studies Brookskole Publishing Company, Monday, 1980.

2. Charvet, Jhon; Feminism, J.M. Dent and Sons Ltd., London, 1982.

3. Ghadially Reham (Ed.); Women in Indian Society, Sage Publications, New Delhi, 1988.

4. Baks, Olive; Faces of Feminism, Basil Black Well Ltd., Oxford, 1986.

5. Khama, S.K., Women and Human Rights, Commonwealth Publishers, Delhi - 1998.

6. முனைவர் இரா. பிரேமா, 'பெண்ணியம்' (விரிவுப் பதிப்பு), தமிழ்ப் புத்தகாலயம், ஃபிளாட் ஜி3/8, மாசிலாமணி தெரு, தி.நகர், பாண்டி பஜார், சென்னை - 600 017.

# பெண்மையின் மாண்புகள்

பொறி. சு. குழந்தைவேல்
287, நடராசபுரம் (தெற்கு),
11வது குறுக்குத்தெரு (கிழக்கு),
மருத்துவக்கல்லூரி சாலை,
தஞ்சாவூர் - 613 007.

## முன்னுரை

வையகத்தில் உயிரினங்கள் அனைத்தும் இரு சக்திகளின் இணைப்பால், இயங்கும் ஆற்றலினால் படைக்கப்படுகின்றன. மனித உயிரினம் இதற்கு விதிவிலக்கல்ல. இயங்கும் இயந்திரங்களும், இணக்க முனை எதிர்வினை முறை (பாசிட்டிவ் மற்றும் நெகடிவ் பாய்ண்ட்ஸ்) எனும் இருவகை சக்திகளினால்தான் இயங்குகின்றன.

உயிரினங்களின் படைப்பிலும், ஆண்சக்தி, பெண் சக்தி என இருவகை சக்தி ஆதிக்கங்கள்தான் அகிலமெங்கும் பரவி நிலைத்து இருக்கின்றன.

ஆண் இனமும் பெண் இனமும் உயிர்த் தொகுப்பில் ஒன்றே. ஆயினும் உருவத் தோற்றத்தில் இரண்டென்பது இயற்கை. அவ்வாறே சிந்தை, செயலாக்கம், உளப்பாங்கு இவற்றில் ஆண்மைக்கும் பெண்மைக்கும் தனி இயல்புகள் இயற்கையே.

''ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமானவர்'' எனும் முற்போக்கு எண்ணம், உரிமையின் சார்பில் எழும் கருத்தாகும். அவ்வெண்ணம் இயற்கை இயல்புகளின் சார்பின் பாற்பட்டதல்ல. மக்கள் பிறவியில் ஆண் பெண் இரு கண்கள். ஆணின் ஆண்மையும், பெண்ணின் மென்மையும் இணைவதால்தான் வையகத்தில் அனைத்து உருவாக்கங்

களும், செயலாக்கம் பெறுகின்றன. இவையனைத்தும் வல மாக, பெண்மை இடமாக அமைந்த இயற்கை அமைப்பே இறைவன் நமக்கு காட்சியாய்த் தோன்றும் உண்மை விளக்க மும் அதுவே. இந்நிலையில் பெண்மையர் எல்லாவற்றிலும் சம உரிமை உள்ளவர்களே என்பதும் உண்மைக் கூற்றாகிறது. ஆண்மையினரினும் உயரியதாய் பெருமைமிக்கதாய், பெண்மையினரிடம் மாண்பாய் அமைந்துள்ள இயற்கை இயல்பு தாய்மை. தயை, கனிவு, அன்பு இவற்றின் கூட்ட மைப்பே 'தாய்மை' என்னும் இயல்பு. 'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்பது தாய்மையின் உயர் மாண்பினை விளக்குகிறது.

## பெருமைமிகு பெண்மை

மண்ணுலகில் மக்கள் வாழ்க்கைமுறை நான்கு வகைப்படுவன. அவை பிரம்மச்சரியம், வானப் பிரத்தம், சந்நியாசம் மற்றும் இல்லறம் என்பன. முதன் மூன்று வாழ்க்கை முறைகள் தன்னலமாய் அவரவர்க்கே பயனளிப் பன. ஆனால், இல்லற வாழ்க்கை முறை, மற்ற மக்களுக்கு வாழ்வியல் நெறிக்கிணங்க உதவும் வண்ணம், விருந்தோம்ப வும், பிறர் உயர்வான வாழ்க்கையின் பயனுற, வழிகாட்ட வும் அமைவதாகும்.

இவ்வுயரிய வாழ்க்கை முறையான இல்லறத்திற்கு ஏற்றமும், நிறைவும் தருபவர் பெண்ணே. ஆணை மணந்து, மனங் கலந்து, வீடு நிறையும் மகிழ்வும், மாட்சிமையும், உற்ற துணையாகவும் நிற்பவர் மகளிரே.

*''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்ஆற்றின் நின்ற துணை''* (குறள் - 41)

இல்லற வாழ்க்கை நெறிகளே. ஏற்றமும் சிறந்ததும் ஆகும் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

நம் மொழி தாய்மொழி, நம் நாடு தாய்நாடு, கல்விக்கு உரியவள் கலைமகள். செல்வ வளமைக்குரியவள் இலக்குமி. வல்லமைக்குரியவள் சக்தி. பருகும் நீருக்குரியவர் கங்கை, காவேரி. உண்ணும் உணவுக்குரியவள் அன்னலக்குமி. பெண் மைக்குப் பெருமையும், புகழும் போற்றிச் சிறப்பித்தலுக்கும் உரியவண்ணம் உயர்வான பிறவி பெண்மை. தாய்மைப் பண்பால், பிறர் தலைவணங்கும் பெருமை ''பெண் பிறவிக்கே'' உரியது.

## மா்நிலம் போற்றும் மாட்சிமையர்

### அ) ஆதிரையார்

பாரத மடங்கலும் பசிப்பிணியறுக! என வாழ்த்தி, மணிமேகலை ஏந்திய அன்ன பாத்திரம், அள்ள அள்ளக் குறையாது நிறையும் 'அமுதசுரபியாகிப் பசிப்பிணி நீக்கி, வசியும் வளமும்' பெருகுமாறு வாழ்ந்து காட்டியகற்புக்கோர் மங்கை ஆதிரையார் தமிழ்மண் ஈன்றெடுத்த காவேரிப்பூம் பட்டினம் மங்கை, மாநிலம் வணங்கும் பெருமைமிகு பெண் பிறவியே.

### ஆ) விசா்கையார்

*''இளமையும் நில்லா யாக்கையும் நில்லா*
*வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா*
*புத்தேள் உலகம் புதல்வருந்தாரார்*
*மிக்க அறமே விழுத்துணையாவது...''*

என்னும் சீரிய உண்மைக்கு எடுத்துக்காட்டாய்,

நரையும் திரையும் நிறைந்த உடம்போடு முதுமகள் பெருஞ்செல்வ வளமிக்க வாழ்வினராயினும், நல்லறங்கள் இயற்றித் தூய வாழ்க்கையில் தலைசிறந்து நின்ற புகார்நகர்

விசாகையார் மாநிலம் வணங்கும் பெருமைமிகு பெண் பிறவியே.

## இ. கோப்பெருந்தேவியர்

*காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி*
*ஊதுலைக் குருகின் உயர்த்து அகத்து*
*அடங்காது இன்னுயிர் ஈவர்*

என மணிமேகலைக் காப்பியம் போற்ற, கற்பிற் சிறந்த மதுரை மாமன்னன் நெடுஞ்செழியனின் அரச மாதேவியர் கோப்பெருந்தேவியர் மாநிலம் வணங்கும் பெருமைமிகு பெண்பிறவியே.

## ஈ) மணிமேகலையார்

*''பூவினும் சாந்தினும் புலால் மறைத் துயாத்துத்*
*தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த*
*தஞ்சத்தெரியாய் மன்னவன் மகனே!''*

என அழிவுறும் யாக்கையின் இயல் நிலையை அரசிளங் குமரன் உதயகுமாரனுக்கு எடுத்து இயம்பி, துறவற நெறியில் வாழ்ந்து அமுதசுரபியினின்று அன்னம் பாலித்து, அவனியில் பசிப்பிணிப் போக்கி, நீங்காப் புகழும் பேரின்பமும் அடைந்த காவிரிப்பூம்பட்டினத்துக் காரிகை மணிமேகலை யார் பெருமைமிகு பெண் பிறவியே.

## உ) கண்ணகியார்

சேரநாட்டில் பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளமும் சுரக்க வாழ்த்தி, பத்தினித் தெய்வமாகி, சேரன் செங்குவட்டுவ பேரரசன் சிலை வைத்து, தமிழ் மண் வணங்கும் தெய்வமாய் இன்றும் விளங்கும் கற்புக்கரசி கண்ணகியார் பெருமைமிகு பெண் பிறவியே.

ஊ) காரைக்கால் அம்மையார்

*''இறவாத இன்ப அன்பு வேண்டிப்*
*பின் வேண்டுகிறார், பிறவாமை வேண்டும்*
*மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும்; இன்னும்*
*வேண்டும் நான் மகிழ்ந்து பாடி*
*அறவா! நீ ஆடும்போது உன்,*
*அடியின் கீழ் இருக்க''*

என ஈசனை வேண்டி, கொண்டவனுக்கு சிவக்கனி ஈந்து, உண்பது கண்டு மகிழ்ந்து, மீண்டும் ஒன்று பெற்றுத் தந்து, தெய்வ மகளாகி, திருவாலங்காட்டுத் தெய்வமாகி, இன்றும் மக்கள் வணங்கி வழிபடும் தேவியாய் விளங்கும் காரைக் கால் அம்மையார் என்னும் புனிதவதியார் சோழநாட்டின் செல்வ மகள், திருமகள், பெருமைமிகு பெண் பிறவியே.

எ) மங்கையர்க்கரசியார்

*''மங்கையர்க்குத் தனியரசி யெங்கள் தெய்வம்*
*வளவர் திருக்குலக்கொழுந்து வளைக்கை மானி*
*செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்*
*தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை*
*எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே*
*இருந்தமிழ் நாடுற்றவிடர் நீக்கித் தங்கள்*
*பொங்கரொளி வெண்திருநீறு பரப்பினாரைப்*
*போற்றுவார் கழல் எம்மாற் போற்றலாமே''*

எனப் பெரிய புராணம் படைத்திட்ட செம்மையார், சேக்கிழார் பெருமான், மாண்புடைய தெய்வ மகளாய் வாழ்த்துமாறு, சோழர்குலப் பெண்மணி, தாம் மணம் கொண்ட மதுரைமாறன் மாமன்னனின் வெப்பொழிய, சமணம் களைந்து, சிவம் தழைக்க, செந்தமிழ் நாட்டில் சிவமணங் கமழ, பாண்டி நாட்டின்கண், பல்வளங்கள்

நிறைந்து அறம் வளர அரும்பணியாற்றிய மங்கையர்க்கரசியார் இன்றும் இத்தமிழ்மண் போற்றும் மாண்புறும் பெண் பிறவியே.

### ஏ) திலகவதியார்

*"தம்பியார் உளராக வேண்டுமென வைத்ததாய*
*உம்பர் உலகணைய வுறுநிலை விலக்க உயிர்தாங்கி*
*அம்பொன்மணி நூல் தங்களது அனைத்துயிர்க்கும்*
*அருள்தாங்கிஇம்பர் மனைத்தவம் புரிந்து இருந்த,*

சிவநெறிச்செல்வர் திருவாமூர் புகழனார் - மாதினியார் திருமகளாய்ப் பிறந்து; அருமை தம்பி மருணீக்கியார் சூலை நோய் ஒழிய, சிவநெறி வாழ வழிகாட்டி, 'திருநாவுக்கரசர்' எனும் திருப்பெயர், இத்திருமண்ணில் நிலைக்க, உற்ற துணையாய் தமக்கையாய் வாழ்ந்து, சிவநெறி தழைக்கச் செய்த திலகவதியார், இத்தமிழ்மண் போற்றும் மாண்புறு பெண் பிறவியே.

*ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை உடைத்து.* (குறள் 48)

தாமும் அறவழியில் நடந்து, பிறரை அரவணைத்து அறவழியில் ஒழுகச் செய்தும் வழிகாட்டி வாழ்தல் சிறந்த அறமெனக் கொண்டு வாழ்ந்து காட்டியவர் மாட்சிமைமிகு நம் தமிழ் மகளிர்.

## பெண்மையின் அணிகலன்கள்

பெண் குழவி பிறந்துவிட்டதே எனவும், இதுவும் பெண் மகவாய்பிறந்துவிட்டதே எனவும் புலம்பும் தாய்மையர் பேதைமையர். அறியாமையரும் ஆவர். மாதவம் செய்தோரே மகளிரைப் பெற்றெடுக்க இயலும் எனும் நிலை, இன்றைய சமுதாயத்தில் நிலவும் உளப்பாங்கு, மகளிரிடையே நிலைபெற்றுள்ளது கண்கூடு.

கல்வி, அறிவு, ஆற்றல், ஏற்றம், புகழ் அனைத்தையும் அவனியில் ஆளும் திறங்கொண்டவர் மகளிர். உயர் லட்சியம், திண்மை எண்ணம், உண்மை வாழ்க்கை, உழைக்கும் மனப்பாங்கு அனைத்தையும் அணிகலனாய் இன்றைய மகளிர் பெற்றுள்ளமை கண்டு உலகோர் வியக்கின்றனர்.

*''மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல*
*மாதவஞ் செய்திட வேண்டுமம்மா - அவர்*
*பங்கயக்கை நலம் பார்த்தல்லவோ - இந்தப்*
*பாரில் அறங்கள் வளருதம்மா!''*

என கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல் வரிகள் தமிழ்ச் சமுதாயத்தில் மகளிர் பெற்றிருந்த மாண்பு, பெருமை சிறப்புகள் அனைத்தையும் சுட்டுகின்றன.

தமிழ்ச் சமுதாயத்தில் மகளிர் வாழ்வு போற்றத்தக்க தாய் பண்பாடு மிக்கவர்களாக, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நால்வகை குணங்களைப் பெற்றவர்களாக, பெருமை மிக்கவர்களாகத் திகழ்ந்திருந்தமை கண்டு,

*''இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்*
*இல்லவள் மாணாக்கடை''* (குறள் -53)

என்று மொழிகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

## பண்டைய பெண்பாற் புலவர்கள்

பண்டைய தமிழ்ப் புலவர்களுள் முப்பதுக்கும் மேற்பட்டோர் பெண்பாற் புலவர்கள். அப்புலவர் பெருமக்கள் அரசர்களின் ஆட்சிச் சிறப்பையும், வெற்றிச் சிறப்பையும், போர்க்களங்களில் நடுவராகி, போரினைத் தடுத்து நிறுத்தி, அரசர்களிடையே ஒற்றுமையையும், அரச மக்களுக்குத் திருமணங்கள் நிகழ்த்தியும் பெரும் பங்கு பெற்றிலங்கினர்.

ஔவையார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளிவீதியார், முடத்தாமக் கண்ணியார், காக்கைப்பாடினியார், நச்செள்ளையார் போன்ற பெண்பாற் புலவர் பெருமக்கள் அரசர்களால் போற்றி வணங்கப்பட்டவர்கள்.

## பல்கலை நோக்கில் பாவையர்

பண்டைத் தமிழ் மகளிர், கற்கும் உரிமை, தொழில் கல்வி பயிலும் உரிமை, தொழிலில் உயர்நிலை, புகழ் அனைத்திலும் ஆடவர்க்கு நிகராகப் பெற்று விளங்கினர்.

இசையும் நடனமும் பெண் கல்வியில் பிரிக்க இயலாத நிலையில் சிறப்புநிலை கல்வியாகக் கற்று, தேர்ந்திருந்தனர்.பாடும் குரல் வளமும், பாடலுக்கு ஏற்ப ஆடும் திறனையும் பெற்றிருந்தனர்.

## பாட்டிசைத்தல்

*''ஒலியல் வார்மயிர் ஊரினள் கொடிச்சி*
*பெருவரை மருங்கில் குறிஞ்சிப் பாடக்*
*குரலும் கொள்ளாது, நிலையினும் பெயராது*
*மறம்புகல் மழகளிறு உறங்கும்''*

எனும் அகநானூற்றுப் பாடல், பாலைப் பண்ணை மகளிர், குறிஞ்சி, கொடிச்சிப்பண் பாடக்கேட்ட யானை, அவ்விடம் பெயராது உறங்கிற்று எனும் குறிப்பு, பண்டை மகளிர் நாட்டுப்புறப்பாடல்களிலும் சிறந்து விளங்கியமை அறிய முடிகிறது.

## இசைக்கருவி இசைத்தல்

பண்டைத் தமிழ் மகளிர், யாழ் வாசிப்பதிலும், இன்னிசை பாடுவதிலும் வல்லமை பெற்றிலங்கினர். இத்தன்மையால் 'பாடினி' எனவும் அழைக்கப்பட்டனர்.

*பெடைமயில் உருவின் பெருந்தரு பாடினி*
*பாடின பாணிக்கு ஏற்ப...*

எனும் பொருநராற்றுப்படை நூல்குறிப்பு, இதனைச் சான்றுரைக்கின்றது.

## வேளாண்மைத் தொழில்நுட்பாளர்

பண்டைத் தமிழ் மகளிர் வேளாண்மைத் தொழிலில் நாற்று நடுதல் தொடங்கி, அறுவடை ஈறாக அமைந்த தொழில் நுட்பங்களை நன்கு கற்றுத் தேர்ந்து விளையும் பயிரை பறவை விலங்குகள் தாக்குதலினின்று காப்பாற்றியும், விளை பயன் சிறக்க, தொழில் முனைப்பில் சிறந்து விளங்கினர்.

*''உழாஅ நுண்தொளி நிரவிய வினைஞர்*
*முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில்...''*

எனும் பெரும்பாணாற்றுப்படை பாடல்;

*செந்நெல் உண்ட பைந்தோட்டு மஞ்ஞை*
*செறிவினை மகளிர் ஓப்பலின்...*

எனும் புறநானூற்றுப்பாடல்;

*நெல்லின் செறுவில் நெய்தல் பூப்ப*
*அரிநர் கொய்வாள் மடங்க...*

எனும் பதிற்றுப்பத்துப் பாடல் வரிகள், பண்டைத் தமிழ் மகளிர் வேளாண்மைத் தொழிலின் மேம்பாட்டில் பங்கு கொண்டமையை விளக்குகின்றன.

## விளையாட்டியர்

பண்டைத் தமிழ் மகளிர், விளையாட்டுப் போட்டிகளில் பலவற்றிலும் சிறந்தும், ஈடுபாட்டுடன் உடற்பயிற்சி செய்தும், உடல் வனப்பைப் பேணிக் காத்தனர். பூக்கொய்தல், புனல் விளையாடல், ஊஞ்சலாடுதல், பந்தாடுதல், அம்மானைக்காய் ஆடுதல் போன்ற விளையாட்டுக்கள் மகளிருக்கு உரியனவாக்கப்பட்டிருந்தன.

## வாழ்வியல் வழிகாட்டி மகளிர்

பண்டைத் தமிழ் மகளிர் நாட்டுப்பற்றும், கடமை உணர்வும், நாட்டின் முன்னேற்றத்தில் பெரும் பங்கு கொண்டவராயும் திகழ்ந்தனர். பெண் குழவிகளை மகிழ்வுடன் பெற்றெடுத்தும் போற்றியும் வளர்த்து வந்துள்ளனர்.

*குன்றக் குறவன் கடவுட்பேணி*
*இரந்தனள் பெற்ற எல்வளைக் குறமகள்...*

எனும் ஐங்குறுநூறு பாடல் வரிகள், பெண் குழவிகள் மீது அளவரிய அன்பினைப் பொழிந்தமையை விளக்குகின்றன.

*''ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;*
*வேல்வடித்து கொடுத்தல் கொல்லற்குக்கடனே;*
*நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே;*
*ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி,*
*களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே''*

எனப் பொன்முடியார் எனும் பெண்பாற் புலவரின் புறநானூற்றுப் பாடல்வரிகள் வாழ்வியலில் அவரவர் தம் கடமைகளை உணர்ந்த நிலையில், வாழ்வியல் வழிகாட்டியாய் மகளிரும் வாழ்ந்தனர் என்பதை உணர்த்துகின்றன.

## இற்றைய சீர்மிகு மகளிர்

பண்டையத் தமிழ் மகளிரினும் மேன்மை உடைய வராய் இற்றை இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் தமிழ் மகளிர், கல்வி, தொழில், அறிவியல் நுட்பக் கலைகள், இசை, நாட்டியம், விளையாட்டுகள், இல்லற ஆளுமை, நாடாளுமைகளில் சிறந்து விளங்குகின்றனர் என்பது ஏடும், நாடும் கூறும் உண்மைகளாகும்.

இந்தியத் திருநாட்டின் முதல் குடியரசுத்தலைவர் மாண்புறு பிரதீபா பாட்டில், காவல்துறை உயர்நிலை அதிகாரி கிரண்பேடி, விளையாட்டு வீராங்கனையர் சானியா மிர்சா, அஞ்சு ஜார்ஜ், இசைமேதை அனுராதா ஸ்ரீராம், கவிதா கிருஷ்ணமூர்த்தி, நாட்டியமேதை பத்மா சுப்பிரமணியம், அனிதா ரத்னம், உணவியல் வித்தகர் மல்லிகா பத்ரிநாத், உடற்கூறு கருவியல் மருத்துவ வித்தகர் மருத்துவர் கமலா செல்வராஜ் போன்ற முன்னணி பெண் மகளிர் என்றும் நம் உள்ளத்தில் நிற்பவர்கள்.

## பாரதம் மாண்புற மகளிர் சூளுறவு

தரணி போற்றும் சமுதாயத்தின் மூலம் மாதர்கள், உருவாகும் மக்களின் தூய மாண்பின் துவக்கம் தாய்மார்கள். தாய்மையின் வாய்மையே, மக்களின் தூய்மைக்கு அணி கலனும், ஆதாரமும் ஆகும். மாதர்கள் தங்களின் மாண்பினை நன்குணர்ந்து, மாண்பின் ஆற்றலை நன்கு அறிந்து வாழ் வார்களாயின், வாழ்க்கையில் சரிவு இல்லா, உயர் செறி வோடு வாழலாம் என்பார் சான்றோர்.

பள்ளி பயிலும் மாணவியர் பருவம் தொடங்கி, பெரி யோர் நிலை வரை, மகளாக, நாத்தனாராக, அண்ணியாக, வாழ்க்கைத் துணைவியாக, மாமியாராக, அனைத்திலும் தாயாக, வாழ்வியல் நெறியில் வாழ்வார்களாயின் மண்ணுல கம் மாதரின் மாண்பினை என்றும் போற்றும். அதனால்

பெருகும் பெண்ணறம். மலரும் மண்ணறம், மாண்புறும் நம் தமிழகம்.

பாரதத் திருநாட்டில் வறுமை, அறியாமை, ஏழ்மை அடியோடு நீங்கிட,

அறிவாண்மை, ஆளுமை, உயர்வாழ்க்கை உயர்ந்து நிலைத்திட,

தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு, இசை உயர் மேன்மை அடைந்திட,

இல்வாழ்க்கை, விருந்தோம்பல், அறன் ஓம்பல், அன்புடைமை, சொல்வன்மை, பண்புடைமை, புகழ், வினைத்தூய்மை ஆகியன மேலாண்மையில் திகழ்ந்திட,

ஒன்றுபட்ட, ஓங்குயர் வளர்ந்துவிட்ட வல்லரசு பாரதத்தை 2020 ஆம் ஆண்டிற்குள் உருவாக்கிப் படைத்திட, இன்றைய மகளிர் சூளுறவு ஏற்கும் 'உலக மகளிர் தினம்' வரலாறு படைத்திட வேண்டும்.

வாழ்க இனிய வையகம்! வளர்க நன் மகளிர்!

# சங்ககாலப் பெண்ணியம்

முனைவர். வீ. சிவசாமி
*விரிவுரையாளர்,*
*அ.வீ.வா.நி. திரு புட்பம் கல்லூரி,*
*பூண்டி 613 503, தஞ்சாவூர் மாவட்டம்.*

## முன்னுரை

சங்க காலத் தமிழகத்தில் பெண்ணியமும் அதன் பெருநெறிகளும் எவ்வகையில் பிறங்கிற்று என்ற முறைமை பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பெண்ணியம் என்ற சொல் பிறந்தது பிற்காலமாகும். பெண்ணியப் பெருநெறிகள் தோன்றியன முற்காலமாகும். மகளிர் வாழ்வு வளம் பெறத் துடிப்பது இக்காலம் ஆகும். மாட்சிமைப்பட்ட மகளிராக வாழ்ந்தது சங்க காலமாகும். பெண்ணின் கல்வி, உரிமை, பணி, சிறப்பு ஆகியன பற்றி ஆய்வது மேலும் சிறப்பைத் தருவதாகும்.

## கால ஓட்டமும் கருத்து ஓட்டமும்

உலகில் பெரும்பான்மையான நாடுகளில் அறிவு, பண்பாடு, நாகரிகம் ஆகியனவற்றில் மகளிர் பின்தங்கிய நிலையில் இருந்ததை உலக வரலாறு சுட்டுகிறது. ஆனால், சற்றேறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தில் மகளிர் ஆர்வத்துடன் கல்வி பயின்று ஆடவருக்கு ஈடான மொழிப் புலமை உடையவர்களாக 50க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் விளங்கினர் என்பதை சங்க கால வரலாறுவழி அறியலாகிறது. நுண்மாண் நுழைபுலமும் பன்மாண் சிறப்பும் கொண்ட நன்மங்கைகளாக விளங்கிய பான்மையை அவர்களது படைப்புக்கள் வழி அறிய முடிகிறது. கால ஓட்டம், கருத்து ஓட்டம் ஆகியனவற்றிற்கு ஏற்ப மகளிர் கல்வியை மாண்புடன் பயின்று படைப்புச் சக்திகளாகத் தங்களை வெளிக் கொணர்ந்தனர்.

## காதல் நிலையில் மகளிர் பங்கு

தலைவன் - தலைவி ஆகியோர் காதல் நெறிக்குத் துணையாக நின்று அதனை வளர்த்தமையை அக இலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன. தோழி, நற்றாய், செவிலி, பாங்கி ஆகியவர்கள் களவு வழிக்குத் துணைநின்று பின்பு கற்பு மணத்துக்குத் துணைபுரிந்தமையை அக இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

## திருமணச் சடங்குகளை நிகழ்த்தவல்ல மகளிர்

இல்லற நெறி இனிதே விளங்க நல்லறம் நாட்ட வல்ல நன்மணிகள் திருமணச் சடங்கு நிகழ்த்தியதை அக நானூற்றின் வழி அறிய முடிகிறது. பொதுப்பணி செய்வதில் ஈடுபாடும் ஆர்வமும் கொண்ட முதுமை உடைய, தாலியணிந்த முதுமகளிர், மக்களைப் பெற்ற மகளிர், மங்கல மகளிர் நால்வர் கூடி குழுமி நின்று சடங்குகளைச் செய்தனர் என்பதை,

*வாலிழை மகளிர் நால்வர் கூடிக்*
*கற்பின் வழாஅ நற்பல உதவிப்*
*பெற்றோர் பெட்கும் பிணையை யாகென*
*நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி*
*பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க*
*வதுவை நன்மணம் கழிந்த...*

அகநானூறு பாடல் கூறுகின்றது.

பிறிது ஓர் அகநானூற்றுப் பாடலில் மகளிர் மண விழாச் சடங்கு நிகழ்த்திய செய்தி தெரியக் கிடக்கிறது. வாசனை உடைய அரும்புடன் வெள்ளிய நூலைக் கட்டி, தூய ஆடை உடுத்தச் செய்து விருப்பம் உண்டாக நெருங்கி, மணவொலி மிக்க பந்தலில் திருமணம் செய்வித்தனர் என்பதை,

*தனாநறு முகையொடு வெண்நூல் சூட்டித்*
*தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி*
*மழை பட்டன்ன மணன்மலி பந்தர்...*

என்று அவ்விலக்கியம் சொல்லிச் செல்கிறது.

தமிழ் நெறிப்படித் திருமணச் சடங்குகளை ஆற்றுகின்ற அரும்பணியை அக்கால மகளிர் பெற்றிருந்தனர். அந்நெறி தவறிப் போக இக்காலத்தில் ஆரியர் முறைப்படி திருமணச் சடங்குகள் பெரும்பான்மையாக நடத்தப்படுகின்றன.

## அரசத் தூதுவராகப் பெண் பதவி புரிந்தமை

ஒளவையார் என்னும் சங்க காலப் பெண்பாற் புலவர் அரசத் தூதுவராகப் பணியாற்றியதை புறம் சுட்டுகிறது. தொண்டை நாட்டரசனான கருணாகரத் தொண்டைமானிடத்து அதிய மான் ஒளவையாரை அனுப்பி வைத்தான். நாட்டு மக்கள் போரில் இழப்பு ஆவதைத் தடுக்கும் பொருட்டு ஒளவையார் அரச தூதராக அரும்பணி புரிந்தார். படைக் கலங்கள் மிகுதியாக இருந்தும் மனித உயிரின் மதிப்பு கருதி மன்னன் இவ்வாறு செய்தான் என்பதை ஒளவையார்,

*இல்லோர் ஒக்கல் தலைவன்*
*அண்ணல் எங் கோமான் வைநுதிவேலே*

என்ற இப்பாடலடிகளால் விளக்கி உரைத்துள்ளார்.

அரசனுக்குத் தூது போகும் அறிவும், அரச தந்திர அறிவும், நாட்டு நடப்பை நன்குணர்ந்த நல்லறிவும் கொண்ட அம்மையாராக ஒளவையார் விளங்கினார்.

## நாடாளும் நல்லரசருக்கு நல்லுரை

அரசர் நல்லாட்சி தரவல்லவராக இருத்தல்

வேண்டும். அவ்வாறு நல்லாட்சி தருவதற்குரிய தன்மையில் மன்னன் தன்னைத் தகுதி ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதை ஔவை மூதாட்டி,

*நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
*எவ்வழி நல்லவ ராடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே*

என்று சுட்டி நாடாளும் மன்னன் எவ்வாறு நல்லவனாக இருப்பானோ அவ்வழி நாட்டு மக்களும் இருப்பர் என்பதை அறிவுரையாகவும், அறவுரையாகவும் கூறிச் சென்றார்.

## மகளிருக்கு மறக்குணம்

மறக்குடியில் பிறந்த மகளிரான அவளுடைய கொழுநன் ஆநிரைகளைக் கவர்ந்து போகாதவாறு குறுக்கிட்டுப் போர் செய்து மாண்டான், அதற்கு முன்னாள் நடந்த செருவில் அவள் தன் தந்தை பெரிய ஆண் யானையைக் கொன்று தானும் மாண்டான். தெருவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் இச்செய்தியைத் தெரிவித்தான். தன் மகனை அழைத்து, அவன் தலையில் எண்ணெய் தடவி, அவன் இடுப்பில் வெள்ளை ஆடையை உடுத்தி, கையில் வேலைக் கொடுத்து போருக்கு அனுப்பிய அப்பெண்ணின் வீரத்தை ஒக்கூர் மாசாத்தியார் என்னும் நல்லிசைப் புலவர்,

*கெடுக சிந்தை கடிதிவள் துணிவே*
*மூதின் மகளிர் ஆதல் தகுமே*
*ஒருமகன் அல்லது இல்லோள்*
*செருமுக நோக்கிச் செல்க என விடுமே*

என்று பாடிய திறத்தைக் கொண்டு நாட்டுப் பாதுகாப்புப் பணிக்கு ஆணும் பெண்ணும் இணைந்து பணியாற்றியதை அறிய முடிகிறது. அவ்வாறே போருக்குச் சென்று போராடும் செயல் மகளிருக்கு இல்லாவிட்டாலும் தன் மகன்

விழுப்புண் பெற்றானா என்ற நிலையில் போர்க்களத்தில் தேடும் தன்மை இருந்துள்ளது.

## பிறமொழியில் உள்ளனவற்றை தமிழில் செய்தமை

புத்தரின் தம்மபதம் என்ற பாலி மொழிப் படைப் பாக்கத்தை ஔவையார் படித்துவிட்டு, அக்கொள்கைகளை தமிழில் அறவழிச் சிந்தனைகளாக நிலைநாட்டி உள்ளார். தாய்மொழி மூலம் பிற மொழியை அறிந்து அக்கொள்கை களைத் தமிழில் தருகின்ற தன்மை, முனைந்த திறம் பாராட்டத்தக்கது.

## முத்தமிழுக்கு மகளிர் தொண்டு

காக்கைப்பாடினியார் என்ற சங்ககாலப் பெண்பாற் புலவர் காக்கைப் பாடினியம், சிறு காக்கைப் பாடினியம் போன்ற தனி இலக்கியங்களைப் பாடுவதற்கு ஏற்ற வகை யில் மற்ற பெண்பாற் புலவர்கள், இயல் சார்ந்த புலவர்கள் என்ற தகுதி நிலையைப் பெற்று உள்ளனர். இசை வளர்க்கும் பணியில் மகளிர் சிறந்து பணியாற்றி உள்ளனர். இசை இசைக்கும் மகளிரை விறலிகள் என்று சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. நாடகத்தில் நடிக்கும் திறமையை சங்க காலப் பெண்கள் பெற்றிருந்ததால் அவர்கள் நாடக மகளிர் என்று அழைக்கப்பட்டனர்.

## அரசப் பெண்கள் அருந்தமிழ் இயற்றிய திறம்

அரச குடும்பங்களில் பிறந்த மகளிர் அருந்தமிழ்ப் பாக்கள் இயற்றும் திறம் கொண்டவர்களாக விளங்கியுள்ள னர். அவ்வகையில் பாண்டிய அரசர் குலத்தில் தோன்றிய கோப்பெரும் பெண்டும், வேளிர் குலத்தில் தோன்றிய பாரி மகளிரும் தமிழ்ப்பாக்கள் இயற்றும் தகுதி படைத்தவர்களாக விளங்கினர் என்பதை சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.

# பெண்மையைப் போற்றுவோம்!

திருமதி சிவ. மல்லிகா

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தத்துவ மையம்,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

ஆற்றல், சக்தி என்று சொல்லப்படும் ஒன்று ஒரு மனிதனுக்குள்ளோ, ஒரு விலங்கினுள்ளோ, ஒரு இடத்திலோ இருந்தால் அவ்வாற்றல் எப்படியும் வெளிப்பட்டுத்தான் தீரும் என்பது பொதுவான இயற்கைக் கோட்பாடு.

அடைத்து வைக்கப்படும் ஆற்றல்கள் மற்றொன்றுக்கு கடத்தப்படும் அல்லது வெளிப்படும். ஆனால், அவ்வாற்றலை யாராலும் எவற்றாலும் அழித்திட முடியாது என்பதும் உண்மை. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான நியதி.

ஒரு பெண் தன் திறமைகளை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் வாழும்போது அதைத் தன் குழந்தைகளின் மூலம் நிறைவேற்றிக் கொள்கிறாள். இது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தும். ஆசைகளை நிறைவேற்ற முடியாதபடி உண்டாகும் தடைகள் ஒரு பெண்ணுக்கு ஆணாலும் ஆணுக்கு ஒரு பெண்ணாலும் நேர்கிறது என்பதுதான் உண்மை! இது சிறு எண்ணிக்கையில்தான். அந்தத் தடைகளையும் தாண்டி வெற்றிபெற்ற பெண்கள் அக்காலத்திலும் உண்டு. ஆனால், எண்ணிக்கையில் குறைவாகவே இருந்தனர். ஆனால், இப்பொழுது அனைத்துப் பெண்களுமே தங்கள் திறமைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்துவதற்கான சூழல் நன்றாகவே அமைந்துள்ளது.

இப்படி ஒரு சூழ்நிலை உருவாவதற்கு ஒரே காரணம் அறிவியல் முன்னேற்றம். மாவு ஆட்டுவது, அரைப்பது, துவைப்பது, சமைப்பது என்று பெண்ணுக்கான அனைத்து வேலைகளும் எளிதாக்கப்பட்டுள்ளன. இந்த நூற்றாண்டிலும் பெண் கொடுமைப்படுத்தப்படுகிறாள், அடிமைப் படுத்தப்படுகிறாள் என்று பேசுவது பொருத்தமற்ற பேச்சாகும். ஒரு பெண் தன் அறியாமையாலும், பலவீனத்தாலும் தன்னைத்தானே தாழ்த்திக் கொண்டாளே ஒழிய பிறரால் ஒடுக்கப்படவில்லை என்பதே உண்மை.

மேலும், இக்காலப் பெண்களின் நடை, உடை, பழக்க வழக்கங்களைப் பற்றிக் குறை சொல்லுவதை மக்கள் ஒரு பழக்கமாக்கிக் கொண்டுள்ளார்கள். இப்படி குறை கூறுபவர்கள் ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கள்தான்! கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் முந்தைய தலைமுறையினர் தங்களுக்குள் அடைத்து வைத்திருந்த ஆசைகள் அத்தனையும் உருவெடுத்து பள்ளியிலும் கல்லூரியிலும், தொலைக்காட்சிப் பெட்டியிலும் ஆடிக்கொண்டிருக்கிறது என்பது தெரிய வரும். இது உளவியல் ரீதியாக நடக்கும் நிகழ்வுகள்தான். இவற்றைக் குறைசொல்வதும் விமர்சிப்பதும் மனிதனுக்குள்ள பிறரைக் குறை சொல்லும் குணந்தானேயொழிய வேறொன்றுமில்லை.

ஒட்டுமொத்த மனித சமுதாயமும் ஆன்மீகத் துறைகளும் பெண்குலத்திற்குத் தர மறுத்த பங்களிப்புகளைப் பெண்கள் போராடித்தான் பெற்றனர். இனியும் நாம் வேண்டுவதைப் பெறுவோம். இந்தப் போராட்டத்தில் பெண்மை வீறுகொண்டு எழுந்து விண்கலத்தில் (ராக்கெட்) ஏறி விண்வெளி வரை சென்று வந்துவிட்டது. இப்படிப் பெண்மக்கள் ஒளிமிகுந்த வழியில் சென்று கொண்டிருக்கும் இத்தருணத்தில் திருநங்கைகளும் தங்களுக்கு வேண்டிய உரிமைகளை வேண்டிப் போராடத் தொடங்கியுள்ளார்கள். சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டும், தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொண்டும்,

வழிமாறிப் போய் அலைந்து அல்லல்பட்டும் இப்பொழுது தான் வெளிச்சத்திற்கு வந்துள்ளார்கள். உடல் மாறினாலும் தங்களுக்கும் அறிவு, ஆற்றல் திறமை உண்டு என்பதை இப்பொழுதுதான் உணர்ந்து கண்டு கொண்டார்கள். விரைவில் அவர்களும் சாதனைகள் செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இக்கட்டுரையைப் பெண் சிந்தனையாளர்கள் முன் வைக்கின்றேன். பெண்கள் முன்னேற்றத்திற்கான வழிகள் திறக்கப்பட்டுவிட்டன. கதவு திறந்து இருப்பதை பெண்கள் உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்துவிட்டால் பெண்ணடிமை என்ற பேச்சுக்கே இடமில்லை. அவ்வாறு வெற்றிக் கொடி நாட்டிவிட்டால் பெண்ணின் இறந்தகால ஆசையில் வருங்காலம் ஆகாது. என்றும் வெற்றியின் நிகழ் காலம்தான்!

# ஆற்றுப்படையில் மகளிர்

முனைவர் ரா. அபிராமிசுந்தரி

*விரிவுரையாளர், முதுநிலை,*
*இசைத்துறை,*
*இராணி மேரிக்கல்லூரி (தன்னாட்சி),*
*சென்னை - 4.*

சங்க இலக்கிய நூல்களில் பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் சிறந்த இடம் வகிப்பன. இவற்றுள் பத்துப் பாட்டு எனப்படும் நூல்களான திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) ஆகியவற்றில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படையைச் சார்ந்தவையாகும். ஆற்றுப் படை என்பது ஒரு வள்ளல் அல்லது அரசனிடம் பரிசில் பெற்று வரும் ஒருவன் தன் எதிரில் பட்ட வேறொருவனை, தான் பரிசில் பெற்ற தலைவனின் இயல்பு முதலியவற்றைக் கூறி அவனிடம் செல்லும்படி வழிப்படுத்துவதாகும். இந்த ஆற்றுப்படை நூல்களில், மகளிர் பற்றிய குறிப்புகள், பண்பு கள், இயல்புகள், சிறப்புகள் போன்றவற்றைக் காண்பதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

திருமுருகாற்றுப்படையில் சூரமகளிரின் இயல்பு, அவர்கள் அலங்காரம், அவர்கள் ஆடும் சோலை பற்றிய வருணனையில், இம்மகளிர் ''கோழி ஒங்கிய வென்று அடு விறர் கொடி, வாழிய பெரிது என்று ஏத்திப் பலருடன், சீர்திகழ் சிலம்பு அகம் சிலம்பப் பாடிச் சூர மகளிர் ஆடும் சோலை'' (திருமுருகாற்றுப்படை *38 - 41*) என்று வாழ்த்திப் பாடி ஆடுவதாக அமைகிறது. இந்தப் பாடலில் மகளிரின் தெய்வப் பண்புகளாக, வாழ்த்தி, பாடி, ஆடி என்று கூறுவ

தாக வருவதன்மூலம், இறைவனாக முருகப் பெருமானை யும், அவனுக்கு உகந்ததான கோழிக் கொடியையும் வாழ்த்து வதாக வருகின்ற அமைப்பில் மகளிர் மிகச் சிறந்த, உயர்ந்த நிலையில் இருந்து செய்வதாய் அமைகிறது. இறை வனையே, வாழ்த்துவது என்பது சங்க காலத்தில் இருந் திருக்கிறது. மேலும், இதுவே பிற்காலத்தில் பக்தி இலக்கிய படைப்புகளில் காணும் 'பல்லாண்டு' பாடல்களுக்கு முன் னோடி என்று கூறினால் மிகையாகாது. சங்க இலக்கியத்தில் முருகப் பெருமானாகிய இறைவனிடம் ஆற்றுப்படுத்தும் பாடலாக அமைந்துள்ள பாடல்கள் திருமுருகாற்றுப்படை. சூரர் மகளிர் வாழ்த்திப் பாடி, ஆடினர் என்று கூறுங்கால் மகளிர்க்கு சமூகத்தில் இருந்த பெரும் பங்கையும் புலப் படுத்துகிறது. மகளிரின் நற்செயல்கள் அந்த சமூகத்தின் உயர்வுக்கு வழிகாட்டுகிறது.

மேலும், தேவமகளிரானவர் தங்கள் அலங்காரங் களுடன் கூடி வாழ்த்தி, பாடி, ஆடுதலால் மகளிர் ஒரு மேலான செயலைச் செய்யுங்கால், அதன் நன்மை சமூகத் தைச் சென்றடைகின்றது என்பதாகவும் கொள்ளலாம். பல ரும் பயனடையும் பொருட்டு செய்யும் செயல்கள் மகளிரு டன் இணைக்கப்பட்டுள்ள பாங்கினையும் இங்கு காண லாம்.

*சிறுமஞ்சளொடு நறுவிரை தெளித்து*
*பெருந்தண்கணவீர நறுந்தன் மாலை*
*துணை அற அறுத்துத் தூங்கநாற்றி*
*நன் மலைச் சிலம்பில் நல்நகர் வாழ்த்தி*
*நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி*
*இமிழ் இசை அருவியொடு இன் இயம் கறங்க''*

*(திருமுருகாற்றுப்படை - 235 - 240)*

குறமகள், சிறிய பசு மஞ்சளொடு நறுமணம் கொண்ட சந்தனம் முதலியவற்றையும் தெளித்து செவ்வலரி

மாலையையும் மற்ற நறிய குளிர்ந்த மாலைகளையும் தமக்குள் ஒத்து இருக்கும்படி அறுத்து அசையும்படி தொங்க விட்டுச் செறிந்த மலைப்பக்கத்தில் உள்ள நல்ல ஊர்களி னின்றும் பசியும், பிணியும் நீங்கிடுக என வாழ்த்தி நறுமணப் புகையைத் தந்து அந்த நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணை பாடி, முழங்கும் ஓசையையுடைய அருவியோசையுடன் இனிதாய் வாத்தியங்கள் ஒலிக்க....''

இந்த வரிகளில் குறிஞ்சி நிலத்திற்குரிய குறமகள் மலைப்பக்கத்தில் இருந்த நல்ல ஊர்களில் நின்று பசி, பணி நீங்குக என்று வாழ்த்தியும், குறிஞ்சிப் பண் பாடியும் என்பது நற்பண்புகள் உடைய மகளிர் தாம் வாழ்த்திப் பாடுதலின் மூலம் பசி, பிணியை நீக்கினர். மற்றும் குறிஞ்சிப் பண்ணை இசைத்த மகளிரும், நற்பண்புகளும், ஒன்றுக்கொன்று இயைந்து அவர்தம் இடத்தில் மட்டும் அல்லாது பல நல்ல ஊர்களுக்கும் சென்றடையுமாறு செய்தனர் என்பது சிறப்பு.

*''குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்*
*முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க...''*

(திருமுருகாற்றுப்படை 242 - 243)

குறமகள் முருகன் மகிழும்படியான வாத்தியத்தை வாசித்து முருகன் வந்து மகிழுமாறு செய்தார்.

அடுத்து முருகனே மகிழும்படியான வகையில் வாத் தியம் வாசித்து சிறப்பித்தாள் என்பது இங்கு மகளிரானவர் இறைவனை வேண்டியும், வாழ்த்தியும், பாடியும், வாத்தியம் வாசித்தும், ஆடியும் அனைத்துச் செயல்களையும் செய்தனர் என்பதிலிருந்து மகளிர் சமூகத்தில் அந்த அளவு முக்கியத் துவம் உடையவராய், சிறப்புற்றவராய் விளங்கினர் என்பது புலனாகிறது. மேலும், இறைவனையே மகிழ வைக்க இசைத்தனர் என்பதில், மகளிர் வேண்டுதலுக்கு இறைவன்

உடன் மனம் இரங்கி அருள்கின்றான் என்பதும் ஆகும். பக்தி இலக்கியத்தில் பல பாடலாசிரியர்கள் தம்மைப் பெண்ணாக நினைத்து, இறைவனைப் பாடியதையும் இங்கு நினைவு கூறலாம்.

பொருநராற்றுப்படையில், பாடினியின் இயல்பு களைப் பற்றிப் பாடுங்கால், ''அறல் போல் கூறுதல்'' முதல் ஆரம்பித்து ''பெடை மயில் உருவின் பெருந்தகு பாடினி, பாடின பாணிக்கு ஏற்ப நாள்தொறும்'' (அடிகள் 25 முதல் 47 வரை) பாடினியின் சிறப்பினை பதினைந்து வரிகள் பாடிய ஆசிரியர் முடத்தாமக்கண்ணியார், ''பெடை மயிலின் அருகு நின்ற மயில் போன்ற சாயல் ஆகியவற்றை உடைய கல்விப் பெருமை பொருந்திய பாடினி'' என்கிறார். ''பெருந்தகு பாடினி'' - இசைக்கல்வியின் பெருமை முழுவதற்கும் தகுதி யுடைய பாடினி - என, அந்த ''பாடினி'' என்பவரை மிக உயர்ந்த, படித்த, பண்புள்ள சிறப்பிற்குரிய மகளிராக வர் ணிக்கிறார்.

மேலும், அடுத்துவரும் நான்கு அடிகளில்,

*''களிறு வழங்கு அதர்க்கானத்து அங்கி,*
*இலை இல்மராஅத்த எவ்வம் தாங்கி,*
*வலை வலந்தன்ன மென்நிழல் மருங்கில்,*
*காடு உறை கடவிட் கடன் கழிப்பிய பின்றை''*

- பொருநர் ஆற்றுப்படை 48 - 52

பாடினி பாடிய தாளத்துக்கு ஏற்பக் கடவுள்பணி செய்தார் - என்பதிலிருந்து மகளிர், அனைத்து இறை பணி களிலும் முன்னுரிமை பெற்றவர்கள் என்றும் புலருகிறது.

மகளிரை பாடல் மற்றும் ஆடல் போன்றவற்றில் சிறந்தவர் என்பதையும் பின்வரும் அடிகள்,

*''மண் அமை முழவின் பண்அமை சீறியாழ்*
*ஒண் நுதல் விறலியர் பாணி தூங்க...''*
(பொருநர் ஆற்றுப்படை, *109 - 111*)

என தெள்ளத் தெளிவாய் உணர்த்துகிறது.

நுணுக்கமான செயல் திறனை உடையவர் மகளிர் என்றும் கூறலாம். ஏனெனில், கலை என்பது நுணுக்கமான அணுகுமுறை, செயல்திறன் இருந்தால் மட்டுமே சிறப் புறும். மகளிரானவர், இசை, ஆடல், வாத்தியம் மற்றும் யாழ் வாசிப்பது போன்ற பல திறன்களைப் பெற்றவராய் இருந்தனர் என்பது கருத்து.

சிறுபாணாற்றுப்படையில் விறலியர் இயல்பு பற்றிக் கூறுங்கால்,

*''மடமான் நோக்கின் வாள் நுதல் விறலியர்*
*நடை மெலிந்து அசைஇய நல்மென் சீறு...''*
(சிறுபாணாற்றுப்படை *13 - 33*)

என்று, ''மான் போல் பார்வை, ஒளியை உடைய நெற்றி ஆகியவற்றை உடைய விறலியர், அவர் நடந்து வந்ததால் சிறப்புற்ற அடியை கல்லாத இளைஞர் மெல்ல வருடினர்'' என்று பொருள் கொண்டுள்ளது.

இங்கு விறலியர் என்பர் உள்ளக்குறிப்பு புறத்தே வெளிப்படும்படி திறம்பட நடிப்பவர். உள்ளக் குறிப்பு வெளிப்பட ஆடுவர், என்பதனால் விறலியரான மகளிர் இந்த பண்புகளை, சிறப்புத் தன்மைகளைக் கொண்டிருந்தனர் எனப் பொருள்படும்.

பெரும்பாணாற்றுப்படையில் (*51 - 58*) உமணப் பெண்டிர் எருது பூட்டிய வண்டியை ஒட்ட, உமணர் வண்

டியை பாதுகாத்து வருதலாக அமைந்துள்ளது. மகளிர் வண்டி ஓட்டும் திறமும் பெற்றிருந்தனர் என்பதற்கு இது சான்று.

மேலும், ஆயர் மகளிர் தயிர் கடைந்து அதனால் உண்டாகிய மோர், நெய் முதலியவற்றை விற்று, எல்லோரையும் உண்ணும்படி செய்து, தான் நெய்யை விற்கும் விலைக்கு எருமை, பசு மற்றும் கன்றுகள் வாங்குவாள் என்பதை,

*''அறைவிலை உணவின் கிளை உடன் அருந்தி*
*நெய் விலைக்கட்டி பசும் பொன் கொள்ளல்*
*எருமை நல் ஆன் கரு நாகு பெறூஉம்*
*மடி வாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்*
*இருங்கிளை நெண்டிச் சிறுபார்ப்பு அன்ன*
*பசுந் தினை மூரல்பாலொடும் பெருகுவீர்''*
(பெருநராற்றுப்படை, *163 - 168*)

என்ற வரிகள் விளக்குகின்றன.

இங்கு மகளிர், தான் பொருள் எய்தி, அதனால் எல்லோருக்கும் உணவு அளித்து என்று கூறுங்கால், பெண்டிரானவர் அனைவருக்கும் உணவு அளிக்கும் பாங்கு நயமாக விளக்கப்பட்டுள்ளது. மேலும், ஆயர் மகளிர் வேலை செய்து பொருள் ஈட்டி, மறுபடியும் பசு கன்றுகள் வாங்கினர் என்பதனால் அவள் அந்த ஈட்டிய பொருளில் மீண்டும் குலம் விளங்க, வீடு விளங்க, பொருளாதாரம் செழிக்க, தகுந்த செயல்களைச் செய்தாள் என்பதாகும்.

இவ்வாறு திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை போன்ற நூல்களில் காணும் இயல்புகளான பெண்களின் செயல்திறன், தெய்வ வழிபாடு, தன்மை, பொறுமை, கலைத்திறமைகளாக ஆடல், பாடல், வாத்தியம் வாசிக்கும்

திறன், மற்றும் உமண மகளிரின் வண்டி ஓட்டும் திறம், ஆயர் மகளிரின் பொருள் ஈட்டும் திறன் அனைத்தும் மிகச் சிறப்பு வாய்ந்தது. இந்நூல்களைக் காணுங்கால் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கினர் என்பது புலப்படும். சங்க இலக்கிய காலத்திலிருந்தே ஏன், அதற்கும் முற்பட்ட காலத்திலிருந்தே மகளிர் அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்கினர் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

# பெண்ணுரிமையைப் பேணும் சட்டங்கள்

முனைவர் இரா. திராவிடராணி
*முதுநிலை விரிவுரையாளர்,*
*அரசு மகளிர் கலைக்கல்லூரி,*
*புதுக்கோட்டை.*

''ஓநாய்களால் ஆடுகளுக்கும், புலிகளால் புள்ளிமான் களுக்கும் விடுதலை கிடைப்பதென்பது எப்படியோ அதுபோல ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக் காது.'' எனவே, பெண்கள் தங்களுக்குரிய உரிமைகளைத் தாங்களே வென்றெடுக்க வேண்டும் என்று தந்தை பெரியார் குறிப்பிடுகின்றார். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவ நிலைகளுக்கும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களுக்கும் சொந்தமான பெண்கள் இன்று,

*''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்''*

என்ற பாரதியாரின் கூற்றிற்கிணங்க வரலாற்றில், சட்டத்தில், அரசியல், சமூக, பொருளாதாரத்தில் மிகப்பெரிய திருப்பு முனைகளைச் செய்து வருகின்றனர்.

ஆண்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளையும் பெண்கள் அனுபவிப்பதே பெண்ணுரிமை என்று கூறிய ஈ.வெ.ரா.வின் கனவுகள் இன்று நனவாகி பெண்கள் அனு பவிக்க வேண்டிய உரிமைகள் அனைத்தும் சட்ட வடிவமாக் கப்பட்டுள்ளன. பெண்களின் உரிமைகளைப் பேணும் சட்டங்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்திய பண்டைய இலக்கியங்கள், வேதங்கள், புராண சாஸ்திரங்கள், தர்ம சாஸ்திரங்கள் முதலியவை பெண்ணடிமைத்தனம் வளர்வதற்குத் துணைநின்றன. இந்திய மண்ணில் அந்நியர்களின் படையெடுப்பு, அரேபியர்கள், துருக்கியர்களின் வருகை போன்றவை சமுதாயத்தில் பெண்களுக்குப் பல கட்டுப்பாடுகளை விதித்தன. சமுதாயக் கொடுமைகளான சதி, குழந்தைத் திருமணம், பெண் சிசுக்கொலை, வரதட்சணைக் கொடுமை, விதவை மறுமணம் தடை, பலதார மணம், தேவதாசி முறை, பெண் கல்விக்குத் தடை போன்ற காரணங்களால் இடைக்காலத்தில் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர்.

19, 20ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சமுதாயச் சீர்திருத்த இயக்கங்கள் பெண்கள் மறுவாழ்விற்கு வழி வகுத்தன. இவ்வகை இயக்கங்களால் பெண்களிடையே சமுதாய விழிப்புணர்வு ஏற்பட்டது. பல்வேறுபட்ட இந்திய மக்களை ஒன்றிணைத்து, சமுதாய மேம்பாட்டிற்காகவும், இந்திய சமுதாயத்தின் சுதந்திரத்திற்காகவும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. பெண் விடுதலைக்கும் உரிமைக்கும் பாதுகாப்பாக பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

## சதி தடுப்புச் சட்டம் (1829)

'சதி' அல்லது உடன்கட்டை ஏறும் பழக்கம் என்பது இறந்த கணவனை எரிக்கும் சிதையில் அவன் மனைவியும் உயிருடன் எரிக்கப்படுதல் ஆகும். இப்பழக்கம் வட மாநிலங்களான இராஜஸ்தான், வங்காளம், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பரவலாகப் பின்பற்றப்பட்டது. தமிழகத்தில் சங்க காலத்தில் 'சதி' நடைமுறையில் இருந்ததற்கான சான்றுகள் உள்ள 'தீப்பாய்தல்', 'சதிக்கல்', 'மாசாத்திகள்' போன்ற சொற்கள் சங்க காலத்தில் 'சதி' பழக்கம் இருந்ததைச் சுட்டுகின்றன. இந்திய மறுமலர்ச்சி

யின் தந்தை என்றழைக்கப்படும் இராஜாராம் மோகன்ராய் சதிக் கொடுமைக்கான பிரச்சாரத்தை மேற்கொண்டார். தர்ம சாஸ்திரம், மனு போன்றவற்றில் சதி பற்றிய குறிப்பு இல்லை என்று எடுத்துரைத்தார். சமூக சீர்திருத்தவாதிகள் பலர் இச்சதி பழக்கம் காட்டுமிராண்டித்தனமான செயல் என்று சாடினர். இராஜாராம் மோகன்ராயின் புரட்சிக் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட அன்றைய ஆங்கில கவர்னர் ஜெனரல் ‘ஆனி வில்லியம் பெண்டிங் பிரபு’ 1829ஆம் ஆண்டு ‘சதி’ தடைச் சட்டம் கொண்டுவந்தார். இச்சட்டத்தின்படி சதி மேற்கொள் வதில் உடந்தையாக இருப்பவர்கள் கொலைக் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## விதவை மறுமணச் சட்டம் 1856

பால்ய விவாகம் அன்றைய சமுதாயப் பழக்கமாகும். இதனால் இளம் விதவைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. விதவைகளின் வாழ்க்கை முறையிலும் மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் பின்பற்றப்பட்டன. அவர்களின் வாழ்வியல் முறை மிகச் சோகமானது. சமூகச் சீர்திருத்தவாதிகள் அனை வருமே விதவை மறுமணத்தை ஆதரித்தனர். ஈஸ்வர சந்திர வித்யாசாகர் என்ற சமூக சீர்திருத்தவாதியின் முழு முயற்சி யால் 1856ஆம் ஆண்டு விதவைகள் மறுமணச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இது இந்து சமூகத்தின் புரட்சிகரமான சட்டம் ஆகும். இச்சட்டம் விதவைப் பெண்களின் திருமணத்தை அங்கீகரித்தது. 1856ஆம் ஆண்டு இச்சட்டத்தின் காரணகர்த்தாவான ஈஸ்வர சந்திர வித்யாசாகர் கல்கத்தாவில் தனது மகனுக்கு ஒரு விதவைப் பெண்ணைத் திருமணம் செய்து ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். இதைத்தொடர்து நாடு முழுவதும் விதவை மறுமணங்கள் நடத்தப்பட்டன. இச்சட்டத்தின்படி விதவை மருமகளும், விதவை பேத்தியும் கணவனின் குடும்பத்தில் ஜீவனாம்சம் பெறும் உரிமை யுண்டு.

## திருமணச் சட்டங்கள்

திருமணச் சட்டங்கள் மதத்திற்கு மதம் வேறுபடு கின்றன.

## இந்து திருமணச் சட்டம்

இந்து திருமணச் சட்டம் 1955ஆம் ஆண்டு இயற் றப்பட்டு பின்பு 1956, 1960, 1964,1976ஆம் ஆண்டுகளில் திருத்தம் செய்யப்பட்டது. இதன் முக்கிய அம்சம் ஒரு நபர் திருமணம் ஆகும். இதன்படி ஓர் ஆணோ, பெண்ணோ ஒன்றுக்கு மேற்பட்டவரைத் திருமணம் செய்து கொள்வது குற்றமாகும். முதலில் திருமணம் நடைபெற்று இரண்டாவது திருமணமும் செல்லுபடியாக வேண்டுமெனில் முதல் திருமணம் முறைப்படி மணவிலக்கு பெற்றிருக்க வேண்டும்.

இச்சட்டத்தின்படி பெண்ணுக்கு குறைந்தது 18 வயதும், ஆணுக்கு 21 வயதும் நிறைவு பெற்றிருக்க வேண்டும். நெருங்கிய உறவினர்களிடையே திருமணம் செய்யக் கூடாது. திருமணங்கள் இந்து அறநூல்களில் குறிப் பிடப்பட்டிருக்கும்படியோ அல்லது அவரவர்களின் பழக்க வழக்கங்களின்படியோ நடைபெற்றிருக்க வேண்டும்.

## முகமதிய திருமணச் சட்டம்

முகமதிய சட்டத்தின்படி திருமணமென்பது இரு நபர்களுக்கிடையே செய்யப்படும் ஒப்பந்தமாகும். இதில் மணமகளுக்கு மணமகன் திருமணத்தின்போது அளிக்கும் 'மகர்' என்னும் வைப்புப் பணம் முக்கிய அம்சமாகும். இச்சட்டம் ஒரு ஆண் ஒரே சமயத்தில் அதிகப்படியாக நான்கு பெண்களைத் திருமணம் புரிந்துகொண்டு வாழ அனுமதிக் கப்படுகிறது. ஆனால், ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களைத் திருமணம் புரிவது குற்றமாகும். நெருங்கிய உறவினர்களைத் திருமணம் செய்யக்கூடாது.

## கிருத்துவ திருமணச் சட்டம்

கிருத்துவர்களின் மண முறைளை ஒழுங்குபடுத்தும் சட்டம் 1872ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அதன்படி அவர்களது திருமணம் கிருத்துவச் சடங்கு முறைகளின்படி செய்யப்பட்டிருக்க வேண்டும். மணமக்களுக்கு முதலிலேயே திருமணம் நிகழ்ந்திருப்பின், அவர்களது கணவனோ அல்லது மனைவியோ இரண்டாவது திருமணம் நடைபெறும் காலத்தில் உயிருடன் இருக்கக்கூடாது. திருமணம் புரிந்து கொள்ள ஏற்றுக்கொள்ளப்படாத உறவு முறைகளில் திருமணம் செய்து கொள்ளக்கூடாது.

## சிறப்புத் திருமணச் சட்டம்

எந்த மதத்தைச் சார்ந்தவராக இருப்பினும் 18 வயதடைந்த பெண்ணும் 21 வயதடைந்த ஆணும் தங்கள் திருமணத்தைப் பதிவு செய்து கொள்ளலாம். தாங்கள் சார்ந்த குடும்பத்தின் மத உறவைத் துண்டித்துக்கொண்டு வாழவும் இச்சட்டம் வகை செய்கின்றது. இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் இந்திய வாரிசுச் சட்டத்தின் அடிப்படையில் தங்கள் பெற்றோரின் சொத்துக்களுக்கு வாரிசுதாரராவார்கள்.

## பாலியல் தொழில் சட்டம்

பெண்களையும், பெண் குழந்தைகளையும் பாலுறவுக்குப் பயன்படுத்துவது குற்றமாகும். இதைத் தடுக்கும் சட்டம் 1956இல் உருவாக்கப்பட்டது. இதன்படி பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக எந்த ஒரு நபரையும் அழைத்து வருதல், தூண்டுதல், பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல், இடம் விட்டு இடம் மாற்றுதல் இவை குற்றமாகும்.

## வரதட்சணை தடைச்சட்டம்

திருமணத்தின்பொழுது வரதட்சணை கொடுப்பதையும் வாங்குவதையும் தடைசெய்து 1961ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி, வரதட்சணை என்பது மணம் செய்து கொள்ளும் ஒரு பக்கத்தார் திருமணத்திற்காக நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, சொத்து அல்லது பணம் கொடுப்பது அல்லது கொடுக்க சம்மதிப்பதாகும். பின்பு 1984ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தில் 'திருமணத் திற்காக' என்ற சொற்றொடர் 'திருமணம் தொடர்பாக' என்று மாற்றப்பட்டது.

இவை தவிர பெண்களுக்கு நிகழும் கொடுமைகளை விசாரிக்க குடும்ப நீதிமன்றங்கள் 1984ஆம் ஆண்டு முதல் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. இச்சட்டங்கள் தவிர பெண் தொழிலாளர்கள் சட்டம், 1948ஆம் ஆண்டு இயற்றப் பட்ட தொழிற்சாலைச் சட்டம், 1951ஆம் ஆண்டு இயற்றப் பட்ட தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1952ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சுரங்கச் சட்டம், 1961இல் இயற்றப்பட்ட மகப்பேறு நலச்சட்டம், தொழிலாளர் அரசு இழப்பீட்டுச் சட்டம், 1976இல் இயற்றப்பட்ட சம ஊதியச்சட்டம் போன்ற சட்டங்களும் பெண்ணுரிமையைப் பேணி வளர்த்தன.

## தேசிய மகளிர் ஆணையம்

மகளிர் நலன்களைப் பாதுகாத்தல், அவர்கள் நிலையை மேம்படுத்துதல் குறித்து பரிந்துரை செய்தல், மகளிருக்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படியும், மற்ற சட்டங்களின்படியும், பாதுகாப்பளித்து விசாரணை செய்தல் மற்றும் ஆய்வு செய்தல், தேவையான சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர பரிந்துரை செய்தல் போன்ற செயல்பாடுகளுக்காக 1992ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட சட்டத்தின்படி தேசிய மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டு செயல்படுகின்றது.

உலக வரலாற்றில் மனிதன் மொழியால், இனத்தால், நிறத்தால், சாதியால், மதத்தால் அடிமைப்படுத்தப்பட்டான். ஆனால், ஒரு பெண் பெண்ணாகப் பிறந்ததால் கல்வி உரிமை, பேச்சுரிமை, சொத்துரிமை மறுக்கப்பட்டு, இழிபிறப்பாய் நாயினும் கேடாக மதிக்கப்பட்டாள். ஆனால், இன்று நாடாளும் தகுதி பெற்று விளங்குவது காலத்தின் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. என்னென்ன உரிமைகள் மறுக்கப்பட்டு மண்ணோடு மண்ணாய், புழுதியாய், புழுவாய் வாழ்ந்த பெண் சட்டத்தின் பாதுகாப்பால், உலகத்திற்கு ஒளியாய், கோயிலின் கோபுரமாய், மலையின் உச்சியாய், இமயத்தின் சிகரமாய் விளங்குவதைக் காண முடிகிறது.

# உமாசகிதமூர்த்தி சிற்பம் காட்டும் பெண்ணிய தத்துவம்

முனைவர் வி. லதா

விரிவுரையாளர், சிற்பத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

கடவுளுக்கு முன் எல்லா மனிதரும் சமம் என்ற முறையில் ஆண் - பெண் சமத்துவத்தை பெண்ணியம் வலியுறுத்துகிறது. மிதவாதப் பெண்ணியம், பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்தது. பெண் விடுதலை, சமத்துவம் ஆகியவற்றைப் போராட்டங்களின் மூலமாக அன்றி சமூகச் சீர்திருத்தம், சட்டங்கள் இயற்றுதல், கல்வியறிவை மேம்படுத்தல், எல்லா வாய்ப்புக்களையும் தருதல், சமூகமாற்றம் ஆகியவற்றை பெரிதும் ஆதரிப்பதுடன் செயல்படுவது மிதவாதப் பெண்ணியம் ஆகும்.

மிதவாதப் பெண்ணியம் குடும்பஅமைப்பு, திருமணம், குழந்தைப்பேறு ஆகியவற்றைப் போற்றுவதாகும். பெண்ணுரிமை என்பது சமத்துவத்தை வலியுறுத்துகிறது.

1890 வரையில் பெண்ணியம் (Womanism) என்பதைக் குறிக்க மகளிரியம் என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டது. 1895 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் நாளன்று தேதியிட்ட அத்தீனா என்ற கிரேக்கப் பெண் தெய்வக்கோயில் என்ற நூலில் ஆலிஸ்ரோசி என்பவர் பெண்ணியம் என்ற சொல்லை மகளிரியம் என்ற சொல்லுக்கு மாற்றுச் சொல்லாகப் பயன்படுத்தினர்.[2]

ஆலிஸ் ரோசி என்பவர் 19ஆம் நூற்றாண்டில் பெண்ணியம் என்ற சொல்லையும், அதற்கான பொருளையும் கண்டுபிடித்தார். குன்னாண்டார் கோயிலிலுள்ள உமாசகித மூர்த்தி சிற்பம் கி.பி. 8ஆம் நூற்றாண்டிலேயே மிதவாத பெண்ணியத்தைக் குறிப்பதாக உள்ளது. சிவனின் லீலா மூர்த்திகள்[3] இருபத்துஐந்தில் ஒன்றான உமாசகிதமூர்த்தி ஏற்றத்தாழ்வு இல்லாத சரிநிகர் சமமாக ஈசனும் பார்வதி தேவியும் சுகாசனத்தில் அமர்ந்து குடும்பசகிதமாக, சமத்துவ நிலையை, பதினோறுநூற்றாண்டுகளுக்கு முன்பே எடுத்தியம்பிக்கொண்டுள்ளது. பல்லவர் காலத்தில் வாழ்ந்த சமூகத்தின் பிரதிபலிப்பாகவே நாம் இதை உணரமுடிகிறது.

ஒரு நாடு கலை வளர்ச்சி பெற்றது என்றால் அங்கு வாழ்ந்த சமூகம் வளர்ச்சியடைந்த சமூகம் என்பதை உறுதி படுத்தும். இந்த வகையில் சைவப்படிமமான உமாசகித மூர்த்தி என்று கூறும்பொழுது தம்பதிசமேத குடும்பசகித, உமையை சமமாக பாவிக்கப்படுவதை பல்லவர் காலச்சிற்பி இச்சிற்பத்தின் வாயிலாக அச்சமூகத்தின் பெண்ணிய நிலைப் பாட்டினை வெளிப்படுத்தியிருக்கிறான் என்று தான் கூற வேண்டும்.

இதன் வாயிலாக பெண்ணியக்கருத்தை அடிப்படை யாகக் கொண்டு பார்த்தால் பெண் தெய்வமான உமா சுகாசனத்தில் ஈசனுடன் அமர்ந்த நிலையில் காணப்படு கிறார்.

## உமாசகித மூர்த்தி

குன்னாண்டார் கோயிலிள்ள பர்வதகிரீஸ்வரர் கோயில் நந்திபோத்தவர்மன்[4] *(723-788)* காலத்தில் உருவாக்கப்பட்ட சிவன் குடவரைக்கு பக்கவாட்டில் உமையுடன் அமர்ந்த நிலையில் சிவன் காணப்படுகின்றார். இதே போன்ற மற்றொன்று பிரான்மலைப் பகுதியில் காணப்படுகின்றது. சிற்பக்கலையில் தேவியுடன் சிவன் தம்பதி சகிதமாகக்

காணப்படுவது பல்லவர்காலச் சிற்பக்கலையின் சிறப்புக் கூறாகும். பிரான்மலையில் காணப்படும் உமாசகிதமூர்த்தி கோயிலின் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதே போல் திருமலைக்குடவரைக் கருவறையிலும் உமாசகித மூர்த்தி அமைக்கப்பட்டுள்ளது.

கழுகு மலையிலுள்ள வெட்டுவான் கோயில் ஒற்றைக்கோயில் விமானத்தில் உமாசகிதமூர்த்தியின் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சிற்பம் காஞ்சி கைலாசநாதர் கோயிலிலும் காணப்படுகிறது.[5]

சிற்பங்களில் வடிக்கப்பட்ட உமாசகிதமூர்த்தியை இதன்பிறகு வந்த வடமொழி இலக்கியங்களான சில்ப ரத்தினம், காசியப்யம் போன்றவைகள் சோமாஸ்கந்த மூர்த்தியையும், சுகாசனமூர்த்தியையும் குறிப்பிடுகின்றன. உமாசகிதமூர்த்திப் பற்றி குறிப்பிடவில்லை.[6]

உமாசகிதமூர்த்தியின் சிற்பம் முன் இடைக்காலங் களில் பல்லவர்காலத்தில் தோற்றம்பெற்றது. அதன் பிறகு சுகாசனமூர்த்தி இந்நிலையை அடைந்தது. உமா+(சிவன்) உமா சகிதமூர்த்தி பின்னுக்குத் தள்ளப்பட்ட நிலையில் சோமன்+ஸ்கந்தர் = சோமாஸ்கந்த மூர்த்திக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. மேற்கிந்திய குடவரைக் கோயில்களான எல்லோராவின் குடவரை எண் பதினான்கு, பதினாறு, இருபத்து மூன்று ஆகியவற்றில் உமையுடன் கூடிய சிவன் சதுரக்கட்டை (or) பகடை விளையாட்டு (Dice Game) விளை யாடுவது போன்ற காட்சி, அதாவது திருமணத்துக்குப்பிறகு கல்யாண சுந்தரமூர்த்தியாக, எல்லோரா குடவரை எண் பதினைந்து, பதினாறு, இருபத்துநான்கு ஆகியவற்றில் இருப்பது தென்னகக் கோயில்களில் காணப்படவில்லை என்பது நோக்கத் தக்கது. தமிழகக் கோயில்களில் உமாசகித மூர்த்தியாக சிவன் காட்சி தருகிறார்.

சைவ நாயன்மார்களான திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர் ஆகியோர் தங்களின் தேவாரப் பாடல்வழியாக ஈசனையும், உமையவளையும் சமப்படுத்திக் காட்டி யுள்ளனர்.

*மலை மகளைப்பாக மமர்ந்தார்தாமே*
*வானோர் வணங்கப்படுவர்தாமே*[7]

தேவாரம்: *1:16:2*

***உமையல்லா துருவ மில்லையுலகலாதுடையதில்லை***
***நமையெலா முடையவராவர் நன்மையே தீமையில்லை.***[8]

தேவராம்: *4:40:9*

***உமையவளை யொரு பாகஞ் சேர்த்தினான் காண்***

திருவண்ணாமலை திருப்பதிகம்
திருநாவுக்கரசர் தேவாரம்
திருத்தாண்டவம் (பாடல் 7)

***மலையினார் மகளோர் பாகமமைந்தான் மழவொன்றேந்திச்***
***சிலையினான் மதில்கண் மூன்றுந் தீயெழச்செற்ற செல்வர்***

திருவண்ணாமலை திருப்பதிகம்
திருநாவுக்கரசர் தேவாரம்
*(பாடல் -3)*

குன்னாண்டார் கோயிலில் (புதுக்கோட்டை மாவட் டம்) உள்ள உமாசகிதமூர்த்தியின் சிற்பமானது உமையும், சிவனும் பத்ரபீடத்தில் ஒரேமாதிரியாக அமைர்ந்த நிலையில் பால் வேறுபாடின்றி மகாராஜ லீலாதசனத்தில் 10 ஒரு காலை (இடதுகாலை) பத்மபீடத்தில் மடக்கியும் வலது கையினை மடித்து தூக்கி நிறுத்திய முழங்கால்மீது லலிதமாக வலது கையை வைத்து நீட்டிய அல்லது மார்பை நோக்கியமைத்து இடது கையைப் பக்கவாட்டில் ஒய்யாரமாக ஊன்றி உடலை சுகமாக வளைத்து அமர்ந்திருக்கும் சதுர்புஜமான நான்கு

கரங்களில்பின் இடது கை பரசுவையும், முன் இடதுகை தொடையில் ஊன்றியவாறும் முன் வலதுகை மார்பை நோக்கியவாறும், பின் வலதுகை நாகத்தைப்பிடித்தும் தலையில் ஜடாமகுடம் தாங்கியிருக்கும்.

இதைப்போலவே பிரான்மலையிலுள்ள உமையும், சிவனும் ஒரேமாதிரியான பத்மபீடத்தில், இருவரும் மகாராஜ லீலாசனத்தில் சிவன் இருகைகளால் வலது கை வலது தொடையில் அமர்த்தியவாறும், இடதுகை உமையின் வலது கையைப் பற்றியவாறும், உமையுத்த இருகரங்களைக் கொண்டதாகவும் இருக்கும். உமாசகிதமூர்த்தி குன்னாண்டார் கோயில் கருவறை பக்கவாட்டில் அமைந்துள்ளது.[12] பிரான்மலையில் மண்டபத்துக்கு வந்தது. நாளடைவில் உமாசகிதம் விலக்கி சோமாஸ்கந்தர் பிரபலமடைந்து, உமாசகிதமூர்த்திக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் சோமனுடன் கூடிய ஸ்கந்தருக்கு வழங்கப்பட்டது எனலாம்.

## பெண்ணியப்பார்வை

உமாசகிதமூர்த்தி சிற்பமானது உமைக்கும் சம அந்தஸ்து வழங்கிய சிற்ப வடிவமாகும். கருவறையில் சிவன் மட்டுமே லிங்கவடிவில் அருவமாக இருந்தது, பிறகு உமையுடன் சேர்ந்ததால் உருவமாகி உமாசகிதமூர்த்தியாக நிர்மானிக்கப் பெற்றது மிதவாதப் பெண்ணியக் கொள்கையுடன் ஒத்தக் கருத்துடையதாக எண்ண இடமுள்ளது.

சிவனுக்குரிய பத்ரபீடம் மகாராஜ லீலாசனம், உமைக்கும் அமைந்திருப்பது ஆண் பெண் சமத்துவத்தை வலியுறுத்தும் குடும்ப அமைப்பை, திருமணத்தை, குழந்தைப் பேற்றை வலியுறுத்தும் மிதவாதப் பெண்ணியப் போக்கை 13 சித்தரிக்கின்றது.

இதையே பாரதி, தமிழ்நாட்டு மாந்தர்க்கு என்ற நூலில் இல்லறத்தில் கணவனும்-மனைவியும் சம அந்தஸ்த்

துடன் வாழவேண்டும்.[14] தம்மால் முடிந்தவரை ஒருவருக் கொருவர் ஹிதம் தேடுதல் அவர்களின் கடமை என்றும், கணவன், மனைவியை அடிமையாக நடத்தக் கூடாது இதை விவாகம் செய்துகொண்ட புருஷனுக்கு ஸ்தீரி அடிமை யில்லை: உயிர்த்துணை: ஜீவனிலே ஒரு பகுதி: சிவனும் பார்வதியும் போல: விஷ்ணுவும் இலட்சுமியும் போல: ஜகத்திற்கு ஆதாரமாகிய பெருங்கடவுள் ஆண்-பெண் என இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூரண சமானம் என்ற பாரதியின் வரிகளால் உறுதி செய்ய முடிகிறது.

ஸர்வ ஜீவ சமத்துவம் எல்லா உயிர்களும் தம்முள்ளே நிகர் என்றும், ஸர்வ ஜீவ ஐக்கியம் எல்லா உயிர்களும் ஒன்றென்பதும் இந்து மதத்தின் வேர்க்கொள்கை என்றும் பாரதியார் பூரண சமத்துவம் இல்லாத இடத்தில் நாம் (பெண்) ஆண் மக்களுடன் வாழ மாட்டோம் என்றும் பெண்கள் இணைய மாட்டார்கள்[16] என்றும் ''கண்ணம்மா என் காதலி''எனும் கவிதையில்

*பாயுமொளி நீயெனக்கு*
*பார்க்கும் விழிநானுனக்கு என்று சொல்லி*

*வீரமடி நீயெனக்கு*
*வெற்றியடி நானுனக்கு*

(க.எ.கா. 1-8)

ஈறாகப்பல அடிகளில் ஆணும் பெண்ணும் ஒன்றை யொன்று சார்ந்து நிற்கும் சமத்துவத்தைச் சுட்டுகிறது.

பெண்ணியத்தின் தொடக்ககாலமான 17-ம் நூற் றாண்டிலிருந்து 20ஆம் நூற்றாண்டு வரை பல நாடுகளி லிருந்து ஆதரவுகளும் எதிர்ப்புகளும் மாறி, மாறி கருத்து மாறுதல்களால், காலமாற்றங்களால், ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்து இன்று உலகமகளிர் விழா எடுத்தாலும் இந்தியச்

சிற்பக்கலையில் உருவாக்கப்பட்ட எட்டாம் நூற்றாண்டு சிற்ப அமைதி, ஓர் ஆணும் பெண்ணும் அல்லது கணவனும் மனைவியும் பரஸ்பர மரியாதையுடன் (Mutual Respect), வாழ்வதும், குடும்ப வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகளில் பங்கெடுத்துக்கொள்வது, ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ளல் போன்ற குடும்பப் பாங்கு சமதர்ம கோட்பாட்டினை காட்சி வடிவத்தில் உணர்த்தும் விதமும் மிதவாதப் பெண்ணியத்தை நினைவுபடுத்தும் அடையாளமாக இச் சிற்பம் இருப்பதாக உணர முடிகிறது.

*அடிக்குறிப்புகள்:*

1. முனைவர் இரா.ரெங்கம்மாள், கி.வாசுகி, *பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பண்பாடும்*, சென்னை -2006, ப,25.
2. முனைவர் தேவதத்தா, முனைவர் தி.கமலி, *பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு*, அன்னை தெரசா பல்கலைக்கழகம், சென்னை -1992, ப.26.
3. T.A. Gopinatha Rao, *Elements of Hindu Iconography*, Delhi - 1993, p. 369.
4. I.P.S. 8, 15
5. H. Krishna Sastri, *South Indian Images of Gods and Goddess, New Delhi, p. 110.*
6. தேவநாதாச்சாரியார், சிற்பரத்தினம், சரஸ்வதி மாஹால் நூலகம், தஞ்சாவூர் -2007, ப.345
7. தேவாரம் 1:16:2
8. தேவாரம் 4:40:9
9. தேவாரம் (திருநாவுக்கரசர்), திருவண்ணாமலைத் திருப்பதிகம்.
10. கணபதி ஸ்தபதி, சிற்ப செந்நூல், ப.60
11. Opcit, H. Krishna Sastri, p. 110.
12. District Gazetteer, Pudukkottai, p. 128.

*13.* முனைவர் இரா. ரெங்கம்மாள் சி.வாசுகி, ப.26
*14.* முனைவர் இரா.பிரேமா, பெண் எழுகத்துக்களில் அரசியல், சென்னை -2007, ப.84
*15.* மேலே கூறியது, ப.87
*16.* மேலே கூறியது, ப.88

# மறுக்கப்பட்ட மகளிர் உரிமைகள் - வரலாற்றுப் பார்வை

க.ம. பெருமாள்

*விரிவுரையாளர்,*
*மொழிபெயர்ப்புத்துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

## முன்னுரை

'பெண்ணியம், மகளிரியம்' என்பது உலகளாவியது. காலத்திற்குக் காலம் பெண்களின் முன்னேற்றம் விமர்சிக்கப் பட்டு, குறிப்பாக அவர்களின் சமத்துவத்தையும் முன் னேற்றத்தையும் வலியுறுத்திக் காட்டுவதாக அமைந்தது. Feminism என்ற ஆங்கிலச் சொல் 'Femina' என்ற இலத்தின் சொல்லிலிருந்து வரப்பெற்றது. இச்சொல் பெண்களின் குணாதிசயங்களைக் குறிப்பதாக உள்ளது. பிற்காலத்தில் இச்சொல் பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது. 1889 வரை 'Womanism' என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சனையையும், அதற்கான போராட்டத்தையும் உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது. Feminism என்ற சொல்லுக்குத் தன் வாழ்வின் மூலம் விளக்கம் ஏற்படுத்திக் கொடுத்தவர் ரேஸ்ட்ரேசே (Ray Strachey) என்ற பெண்மணி ஆவார். பெண்ணியம் என்பது பாலியல் சமத் துவம் (Sexual Equality) என்ற பொருளைத் தந்து நின்றது. பிறகு பரந்துபட்ட அளவில் ஆணுக்கு நிகரானவள் பெண், எந்த நிலையிலும் அடக்கிவைக்கவோ, தனிமைப்படுத் தியோ, சார்புநிலைப்படுத்தியோ வைக்கக்கூடாது எனப் பொருள்பட்டது. பெண்ணியம் என்ற இயக்கமானது அவர்கள் தாமாக முடிவெடுத்து அவர்கள் விருப்பப்படி வாழ்க்கையை நடத்திச் செல்லும், ஒரு சமூகத்தை உருவாக்கு

வதாகும். இது புதிய இலக்கை அடைவதற்கும், புரட்சிகர மான செயல்பாடுகளைச் செய்வதற்கும் தூண்டுகோலாக அமையும்'பெண்ணியம், மகளிரியம்'என்ற கோட்பாடானது ஆண்கள் எந்த அளவிற்குச் சமூக அமைப்பிலும், பொருளா தாரத்திலும், அரசியல் அமைப்பிலும் செயல்பட்டு வருகிறார் களோ அதே அளவிற்கு மகளிருக்கும் உரிமைகள் கொடுக்கப் படும் என்பதே, உலக அளவிலும், இந்திய அளவிலும் அரசியலில் மகளிர் உரிமைகள் எவ்வாறு அமைந்து காணப் பட்டது என்பதை வரலாற்றுப் பார்வையோடு காணலாம்.

இன்று உலக மகளிர் தினம். 1908ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 8ஆம் நாள் நியூயார்க் நகரில் பல்லாயிரக்கணக்கான நூற்பாலைப் பெண்தொழிலாளர்களின் ஒரு நாளுக்கு 8 மணி நேரம்தான் வேலைப்பளு இருக்க வேண்டும் என்ற வீரம் செறிந்த போராட்டத்தை நினைவூட்டும் வகையில் இன்றைய தினம் கொண்டாடப்படுகிறது. அப்போராட்டத் தில் முன்வைக்கப்பட்ட இரண்டாவது கோரிக்கை பெண் களுக்கான வாக்குரிமை.[1] இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் ஆண்களுக்கே இவ்வுரிமை வழங்கப்பட்டது. வாக்குரிமை இல்லாதவர்கள் பட்டியலில் மகளிரே முதலில் முன்னிறுத்தப்பட்டனர். அடுத்த வரிசை யில் சொத்து இல்லாத ஆண்கள், தினக்கூலியாட்கள், குற்ற வாளிகள் இவர்களுக்கெல்லாம் ஒட்டுமொத்தமாக வாக் குரிமை மறுக்கப்பட்டு வந்தது. குறிப்பாக மகளிருக்கான வாக்குரிமைப் போராட்டம் ஒரு நூற்றாண்டு காலம் வரலாற் றில் பதிவு செய்யப்படாமல் இருந்தது.

மகளிருக்கான முதல் வாக்குரிமைப் போராட்டம், அமெரிக்காவில் பிறந்த சமூகப் போராளி எலிசபெத் கேண்ட் ஸ்டாண்டன் அவர்களால் எழுப்பப்பட்டது. இலண்டன் மாநகரில் நடந்த அடிமை எதிர்ப்பு பேரணியில் கலந்து கொள்ளச் சென்றபோது மகளிர் பேசுவதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டது. அடிமை எதிர்ப்பு மாநாட்டிலேயே

பேச்சுரிமை மறுக்கப்பட்டதன் விளைவாக எலிசபெத், 1848இல் செனிகாஃபால்ஸ் என்ற நகரில் மகளிரணியினரைத் திரட்டிக் கோரிக்கைகளை வைத்தார். அமெரிக்காவில் எலிசபெத் கேண்ட் ஸ்டாண்ட், சூஸன் பி ஆண்டனி, ஆலிஸ்பால் ஆகியோரும், இங்கிலாந்தில் எம்மலின் பாங்கர்ஸ்ட் மற்றும் அவரது புதல்விகள் கிறிஸ்டபெல், சில்வியா ஆகியோரும் மகளிருக்கான உரிமைப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கினர். நாடாளுமன்றம், அரசு அலுவலகங்கள் முற்றுகையிடப்பட்டன. வாக்குரிமை கேட்டு துண்டறிக்கை ஏந்திய மகளிர் மீது சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் காரி உமிழ்ந்தனர். இதனால் போராட்டம் புத்துயிர் பெற்றது. மகளிர் இயக்கங்கள் ஒன்றிணைந்தன. அரசு அலுவலகங்கள் தாக்கப்பட்டன. அதிகாரிகளையும் மக்கள் சிறைப்பிடித்தனர். உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டு கைதாகினர். சிறையில் கூட வன்முறை பயன்படுத்தப்பட்டது. உண்ணா நோன்பு இருந்த சமூகப் போராளிகளை, கட்டாயப்படுத்தி மூக்கின் வழியாக உணவை ஏற்றித் துன்புறுத்தினர். இச்செயல்பாடே மகளிர் உரிமைக்கான போராட்டத்தின் முதல் களமாக அமைந்தது. இப்போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்களுக்கு ‘இரும்புத்தாடை தேவதைகள்’ என்ற செல்லப்பெயர் வழங்கப்பட்டது.

மகளிர் உரிமைப் போராட்டத்தின் முக்கியத் திருப்பமாக 1913 சூன் மாதத்தில் இங்கிலாந்து நாட்டின் எமிலி வைல்டிங் டேவிசன் மகளிர் வாக்குரிமை மறுக்கப்படுவதற்கு எதிர்ப்பூட்டும் வகையில் உலகப் புகழ்பெற்ற குதிரைப் பந்தய மைதானமான டெர்பியலில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் குதிரையான ஆண்டர், அசுர வேகத்தில் ஓடிவர வாக்குரிமை கோரிக்கை அட்டையுடன் குறுக்கே பாய்ந்து அந்தப் பந்தயக் குதிரையின் கால்களில் சிக்குண்டு மைதானத்திலேயே பிணமானார். வாக்குரிமைக்காக உயிர்த்தியாகம் செய்த ஒரே பெண் என்ற புகழையும் எமிலி பெற்றார். இத்தியாகச் செயலால் ஆங்கில ஆணாதிக்கம் பணிந்தது.

இங்கிலாந்து அரசு 1918இல் நிபந்தனையுடன் கூடிய வாக்குரிமையும்1928இல் முழுமையான வாக்குரிமையும் மகளிருக்கு வழங்கியது.

அமெரிக்க மகளிர் உரிமை வரலாற்றை பார்க்கும்போது 1919ல் மகளிர் வாக்குரிமை மசோதா 19வது சட்டத் திருத்தமாக நிறைவேற்றப்பட்டாலும், அமெரிக்க சட்டவிதிகளின்படி இத்திருத்தம் சட்டமாக்கப்பட வேண்டுமென்றால் 4இல் 3பங்கு மாகாணங்கள் மொத்தமாக 36 மாகாணங்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். இதனால் நாடு முழுவதும் மகளிர் உரிமைப் போராட்டம் வலுவடையத் தொடங்கியது. மசோதா எதிர்ப்பு ஆணாதிக்க சக்திகள் மாகாணத் தொடர்பைப் புறக்கணித்து, கூட்டங்களை நடத்த விடாமல் தடுத்து, வெளிநடப்புச் செய்து எதிர்ப்பைத் தெரிவித்தனர். இருப்பினும் 35 மாகாணங்களில் மகளிர் வாக்குரிமை மசோதா வெற்றிபெற்றது. வாக்கெடுப்பு நடைபெறும் கடைசி மாகாணம் டென்னீஸ்.[1] வாக்கெடுப்பு நாள் அன்று மசோதாவுக்கு ஆதரவாளர்கள் மஞ்சள் ரோசாவையும், எதிர்ப்பாளர்கள் சிவப்பு ரோசாவையும் அடையாளமாக கொண்டுவரச் செய்தனர். முதல் வாக்கெடுப்பில் மஞ்சள் நிறம் 47ஆகவும், சிவப்பு நிறம் 49ஆகவும் தெரியவந்தது. நிமிடத்திற்கு நிமிடம் மகளிர் உரிமைப்போராட்டம் தீப்பிழம்பாக மாறியது. முதல் சுற்று வாக்கெடுப்பில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பேங்க்டர்னர் தான் அணிந்திருந்த சிவப்பு ரோசாவைத் தூக்கியெறிந்துவிட்டு ஆதரவானார். இதனால் ஆதரவும், எதிர்ப்பும் 48:48 என சமநிலையானது. இன்னும் ஒரு சுற்று வாக்கெடுப்பு இருக்கும் நிலையில் உலக மகளிர் தலைமுறையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. மற்றொரு குடியரசுக் கட்சி எதிர்ப்பாளர் ஹாரிபர்ன். அவர் வாக்களிக்கப் போகுமுன் அவருக்கு ஒரு சீட்டு வந்தது. அதைப் படித்த ஹாரிபர்ன் முகம் வெறிச்சோடியது. ஏதோ ஒரு தவிப்பு, திண்டாட்டம் வெளிப்பட்டது. விளைவு மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தார். அந்த ஒரு நொடி மாற்றத்திற்குக் காரணம் அவரது

தாய் ஃபெப் என ஸ்மீங்கர் பர்ன் துண்டுச் சீட்டில் ''நல்ல பையனாக நடந்து கொள்; மகளிர் வாக்குரிமைக்கு ஆதரவாக வாக்களி''என்று எழுதியிருந்ததேயாகும். இந்த தாய், தனயன் பாச உறவு இவ்வெற்றிக்குக் கைகொடுத்தது.

ஆட்சி அதிகாரத்தில் பங்கெடுப்பதற்கான முதல் படியைத் தொட்டபிறகும் கூடத் தேர்தலில் போட்டியிட்டு அமைச்சராக, துறை அதிகாரிகளாக, மகளிர் இன்றளவும் போராடத்தான் வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் ஆணாதிக்க மனப்போக்கு, மகளிரின் இருப்பிடமே நான்கு சுவர்களுக்குள், சமையற் கூடத்தில்! தற்போது ஆன்மீகத் தலங்களில்!

மகளிருக்கு வாக்குரிமை அளித்த முதல் நாடு நியூசிலாந்து *(1893)* அண்மையில் இவ்வுரிமை அளித்த நாடு குவைத்*(1995)*. இன்றுவரை வாக்குரிமை அளிக்க முன்வராத நாடுகள் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள் உலகின் முதல் பெண் அமைச்சராக இரஷ்யாவில் போல்ஷ்விக் கட்சியால் அலெக்சாண்டர் கோலந்தாய் என்பவர் 1917ஆம் ஆண்டு காபினெட் அமைச்சராகப் பதவியமர்த்தப்பட்டார். 2006ஆம் ஆண்டு பரோனஸ் ஹோமென் என்ற பெண்மணி இங்கிலாந்து நாட்டின் செனட் சபையின் முதல் சபாநாயகராக அங்கீகரிக்கப்பட்டார். இண்டர் பார்லிமென்ட் யூனியன் என்ற அமைப்பு வெளியிட்ட புள்ளிவிவரப்படி சர்வதேச அளவில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 88 சதவீதம் ஆண்கள். உலக அளவில் குறிப்பாக 40 சதவீதம் அளவில் அதிக நாடாளுமன்ற மகளிர் உறுப்பினர்களைக் கொண்ட நார்வே, சுவீடன், டென்மார்க் தற்கால நிகழ்வாக பழைமைவாத மதக் கொள்கையுடைய தாலிபான் ஆண்ட ஆப்கானிஸ்தான் நாட்டில் கூட மகளிருக்காக பல கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, உரிமைகள் பெற்று வாழ்கின்றனர். இன்று உலகம் முழுவதும் மகளிர் உரிமைகள் என்ற விழிப்புணர்வு

மேலோங்கி அனைத்துத் துறைகளிலும் மகளிரின் பங்களிப்பு குறிப்பிடும்படியாக உள்ளது.

## இந்தியப் பெண்ணிய வரலாறு

இந்தியப் பெண்ணியம் என்பது இந்திய வரலாற்றோடு குறிப்பாக விடுதலைப் போராட்ட வரலாற்றோடு கலந்த ஒன்று 'தனியுரிமை' என்ற புதிய கருத்தாக்கத்தோடு இந்திய ஆணும், பெண்ணும் அதிகாரப் படிநிலை அமைப்பின்கீழ் வாழ்ந்து வந்துள்ளனர். விடுதலையை விட்டுக் கொடுத்து, உணர்வுகளை மறைத்து, அர்ப்பணித்து, 'தனியுரிமை' என்பது தங்களுக்குத் தேவையில்லை என்ற தவறான தத்துவத்தின்கீழ் வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆங்கில ஆட்சியாளர்கள் மூலமே அரசியல் உரிமை, குடியாட்சி, தனிமனித உரிமை, தனித்தன்மை, தன்னாட்சி போன்ற விழிப்புணர்வுகளைப் பெற்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ராஜாராம் மோகன்ராய் தொடங்கி ருகிமாதேவி வரை பல ஆண், பெண் சீர்திருத்தவாதிகளின் இடைவிடாத பணிகளால் பெண்களின் சமூக நிலை ஓரளவு உயர்த்தப்பட்டது. 1903இல் ஸ்ரீசொரோஸ்திரியன் மண்டல் என்ற அமைப்பு தோன்றி பார்ஸி பெண்களுக்குப் பொளாதார விடுதலை வேண்டும் என்ற நோக்குடன் செயல்பட்டது. 1908இல் குஜராத்தி இந்து ஸ்திரீ மண்டல் என்ற அமைப்பு பி.என். மோதிவாலா என்பவரால் தொடங்கப்பட்டு முக்கியக் குறிக்கோளாகப் பெண்களுக்கு சிறுதொழில் பயிற்சியும், சமூகச் சேவையின் அவசியத்தையும் பிறமொழிப் பயிற்சியும் அமைத்துக் கொடுத்தது. 1909இல் ரமாபாய் ராணடே 'சேவாசதன்' என்ற அமைப்பினையும் வங்காளத்தில் சரோஜினிநளினி என்பவர் 'மமிழ சமித' என்ற அமைப்பினையும் தோற்றுவித்தனர். பெண்களுக்கு அரசியல் உரிமையும், வாக்குரிமையும் வேண்டுமென்று ரமாபாய் ராணடே உரிமை கேட்டுப்

போரா்டிச் சிறைசென்றார். இந்தியாவில் நாடு தழுவிய பெண்கள் அமைப்பு 'பாரத் ஸ்தீரி மகாமண்டல்' எனப் பெயரிட்டு ஓர் இயக்கத்தை ஆரம்பித்தனர். 1917இல் இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு, 1925இல் இந்திய தேசியப் பெண்கள் குழு, 1926இல் இந்திய பெண்கள் மாநாடு எனவும் தோற்றம் பெற்றன. 1917ஆம் ஆண்டு மே 8 ஆம் தேதி சென்னை அடையாறில் திருமதி டோரதி ஜினராஜதசா என்பவரால் தொடங்கப்பட்டு ஐரிஸ் நாட்டைச் சேர்ந்த அன்னிபெசன்ட் அம்மையாரைத் தலைவராகக் கொண்டு நடத்தப்பட்டது. இவ்வமைப்பின் குறிக்கோளாக பெண் களுக்கான பொறுப்பை உணர்த்துதல், கட்டாயத் தொடக்கக் கல்வி, குழந்தை மணத்தை ஒழித்தல், நகராட்சி, சட்டசபைத் தேர்தல்களில் ஓட்டுரிமை மற்றும் தற்சார்பு கல்வி போன்றவற்றில் முக்கியத்துவத்தை பெற்றுத் தருவன என்பனவாகும். 1930ல் மைலாப்பூரில் பத்து பெண்களைக் கொண்டு 'ஔவை இல்லம்' என்ற அனாதை இல்லத்தைத் தொடங்கி இரண்டு வருடங்களில் சுமார் 800 பேர் இதனால் நிரந்தரப் பயனடையச் செய்தனர். இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு இந்தியாவின் தாய் அமைப்பு என்று போற்றப்பட்டு திருமதி. முத்து லெட்சுமி ரெட்டி அவர்களின் தலைமையின்கீழ் 23 மையங்கள் 72 கிளைகள் பல்லா யிரக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டு செயலாற்றி யது. இதன் தொடர்ச்சியாக இந்திய தேசியப் பெண்கள் குழு என்ற தேசிய அமைப்பு 1925இல் தொடங்கப்பட்டது. இவ் வமைப்பின் குறிக்கோள்களாக பெண்களே பெண்களின் மீது அக்கறை கொள்ளுதல், சட்டத்தின்வழி சமூகம் மற்றும் பொருளாதார நிலைகளில் உயரச் செய்தல், கல்வி மற்றும் குடியுரிமை போன்றவற்றில் முன்னுரிமை அளித்தல் என்பனவாகும். 1934இல் சிக்காகோ நகரில் நடந்த உலகப் பெண்கள் ஒருங்கமைப்பு (World Congress of Women) கூட்டத்திற்கு இந்தியப் பெண்கள் சார்பாக திருமதி முத்து லெட்சுமி ரெட்டி கலந்துகொண்டு அரிய உரை நிகழ்த்தினார். 1920களில் தந்தை பெரியார் தமிழகத்தில் சுயமரியாதை

இயக்கத்தைத் தோற்றுவித்து பார்ப்பனீயம், சாதீயம் மற்றும் தீண்டாமைக் கொடுமைகளைக் கடுமையாக எதிர்த்தார். ஜோதிபா பூலே முதன் முதலில் சாதீயத்திற்கும், பெண்ணடிமைத்தனத்திற்கும் உள்ள உறவை வெளிப்படுத்தினார். பெண்ணடிமைத் தனத்திற்கு மதக் கொள்கைகளும், ஒழுக்க மதிப்பீடுகளும் முக்கிய க்காரணிகளாக உள்ளதை வெளிப்படுத்தினார். பிறப்பிலிருந்தே பெண்கள் சுதந்திரமாக வளர்க்கப்பட வேண்டும் என்று கூறும் பெரியார் பெண் தானே தன் துணைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், தாலி, மஞ்சள், குங்குமம் என்ற மூடப்பழக்க வழக்கங்களை அறவே ஒதுக்கிச் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். பெண்கள் சமூகத்தில் சுதந்திரமாகச் செயல்படச் சொத்துரிமை வழங்கப்பட வேண்டும். மற்றும் ஆண்களுக்கு சமமாகப் பெண்களுக்கு கல்வி உரிமை வழங்கப்பட வேண்டும். கூட்டுக்கல்வி முறையால் பெண்களின் அடிமை நிலை மாற்றப்படும் என்றார். பெண்களுக்கு மதக்கல்வி தேவை யில்லை. விரதம், சடங்குகள், கொண்டாட்டங்கள் போன்றவை அவர்களை அடிமைப்படுத்தும் மதக்காரணிகள் என்கிறார். விதவை மறுமணத்தை ஆதரித்து பல விதவைப் பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்தார். இவ்வாறான சீர்த்திருத்தங்கள் மூலம் மேலைநாட்டுத் தீவிரப் பெண்ணியவாதிகள் அறுபது, எழுபதுகளில் கூறியதை, பெரியார் முப்பதுகளிலேயே கூறியுள்ளதை அறியமுடிகிறது. பெண்களுக்கு அரசியல் அறிவூட்டி வெளியுலகிற்கு கொண்டு வந்ததில் குறிப்பிடத் தக்க பங்கு மகாத்மா காந்தியடிகளுக்கும் உண்டு. குறிப்பாக கள்ளுக்கடை மறியல், உப்புச் சத்தியாக் கிரகம், அந்நிய ஆடை புறக்கணிப்பு, வெள்ளையனே வெளியேறு போன்ற தேசிய நிகழ்வுகளில் பெண்களைப் பங்குபெறச் செய்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டினார். தமிழகத்தைச் சேர்ந்த வை.மு. கோதைநாயகி அம்மாள் அன்னிய துணிக் கடை மறியலிலும், எஸ். அம்புஜம்மாள், ஜானம்மாள் கள்ளுக்கடை மறியலிலும், ஈவெ.ரா. நாகம்மை,

கண்ணம்மாள் போன்றவர்கள் உப்பு சத்தியா கிரகத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றனர்.

1960களில் இந்தியப் பெண்ணியப் போக்கில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. தங்கள் உரிமைக்கான போராட்டங்களில் தீவிரவாத பெண்ணியத்தின் பாதிப்பு ஏற்படும்படி செயல்பாடுகளிலும் மாற்றத்தைத் தோற்றுவித்தது. இவ்வமைப்புகள் உழைத்துப் பிழைக்கும் மகளிருக்காகப் (Working class women) போராடின. விபூதி பட்டேல் என்ற பெண்மணி இவ்வியக்கத்திற்கு தலைமை தாங்கினார். மேற்கு வங்காளம், ஆந்திரா, பீகார் மற்றும் கேரளா மாநிலங்களில் நக்ஸல்பாரி இயக்கங்களுடன் கைகோர்த்துச் செயல்பட்டது. 1972ஆம் ஆண்டு பாரதீய மகிளா இயக்கத்தைச் சேர்ந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பெண்பிரிவு தலைவி மீனாட்சிதேவி பெண் அமைப்புகளை ஒன்றுதிரட்டி நாடெங்கும் விலைவாசி உயர்வைக் கண்டித்துப் போராட்டம் நடத்தினார். விலை உயர்வானது குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களை மிகுந்த பாதிப்புக்கு உள்ளாக்கியதால் அவர்களின் பங்கு முழுமையாக இருந்தது. எழுபதுகளில் தொடங்கி இடதுசாரிக் கட்சிகள் அதிக அளவு பெண்களை அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளத் தொடங்கினர். இது பெண்கள் முன்னணி எனப் பெயர்பெற்றது. பெண்களின் பிரச்சனைக்காக அவர்களே தலைமை ஏற்றுப் போராட வேண்டும் என்ற கொள்கையுடன் செயல்படத் தொடங்கியது. 1975இல் இந்திய பெண்களின் பிரச்சனைக்காக அவர்களே தலைமை ஏற்றுப் போராடவேண்டும் என்ற கொள்கையுடன் செயல்படத் தொடங்கியது. 1975இல் இந்திய பெண்களின் தரம் பற்றி ஆராயும் குழுவானது சமத்துவம் நோக்கிப் போதல் என்ற அறிக்கையைச்சமர்ப்பித்தது. இதில் இந்தியப் பெண்களின் அப்பட்டமான வாழ்க்கை நிலையை விளக்கி அவர்களின் நிலை மாற்றம் பற்றி வலியுறுத்தியது.

இந்தக் குழுவின் ஆய்வு இருபாலரையும் உலுக்கியதுடன் மட்டுமல்லாமல் பெண் அமைப்புகள் மேலும் பல தோன்றிப் பெண்கள் பிரச்சினைகள் பற்றி ஆராயவும், அதன்வழி அவர்களை முன்னேற்றவும் வழி வகுத்தது.

இன்றைய நிலையில் இந்திய நாடாளுமன்ற மக்களவையில் பெண் உறுப்பினர்கள் 8.3 சதவீதம்தான். இதைச் சரிசெய்ய 1996ல் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இடஒதுக்கீடு மசோதா இன்னமும் வெளிச்சத்தைக் காணவில்லை. 2002-2004ல் 200 சட்டமன்றங்களுக்கு நடந்த தேர்தலில் போட்டியிட்ட 2432 வேட்பாளர்களில் பெண்கள் 1525 பேர். அதாவது பாதிக்கு மேல். ஆனால் ஜெயித்தது 132 பெண்கள்தான். இது 5.6 சதவீதம் 33சதவீதம் இட ஒதுக்கீடு அமலுக்கு வந்திருந்தால் இன்று 811 பெண் உறுப்பினர்கள் சட்டமன்றங்களிலும் இருந்திருப்பார்கள். பெண் போராளி ஸோஹைட் 1916இல் கனடாவின் நாடாளுமன்றத்தில் வாக்குரிமை மனுவைத் தாக்கல் செய்தபோது ''கணவன்களே வாக்குரிமை மறுக்கப்பட்டவர்கள் பட்டியலில் பெண்கள் சேர்க்கப்படுவதை நாங்கள் எதிர்க்கிறோம். நாங்கள் முட்டாள்களும் அல்ல முடியாதவர்களும் அல்ல நாங்கள் பெண்கள். வாக்குரிமையில் நாங்கள் சமத்துவம் கேட்பது சலுகையின் அடிப்படையில் அல்ல. நியாயத்தின் அடிப்படையில்'' என்று முழங்கினார். இந்தியப் பெண்களாகிய நாங்களும் கேட்கிறோம் நாடாளுமன்றவாதிகளே தயவு செய்து பாலின சமத்துவ நீதியின் மொழியிலேயே பேசுங்கள். 33 சதவீதம் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்றுங்கள். இந்திய நாட்டில் சமத்துவத்தை விரும்பும் ஆண்களும், பெண்களும் இருக்கிறார்கள் என்பதை உலகிற்கு உணர்த்துங்கள்.

***துணைநின்ற நூல்கள்***


1. பிரேமா, இரா. *பெண்ணியம்* (2001) தமிழ் புத்தகாலயம், சென்னை.

2. தாயம்மாள் அறவாணன், *பெண் நேற்று இன்று அன்று*, 2003, பச்சைப்பசேல், புதுச்சேரி.

3. முத்துச்சிதம்பரம், *பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்*, 2002, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

4. மங்கை, அ., *பெண்-அரங்கம்-தமிழ்ச் சூழல்*, 2001, ஸ்நேகா, சென்னை.

5. அரங்க. மல்லிகா, *பெண்ணிய குரவுதிர்வும் தலித் பெண்ணிய உடல்மொழியும்*, 2002, காவ்யா, சென்னை

6. நிர்மலாராணி, உ, *இரும்புத்தாடை தேவதைகள்*, தினமணி, *08.03.2008*.

7. சண்முகசுந்தரம், செ., *பெண் விடுதலை சாத்தியமே*, தினமணி, *14.03.2008*

# பெண்ணியப் பார்வையில் பார்வதி பி.ஏ.,

மா.பார்வதி

*விரிவுரையாளர்,*

*அகராதியியல்துறை,*

*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*

*தஞ்சாவூர்.*

*'கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக'*

இதுபோன்ற கருத்துக்களை இராமலிங்க அடிகளார் போன்ற சான்றோரால் சொல்லத்தான் முடிந்தது. ஆனால், அதனைச் செயல்படுத்த அவர்களால் ஏனோ முடியவில்லை. ஆனால், அந்தக் கருத்துக்களை நெஞ்சில் நிறுத்தி, புராண இதிகாசங்கள் போதிக்கும் போதனைகளில், சடங்கு சம்பிர தாயங்களில், சாதி சமயங்களில் உடும்புப் பிடியாக இருந்து வந்த தமிழ்ச் சமுதாயத்தை அறிவால், ஆற்றலால், அடக்கத் தால், சகிப்புத் தன்மையால் மாற்றி அமைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்களாவார். தன் சுவைமிகு பேச்சால் மக் களைத் தம் பக்கம் இழுத்த அண்ணா, தன் படைப்புகள் வாயி லாகச் சிறந்த பல கருத்துக்களை மக்களிடம் விதைத்தார்.

ஆண், பெண் ஏற்றத்தாழ்வு சங்க காலம் முதல் இருந்து வருகின்றது. சங்க காலப் பெண்கள் கல்வி அறிவு உடையவராய் விளங்கினர் என்றாலும் ஆண்பாற் புலவர் களைவிட பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. சிலப்பதிகாரத்தில் கண்ணகியைக் கற்புடைய வளாகக் காட்டினாலும் அவள் அடிமைப் பாத்திரமாகவே உள்ளதாக பெரியார் கூறுவார். பாவேந்தர் தன் பாடல்கள் மூலம் பெண்ணடிமையைப் போக்க எண்ணினார். அண்ணா

வும் தன் படைப்புகளின் வழி பெண்களின் அடிமைநிலை யைக் களைவதற்கு எண்ணினார். அவர் படைப்புகளில் பெண்ணையே முதன்மைப்படுத்தி எழுதிய புதினம் பார்வதி, பி.ஏ., அதில் அவர் படைத்துள்ள பெண் பாத்திரங் கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் அமைந்துள் ளது. அப்பெண்பாத்திரங்கள் குறித்து ஆய்வதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

பார்வதி, பி.ஏ., புதினத்தில், பார்வதி தான் முதன்மைப் பாத்திரம் உத்தமி, குமுதினி, பெண் மருத்துவர் லலிதகுமாரி, ஆண்டாள் ஆகிய நான்கு பேரும் துணைப் பாத்திரங்கள். இந்த ஐந்து பேரில் நான்கு பேர் கல்வி அறிவு பெற்றவர்கள். ஆண்டாள் ஒருத்தி மட்டுமே கல்வி அறிவு பெறாதவள்.

## ஆண்டாள்

தன் ஏழ்மையின் காரணமாக அனந்தாச்சாரியாருக்கு மூன்றாவது மனைவியாக வாழ்க்கைப்பட்டவள். தன் வயதின் காரணமாகக் குழந்தை பிறக்கவில்லை என்பதை மறந்து, ஆண்டாளுக்குக் குழந்தை பிறக்கவில்லை என்றால் தான் மறுமணம் செய்து கொள்வதாக மிரட்டி வந்தான். தன் கணவனுக்கு மன அமைதி ஏற்படவும், குடும்பத்தில் வேறு ஒருத்தி புகாமல் இருக்கவும், தானே அந்த வீட்டு கிருகலட்சுமியாக வாழவும் அவள் எண்ணினாள். எனவே, தன் உயிர்த்தோழியாகிய குமுதினி கூறிய ஆலோசனைப்படி தான் கர்ப்பமாக இருப்பதாக நடித்தாள்.

எனினும் ஒட்டுச்செடி போல உத்தமியின் குழந்தை யைப் பிராமண குலத்திலே சேர்க்கப் போகிறோம் என்று எண்ணி அஞ்சினாள். எனவே, தன் கணவனுடைய பலவீன மான எண்ணமாகிய மூடநம்பிக்கையைப் பயன்படுத்தி தன் மூத்தாள் கனவில் வந்து,

''அடி ஆண்டாள்! உனக்குக் குழந்தை பிறந்தால் அடுத்த நாளே உன் புருஷன் உயிர் போய்விடும். அவர் ஜாதகப்பலன் அப்படி இருக்கு. குழந்தை பிறக்காவிட்டால் அவர் தப்புவார்' என்று கூறியதாகத் தன் கணவனிடம் கூறி அவரை அஞ்ச வைத்து அவர் வாயாலே குழந்தை வேண்டாம் என சொல்ல வைத்தாள்.

'சூத்ரர் வீட்டுக் குழந்தையை என் குழந்தை என்று கூறி எங்க ஆத்திலே வளர்க்கிறது மகாபாபகாரியம். அதற் காகத்தான் அவரிடம் சொப்பனம் என்று கதை சொன்னேன்'' என்று டாக்டரிடம் உண்மையைக் கூறுகிறாள்.

ஆண்டாள் கல்வி அறிவு இல்லாதவளாக இருப் பினும் தன் குலத்தின்மீது அசைக்க முடியாத பக்தியும், நாய கன் தவறி நடந்தால் அவனை அறிவால், அன்பால் திருத்தும் பெருந்தகையாகவும் இருக்கிறாள். தன் கணவன் தனக்கு மட்டுமே சொந்தம் என்னும் இயல்பான பெண் குணம் கொண்டு திகழ்பவள் ஆண்டாள்.

### உத்தமி

பார்வதியின் தோழி, இருவருமே அநாதையாக இல்லத்தில் வளர்ந்தவர்கள். ஆசிரியை, ஏசுவின் விசுவாசி. அவள் நரசிம்மன் என்னும் ஐயரைக் காதலித்தாள். மாதர் சுதந்திரம், மனம் ஒத்த காதல், கலப்பு மணம் என்பன பற்றி எண்ணி, தன் காதலும் ஈடேறும் என்று நினைத்த பேதைப் பெண் உத்தமி. தன் குலத்திற்கே உரிய பேச்சாற்றல் காரணமாகப் பேசிப் பேசியே அவளை வீழ்த்திவிட்டான் நரசிம்மன்.

பரிசோதனை புரிய காதல் விளையாட்டால், நெருப்பு டன் விளையாடக்கூடாது. உன் காதலை ஆற அமர யோசித்து முடிவு செய். அவனது நடிப்பை நம்பி ஏமாந்து விடாதே. வீணாக வாழ்க்கையிலே துன்பத்தைத் தேடிக் கொள்ளாதே'

என்று பார்வதி கூறியதையும் கேட்காத அளவு அவள் காதல் மயக்கத்தில் இருந்தாள். பின் நரசிம்மனால் ஏமாற்றப் பட்டாள்.

நம்பிக்கைத் துரோகம் செய்த நயவஞ்சகன் நரசிம்ம னின் கொடும் செயலை வெளியில் கூறுவதற்கு அஞ்சினாள். தேள்கடியால் தேம்பவும் பயந்து திகைக்கும் கள்வன் நிலை போன்று இருந்தது உத்தமியின் நிலைமை தீயில் விழுந்த சேயானாள். தன்னைத் தானே நொந்து கொண்டாள். பலவீன மான மனத்தோடு, தன் தோழி சொல்வதைக் கேட்க முடி யாத அறிவிலியாகவும் உள்ளாள். தன் புத்தி, சொல்புத்தி ஆகிய இரண்டும் இல்லாதவள். 'பெண்புத்தி பின்புத்தி' என்பதற்கும், 'எடுப்பார் கைப்பிள்ளை' என்பதற்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவள்

குமுதினி

உத்தமி காதலித்த நரசிம்மனைக் கைப்பிடித்தவள். படித்த, பணக்கார வீட்டுப்பெண். அறிவாற்றல் நிறைந்த வள். யதார்த்தவாதி, உத்தமியை நரசிம்மன் காதலித்தான் என அறிந்தும் அவனை ஏன் மணந்தாய் என்று பார்வதி கேட்க, 'ஆண்களுக்கு இது சகஜம். காதலிக்காத ஆண்கள் மிகக் குறைவு என்று வீட்டில் கூறுவார்கள்' என்று யதார்த்த நிலையைக் கூறுகிறாள்.

'ஆண்கள் ஆதிக்கத்திலிருந்து தப்ப வேண்டுமென் றால் பெண்களுக்குத் தந்திரம் தெரிந்திருக்க வேண்டாமா. அவர்கள் நம்மைச் சமமாகக் கருதவில்லை. அவர்கள் இன்பத் திற்குக் கருவியாகக் கருதுகிறார்கள். நாம் வேறு எதற்கும் பிரயோசனம் இல்லாதவர்கள் என்ற எண்ணம்'' என்று கூறி அவள் அறிவாற்றலை வெளிப்படுத்துகிறாள்.

நரசிம்மன் உத்தமியை ஏமாற்றியதால் ஆண்டாள் கணவன் வழியாக நரசிம்மனுக்கு வரும் சொத்து, அவன்

குழந்தை (உத்தமியின் குழந்தை)யிடமே வந்து சேரவேண்டும் என்று ஆண்டாளிடம் நாடகம் ஆடச் சொன்னதாகக் குமுதினி கூறுவது அவளது அறிவுக்கூர்மையினையும், தன் கணவன் என்றாலும் தவறு செய்தால் தண்டிக்கப்பட வேண்டியவனே என்ற நடுநிலைமையான மனமும் பாராட்டுதற்குரியது.

குமுதினி படித்த, பணக்காரப் பெண்ணாக இருப்பினும் தன்னலம் இல்லாதவள். பரந்த நோக்குடையவள். நேரத்திற்கு ஏற்ப செயல்படும் அறிவாற்றல் மிக்கவள். நல்ல குணவதி.

### பார்வதி

புதினத்தின் முதன்மைப் பாத்திரம். கல்வி அறிவு மிக்கவள். எல்லோரிடமும் அன்புள்ளம் கொண்டவள். சமூக அக்கறை, பொதுநலத் தொண்டில் ஈடுபாடு கொண்டவள்.

பணக்கார, பெண்வெறி கொண்ட மிராசுவை ஓடஓட விரட்டுகிறாள். தன் தோழியைக் காதலிப்பவன் ஒரு பார்ப்பனன் என்றதும் அவன் இயல்பை எடுத்துரைக்கிறாள். சமுதாயச் சூழலில் அவன் குலத்தின் இயல்பை எடுத்துரைத்து கலப்பு மணம் என்பதற்குச் சற்றும் தகுதி இல்லாத குலம் என்று கூறுவதிலிருந்து பார்வதியின் பரந்துபட்ட பார்வை பார்ப்பன குலத்தின் தன்மையை அவள் புரிந்துகொண்ட அறிவாற்றல் ஆகியவை விளங்குகின்றன.

நாட்டின் நடப்பை நன்கு புரிந்தவள். யாரை, எங்கே, எப்படி, எந்த இடத்தில் வைத்துச் சொன்னால் என்ன நடக்கும் என்பதை அறிந்தவள். ஆலாலசுந்தரம் என்னும் பண முதலையின் பண்பறிந்து மேடையில்,

''மகாஜனங்களே ஆலாலசுந்தரர் இவ்வளவு உதவியைச் செய்யப் போவதாகப் பேசுகிறாரே ஒழிய, செய்

வாரோ, மாட்டாரோ என்ற சந்தேகம் வேண்டாம். இதே மேடையில் ரூ. 5,000 நன்கொடையாக இந்த ஊர் தர்ம வைத்திய சாலைக்குத் தரப் போகிறார் என்று கூறி ஆலால சுந்தரத்திற்கு ஒரு இக்கட்டை ஏற்படுத்தி அந்தப் பணக்காரத் திமிங்கிலத்தின் முகத்திரையைக் கிழிக்கும் புரட்சிப் பெண்ணாகவும் உள்ளாள்.

அவள் மேடையில் பேசும் ஒவ்வொரு பேச்சும் போர் வீரன் தன் வெற்றியை எடுத்துரைப்பது போல உள்ளது. அவள் பேச்சின் ஆற்றலும், சுவையும், தமிழ் உணர்வும், தமிழ் மொழியும் இசையும் பின்னி இருப்பதுபோல இருந்தது.

பெண் என்பவள் திறமையானவள். சமூக அறம் தெரிந்தவள். ஆண்களின் இயல்பறிந்து நடப்பவள். நல்லவர் யார், தீயவர் யார் என்ற பாகுபாடு அறிந்தவள். தன்னலம் இல்லாத தகை சான்றவள். கண்மூடிப் பழக்க வழக்கங் களுக்கு அடிமையாகாதவள் எனும் பொதுப் பண்புகளுக்கும் பொருத்தமானவள் பார்வதி.

ஆக, பார்வதி, பி.ஏ., புதினத்தில் வரும் பெண் பாத்திரங்கள் 5 பேர். அவர்களில் தலைமைப் பாத்திரம் பார்வதி, 1. ஆண்டாள், 2. உத்தமி, 3. குமிதினி, 4. பெண் மருத்துவர் லலிதகுமாரி ஆகிய நால்வரும் துணைப் பாத்திரங்கள். ஆண்டாளும் குமுதினியும் பிராமணப் பெண்கள். பார்வதியும் உத்தமியும் பிராமணரல்லாத தமிழ்ப் பெண்கள். ஏசுவின் விசுவாசியான உத்தமி ஆசிரியை என்றாலும் ஏமாறுகிறாள். பார்வதி விழிப்புணர்வு பெற்றவள். உத்தமிக்கு அறிவுரை கூறி விழிப்புணர்வூட்டியும் ஏமாறுகிறாள்.பிராமணப் பெண்களான ஆண்டாளும் குமுதினியும் நரசிம்மன் சரியில்லாதவன் என்ற போதிலும் எந்தவிதமான சூழ்ச்சியிலும் ஈடுபட்டும், தாங்கள் ஒத்துப் போயும், தம்மையும் தம் சாதியையும் காப்பாற்றிக்

கொள்ளும் பிராமணியப் பண்பு மேலோங்கப் பெற்றவர்கள் என்பதையும் தமிழ்ப் பெண்கள் கற்றும் உலகியல் அறிவு பெற்றவர்களாகவும், பெறாதவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதையும் பார்வதி, உத்தமி பாத்திரங்களின் வாயிலாக அண்ணா உணர்த்துகிறார். தமிழ்ப் பெண்கள் கல்வி கற்றால் மட்டும் உண்மை விடுதலை பெற முடியாது; கல்வியைப் பயன்படுத்தி உலகியல் அறிவு பெற்று முழு விழிப்புணர்வு பெற்றால் மட்டுமே, உண்மை விடுதலையைப் பெற இயலும் என்பதை அறிஞர் அண்ணா பார்வதி, பி.ஏ., புதினத்தின் மூலம் விளக்குகிறார்.

# தமிழச்சியின் கவிதைகளில் பெண்ணியப் பதிவுகள்

பூ.மு. அன்புசிவா
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*இலக்கியத் துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

*''பாவ விமோசனத்திற்கு*
*ராமனுக்காகக் காத்திருக்காதே....*
*அவன் சீதையின்*
*அக்கினிப் பிரவேச ஆயத்தங்களில்*
*ஆழ்ந்திருக்கிறான்*
*......................*
*இராவணன் கற்புக்கும்*
*இவனே பொறுப்பு''*

கனிமொழி

கவிதை என்பது எத்தனையோ புனைவுகளைப் புனைந்து கொள்கிறது. கவிதை என்பதை ஒற்றை வரியில் சொல்லிட முடியாது. கவிதையின் கர்வம், அதற்குள் எரியும் மானுட வேள்வி, மனித வலிமை-ஏன் இன்னும் கொஞ்சம் பிரிக்க - அனைத்து உயிர்களின் வலியை தானும் அனுபவிப் பதும், மேலோங்குவதுமே கவிதையாகும்.

உழைப்பின் மறுபெயர் வியர்வை, வியர்வையின் மறுபெயர் இரத்தம், இரத்தத்தின் மறுபெயர் வாழ்தல், வாழ்தலின் உயிர்ப்பு அது. வாழ்தலுக்கான மகிழ்வை,

தேவையை, ஆசையை, முயற்சியை, எதிப்பார்ப்பை எல்லா வற்றையும் வாழ்வியலின் அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன.

இலக்கியத்தின் எந்த் வடிவினை விடவும் கவிதை படைப்பதும் ரசிப்பதும் ஆகிய இரண்டுமே மிக இனிய சுகானுபவம்தான்.

சமுதாயத்தில் மனித இனத்தின் தோற்றத்திற்கும் பல்வேறு செயற்பாடுகளுக்கும் பெண்கள் அடிப்படைக் காரணங்களாக அமைகிறார்கள். பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஆண்களின் வாழ் வில் சரிபாதியாக அமையும் பெண்களைப் பற்றிப் பண்டைக் காலந் தொட்டு இன்றுவரை புலவர்கள் பலவாறாகக் கூறி யுள்ளனர். பெண் ஆணுக்கு அடிமையல்லள். இச்சமுதாய அரங்கில் ஆணுக்கு நிகராகப் பணி செய்யும் வாய்ப்பு பெண்களுக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

பெண்கள் தொடர்பான சமுதாயச் சிக்கல்களில் பெண்ணியம் குறித்த பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள், திருமணம், வரதட்சணை, கற்பு, முதிர் கன்னிகள், விலை மகளிர் சமுதாய அரங்கிலும் குடும்ப நிலையிலும் பெண் களின் நிலை அவர்களின் போராட்டக் குரல்கள் ஆகியவை குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

பெண்ணியம் தன்னளவில் மாறுபட்ட சிந்தனையை யும், நடவடிக்கைகளையும் கொண்டிருந்தாலும் உலகின் எதோ ஒரு முனையில் பெண் என்பதற்காக நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எல்லாப் பெண்களைப் பற்றிய அக்கறை யையும் உள்ளடக்கியுள்ளது. பெண்ணியம் பெண்ணைப் பற்றிய அக்கறையை உட்கொண்டிருந்தாலும் சமூகத்தைப் பற்றிய புரிந்துணர்வாகவும் செயற்படுகின்றது.

இன்றையச் சமூக அமைப்பில் மொழி - இனம் - சமயம் - சாதி - குழுக்களிடையிலான முரண்பாடுகளைக் காட்டிலும் ஆண் - பெண் இடையிலான முரண்பாடுகள் ஒவ் வொரு குடும்பத்திலும் இனத்திலும் - சமயத்திலும் - சாதி யிலும் - மொழியிலும் தலைதூக்கி நிற்கின்றன.'' சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எனத் தனிப்பட்ட பண்பாடுகள் போதிக்கப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பேச்சு நடையானது மாறுபடு கின்றது. சமூகத்தில் காணப்படும் ஆண் மேலாண்மையும் பெண் ஒடுக்குமுறையும் மொழியில் குறிப்பாக ஆண், பெண் இவர்களின் பேச்சுநடையில் பிரதிபலிக்கின்றன. ஆணின் பேச்சில் ஆதிக்கமும் பெண்ணின் பேச்சில் கீழ்படிதலும் வெளிப்படுகிறது.'' என்கிறார் இரா. பிரேமா

இத்தகைய சமூகம் சார்ந்த முரண்பாடுகள் காலம் காலமாக இலக்கியங்களில் வெளிப்படுவதைக் காணலாம்.

## பெண்ணியம் விளக்கம்

Feminism என்ற ஆங்கிலச் சொல் Femina என்ற இலத்தீன் சொல்லில் இருந்து வந்ததாகும். பெண்ணின் பண்புநலன்களைச் சுட்டிக்காட்டிய இச்சொல் நாளடைவில் உரிமைகளைப் பெறப் பயன்பட்டது. 'பெண்ணியம்' எனும் சொல் வழக்கிற்கு வருமுன்னரே பெண்மை, பெண்ணுரிமை போன்ற சொற்கள் வழக்கில் இருந்து வந்துள்ளன. பெண் மைக்கும் பெண்ணியத்திற்கும் மிக ஆழ்ந்த வேறுபாடுகள் உண்டு. 'பெண்மை'என்பது பெண்ணின் செயல் மற்றும் பண்பின் அடிப்படையில் அமைந்த சொல்லாகும். பெண் ணியம் என்பதோ கோட்பாடு மற்றும் கருதுகோள்களின் அடிப்படையில் ஏற்பட்ட சொல்லாகும். இன்னும் விரிவாகச் சொல்லின், பெண்மை என்பது பெண்களுக்கு அமைய வேண்டிய பண்புகள்.

''பெண்மை என்பது அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்பரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று எனப்படும்'' என்கிறார் திரு வி.க. (பெண்ணின் பெருமை, ப.12)

## பெண்-பெண்ணியம்

ஒடுக்கப்பட்ட பெண்களின் விடுதலைச் சித்தாந்தமே பெண்ணியம் ஆகும். ஆணாதிக்கத்தால் அடிமைப்படுத்தப் பட்ட ஒடுக்குமுறையை வாழ்வின் அனைத்து நிலைகளிலும் சமூகம், அரசியல், குடும்பம், பொருளாதாரம், கலை ஆகிய வற்றால் இனங்கண்டு அவற்றிற்கு எதிராக இயங்க பெண்கள் முன்வருவதே பெண்ணியம் ஆகும்.

பெண், சமூகப் பொருளாதாரக் காரணங்களால் புறவுலக வாழ்வில் ஈடுபட்டபோது பரம்பரையாக அவளை அழுத்திய மரபுகள் மாறின. பெண்களுக்கான இருத்தலின் பங்கு மறுக்கப்பட்டபோது போராட்ட உணர்வு அவளுள் பொங்கியது. பெண்களின் வாழ்வு ஒரு கட்டுக்குள் அடக்கி அவளின் சிக்கல்கள் பின்தள்ளப்பட்டபோது சமூகப் பொருளாதார பண்பாட்டு உரிமைக்காகப் போராடுவதையும் அதிலிருந்து விடுபடுதலையும் இருத்தலையும் கூறலே பெண்ணியமாகும்.

''இந்திய மெய்ஞ்ஞான மரபில் தத்துவமும் பக்தியும் ஆன்மீகமும் துறவும் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றன. கடவுள் மீதான பக்தியும் ஆன்மீக ஈடுபாடும் குடும்ப வாழ்வில் இருந்து தனி நபரை விலக்கிக் கொள்வது. குறிப் பாகப் பெண்ணுடனான உறவில் இருந்து பிரிதல் என்றே பெரும்பான்மைச் சமூகம் அர்த்தப்படுத்தியுள்ளது'' என்கிறார் அ.வெண்ணிலா.

## பெண்ணிய நோக்கு

'பெண்ணிய நோக்கு' என்பது பெண்கள் பற்றி ஏற்கனவே இருந்து வரும் கருத்துக்களை மாற்றும் போக்கினைச் சார்ந்தது. அதனால் இதைப்பெண்களின் கருத்துருவம் பற்றிய ஆய்வு என்றும் கூறுவர். அத்துடன் பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களை ஆராய்வதும் அப் படைப்புகளில் காணப்படும் பெண் பாத்திரங்களின் மன ஆற்றலை ஆராய்வதும், பெண் எழுத்துக்களில் காணப்படும் கருத்து, வடிவம், நடை இவற்றை மதிப்பிடுவதும் இவ் வகைப் போக்காகும்.

பெண்ணைப் பற்றிய மரபு சார்ந்த பார்வை இந்தியச் சூழலில் இரு விதங்களில் செயற்படுகிறது. ஒன்று பூஜிக்கத் தக்க தன்மை கொண்டவளாய், தெய்வத்தன்மை நிரம்பிய வளாய்ப் பெண்ணைப் பார்த்தல், பெண் பற்றிய அதீத கற்பனைகள் மற்றும் பெண்ணை யதார்த்தத்தில் இருந்து விலக்கி வைத்த பார்வைகளின் வெளிப்படாத இப் புனைவு களைக் கொள்ளலாம்.

## தமிழச்சியும் பெண்ணியமும்

காலங்காலமாய்ப் பெண்கள் ஆண்களுக்கு அடிமை யாகவே இருந்து அவர்கள் எத் தவறுகள் செய்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொண்டு வாழ்ந்தாக வேண்டும் என்ற நிலை இருந்தது. இத்தகைய பெண்ணடிமை நிலை உலக நாடுகள் எல்லாவற்றிலும் பெரும்பாலும் இருந் திருக்கிறது.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை 'மாயூரம் வேதநாயகம்பிள்ளை' பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்று முதல்முதலில் குரல் கொடுத்ததோடு மட்டுமல்லாது அவரது படைப்புகளின் மூலம் பெண் விடுதலைக்கு வித்திட் டார். இவருக்குப்பின் 'பாரதியார்' பெண்ணியச் சிந்தனை

யைத் தனது பாடல்கள், கட்டுரைகள் மூலம் ஆழமாக வேரூன்ற வைத்தார்.

கரிசல் பூமியின் கவிச்சை மொழியில் கரிசல் மண்ணையும் கரிசல் மக்களையும் கவிதைகளாக்கி மக்களின் மனங்களில் பதியச் செய்தவர்.

*''பதில்கள் அவசியமற்ற*
*கேள்விகளையே*
*என் ஒவ்வொரு பிறந்த நாளிற்கும்*
*பரிசளிக்கின்றாய்*
*உனக்கென்று கொடுப்பதற்கு என்ன இருக்கிறது*
*பதில்கள் வலியுறுத்தாத*
*கேள்வியின்*
*வலியைத் தவிர''*

(வனப்பேச்சி)

என்ற கவிதைகளில் பெண்ணின் மன வலியைக் கவிதை யாக்கியிருக்கிறார்.

கவிதை என்பது ஆண், பெண் என்ற வேறுபாடு களைக் கடந்து பொதுவான மொழிகளில் கடந்தாலும் பெண்ணியம் எனும் தனி மொழி ஒன்று உண்டு என்பதைத் தன் கவிதைகளில் சொல்லியிருக்கிறார். எல்லா இழப்பு களிலும் எளிய இழப்பாக, வேதனை மறையாத இழப்பாக, தமிழச்சி சொல்வதுபோலக் கவிதைகள் எங்கும் அப்பாவின் இழப்பையும் மரணத்தையும் பற்றிய பெண் மன வலிமை யைப் பதிவு செய்திருக்கிறார்.

திருமணமானாலும் பெண்களுக்குத் தாய் வீடுதான் கோயில். காரணம் எதுவாயினும் தாய் வீடு செல்வதையே குறிக்கோளாய் கொண்டு இருப்பார்கள். ஆனால் மு.சத்தி யாவின் பின்வரும் கவிதை வித்தியாசமாக இருப்பதைக் காணலாம்.

*''உனக்கும் எனக்குமான தேனீர் நேரங்களில்*
*கமழும் ஏலக்காயின் வாசனை*
*ஆளுக்கொன்றாய் உருவும் செய்தித்தாள்*
*காலை நேரத்தில் ரம்யமான இசை*
*அரிதான உற்சாகத்தில் உன் நிமிட நடனம்*
*இதழோரம் இழையோடும் காதல்*
*இமைகளின் விளிம்பில் சிரிக்கும் குறும்பு*
*கொஞ்சுதல் மற்றும் உன் கெஞ்சுதல்*
*இவையெல்லாம் விட்டுப்போய்*
*என்னால் என்ன செய்யமுடியும் சொல்?*

என்ற கவிதைகளில் எதார்த்தமான நிலைப்பாடுகளில் பெண் தன்மை கவிதையாக வெளிப்பட்டிருக்கின்றது.

தமிழச்சியைக் கவிதைகளிலும் கவிதையும் நேசிக்கின்ற பெண்ணாகவும் உருவாக்கியதில் பெரும் பங்கு அவரது அப்பாவுக்கே உண்டு. அந்த வகையில்,

*''ஒளிந்து எடுத்து வரும்*
*எள்ளுருண்டை*
*உமிழ்நீர் சுரக்கவைக்கும்*
*உளுத்தங்களி*
*தனித்து உண்டதில்லை நீ''*
*''நவ்வாப் பழங்களை*
*மண் ஊதித்தர நீ*
*மர நிழலில் காலாட்டிச்*
*சுவைத்திட நான்''*

(எஞ்சோட்டுப் பெண்)

என்ற கவிதையின் மூலம் வயதுத் தோழியுடன் கழித்த கணங்களின் நினைவுகளைச் சொல்கிறாள். ஒரு நீண்ட கால பாசத்தின் நெருக்கம் உணர்ச்சிகளின் குண ரூபங்களாக அடுக்கப்படவில்லை. வெகு சாதாரண இயல்பான அன்றாட

நிகழ்வுகளாகத்தான் பாசம் நிறைந்த வெளிப்பாடுகளாகப் பதிவாகின்றன இவரது கவிதைகள்.

## கவிதையும் இழப்பும்

தமிழச்சியின் கவிதைகளில் அதிகமான இழப்புகள் பதிவாகியுள்ளன. இத்தகைய சின்னச்சின்ன பதிவுகள் தான் பாசத்தின் ஆழத்தையும் இழப்பின் சோகம் கொள்ளும் தீவிர வாதத்தையும் வெளிப்படுத்துகின்றன. இவரது கவிதைகள் முழுவதும் இழப்புகளின், சோகத்தின் நினைவுகளைச் சொல்லும் தன்மையைக் கொண்டது.

எல்லா இழப்புகளிலும் எளிய இழப்பாக, வேதனை மறையாத இழப்பாக, தமிழச்சி சொல்வதைப்போல இத் தொகுப்பின் கவிதைகள் அத்துணைக்கும் உந்துதலாக இருந்தது அவரது அப்பாவின் மரணம் எனலாம்.

தன் அப்பாவின் மரணம் ஒரு பெரிய இழப்பாக நிறைய கவிதைகளில் சொல்லியிருக்கிறார். இவரது கவிதை களில் ஏக்கம், அழுகை, சோகம், பார்வை எனப் பல கவிதை களில் அப்பாவின் இழப்பைப் பெருந்துயரத்தோடு சொல்லி யிருக்கிறார். அதுபோலக் கசப்பானது என்றாலும் கவிதை களில் எதார்த்தத்தை வெளிக்காட்டும் பாங்கு இவரிடம் அதிகமாகவே உள்ளது.

*''தன்மானம் அடகு வைத்துத்*
*தட்டு ஏந்தியபடி*
*தஞ்சாவூர் விவசாயி*
*சொல்லமுடியாது பிள்ளைகளிடம்*
*சோழநாடு சோறுடைத்து''*

எனும் கவிதைகளில் ஒட்டு மொத்த விவாசயிகளின் நிலையையும் தன் கவிதைகளில் எடுத்துக் காட்டியுள்ளார்.

*''தாலி வேலி*
*மோதிரப் பூட்டு*
*தலாக் ஈட்டி*
*பெண்ணடிமை வழக்கம்''*

என்ற கவிதைகளில் 'தலாக்' என்னும் பெயரில் பெண் ணுரிமை இத்தகு இழிநிலையை எய்திவிட்டது என்பதைக் கவிஞர் நாஞ்சில் நாடன் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

இந்திரனின் மொழிபெயர்ப்புக் கவிதை ஒன்று, ஒரு தாயானவள் பல முகங்களில் வெளிப்படுகிறாள் என்பதை,

*''வீட்டு முகம் அலுவலக முகம்*
*நடுத்தெரமுகம் விருந்து முகம்*
*மது அருந்தும் முகம்''*

எனப் பல்வேறு முகங்களைக் கற்றுக் கொள்கிறாள். ஆனால் வெள்ளை மலர்களாய் பிள்ளைகளின் சிரிப்பை மறந்துவிட் டாளாம். நைசீரியாவில் உள்ள தாய்க்கு மட்டும் இந்நிலை இல்லை. நாம் சார்ந்த அனைவருக்கும் தான் என்பதே உண்மை.

கற்பழிப்புக்குள்ளான பெண் தன் சுற்றத்தாராலும் சமூகத்தாலும் விலக்கப்படுகிறாள். இதனால் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள். அவளை ஏற்க ஆண் வர்க்கமோ, உறவினர்களோ முன்வருவதில்லை. மரணம் ஒன்றே அவளுக்குத் துணையாக வருகிறது. இதனைக் கவிஞர்,

*''வன்முறைக்கு ஆளானவள்*
*வழியற்றுத் திகைப்பாள்*
*சுற்றமும் விலக்கும்*
*ஏரி குளம் கடல் விதி.''*

மேற்காணும் கவிதைகளில் பெண்கள் பாலியல் பலாத்காரத் திற்கு உள்ளாக்கப்படுவது, பாதுகாக்கப்பட வேண்டியவர் களாலேயே கற்பு பறிக்கப்படுவது ஆகிய வேதனைகள்

வெளிப்படுகின்றன. மேலும் ஆணாதிக்கத்தின் மனோநிலை எப்படிப்பட்டது என்பதையும் நாஞ்சில் நாடன் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

## முதிர் கன்னிகள்

இருபதாம் நூற்றாண்டு வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய சோகம் பெண்களில் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கை உடையவர்கள் மணம் முடிக்காமலேயே தம் வாழ்க்கையைக் கழிக்கக் கூடிய மிகப்பெரிய துயரமாகும். திருமணம் செய்து கொள்வதற்கான பொருளாதார வசதியின்மையினாலே துன்பப்படும் பெண்கள் முதிர் கன்னிகளாகவே வாழ்ந்து முடித்து விடுகிறார்கள் என்பதை மு. மேத்தா கவிதை முன் வைக்கிறது.

*''பூக்களிலே நானும் ஒரு*
*பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்*
*பூவாகப் பிறந்தாலும்*
*பொன் விரல்கள் தீண்டலயே*
*பொன்விரல்கள் தீண்டலயே*
*நான் பூமாலை ஆகலையே''*

இவ்வரிகளில் பெண்களின் கண்ணீர்ப் புலம்பல்களைத் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

*''ஆலமரம் அரசமரம்*
*தாண்டிப்*
*பின் வந்த மாமரம்*
*மகளாய் உருமாற*
*மனசெல்லாம் சிலிர்ப்புடன்*
*மழைக்காலம் முடிந்தபின்*
*குடியேற முடிவானது*
*பத்திரமாய் இருக்கச் சொல்லி*
*..........................''*

எனத் தொடங்கும் கவிதையில் மரம் பற்றி எழுதினாலும் மரத்தை தன் உறவாய் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வுகளின் அடிப்படையில் எழுதாமல் உணர்வுகளின் வெளிப்பாடாக எழுதும் தமிழச்சியின் கவிதைகள் உயிருள்ள கவிதைகளாக வெளிப்படுகின்றன.

## தொகுப்புரை

தமிழச்சியின் கவிதைகள் தமிழ் இலக்கியத்தின் புது எல்லைகளைத் தொட்டுள்ளன.

தமிழச்சியின் கவிதைகள் எளிமை, உண்மை, பாசாங் கற்றதன்மை, உணர்வுகளின் வெளிப்பாடு, இழப்புகளின், மனித உறவுகளின் தன்மைகளைக் கொண்டுள்ளன.

பெண்ணியம் சார்ந்த சிந்தனை, நடைமுறை வாழ்க் கையை அப்படியே கவிதையாக்க நினைப்பது போன்றவை களைத் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழச்சியின் உணர்வுகள், அவர் வாழ்ந்த கிராமம், தோழிகள், மக்களின் அரவணைப்பு போன்றவை தொகுப்பு கள் முழுக்க ஆர்ப்பரித்துள்ளன.

# பெண்ணியப் பார்வையில் - தஸ்லீமா நஸ்ரீன்

முனைவர் அ. ரவிச்சந்திரன்
*விரிவுரையாளர்*
*இலக்கியத் துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*
*தஞ்சாவூர்.*

*துப்பாக்கிகளும்*
*பீரங்கிகளும் கொண்டிருக்கிற அரசுக்கு*
*கொசு போன்ற நான்*
*அச்சுறுத்தலாக இருக்கிறேன்.*

இந்திய நாடும் தெற்காசிய நாடுகள் மட்டும் இல்லாமல் உலக பெண்களின் உரிமைக்குப் போராடும் படைப்பாளியான தஸ்லீமா நஸ்ரீன் கவிதையைப் பார்க்கின்றபோது வீட்டுக்காவலில் வைக்கின்றபோது, தஸ்லீமா நஸ்ரீனை காண்பதற்கு பலர் வருகிறார்கள், போகிறார்கள் இப்படி வருகிறவர்களிடமும், செல்கின்றவர்களிடமும் தஸ்லீமா நஸ்ரீன் யாருடன் சிரித்துப் பேசுகின்றார், யாருடைய இடுப்பை தழுவுகின்றார் என்பதையெல்லாம் காவல் துறையினர் அவர்களுடைய குறிப்பேட்டில் பதிவு செய்து கொண்டாலும் தஸ்லீமா நஸ்ரீன் சிந்தனையில் வந்துபோகிற நினைவு கருத்துகளை காவல்துறையினரால் பதிவு செய்ய முடியவில்லை. இந்த இந்திய நாட்டை ஆளும் அரசாங்கம் துப்பாக்கி, பிரங்கிகளை வைத்திருந்தாலும் கொசு போன்ற தஸ்லீமா நஸ்ரீனை கண்டு அச்சப்படுகின்றார்கள் என்பதை இந்த வரிகளில் இருந்து அறியமுடிகின்றது.

*சாகசம் பொருந்திய அரசியல்வாதி*
*வர்க்கச் சுரண்டல் பற்றிக்*
*கொட்டி முழக்குகின்றபோது*
*பெரும் கைத்தட்டல் பெறுகிறான்*
*ஆனால்*
*சுதந்திரமாகப் பெண் சுரண்டல் குறித்த*
*எல்லாச் சொற்றொடர்களையும்*
*அவன் தவிர்த்து விடுகிறான்.*

நாட்டின் திட்டங்களும், மேம்பாடுகளும் நாட்டை ஆளுகின்ற அரசியல்வாதிகளையே அடித்தளமாகக் கொண் டுள்ளது. இந்த அரசியல்வாதிகள் வர்க்கச்சுரண்டல் செய்கின் றார்கள். இவர்களின் இந்த பேச்சினைக் கேட்டு கைத்தட்டல் ஓசை எழுகிறது. ஆனால் பெண்கள் என்ற வர்க்கத்தில் பெண் களின் முன்னேற்றம், பெண்களின் கொடுமைகள், பெண் ணிய போராட்டம், பெண் சமூக நீதி, இவற்றையெல்லாம் திட்டமிட்டே தந்திரமாக அரசியல்வாதிகள் தவிர்த்துவிடு கின்ற னர். இப்படி இருக்கும்போது பெண்ணியம் எந்த விடு தலையான செயல்களின் முன்னேற்றங்களை அடைய முடி யும் என்று தஸ்லீமா நஸ்ரீன் ஒருவர் மட்டுமே இந்த பெண் ணியத்தின் போராட்ட உரிமைகளை எத்தனை தான் வெற்றி கொள்ள முடியும் என்று தன் மனநிலையை எடுத்து கூறு வதை ஆராய்கின்ற போது பெண் வர்க்கமும் அனைவரும் ஒருமைப்பாடு கொண்டு உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

*முதல்மனைவி கர்ப்பந்தரிக்கவில்லை என*
*விவாகரத்துச் செய்தான்*
*இரண்டாம் மனைவி*
*பெண் குழந்தை பெற்றாள் என*
*விவாகரத்துச் செய்தான்*

*மூன்றாம் மனைவி வரதட்சனை*
*கொண்டு வரவில்லையென*
*விவாகரத்துச் செய்தான்*
*நாலாவது மனைவியை அடிப்பான்*
*ஓரிரு பச்சை மிளகாய்களுக்காக.*

பெண் என்பவளை மனைவியாக பார்க்கின்றதால் அப்பெண் திருமணம் முடிந்தவுடன் கர்ப்பந்தரிக்க வேண் டும் என சமுதாயம் எதிர்பார்க்கின்றது. சமுதாய நோக்க மானது எதிர்ப்பார்ப்பாகவே உலக வரைபடத்தில் இயற்கை யான கோடாகும். புதிய உயிர்களைத் தோற்றுவிக்கும் குறி யீடாக பெண் காணப்படுகிறாள். அவ்வாறு காணப்படும் பெண் ணிடமிருந்து பெண்வர்க்கம் பிறந்தால் அது பிறப்பின் இயற்கையாகும்.

பொருளாதாரம் என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் தேவையானது. உயிர்வாழ்வுக்கு அத்தியாவசமானது. ஆனால் ஆணுக்கு பொருளாதார மேம்பாடு, பெண் வர்க் கத்தால் வரவேண்டும் என்பது ஆண்வர்க்கத்தின் திட்டமிட்ட சம்பிரதாய செயல்பாடாகும். உணவும் பெண்தான் சமைக்க வேண்டும் என மரபு கற்பிக்கப்பட்ட கற்பியல் பிரிவுகள் இவைகளில் குறை ஏற்பட்டால் ஆண்வர்க்கம் பெண்களை விவாகரத்து செய்வதும், எல்லையில் தள்ளி விடுவதும், அடித்து வதைப்பதும், ஆண் வர்க்கத்தின் ஆளுமை கொள்கையாக இருப்பதை இறந்த கால ஆண்வர்க்கம் கற்பித்து வைத்த, இயற்கைக்கு முரண்பாடான ஒரு செயற்கைக் கட்டமைப்பு பெண்வர்க்கத்தின் மீது செயல் படுத்தப்பட்டுள்ளது.

*கல்யாணி....*
*துயரத்திலிருந்து விடுபட்டு அவளது அன்னை*

*அன்புடன்*
*அவளைத் தொட்டு சிகிச்சை செய்து*
*ஆண்களால் சிதைக்கப்பட்ட அவளது உடலை*
*மறுபடி*
*முன்னை நிலைக்குக் கொண்டு வருவாளா என்ன?*

பெண்ணிய வர்க்கத்திற்கு என்று பெயர் சூட்டும் முறையும், பெயர் தேர்வு செய்வதும் குடும்பத்திலிருக்கும் இருவர்க்கத்தினராலும் தீர்மானிக்கப்பட்டு பெயர்சூட்டப் படுகின்றது. இப்படி பெயர் சூட்டப்பட்ட பெண் தான் கல்யாணி ஆவாள். ஆண்களால் கல்யாணி பாலியல் சித்ரவதைக்கும் ஆளாக்கப்படுகிறாள். பாலியல் கொடுமை ஏற்பட்'டதால் குடும்ப உறவுகளும், நட்பின் உறுப்பினர் களும் அண்டை வீட்டு ஆட்களும், பாலியல் கொடுமைக்குள் ளான பெண்ணை நோக்கும்போது கேவலமானப் பார்வை யுடன் இழிவானப் புன்னகையுடன் இப்பெண் அவ மானத்தை ஏற்படுத்தி விட்டாள். இவள் வெட்கமற்றவள் என்கிறார்கள். ஆனால் கல்யாணியின் அன்னையானவள் தன் மகள் இந்த பலாத்காரத்திற்கு ஆளானதைக் கண்டு உள்ளம் துயரத்தை அடைந்தாலும், அன்னையானவள்தான் தன் மகளுக்கு மன வலிமையைத் தரவேண்டும். இதற்காக தாய் தன்னுடைய துயரம் விட்டு விட்டு தன் மகளாகிய கல்யாணியை அன்புடன் தொட்டு சிகிச்சை செய்கின்றாள். ஆண்வர்க்கமானது கல்யாணியை பாலியல் சித்ரவதை செய்தது. இயற்கையான பால் உணர்வின் நியாயம் மற்ற நீதியற்ற நாகரிகமற்ற பகுத்தறிவிலிருந்து விலகி அவள் உடலை சிதைத்தது. இன்றைய ஆசிய நாடுகளிலும், வளர்ந்த வல்லரசு நாடுகளிலும் பெண் வர்க்கத்தின் இந்நிலை காணப்படுகின்றது.

# பெண்ணியச் சிந்தனையில் களவும் உடன்போக்கும்

செ. வள்ளிநாயகம்

*பதிப்புத்துறை,*

*தமிழ்ப் பல்கலைக்கழகம்,*

*தஞ்சாவூர்.*

தமிழ்ச் சமுதாய வரலாற்றில் சங்க காலம் மிகத் தொன்மையான காலமாகும். வரலாற்று ஒளி படரும் எல்லைக்குள் சங்க காலம், தமிழ் மக்களின் வாழ்வியலோடு மிக நெருக்கமானதொரு தொடர்பைக் கொண்டிருந்தது. சங்க காலத்தில் ஒருவன் - ஒருத்தி எனும் குடும்ப அமைப்பு காதலன் - காதலி என்ற களவுக் காதலில் இருந்து மலர்ந்து பின்பற்றப்பட்டது. வரலாற்றுக்கு முற்பட்ட திராவிடர்கள் தாய்வழி குடும்ப முறையிலேயே வாழ்ந்தனர் என்பது மானுடவியல் அறிஞர் பலர்தம் கருத்தாகும். ஆரிய மக்களின் கலப்பு ஏற்பட்ட பின்னரே திராவிட சமுதாயத்தில் பின் பற்றப்பட்டு வந்த தாய்வழி முறை குறையலாயிற்று. தந்தை வழிமுறை செல்வாக்குப் பெறலாயிற்று. பழந் தமிழரிடம் தாய் வழிமுறை இருந்தமைக்கான சான்றுகள் சங்க இலக்கியக் குறிப்புகளில் வெளிப்படையாகப் பதிவாக வில்லை என்றாலும் ஆங்காங்கே சில சான்றுகள் இலைமறை காயாக இடம் பெற்றுள்ளன. தமிழ் மக்களின் அகவாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் அகப்பொருள் இலக்கிய இலக் கணங்கள் கூற்றுகளுக்கு உரியவர்களாகத் தாய், செவிலித் தாய், தோழி, தோழன் முதலானோரைப் பட்டியலிடுகிறது. ஆனால், தந்தைக்கும், தனயனுக்கும் என்று சான்றுகள் இல்லை. சங்க இலக்கியத்தில் தந்தையார் கூற்றாக ஒரு பாடல்கூட இடம் பெறாமை எண்ணத்தக்கது.

இறையனார் களவியல் உரையில் களவுக் கூற்றுக்கு உரியோர், கற்புக் கூற்றுக்கு உரியோர், பட்டியலில் தனயன், தந்தையைச் சேர்க்காமை சிந்திக்கத்தக்கது. மகளின் களவுச் செயல்கள் பற்றி வருந்தும் பொறுப்பும் உடன்போக்கில் பிரிந்த மகளை, மருமகன் வீட்டில் சென்று காணும் பொறுப் பும் தாய் அல்லது செவிலித் தாய்க்கே இருந்தன. இல்லத்தின் முழுப் பொறுப்பும் பெண்களுக்கே கொடுக்கப்பட்டிருந்தது. தாய்வழித் தலைமையின் எச்சம் என்றே இதனைக் கருத லாம். பெண்ணியத்திற்கு முன்னுதாரணம் நல்கிய இச்சமு தாயத்தில் களவும், உடன்போக்கும் எவ்வகையான தாக்கங் களை உருவாக்கியுள்ளன என்பதை ஆய்வதே இக்கட்டுரை யின் நோக்கம்.

## பண்டைய தமிழ் மக்களிடையே காதல் கருத்துருவாக்கம்

பண்டைய காலத்தில் வரன்முறை அற்ற உறவே இரு பாலாரிடையேயும் இருந்தது. நாகரீகமும் பண்பாடும் வளர வளர மக்களிடத்தில் காதல் ஒழுக்கத்தில் கட்டுப்பாடு வளர்ந்தது. அதன் முதிர்ச்சி அறவழியில் திரும்பிற்று. விரும்புவோரைக் கவர்ந்து, நுகர்ந்து, விலக்கி விடுதலைப் பழைய நாகரிகங்களின் தொடக்கங்கள் காட்டுகின்றன.

அரசுகள், நிலவுடைமை அடித்தளத்தில் தோன்றி தழைக்க, காத்துக்கொள்ள விழையும்போதும் தம் நிலப் பரப்பைப் பெருக்க நினைக்கும்போதும் போர்கள் எழு கின்றன. போருக்கு ஆட்கள் வேண்டும். உடல் வலிமை முன்னிலைப்படுத்தப்பட்ட பழைய போர்க்காலங்களில் பெண்டிரினும் ஆடவர் தேவையே முதன்மை பெற்று இருந்தது. எனவே, ஆண் குழந்தைகள் வேண்டும். அதற்கு நெறியான மணமுறைகள் வற்புறுத்தப்பட்டன. தலை முறைச் சிக்கல் எழும்போது தலைவன் தனக்கென ஒரு குடும்பம் அமைத்துக்கொள்ள வேண்டும். எனவேதான்,

முதன் முதலில் மண முறைகள் பழங்காலத்தில் அரச குடும்பங்களில் தோன்றியிருக்க வேண்டும்.

அதன் பின்னரே மற்றைய மரபினருக்கும் மணமுறை பரவியது. தொடக்க கால மணமுறை போர் உலகத்தைச் சார்ந்தே இருந்தது. போர் செய்ய ஆண் மகன் வேண்டும். எனவே, மணம் புரிந்து கொண்டனர்.

தமிழ்ச் சமுதாயத்தில்,

*''ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறு எறிந்து*
*பெயர்தல் காளைக்குக் கடனே''* (புறம். 312)

என்று ஆண்மகனைப் பெறுவதே, பெற்று வளர்ப்பதே தன் கடமைஎன்ற தமிழ்த்தாயின் குரலும் போர்க் குரலாகவே அமைந்தது. இத்தகைய சூழ்நிலையிலேயே ஐந்திணை என்ற முறைக் காதல் வளர வாய்ப்பாயிற்று எனலாம். தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் சமூக அடித்தளமான குடும்ப உறவில் பெண்ணை, ஆண் ஒருவனுக்கும் மட்டும் சொந்தமாக்கிக் கற்பினைத் தூக்கிப் பிடித்து நிலை நிறுத்துவதில் ஐந்திணைப் பாடல்கள் முதன்மைப்பங்கு ஆற்றியுள்ளன.

## இலக்கியங்கள் காட்டும் களவியல்

தொல்காப்பிய களவியலும், சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள களவுக்குரிய பாடல்களும், ஆணும், பெண்ணும் தடையின்றி ஒருவரை ஒருவர் நேசித்து வாழ்ந்தனர் என்றே காட்டுகின்றன. கிடைக்கப் பெற்ற சங்கப் பாடல்கள் 2381இல் அகம் தொடர்பான பாடல்கள் 1862. அகத்திணைப் பாகுபாட்டில், நானிலைப் பகுப்பு அடிப்படையில் எழுவகைக் காதலொழுக்கங்களாகிய உரிப் பொருள்களே அடிப்படை எனலாம்.

தலைவன் தலைவியைப் பதற்றத்துடன் தொட்டுப் பேசுவதற்கு முன்பு காட்டப்பெறும் காதல் படிநிலைகளைக் காதல் அனுமதித்திருந்தாலும் அது கண்மூடிக் காதலாக அமையவில்லை என்பதைக் காட்டுகின்றன. தலைவி, தலைவனைச் சந்திக்கும் வாய்ப்பு, பேசும் வாய்ப்பு இரவிலும், பகலிலும் அமைந்தன என்பதைப் பகற்குறி, இரவுக்குறி பற்றிய பாடல்கள் எடுத்துரைக்கின்றன. குழந்தைப் பேறு பற்றிய ஒன்று இடையில் இருந்தமையால் களவுக் காதல் பெண்ணின் பக்கம் எச்சரிக்கையையும் கலக்கத்தையும் நல்கின என்பதைக் களவியல் படம் பிடித்துக் காட்டுகிறது. மகள் விரும்பும் மணமகனையே மணம் முடித்து வைக்கும். உடன்பாட்டு முறையிலேயே தொல்காப்பியக் களவியல் நூற்பாக்களும், சங்க இலக்கியப் பாடல்களும் அமைந்துள்ளன. பெற்றோர் ஒப்புக்கொள்ளாது முரண்பாடு ஏற்படின் தலைவனும் தலைவியும் தனித்து வாழத் தலைப்பட்டனர். அதுவே, ''அறவழி'' எனும் கருத்து பெற்றது.

## உடன்போக்கு உணர்வின் வெளிப்பாடு

உடன்போக்கைக் கூடா ஒழுக்கம், அருகிய வழக்கு என மொழிவது உயரிய சிந்தனையாகாது. சங்க இலக்கியங்கள் உடன்போக்கை ஒரு நிகழ்வாகச் சித்தரிக்கின்றன. தன் மகள் போல் உடன் செல்லும் காதல் இணைகள் விண் மீன்கள் போல எண்ணிக்கையில் அடங்கா.

*''அகலிரு விசும்பின் மீனினும் பலரே*
*மன்ற இவ் உலகத்து பிறகே''*

-குறுந்தொகை - 44

என்ற செவிலித்தாயின் கூற்று மூலம் விளங்கிட இயலும்.

உடன்போக்கைத் திருமணம் என ஒப்புக்கொண்ட பாங்கு தொல்காப்பிய காலத்து இருந்தது. இதனை,

*''கொடுப்பது இன்றியும் கரணம் உண்டே*
*புணர்ந்துடன் போகிய காலையான''*

- தொல். கற்பியல் 2

என்ற கற்பியல் நூற்பா மூலம் அறிந்திட முடியும்.

## உடன்போக்கும் பெண்ணுரிமையும்

